

# மால்கம் எக்ஸ்

வெள்ளை இனவெறிக்கு எதிராகப்
போர்க்குரல் கொடுத்த ஒரு கருஞ்சிறுத்தையின் வீர காவியம்.

மருதன்



# மால்கம் எக்ஸ்

வெள்ளை இனவெறிக்கு எதிராகப்
போர்க்குரல் கொடுத்த ஒரு கருஞ்சிறுத்தையின் வீர காவியம்.

மருதன்

# மால்கம் எக்ஸ்

மருதன்

Malcolm X
by
Marudhan

Copyright © Marudhan

e-ISBN: 978-93-5135-001-9

This digital edition published in 2013 by
Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,
Lloyds Road, Royapettah,
Chennai 600 014, India.

Email: support@nhm.in

First published in print in 2008 by Kizhakku Pathippagam
All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the

copyright act, without the prior written permission of the publisher of this book.

நான் அமெரிக்காவில் இருந்து வந்திருக்கிறேன். ஆனால் அமெரிக்கனல்ல. அமெரிக்காவல் பலியானவர்களில் ஒருவன் என்ற முறையில் நான் உங்களுடன் பேச விரும்புகிறேன். அமெரிக்காவில் உள்ள இரண்டு கோடி ஆப்பிரிக்க மக்களில் நானும் ஒருவன். எங்களைப் பொறுத்தவரை அமெரிக்கா என்பது ஒரு கனவு அல்ல. அது ஒரு பயங்கரம்.

மால்கம்

# 1. கறுப்பு வணக்கம்

ஒரு துப்பாக்கி வைத்துக்கொண்டால் என்ன? சட்டைப் பைக்குள் ஆயுதம் ஒன்று இருக்கிறது என்னும் நினைப்பேகூட கூடுதல் துணிச்சலைக் கொண்டு வந்துவிடலாம். இந்தக் கூடுதல் துணிச்சல் இப்போது அத்தியாவசியம். எந்தப் பக்கத்தில் இருந்து யார் தாக்குவார்கள் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. இனியும் அமெரிக்கக் காவல்துறையை நம்பிக்கொண்டிருக்கமுடியாது. அவர்கள் கண் முன்பாக என்னைக் கொன்று போட்டால்கூட தலையைத் திருப்பிக்கொண்டு நகர்ந்துவிடுவார்கள்.

மிஸ்டர் மால்கம் எக்ஸ், உங்கள் எதிரிகள் அபாயகரமானவர்கள். நீங்கள்தான் கவனமாக இருக்கவேண்டும். யார் கேட்டார்கள்? எனக்கு அறிவுரை சொல்லவேண்டும் என்று ஏன் உனக்குத் தோன்றவேண்டும்? முடிந்தால் பாதுகாப்பு கொடு. முடியவில்லையா? வாயை மூடிக்கொண்டு நகர்ந்துவிடு. போலியான கரிசனம். போலியான பாதுகாப்பு. எதுவும் தேவையில்லை எனக்கு.

சொல், கவனமாக இருப்பது என்றால் என்ன? பொதுக்கூட்டங்களுக்குச் செல்லாமல் இருப்பதா? என்னை நாடி வருபவர்களைத் திருப்பி அனுப்புவதா? வெள்ளையர்களின் இனவெறியை அம்பலப்படுத்தாமல் விட்டுவிடுவதா? எனக்கென்ன என்று என் குடும்பத்துடன் வெளிநாட்டுக்குத் தப்பிச் செல்வதா?

இதில் எதுவொன்றைச் செய்தாலும் அது இறப்பதற்குச் சமமானதே. பெருச்சாளியைப்போல் பதுங்கியிருப்பதற்காகவா இத்தனைக் காலம் உயிரைக்

கையில் பிடித்திருந்தேன்? கட்டிலுக்கு அடியில் நூறு ஆண்டுகள் தேங்கிக் கிடப்பதற்குப் பதிலாக, சிறுத்தையைப்போல் ஒரு நிமிடம், ஒரே ஒரு நிமிடம் பாய்ந்து வாழ்ந்து உயிரைக் கொடுத்துவிடலாம்.

இதற்குத்தான். இந்தப் பாய்ச்சலுக்குத்தான் துப்பாக்கித் தேவை. தகுந்த காரியாலயத்தைத் தொடர்புகொண்டு முறைப்படி விண்ணப்பிக்கலாம். உங்களுக்கு இல்லாததா? அவசியம் செய்துவிடுகிறோம் என்று புன்னகை செய்து அனுப்பிவைப்பார்கள். அத்தோடு தீர்ந்தது.

அதற்கான காரணத்தையும் மால்கம் எக்ஸ் அறிந்திருந்தார். எனது கடந்தகால வாழ்க்கையைப் புரட்டிப் பார்க்கும் எவரொருவருக்கும் என் மீது நம்பிக்கை ஏற்படாது. முன்னாள் குற்றவாளி. முன்னாள் கைதி. தவிரவும், கறுப்பன். அவமானத்தின் அடையாளம். கறுப்பன் அருவருக்கத்தக்கவன். சேற்றில் விழுந்து புரண்ட எருமை மாட்டை நெருங்குவதுபோல்தான் எந்தவொரு கறுப்பனையும் வெள்ளையர்கள் நெருங்குவார்கள். எட்டி நின்று வேண்டாவெறுப்பாகப் பேசுவார்கள். கறுப்பனின் மூச்சுக்காற்றை சுவாசித்து அதனால் ஏதேனும் தீரா வியாதி வந்து தொலைத்துவிட்டால்?

கறுப்பன் நிராகரிக்கப்படவேண்டியவன். ஒரு கறுப்பனே முஸ்லிமாகவும் இருந்துவிட்டால்? அதுவும் அடாவடி முஸ்லிமாக? நிச்சயம் துப்பாக்கி கிடைக்காது.

கண்களைப் பிரிக்கலாமா அல்லது அப்படியே சிறிது நேரம் படுத்திருக்கலாமா என்று யோசித்துக்கொண்டிருந்தார் மால்கம் எக்ஸ். இறப்பைப் பற்றி சிந்திக்க வேண்டிய அவசியம் இப்போது ஏற்பட்டிருக்கவேண்டாம் என்று தோன்றியது. இது வாழ்வைப் பற்றி சிந்திக்கவேண்டிய

தருணம். என் சமூகத்து மக்களின் வாழ்க்கை. ஒடுக்கப்பட்டவர்களின் எதிர்காலம். நான் எதிர்பார்க்கும் வெளிச்சம் அவர்கள் மீது படருமா? மிருகங்களைப்போல் அல்லாமல் ரத்தமும் சதையும் கொண்ட மனிதர்களாக அவர்கள் நடத்தப்படும் காலம் வருமா?

எல்லாக் கேள்விகளுக்கும் விடை கண்டுபிடித்துவிட முடியவில்லை. யூகிக்கலாம். ஆனால் வெறுமனே யூகங்களை வைத்துக்கொண்டு என்ன செய்துவிட முடியும்? குழப்பம்தான் மிஞ்சுகிறது.

என் எதிரி யார்? எலிஜா முகமதுவா? மெய்யாகவே அவர் என்னைக் கொன்றுவிட விரும்புகிறாரா? என் வீட்டின் மீது குண்டு வீசியது அவருடைய ஆள்கள்தானா? எல்லோரும் சொல்வதைப்போல் என்னைக் கொல்லவேண்டும் என்று அல்லாவின் பெயரால் அவர் சபதம் எடுத்துக்கொண்டுவிட்டாரா? பத்திரிகைகளில் அவருடைய படம் வெளியாகி இருப்பதாகச் சொன்னார்கள். குர் ஆனைப் பிடித்தபடி அமர்ந்திருக்கிறார். கொட்டை எழுத்துகளில் ஒரு வாசகம். ‘மால்கமை முறியடிப்பேன்’ என்பதாக.

இருக்கட்டுமே. அவர் சபதம் எடுத்துக்கொண்டால் எனக்கு என்ன? எலிஜாவின் ஆள்கள் திறமைசாலிகள். போர்த்தந்திரம் மிக்கவர்கள். ஒருவரை அடித்து வீழ்த்தவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்துவிட்டால், நிச்சயம் உயிரைக் கொடுத்தாவது முடித்துவிடுவார்கள். ஆனால் ஒரு விஷயத்தை அவர்கள் மறந்துவிட்டார்கள். நானும் ஒரு காலத்தில் எலிஜாவுடன் இருந்தவன்தான். அவருடைய ஒவ்வொரு சிறு அசைவையும் அருகில் இருந்து பார்த்திருக்கிறேன். பிரமித்திருக்கிறேன். சொல்லுங்கள், என்னைவிட அவரைப் பற்றி அதிகம் தெரிந்துகொண்டவர் வேறு யார்? கவலை இல்லை.

எலிஜாவை என்னால் நிச்சயம் எதிர்கொள்ளமுடியும். முறியடிக்கமுடியும்.

பிரச்னை அதுவல்ல. என் எதிரி எலிஜாதானா? அவர் மட்டும்தானா? நண்பர்களைத் தேர்வு செய்வதில் தவறு செய்யலாம். ஆனால் எதிரியைப் பற்றி மட்டும் தவறாகக் கணித்துவிடக் கூடாது. ஒவ்வொரு முறை நீங்கள் தவறாகக் கணிக்கும்போதும், புதுப் புது எதிரிகள் உருவாகிக்கொண்டே இருப்பார்கள்.

சில சமயம் இப்படித் தோன்றும் மால்கமுக்கு. நான் ஒரு கறுப்பு முஸ்லிம். மற்றொரு கறுப்பு முஸ்லிமால் எனக்கு ஆபத்து நேர்ந்துவிடுமா? எங்களுக்குள் ஆயிரம் விரோதங்கள் இருக்கலாம். ஆனால் அதற்காக என்னைக் கொல்லத் துணிவார்களா அவர்கள்?

இது ஏன் வெள்ளையர்களின் சதியாக இருக்கக் கூடாது? கறுப்பர்கள் தங்களுக்குள் வெட்டி மடிந்து சாகட்டும் என்று அவர்களாகவே ஏன் என்னைக் கொல்ல முயன்றிருக்கக் கூடாது? எலிஜாவின் மீது என் கவனத்தைத் திசை திருப்பும் நடவடிக்கையாக ஏன் இது இருக்கக் கூடாது?

என்னுடைய அடையாளம் என்ன? நான் எலிஜாவின் எதிரி என்பதைவிட, வெள்ளையர்களின் எதிரி என்பதுதானே சரி? மேடைக்கு மேடை நான் வெள்ளையர்களைத்தானே ஏசிக்கொண்டிருக்கிறேன்? அவர்களது கோர முகத்தை தானே தொடர்ந்து அம்பலப்படுத்திக்கொண்டிருக்கிறேன்? அவர்களுக்கு எதிராகப் போர் தொடுக்குமாறுதானே என் சகோதரர்களுக்கு அழைப்பு விடுத்துக்கொண்டிருக்கிறேன்? என்னை நீக்கிவிட்டால் அதிகம் பலன் அடைபவர்கள் வேறு யார்?

முகமற்ற எதிரியே, உன்னைச் சந்திக்க நான் மிகவும் ஆவலுடன் இருக்கிறேன். இறுதி யுத்தத்தில் வெல்லப்போவது யார்? நீயா, நானா?

நியூ யார்க் ஹில்டன் விடுதியில் பன்னிரண்டாவது மாடியில் இருந்தது மால்கம் எக்ஸ் தங்கியிருந்த அறை. குளித்து முடித்து தயாரான பிறகு தனது காரை எடுத்துக்கொண்டு கிளம்பினார் மால்கம் எக்ஸ். அன்று ஞாயிற்றுக்கிழமை. பிப்ரவரி 21, 1965. வானம் தெளிவாக இருந்தது. இளவெயில். ஆனால் ரசிக்கத்தான் முடியவில்லை.

மொத்தம் நானூறு இருக்கைகள் கொண்ட அரங்கம் அது. ‘ஆதுபோன் அரங்கம்’ என்று பெயர். இரண்டு மாடிக் கட்டடம். கூட்டம் தொடங்குவதற்கு முன்பாகவே முன் வரிசை இருக்கைகள் கிட்டத்தட்ட நிரம்பிவிட்டன. அமர்ந்திருந்தவர்களின் முகங்களில் பெருமிதம் தெரிந்தது. அடிக்கடி தலையைத் திருப்பித் திருப்பிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். அடடா, இப்போதுதான் வருகிறீர்களா? சரி, சரி. பின்னாலேயே அமர்ந்துகொள்ளுங்கள். உங்களுடைய அதிர்ஷ்டம் அவ்வளவுதான்.

மேடையில் மொத்தம் எட்டு இருக்கைகள். பின்னால் உள்ள சுவற்றில் ஒரு கிராமிய ஓவியம் மாட்டப்பட்டிருந்தது. மற்றபடி வெறுமை.

எப்போதும் ஒரு துள்ளலுடன் நடந்து வரும் மால்கம் எக்ஸ், அன்றைய தினம் எல்லோரையும் உற்றுப் பார்த்தபடி பொறுமையாக உள்ளே நுழைந்தார். வாயிலில் மக்கள் திரளாகத் திரண்டிருந்தனர். மால்கமைப் பார்த்ததும் அவர்கள் ஆரவாரத்துடன் கையசைத்தனர்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளரை நெருங்கினார் மால்கம் எக்ஸ்.

‘வந்திருப்பவர்களைச் சோதனை போடுகிறீர்களா?’

‘இல்லை. ஒருவரையும் சோதனை போடக் கூடாது என்று நீங்கள் சொன்னதாக உத்தரவு.’

‘நல்லது. என் மக்களால் எப்படி எனக்கு ஆபத்து நேரும்? என் மக்களையே நான் நம்ப மறுத்தால் வேறு யாரை என்னால் நம்ப முடியும் நண்பரே?’

‘நீங்கள் சொல்வது புரிகிறது.’

‘ஆனால் ஒரு விஷயம். பத்திரிகையாளர்களை மட்டும் தயவு செய்து உள்ளே அனுமதித்து விடாதீர்கள்.’

சமீப காலத்திய எரிச்சலால் ஏற்பட்ட நம்பிக்கையின்மை அது. மால்கம் எக்ஸை பத்திரிகைகள் குறைத்து மதிப்பிட்டன. எலிஜா முகமதுவை மட்டும் பிரதானப்படுத்தி செய்திகள் வெளியிட்டன. எலிஜாவின் வசவுகளையும் மால்கம் மீது அவர் சுமத்தும் குற்றச்சாட்டுகளையும் தேடிப்பிடித்துப் பட்டியலிட்டார்கள். பதிலுக்கு மால்கம் அளித்த விளக்கங்கள் உதாசீனப்படுத்தப்பட்டன. அல்லது வேண்டுமென்றே திரித்துக் கூறப்பட்டன. ஆகவே மால்கம் முடிவெடுத்துவிட்டார். ஒரு தலைபட்சமாக இயங்கும் பத்திரிகையாளர் யாருக்கும் இனி என் கூட்டங்களுக்கு அழைப்புக் கிடையாது. பத்திரிகையாளர்கள் அனைவருமே ஒருதலைப்பட்சமானவர்கள்தாம் என்பதால் ஒருவருக்கும் அனுமதி இல்லை.

அனுமதி மறுக்கப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனாலும் இரண்டு பத்திரிகையாளர்கள் மட்டும்

முன்வரிசை இருக்கையில் முன்கூட்டியே வந்து இடம் பிடித்துவிட்டார்கள். உள்ளே நுழையும்போதே தங்களது அடையாள அட்டையை அவர்கள் அகற்றிவிட்டார்கள். நிர்வாகியிடமும் தனித்தனியே பேசிவிட்டார்கள். நாங்கள் வந்தது மால்கமைப் பார்க்க. ஒரு கறுப்பன் என்ற முறையில் எங்களை அனுமதிக்கக் கூடாதா? இந்த நிகழ்ச்சி பற்றி நாங்கள் எதுவும் எழுதமாட்டோம். குறிப்பாகத் தவறாக எழுதமாட்டோம். தயவுசெய்து அனுமதியுங்கள்.

பார்வையாளர்களைக் கடந்து உள்ளே சென்று கொண்டிருந்தார் மால்கம் எக்ஸ். இன்றைய கூட்டத்தில் சில முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டுவிடவேண்டும். வெள்ளையர்கள் பற்றி. நமது போராட்டம் பற்றி. நாம் எந்தப் பாதையில் சென்றுகொண்டிருக்கிறோம், எந்தப் பாதையில் இனி செல்லவேண்டும் என்பது பற்றி.

வெள்ளையர்களை நாம் ஏன் விமரிசிக்கிறோம்? அவர்களது இனவெறிக்காக. கறுப்பர்கள் மீது அவர்கள் கட்டவிழ்த்துவிடும் வன்முறைக்காக. மன ரீதியாகவும் உடல் ரீதியாவும் நம் மீது அவர்கள் தொடுக்கும் தாக்குதல்களுக்காக. பெரும் மதிப்புக்குரிய எலிஜா முகமது என்ன சொல்லித் தருகிறார்? வெள்ளையர்கள் நம் வளர்ச்சியைத் தடுக்கிறார்கள். நாம் அனுபவிக்கும் அத்தனைத் துன்பங்களுக்கும் அவர்களே காரணம். அவர்கள் நம்மை ஏய்த்து பிழைப்பு நடத்துகிறார்கள். நம் தன்மானத்தைச் சிதைக்கிறார்கள். ஆகவே அவர்களை எதிர்க்க வாருங்கள்.

ரொம்ப சரி. ஆனால், எல்லாவற்றுக்கும் இறுதியாக அவர் சொல்ல வருவது என்ன? வெள்ளையர்களை வெறுக்கக் கற்றுக்கொள்ளுங்கள். வெள்ளையர்கள் மீது போர் தொடுக்கச் சித்தமாக இருங்கள். நம்மை

அழித்துக்கொண்டிருப்பவர்களை நாம் அழிப்போம். கறுப்பு சிறுத்தைகளே ஆக்ரோஷத்துடன் முன்னால் வந்து நில்லுங்கள். தொடங்கட்டும் ரத்தப் போராட்டம்.

நான் கேட்கிறேன். முன்னது வெள்ளை நிறவெறி என்றால், பிந்தியதன் பெயர் என்ன? நம் எதிரிக்கு ஒரு நியாயம் நமக்கு ஒரு நியாயமா? நாம் நம் எதிரியை எப்படி மதிப்பிடுகிறோமோ அப்படியேதானே நாமும் நம் எதிரியால் மதிப்பிடப்படுவோம்?

எனில், மார்டின் லூதரைப்போல் அகிம்சை ரீதியில் போராடச் சொல்கிறீர்களா என்று நீங்கள் கேட்கலாம். இல்லை. ஆயுத ரீதியான தாக்குதல் நம் மீது நடத்தப்படும்போது, அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்க நான் உங்களுக்குக் கற்றுக்கொடுக்க மாட்டேன். உங்கள் வீரத்தை, உங்கள் பேராண்மையை, உங்கள் மனஎழுச்சியை நான் எள்ளளவும் குறைத்துவிட மாட்டேன். அமைதி என்பது ஆகப் பெரும் ஆயுதம். அந்த ஆயுதத்தைப் பிரயோகிக்கும் அளவுக்கு நம் எதிரி தேர்ச்சி பெற்றுவிடவில்லை. அவன் முரடனாகவே, மூர்க்கனாகவே இன்றுவரை இருந்துவருகிறான்.

கிடக்கட்டும். எலிஜா முகமது சொல்வதைத்தானே நீங்களும் சொல்கிறீர்கள் என்னும் சந்தேகம் உங்களுக்கு எழுகிறது அல்லவா? பொறுமையாக யோசித்துப் பார்த்தால் இரண்டுக்கும் உள்ள வித்தியாசம் புரியும். எலிஜா முகமது வெள்ளையர்களை எதிர்த்துப் போரிடச் சொல்கிறார். நான் எதிரியை எதிர்த்துப் போரிடச் சொல்கிறேன். இரண்டும் ஒன்றுதானே என்கிறீர்களா?

எப்படி ஒன்று? வெள்ளையர்கள் நம் எதிரியா? ஆம் எனில் ஒட்டுமொத்த வெள்ளையர்களுமா? ஆண்கள், பெண்கள்,

குழந்தைகள், முதியோர் என்று ஒருவர் விடாமல் அத்தனை பேருமா நமக்கு எதிராகச் செயல்படுகிறார்கள்? சமீபத்தில் ஒரு பொதுக்கூட்டத்துக்குச் சென்றிருந்தபோது, சில வெள்ளையர்களைச் சந்தித்தேன். மெய்யான அர்ப்பணிப்பு உணர்வும் சமூக அக்கறையும் கொண்டவர்களாக அவர்கள் இருந்தார்கள். நம் மக்களுக்காக மருத்துவ உதவிகளை அவர்கள் செய்துகொண்டிருந்தனர். சொல்லுங்கள். அவர்கள் மீதுமா நாம் ஆயுதப் போராட்டம் மேற்கொள்ளவேண்டும்?

எலிஜாவின் பாதையும் நம் பாதையும் பிரியும் இடம் எங்கே என்பது உங்களுக்கு இப்போது புரிகிறதல்லவா? இந்தப் புரிதல் எத்தனை அத்தியாவசியமானது என்பதை நீங்கள் உணர்கிறீர்கள் அல்லவா? அது போதும்.

ரசம் போயிருந்த அந்தக் கண்ணாடியின் முன்னால் அமர்ந்திருந்தார் மால்கம் எக்ஸ். அவர் ஏதோ சிந்தித்துக் கொண்டிருக்கிறார் என்பதை உணர்ந்த அந்தப் பெண் காரியதரிசி, ஒரு சிறு தயக்கத்துடன் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார். அருகில் பெஞ்சமின் எக்ஸ். அன்றைய கூட்டத்தில் உரையாற்றப் போகும் மற்றொரு பேச்சாளர்.

அருகில் இருந்த நாற்காலியை ஒரு முறை இழுத்தார் அந்தக் காரியதரிசி. மால்கம் எக்ஸ் சட்டென்று திரும்பினார்.

‘மன்னிக்கவும் நான் உங்கள் இருவரையும் கவனிக்கவில்லை.’

‘நீங்கள் ஒத்திகைப் பார்த்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பது புரிந்தது.’

‘ஆம் உண்மைதான். பேச்சாளர்கள் அனைவரும் வந்துவிட்டார்களா?’

‘இல்லை. நீங்களும் பெஞ்சமினும் மட்டும்தான் நேரத்துக்கு வந்திருக்கிறீர்கள். நேரமும் கடந்துகொண்டே இருக்கிறது. நாம் ஆரம்பித்துவிடலாமா?’

‘சரிதான். பார்வையாளர்களைக் காத்திருக்க வைப்பது தவறு.’

‘எனில் முதலில் பெஞ்சமினை பேசச் சொல்லட்டுமா உங்கள் அனுமதியுடன்?’

பெஞ்சமின் முன்னால் வந்து நின்றார்.

சுள்ளென்று கோபம் பொத்துக்கொண்டு வந்தது மால்கமுக்கு.

‘ஏன் இப்படி நடந்துகொள்கிறாய்? இவரைப் பக்கத்தில் வைத்துக்கொண்டு ஏன் இப்படி ஒரு கேள்வியைக் கேட்கிறாய்? இவர் முதலில் பேசக்கூடாது என்று நான் சொல்வேனா?’

காரியதரிசி தலையைக் கவிழ்த்துக்கொண்டார். அடுத்து என்ன செய்யவேண்டும் என்று பெஞ்சமினுக்குத் தெரியவில்லை. ஒரு முழு நிமிடம் எதுவும் பேசவில்லை மால்கம். பிறகு அமைதியானார்.

‘சரி நீங்கள் பேசுங்கள் பெஞ்சமின். அரை மணி நேரம் வரை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.’

தலையைக் கையில் பிடித்தபடி அருகில் இருந்த நாற்காலியில் பொத்தென்று அமர்ந்தார் மால்கம் எக்ஸ்.

பெஞ்சமின் எக்ஸ் மேடையில் பேசிக்கொண்டிருந்தார்.

‘கறுப்பர்களின் அசலான பிரதிநிதி இவர். ஆப்பிரிக்க

அமெரிக்கர்களின் உரிமைக்காகப் போராடும் தலைவர். ஒடுக்கப்படுவோரின் உரிமைக் குரல். தன் இன மக்களின் விடுதலைக்காகத் தன் உயிரைக் கொடுக்கவும் தயங்காத உன்னதமான போராளி. மால்கம் எக்ஸை பேச அழைப்பதில் நான் பெருமிதம் கொள்கிறேன்.’

மால்கம் எக்ஸ் தன் மேல்கோட்டை சரிசெய்துகொண்டே எழுந்து நின்றார். மேடையை நோக்கி நடக்க ஆரம்பித்தவர் அப்படியே பின்பக்கம் திரும்பினார்.

‘என்னை மன்னித்துவிடு பெண்ணே. அவசரப்பட்டு உன்னிடம் என் கோபத்தை வெளிப்படுத்திவிட்டேன்.’

காரியதரிசி புன்னகை செய்தார்.

‘கவலைப்படவேண்டாம் மால்கம். உங்கள் உரையைக் கேட்பதற்கு அனைவரும் தயாராக இருக்கிறார்கள். சென்று வாருங்கள்.’

மால்கம் தாவிக் குதித்து மேடையில் ஏறும்போது, பெஞ்சமின் அறைக்குத் திரும்பியிருந்தார்.

‘பெஞ்சமின், மால்கம் மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாகி இருப்பதாகத் தோன்றுகிறது.’

‘உண்மைதான். எக்கச்சக்கமான கொலை மிரட்டல்கள் தொடர்ந்து வந்துகொண்டே இருக்கின்றன. பாவம், என்னதான் செய்வார்?’

‘அதற்கெல்லாம் பயப்படுபவர் கிடையாது அவர். வேறு ஏதோ பிரச்னை என்று நினைக்கிறேன். அரங்கத்துக்கு வந்தது முதல் அவர் சரியில்லை.’

‘இரு, இரு. அங்கே மால்கம் பேச ஆரம்பித்துவிட்டார்.’

தாவிச் சென்று மேடையின் மீது ஏறிவிட்டிருந்தார் மால்கம். பார்வையாளர்களின் உற்சாகம் மால்கமையும் தொத்திக்கொண்டது. அதை அவரால் உணரவும் முடிந்தது. எழுந்து நின்று ஆரவாரத்துடன் கையசைக்கும் இளைஞர்களைக் கண்டதும் அவர் மனத்தில் இருந்த அத்தனை சஞ்சலங்களும் மாயமாக மறைந்து போயின. இந்தக் கைத்தட்டலையும் ஆரவாரத்தையும் தனக்கு மட்டுமே வழங்கப்பட்ட பிரத்தியேக வரவேற்பாக அவரால் எடுத்துக்கொள்ள முடியவில்லை. ஒரு மீட்பராக அவர்கள் என்னைப் பார்க்கிறார்கள். அவர்களுக்கான விடுதலையை நான் வாங்கித் தருவேன் என்னும் நம்பிக்கையின் வெளிப்பாடே இந்த ஆரவாரம். என் இன மக்கள் என்னை திடமாக நம்புகிறார்கள். அவர்கள் நம்பிக்கையை நான் நிறைவேற்றி வைப்பேனா?

உற்சாகம் கொப்பளிக்கும் குரலில் பேச ஆரம்பித்தார் மால்கம்.

'சகோதரர்களே, சகோதரிகளே அஸ்ஸலாமு அலைக்கும்...'

அவர் முடிக்கும்வரை கூட்டத்தினரால் காத்திருக்க முடியவில்லை. அரங்கம் அதிர்வதுபோல் வெளிவந்தது அவர்களது முழக்கம்.

'அலைக்கும் சலாம்!'

முழக்கத்தின் ஒலி அடங்குவதற்காகக் காத்திருந்த மால்கம் எக்ஸ் தனது உரையைத் தொடர ஆரம்பித்தார்.

அவர் எப்போது ஆரம்பிப்பார் என்று எதிர்பார்த்திருந்ததைப் போல் மேடைக்கு அருகில் ஏதோ சலசலப்பு. யாரோ யாரையோ பார்த்து கத்திக்கொண்டிருந்தார்கள். ஏன் என் சட்டைப் பைக்குள் கையை விட்டாய்? யார் நீ? பிறகு

இருவரும் அடித்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

அமைதி, அமைதி என்றார் மால்கம் எக்ஸ். மூன்று பேர் முன் வரிசையில் இருந்து எழுந்து நின்றார்கள். மால்கம் அவர்களைப் பார்த்து கையை அசைக்கும் போதே ஒரே சமயத்தில் மூவரும் சுட ஆரம்பித்தார்கள். இரண்டு பேர் சுட்டுக்கொண்டே மேடையை நோக்கி ஓடினார்கள். மூன்றாவது நபரின் இரு கைகளிலும் தலா ஒரு துப்பாக்கி. இரண்டும் ஓயாமல் வெடித்துக்கொண்டிருந்தன.

ஐயோ இங்கே என்ன நடக்கிறது? ஆண்களும் பெண்களுமாகச் சிதறி ஓட ஆரம்பித்தார்கள். இன்னும் சிலர் முன்னெச்சரிக்கையுடன் தரையில் அப்படியே படுத்துக்கொண்டார்கள். சிலர் மேசைகளுக்கு அடியில் ஒளிந்துகொண்டார்கள். குழந்தைகள் பெரும் குரலெடுத்து அழுதுகொண்டிருந்தன. கதவைப் பிளந்துகொண்டு வெளியில் தப்பியோட சிலர் முயற்சி செய்துகொண்டிருந்தார்கள்.

முதல் குண்டு மால்கம் எக்ஸைத் தாக்கியபோது, அவர் தன் மார்பை பிடித்துக்கொண்டார். கால்கள் தடுமாறின. அவரது மற்றொரு கையும் மார்பை நோக்கி விரைந்தபோது, இரண்டாவது குண்டு பாய்ந்தது. இடதுகை நடுவிரல் சிதைந்து ரத்தம் தெறித்தது. மால்கமின் வெள்ளைத் தாடியில் இருந்து ரத்தம் கசிய ஆரம்பித்தது. பொத்தென்று பின்புறம் உள்ள இருக்கைகள் மீது விழுந்தார் மால்கம் எக்ஸ். அவர் தலை தரையில் மோதியது. மொத்தம் பதினாறு குண்டுகள் அவரைத் துளைத்திருந்தன.

மேடையை நோக்கிப் பாய்ந்து ஓடினார் மால்கமின் மனைவி பெட்டி. ஐயோ என் கணவரைக் கொல்கிறார்கள். அவரை யாராவது காப்பாற்றுங்கள். அவருக்கு எதுவும் ஆகிவிடக்

கூடாது. கடவுளே!

மால்கமின் கழுத்துப் பட்டையை சிலர் தளர்த்திக்கொண்டிருந்தார்கள். ஒரு பெண் கத்திக்கொண்டே ஓடி வந்தார்.

‘தள்ளுங்கள் தள்ளுங்கள். முதலில் அவருக்குச் சுவாசம் கொடுக்கவேண்டும்.’

மால்கமின் தலையைக் கையில் ஏந்தி அவர் வாய் மீது வாய் பதித்து செயற்கை சுவாசம் அளிக்க முயற்சி செய்தார் அவர்.

‘உன்னால் முடியவில்லை என்றால் தள்ளிப்போ. மால்கமை நான் காப்பாற்றுகிறேன்.’

மற்றொரு இளைஞரும் முயன்று பார்த்தார்.

மால்கம், மால்கம் என்று கத்தியபடியே சிலர் வெறியுடன் தாவிக்குதித்து மேடை மீது ஏற ஆரம்பித்தார்கள். ஏதேனும் சிறு அசைவு தெரிகிறதா பாருங்களேன். மூச்சுக்காற்று? இந்த ரத்தத்தையாவது கட்டுப்படுத்துங்களேன். மருத்துவமனைக்குச் சொல்லிவிட்டீர்களா? நம் கண் முன்பாகவே இவரை நாம் பலிகொடுக்கப்போகிறோமா? அல்லா!

பதைபதைப்புடன் ஓடி வந்த பெட்டி, மால்கமின் கைகளைப் பிடித்துக்கொண்டார். வாய்விட்டு அழ ஆரம்பித்தார்.

# 2. நெருப்பு, நெருப்பு

அது துப்பாக்கிகளின் சத்தம் என்பதை மால்கமால் உணர முடியவில்லை. சுருண்டு படுத்திருந்தவன் திடுக்கிட்டு விழித்தான். காது பிளக்கும் ஓசை. ஏதேதோ கூச்சல். கனவா நிஜமா? எதுவானால் என்ன? அம்மா இருக்கிறார், பார்த்துக்கொள்வார். அம்மா, அம்மா என்று கத்தியபடியே பக்கத்து அறைக்குள் ஓடினான் மால்கம்.

லூயிசா மால்கமை தன்னோடு சேர்த்து அணைத்துக்கொண்டார். பயப்படாதே மால்கம். நமக்கு ஒன்றும் ஆகாது. அம்மாவின் அணைப்பும் ஆறுதலும் மால்கமை சாந்தப்படுத்தியது. அம்மாவின் கன்னத்தோடு கன்னம் சேர்த்து அப்படியே கட்டிக்கொண்டான். மால்கமின் சகோதரர்களும் சகோதரிகளும்கூட அம்மாவுடன் ஒட்டிக்கொண்டிருந்தார்கள்.

மீண்டும் துப்பாக்கிகள் வெடிக்க ஆரம்பித்தன. மால்கம் தன் அம்மாவை நிமிர்ந்து பார்த்தான். அம்மாவின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகிக்கொண்டிருந்தது. தன் கைகொள்ளும் மட்டும் குழந்தைகளை அணைத்துக்கொண்டார் லூயிசா. யாரும் பயப்படாதீர்கள் எல்லாம் சரியாகிவிடும். அப்பா நம்மை பத்திரமாக வெளியில் கொண்டு சென்றுவிடுவார். அழக்கூடாது சரியா?

சரி என்று சொல்ல நினைத்தான் மால்கம். அதற்குள் புகைய ஆரம்பித்துவிட்டது. லூயிசா தலையை உயர்த்திப் பார்த்தார். கூரை பற்றி எரிந்துகொண்டிருந்தது. ஏர்ல், ஏர்ல் எங்கே போய்விட்டீர்கள். சத்தம் போட்டு கத்தினார் லூயிசா. பதிலில்லை. குழந்தைகளிடம் திரும்பினார். உடனே கிளம்புங்கள். நாம் வீட்டை விட்டு

வெளியேறியாகவேண்டும். சீக்கிரம்.

எதற்கு என்று மால்கமுக்குப் புரியவில்லை. ஆனால் அம்மாவின் பதற்றம் அவனைத் தொற்றிக்கொண்டது. அம்மா ஓடச் சொல்கிறார். ஓடுவோம். அடித்துப் பிடித்துக்கொண்டு எல்லோரும் வாசலை நோக்கி ஓட ஆரம்பித்தார்கள். தலைக்கு மேலே பற்றி எரியும் நெருப்பை கலவரத்துடன் பார்த்தபடி மால்கம் வாசலுக்கு ஓடினான். இடுப்பில் இருந்த குழந்தையை மால்கமிடம் ஒப்படைத்துவிட்டு மீண்டும் வீட்டுக்குள் ஓடினார் லூயிசா. மால்கம் கத்தினான். அம்மா சீக்கிரம் ஓடி வந்துவிடுங்கள். நெருப்பு, நெருப்பு.

மற்றொரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு லூயிசா வெளியில் வருவதற்கும் மேற்கூரை முழுவதுமாகத் தீப்பற்றி கீழே விழுவதற்கும் சரியாக இருந்தது. ஏர்ல் லிட்டில் இரண்டு வெள்ளைக்காரர்களைத் துரத்திக்கொண்டு ஓடிக்கொண்டு இருந்தார். லூயிசா கத்தினார். இங்கே வாருங்கள். நம் வீடு தீப்பற்றி எரிந்துகொண்டிருக்கிறது.

அக்கம் பக்கத்தில் இருந்தவர்கள் ஓடி வந்தார்கள். தண்ணீரைக் கொண்டு தீயை அணைக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். கொழுந்து விட்டெறியும் நெருப்பை அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. இனி வீட்டைக் காப்பாற்ற முடியாது என்று திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது.

நடு வீதியில் தன் குழந்தைகளுடன் அமர்ந்திருந்தார் லூயிசா. கொழுந்து விட்டு எரியும் நெருப்பை எரிப்பதுபோல் வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தார். அவர் முகம் வீங்கியிருந்தது. கன்னங்களில் கரி ஒட்டிக்கொண்டிருந்தது. மால்கமால் அதிர்ச்சியில் இருந்து மீள முடியவில்லை.

இத்தனை பெரிய நெருப்பை அவன் இதுவரை பார்த்தது கிடையாது.

ஏர்ல் லிட்டில் ஓடி வந்தார்.

‘லூயிசா நான் சுட்டுக்கொண்டே ஓடினேன். ஆனால் அந்த வெள்ளைக்காரர்கள் தப்பிவிட்டார்கள். கொலைகாரப் பாவிகள். அவர்களை நான் சும்மா விடமாட்டேன்.’

அன்றைய இரவை அவர்கள் வீதியிலேயே கழிக்கவேண்டி இருந்தது. லூயிசா அவமானத்தால் கூனிக்குறுகி அமர்ந்திருந்தார். உயிரைக் கையில் பிடித்தபடி அப்படியே ஓடிவந்தாகிவிட்டது. அணிந்துகொண்டிருக்கும் உள்ளாடைகள் தவிர்த்து வேறு இல்லை. உணவு இல்லை. குழந்தைகளுக்கு அளிக்க பால் இல்லை. தண்ணீர் இல்லை.

ஏர்ல் லிட்டிலின் நண்பர்கள் உதவிக்கு வந்தார்கள். மாற்று ஆடைகள் அளித்தார்கள். உணவு அளித்தார்கள். ஆறுதல் சொன்னார்கள். மாற்று இருப்பிடம் அமைத்துத் தந்தார்கள். குழந்தைகளையும் அரவணைத்துக்கொண்டார்கள். எல்லாம் சரியாகிவிடும் கவலைப்படாதே என்று தோளைத் தட்டி அனுப்பி வைத்தார்கள்.

காவல்துறையில் இருந்து அதிகாரிகள் வந்தார்கள்.

‘ஏர்ல் லிட்டில் யார் இங்கே? ஏதோ தகராறு செய்தீர்களாமே. யார் வீட்டையோ கொளுத்தினீர்களாமே?’

பொங்கி வந்த கோபத்தைக் கட்டுப்படுத்த முயன்று தோற்றுப் போனார் ஏர்ல்.

‘உனக்குக் கண் தெரிந்தால் நீயாகவே பார்த்துக்கொள். என் வீட்டையே கொளுத்த நான் என்ன பைத்தியக்காரனா?’

அதெல்லாம் எனக்குத் தெரியாது, அங்கே வந்து பேசிக்கொள். என்று இரண்டு கைகளையும் கெட்டியாகப் பிடித்து அழைத்துச் சென்றார்கள். பாதிக்கப்பட்டவர் ஒருவரிடம் பேசுவதுபோல் அல்லாமல் கொலை பாதகச் செயல்களைச் செய்தவரை விசாரிக்கும் தோரணையில் கேள்விகள் கேட்டார்கள் அதிகாரிகள்.

நீ யார்? ஏதோ ரகசிய அமைப்புகளில் இருக்கிறாயாமே? பெரிய தலைவர் என்று நினைப்போ? வெள்ளையர்களுக்கு எதிராக ஊர் ஊராகச் சென்று மைக் வைத்துப் பேசுகிறாயாமே? கறுப்பனே! உனக்கு அத்தனைத் திமிரா? யார் சொல்லி இதையெல்லாம் செய்கிறாய்? இயக்கத்தில் இன்னும் எத்தனை பேர் இருக்கிறார்கள் உன்னைப்போல்? சொல்.

வெள்ளையர்கள் சிலரைத் துரத்திக்கொண்டு சாலையில் ஓடினாயாமே? அதுவும் துப்பாக்கியால் சுட்டுக்கொண்டு? எங்கிருந்தடா வந்தது இத்தனை துணிச்சல்? சுட்டுவிடுவாயா நீ? உன் சுண்டு விரல் பட்டுவிடுமா எங்கள் மீது? போனால் போகட்டும் என்று விட்டுவைத்தால் இத்தனை திமிரா? உண்மையை ஒப்புக்கொள். எங்கிருந்து கிடைத்தது துப்பாக்கி?

ஏர்ல் லிட்டில் அலட்டிக்கொள்ளவே இல்லை. நீதி கிடைக்கும் என்னும் நம்பிக்கை சத்தியமாக அவருக்கு இல்லை. காவல்துறை சட்டப்படிதான் இயங்கிக்கொண்டிருக்கிறது. அதாவது, அவர்கள் சட்டப்படி. என்னை விசாரித்துக்கொண்டிருக்கும் இந்தக் காவல் அதிகாரிக்கும் எனக்கும் எந்த விரோதமும் இல்லை. எரிந்தது என் வீடுதான் என்று இவருக்குத் தெரியும். எரித்தவர்களையும் தெரிந்திருக்கும். அல்லது தெரிந்துகொள்ளும் ஆர்வம் இல்லாமல் இருக்கும்.

ஆனாலும் என்னை உட்கார வைத்துக் கேள்வி கேட்டுக்கொண்டு இருக்கிறார். வீட்டை எரித்தவர்களை கண்டுகொள்ளாமல் விட்டுவிடுவார்களாம். அவர்களைத் துரத்திச் சென்று சுட்ட என் மீது விசாரணையாம். ச்சே, அந்தப் பாவிகள் இறந்திருந்தால்கூடப் பரவாயில்லை. மகிழ்ச்சியுடன் இருந்திருக்கலாம். கோட்டை விட்டுவிட்டோமே!

வாயை இறுக மூடிக்கொண்டு அமர்ந்திருந்தார் ஏர்ல் லிட்டில். தன்மானம் உள்ளுக்குள் இருந்தபடி தகித்துக்கொண்டிருந்தது. சீ நாயே என்னிடம் இப்படிக் கேள்வி கேட்க உனக்கு வெட்கமாக இல்லையா என்று கர்ஜிக்கவேண்டும்போல் இருந்தது. அடக்கிக்கொண்டார். இன்னும் சிறிது நேரம் அதட்டி உருட்டி மிரட்டிவிட்டு, போ போ என்று சொல்லித் தள்ளிவிட்டார்கள்.

அதற்குப் பிறகும் அடிக்கடி வீட்டுக்கு வந்தார்கள். நீக்ரோ பயலே ஏதாவது ஆயுதம் பதுக்கி வைத்திருக்கிறாயா? எங்கே நீ பயன்படுத்திய துப்பாக்கி? வீடு முழுவதையும் சல்லடையாகச் சலித்தார்கள். சமையல் அறை, கழிப்பறை எதையும் விட்டுவைக்கவில்லை. எதுவும் கிடைக்கவில்லை என்னும் ஆத்திரத்தில் கையில் கிடைத்ததைத் தூக்கி எறிந்தார்கள். குழந்தைகள் ஓடியோடி அம்மாவின் பின்னால் பதுங்கிக்கொண்டன.

அந்தத் துப்பாக்கி எங்கே இருக்கிறது என்று லூயிசாவுக்குத் தெரியும். தலையணைக்கு உள்ளே அதை வைத்து ஏர்ல் தைத்திருந்தார். எல்லோருடைய கண்களிலும் படும்படி வெளியேதான் இருந்தது அந்தத் தலையணை. இதில் ஏர்லுக்குக் கொஞ்சம் பெருமிதமும் இருந்தது. இந்த முட்டாள்களுக்கு விவேகம் சிறிதும் இல்லை என்று அடிக்கடி லூசியாவிடம் சொல்லிக்கொண்டிருந்தார்.

லூசியாவுக்குத் தன் கணவரின் மீது நம்பிக்கை இருந்தது. அவரது போராட்ட குணத்தையும் அவர் சார்ந்திருந்த இயக்கத்தையும் மார்கஸ் கார்வேயையும் அவர் மதித்தார். ஆனால், போராட்டங்கள் மூலம் கறுப்பர்களுக்கு விடிவுகாலம் கிடைக்கும் என்னும் நம்பிக்கை மட்டும் லூசியாவுக்கு இல்லை. வெள்ளையர்கள் கிருமிகளைப்போல் எங்கும் பரவியிருக்கிறார்கள். அத்தனைச் சுலபத்தில் அவர்கள் நம்மைவிட்டு அகலமாட்டார்கள். அகற்றுவதும் சாத்தியமில்லை.

லூயிசா தனது கைகளை உற்றுப் பார்த்தார். வெள்ளை நிறத்தோல். இந்த வெண்மையை என்னிடம் இருந்து கழற்றி எறிய முடிந்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்? என் அப்பா ஏன் எனக்கு இந்த வெண்மையை அளிக்கவேண்டும். என் கணவரைப் போல், என் குழந்தைகளைப் போல், என் சமூகத்தைப் போல் நான் ஏன் கறுப்பாக இருந்திருக்கக்கூடாது?

மால்கமை தன் அருகே இழுத்துக்கொண்டார் லூசியா.

‘மால்கம் நான் சொல்வதை நீ கேட்பாயா?’

நிச்சயமாக என்பதுபோல் தலையசைத்தான் மால்கம்.

‘நீ உன் சகோதரர்களைப்போல் இல்லாமல் என்னைப் போல் இருக்கிறாய். என்னுடைய வெண்மையின் ஒரு பகுதி உன்னிடம் கலந்துவிட்டது. நம் இன மக்களைப்போல் கறுப்பாக இல்லாமல் பழுப்பு நிறத்தில் இருக்கிறாய். இப்படிப் பழுப்பாக இருப்பது அதிர்ஷ்டகரமானது என்று நம்மிடையே சிலர் நம்பிக்கொண்டிருக்கிறார்கள். வெட்கம் கெட்டவர்கள். வெள்ளை என்றால் கிருமி. நாம் கறுப்பைத்தான் நேசிக்கவேண்டும். உன் பழுப்பு நிறத்

தோலின் மீது காதல் வைக்காதே. வெள்ளையர்களுக்கு அடங்கிப்போய்விடாதே.’

‘சரி.’

ஏர்ல் லிட்டில் அடிப்படையில் ஒரு மதபோதகர். கிறிஸ்தவத்தின் மீது அவருக்கு மிகுந்த நம்பிக்கை இருந்தது. கர்த்தரின் சமூகம் தனக்கு முன்பாகச் சென்று வழிநடத்தும் என்று ஏர்ல் திடமாக நம்பினார். அதேசமயம், எல்லாவற்றையும் கர்த்தர் கவனித்துக்கொள்வார் என்று கண்களை மூடிக்கொண்டு இருக்கவும் முடியவில்லை அவரால். ஜெபிப்பதற்காகக் கண்களை மூடும்போதெல்லாம் யதார்த்தம் ஊசிபோல் குத்தி, கண்களைத் திறக்கச் செய்தது.

இதயம் வலித்தது. என் இன மக்களுக்கு மட்டும் ஏன் இத்தனை இன்னல்கள்? ஒரு பாவமும் அறியாத கறுப்பர்களுக்கு ஏன் அடுக்கடுக்காக இத்தனைத் தண்டனைகள்? வெள்ளையர்களால் மிருகங்களைப்போல் இவர்கள் நடத்தப்படுவதைத் தடுத்து நிறுத்த ஏன் யாரும் முயற்சிக்கவில்லை? கறுப்பர் என்றால் அத்தனை இளக்காரமா?

மார்கஸ் ஆரேலியஸ் கார்வேயைப் பற்றிக் கேள்விப்பட்டதும் பரவசமானார் ஏர்ல். கார்வே தலைமையேற்று நடத்திவந்த சர்வதேச கறுப்பர் மேம்பாட்டுச் சங்கத்தில் Universal Negro Improvement Association) இணைந்துகொண்டார்.

இந்த அமைப்பின் தலைமைச் செயலகம் நியூ யார்க் நகரில் உள்ள ஹார்லெம் (Harlem) என்னும் பகுதியில் அமைந்திருந்தது. கார்வே முன் வைத்த தத்துவத்தை ஏர்ல் ஏற்றுக்கொண்டார். அமெரிக்கா வெள்ளையர்களின்

பிரத்தியேக தேசமாகவே மாற்றப்பட்டுவிட்டது. கறுப்பர்களால் வெள்ளையர்களோடு கலந்து சகஜமாக வாழ முடியாது. வெள்ளையர்கள் கறுப்பர்களை தங்களுக்குச் சமமானவர்களாக நினைத்துக்கூட பார்க்கமாட்டார்கள். கறுப்பர்களை எப்படி அடிமைப்படுத்தலாம் என்று மட்டுமே யோசிக்க முடியும் அவர்களால். சுதந்தரம், சுயமரியாதை இரண்டின் மீதும் கறுப்பர்களுக்கு நம்பிக்கை இருக்குமானால் அவர்கள் அமெரிக்காவைவிட்டு உடனே அகலவேண்டும். கறுப்பர்களின் தாய்நாடு ஆப்பிரிக்கா. கறுப்பர்கள் இருக்கவேண்டியது அங்கேதான். ஆகவே என் அருமை அமெரிக்க ஆப்பிரிக்கர்களே ஆப்பிரிக்காவுக்குத் திரும்புங்கள். உடனே.

ஏர்ல் லிட்டிலை மட்டுமல்ல எண்ணற்ற பல கறுப்பு இளைஞர்களைக் கவர்ந்திழுக்கும் காந்தமாக மார்கஸ் கார்வே அப்போது அறியப்பட்டார். இதோ நம்மைப் பற்றி அக்கறையுடன் சிந்திக்கக்கூடிய ஒரு தலைவன் என்னும் நம்பிக்கையுடன் மக்கள் அவரை ஏற்றுக்கொண்டனர்.

என் அருமை மக்களே, வெள்ளையர்களைச் சார்ந்து நாம் ஏன் வாழவேண்டும்? உண்மையில் அவர்கள்தான் நம்மை சார்ந்திருக்கிறார்கள். நம் உழைப்பை, நம் செல்வத்தை அபகரித்து நம்மை அடிமைகளாக மாற்றியிருக்கிறார்கள். போதும் இந்த அடிமை வாழ்க்கை. வெள்ளையர்களுக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய அவசியம் நமக்கு ஏன் ஏற்பட்டிருக்கிறது என்று சிந்தித்துப் பார்க்கவேண்டாமா? வாருங்கள். நமக்கான எதிர்காலத்தை நாமே உருவாக்கிக்கொள்வோம். நம் பொருளாதாரத்தை நாமே கட்டமைத்துக்கொள்வோம். அமெரிக்காவை வெள்ளையர்களுக்கு விட்டுவிடுவோம். ஆப்பிரிக்காவுக்குத் திரும்புவோம். அதுவே நமது கனவு தேசம்.

கார்வேயின் சிந்தனை ஏற்றுக்கொள்ளத்தக்கதாக இருப்பதாக ஏர்ல் நினைத்தார்.

‘ஏன் நம் வீட்டை அவர்கள் கொளுத்தவேண்டும்?’

‘உன்னால் அந்தக் காரணங்களைப் புரிந்துகொள்ளமுடியாது மால்கம்.’

‘சொல்லுங்கள் புரிந்துகொள்கிறேன். அப்பா அவர்களிடம் ஏதாவது சண்டை போட்டாரா?’

‘யாருடனும் சண்டை போடாமல் அவர் இருந்திருந்தாலும் நம்மை அவர்கள் தாக்கியிருப்பார்கள். நாம் கறுப்பர்கள்.’

கறுப்பர்கள் என்றால்? அவர்கள் வீடுகளைக் கொளுத்தலாமா? மால்கம் பதில் பேசாமல் அமர்ந்திருந்தான். லூசியா அவன் கன்னங்களை வருடிக்கொடுத்தார்.

‘இது முதன் முறையல்ல மால்கம். இதற்கு முன்னால் நாம் ஒமாஹாவில் இருந்தபோதும் அங்கிருந்து விரட்டியடிக்கப்பட்டோம். அப்போது நான் உன்னை வயிற்றில் சுமந்துகொண்டிருந்தேன். திடீரென்று சிலர் வீட்டை முற்றுகையிட்டார்கள். உன் அப்பாவின் பெயரை உரக்கச் சொல்லி வெளியில் வருமாறு கத்தினார்கள். அவர்களிடம் துப்பாக்கி இருந்தது. உன் அப்பா அப்போது வீட்டில் இல்லை. நான் வெளியில் போகாவிட்டால் அவர்கள் உள்ளே நுழைந்துவிடுவார்கள் என்று தெரிந்தது. பருத்திருந்த என் வயிற்றை இரு கரங்களாலும் பற்றியபடி கதவைத் திறந்தேன். உன் சகோதரர்கள் எனக்குப் பின்னால் பயத்துடன் ஒளிந்துகொண்டிருந்தார்கள். என்னை எரித்துவிடுவதைப்போல் அவர்கள் பார்த்தார்கள். கணவர்

ஊரில் இல்லை என்று சொன்னேன். அவர்கள் கோபத்துடன் கத்தினார்கள். உடனே இங்கிருந்து காலி செய்யாவிட்டால் கொன்றுவிடுவோம் என்று மிரட்டினார்கள். வேறு வழியில்லாமல் அங்கிருந்து குடிபெயர்ந்துவிட்டோம்.'

இறை ஊழியம் மட்டும் செய்துகொண்டிருந்தால் ஏர்ல் லிட்டிலுக்கு இத்தனை பிரச்னைகள் இருந்திருக்காது. ஆனால் ஏர்ல் 'கார்வே ஊழியமும்' செய்துகொண்டிருந்தார். இதனால் தொடர்ந்து தன் குடியிருப்பை மாற்றிக்கொண்டே இருக்கவேண்டிய நிலை. எங்கும் நிலையாகத் தங்க முடியவில்லை அவரால். மனைவியையும் குழந்தைகளையும் பாதுகாப்பாக வீட்டில் விட்டுவிட்டுவெளியில் செல்லமுடியவில்லை. எந்த நேரத்தில் யார் வீடு புகுந்து தாக்குவார்கள் என்று சொல்லமுடியவில்லை.

வெள்ளையர்களை சார்ந்திராமல் சுயமாக உழைத்துத் தொழில் நடத்த விரும்பினார் ஏர்ல். வருமானம் முக்கியம். ஆனால், தன்மானம் அதைவிட முக்கியம். ஆங்கிலேயர்களுக்கு அடிபணிந்து அவர்களுடைய தாள் தொழுது அதன் மூலம் கிடைக்கும் வருமானத்தை ஏற்றுக்கொள்ள அவர் மனம் கூசியது. சீ இதுவும் ஒரு பிழைப்பா என்று உதறித்தள்ளினார் அவர்.

மில்வாக்கியில் இருந்து அடித்துத் துரத்தப்பட்டதால், அங்கிருந்து லேன்சிங். இங்கேயே தொழில் தொடங்கலாம் என்று முடிவு செய்தார் ஏர்ல். தன் தொழிலுக்காகப் பணம் சேர்க்கவும் ஆரம்பித்தார். ஒரு பாதிரியார் புதிதாக வந்திருக்கிறார் என்றுதான் அந்தப் பகுதியில் உள்ள வெள்ளையர்கள் முதலில் நினைத்தனர். ஒழியட்டும் என்று கண்டுகொள்ளாமல் இருந்தனர்.

ஏர்ல் தன் வேலையை ஆரம்பித்தார். கறுப்பர்களை ஒன்றுகூட்டி மெல்லிய குரலில் பேசினார். அவர்கள் தோள் மீது தட்டிக்கொடுத்து தூண்டில் வீசினார். எதைப் பற்றியும் யோசிக்காமல் இருக்கிறீர்களே, நீங்கள் அரசியல் ஞானம் பெறப்போவது எப்போது நண்பரே என்று உரிமையுடன் கடிந்துகொண்டார். என் வீட்டுக்கு வாருங்கள் நாம் பேசுவோம் என்று வரவேற்றார்.

வீட்டுக்கு வந்தவர்களை உட்கார வைத்து, தேநீர் கொடுத்துப் பேசினார். உக்கிரமாக. ஆக்ரோஷமாக. நெகிழ்ச்சியாக. ஏர்லை பலருக்குப் பிடித்திருந்தது. பலருக்குப் பிடிக்கவில்லை. ஜெபமணிகளை உருட்டாமல் பைபிள் படிக்காமல் அரசியல் பேசுவார்களா யாராவது? இவர் பாதிரியாரா அல்லது கலகக்காரரா? சர்வ வல்லமை பொருந்திய வெள்ளையர்களுக்கு எதிராக நம்மை ஏன் இவர் திருப்பிவிடுகிறார்? நம்மை மேலும் குட்டிச்சுவராக்கவா?

வெள்ளை உடை அணிந்த சைத்தான் ஒன்று எங்கள் பகுதிக்கு வந்திருக்கிறது. ஏதாவது செய்யுங்கள் என்று போகிற போக்கில் வெள்ளையர்களிடம் சொல்லிவிட்டுப் போனார்கள் சில கறுப்பர்கள். ஏர்ல் லிட்டில் மீண்டும் மிரட்டப்பட்டார். விரட்டப்பட்டார்.

அங்கிருந்து ஒமாஹா. யோசித்துக்கொண்டேதான் காலடி எடுத்து வைத்தார் ஏர்ல் லிட்டில். இங்கே எத்தனை காலமோ? அவர் கணிப்புத் தவறவில்லை. 1929-ல் அவர் வீடு கொளுத்தப்பட்டது. அப்போது மால்கமுக்கு நான்கு வயது. (மே 19, 1925ல் நெப்ராஸ்காவில் பிறந்தார் மால்கம்).

அப்பா அழைத்துச்சென்றால் மட்டுமே அவருடன் தேவாலயம் போவான் மால்கம். கூட்டத்தோடு கூட்டமாக அவனையும் உட்கார வைத்துவிட்டு மேடை ஏறிவிடுவார்

ஏர்ல். பேச ஆரம்பித்துவிட்டால், பிறகு அவரைக் கட்டுப்படுத்துவது சிரமம். பேசிக்கொண்டிருக்கும்போதே குதிப்பார். குதித்துக்கொண்டிருக்கும்போதே சன்னமாகக் குரல் உயர்த்திப் பாடுவார். பாடிக்கொண்டிருக்கும்போதே இடையிடையே பைபிள் வசனங்களை வழங்குவார். மால்கம் விரிந்த கண்களோடு ஆச்சரியமாகக் கவனித்துக்கொண்டிருப்பான். ஏர்ல் பாடும்போது கூட்டத்தினரும் பாடுவார்கள். அவர் ஆடினால் இவர்களும் ஆடுவார்கள்.

தன் தந்தையின் நம்பிக்கையோடு தன்னால் ஒன்ற முடியவில்லை என்பதை மால்கமால் அப்போதே உணர முடிந்தது. இயேசுவே முழு முதற் கடவுள் என்பதை அவனால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. பைபிள் மீதோ, தேவாலயத்தின் மீதோ, போதனைகள் மீதோ அவனுக்கு நாட்டம் இருக்கவில்லை. வெறுமனே கேட்டுக்கொண்டதோடு சரி.

அப்பாவும் அம்மாவும் வீட்டில் சண்டை போட்டுக்கொள்ளும்போது மால்கம் புரியாமல் பார்த்துக்கொண்டிருப்பான். எதற்காக இந்தச் சண்டை என்று அவனால் விளங்கிக்கொள்ள முடிந்ததில்லை. அப்பாவைவிட அம்மா படித்தவர், பண்பானவர் என்று மட்டும் புரிந்தது. ஒருவேளை அதனால்தான் சண்டையோ?

இன்னொரு முரண்பாட்டையும் மால்கமால் விளங்கிக்கொள்ளமுடியவில்லை. அம்மா அடிக்கடி என்னைத் திட்டிக்கொண்டிருக்கிறார். சிறு தவறுகளுக்கும் கன்னம் சிவந்துவிடுகிறார். இழுத்துவைத்து முதுகில் நாலு போடு போடுகிறார். பிற குழந்தைகளுடன் ஒப்பிடும்போது தன் மீது மட்டும் அம்மா கூடுதல் கண்டிப்புடனும் கூடுதல் சிடுசிடுப்புடனும் நடந்துகொள்வதுபோல் மால்கமுக்குப்

பட்டது.

அம்மாவுக்கு நேர் எதிர் அப்பா. அம்மாவைவிட அவருக்கு முன்கோபம் அதிகம். எண்ணிக்கையில் அடக்கிவிடமுடியாத அளவுக்குப் பல்வேறு ஒழுக்க விதிகளை அவர் இயற்றி வைத்திருப்பார். இம்மியளவு பிசகினாலும் சரி. குழந்தைகள் என்று கூட பார்க்கமாட்டார். திட்டுவார். அடிப்பார். மால்கம் மட்டும் விதிவிலக்கு. அவன் தவறு செய்தால் மட்டும் இனியொருமுறை இப்படிச் செய்யாதே சரியா என்று கன்னத்தில் தட்டிக்கொடுத்துவிட்டு நகர்ந்துவிடுவார். ஒரு புன்னகையுடன்.

வெகு காலத்துக்குப் பிறகே விடை கிடைத்தது. என் அம்மா என்னைக் கூடுதல் கண்டிப்புடன் வளர்த்ததற்குக் காரணம், என் தோலில் படிந்திருக்கும் வெள்ளை நிறம். என் அப்பா என்னை அணைத்துக்கொண்டதற்குக் காரணமும் அதுவேதான். கறுப்பாக இருந்தாலும் வெள்ளை மீது மறைமுகமாக ஒரு காதல் அப்பாவுக்கு இருந்திருக்கவேண்டும். வெள்ளையர்கள் தொடர்ந்து ஊட்டி வந்த நஞ்சை சிறிதளவு அவரும் புசித்திருக்கவேண்டும். ஏன் அப்பா?

‘நீ ஏன் எப்போதும் அடம் பிடித்துக்கொண்டிருக்கிறாய்? வில்ஃப்ரெட் எத்தனை அமைதியாக இருக்கிறான் பார். அவனைப் பார்த்து நீ ஏன் கற்றுக்கொள்ளக் கூடாது?’

மால்கம் பதில் சொல்லவில்லை. மிகவும் வற்புறுத்தியிருந்தால் இப்படிச் சொல்லியிருப்பான். ஆம் அம்மா நான் அப்படித்தான் செய்வேன். அடம் பிடிப்பதால்தான் நான் கேட்பதை நீங்கள் தருகிறீர்கள். பசிக்கிறது உணவு கொடு என்று கேட்டால் முடியாது என்று

சொல்லிவிடுகிறீர்கள். அல்லது பதிலே சொல்லாமல் உள்ளுக்குள் சென்று மறைந்துவிடுகிறீர்கள். நான் அழுதால், கத்தினால் மட்டுமே உணவு கிடைக்கிறது. என்னை சகித்துக்கொள்ள முடியாமல் எங்கிருந்தாவது வாங்கி வந்து கொடுத்துவிடுகிறீர்கள். நான் கேட்டது எனக்குக் கிடைத்துவிட்டது இல்லையா?

வில்ஃப்ரெட்டை நீங்கள் தாராளமாகத் தலையில் தூக்கிவைத்துக் கொண்டாடலாம். அதை அவன் ரசிக்கவும் செய்வான் என்று நினைக்கிறேன். சாப்பாடு இல்லை என்று சொன்னால் சரியென்று தலையை ஆட்டிக்கொண்டே நகர்ந்து போய்விடுவான் அவன். அவனுக்கு எதிர்க்கத் தெரியாது. ஆகவே பட்டினி கிடக்கிறான். என்னால் அப்படி இருக்க முடியாது.

மால்கமுக்குச் சில விஷயங்கள் புரியவில்லை. ஏர்ல் லிட்டிலால் அதிகம் சம்பாதிக்க முடியவில்லை. தேவாலயத்தில் கிடைக்கும் சிறிதளவு பணத்தைக் கொண்டு இத்தனை குழந்தைகள் நிரம்பிய ஒரு வீட்டை நிர்வாகம் செய்வது கடினம். குழந்தைகள் கேட்கும் அனைத்தையும் இதோ இந்தா என்று வாங்கித் தந்துவிடமுடியாது. ஆனால் மால்கமால் எந்தச் சமரசத்தையும் ஏற்றுகொள்ளமுடியவில்லை. வேண்டும் என்று அவன் ஒன்றை விரும்பினால் அது கிடைத்துவிடவேண்டும். அவ்வளவுதான்.

செப்டெம்பர் 28, 1931. அப்போதுதான் பள்ளியில் இருந்து திரும்பியிருந்தான் மால்கம். வகுப்புகள் முடிந்ததுமே வீட்டுக்கு ஓடி வந்துவிடுவான். சிறிது விளையாடுவான். அம்மாவுடன் தொணதொணவென்று ஏதாவது பேசுவான். சகோதரர்களுடன் சண்டை பிடிப்பான். கால்களை மடக்கி

வைத்துக்கொண்டு தூங்கிவிடுவான்.

அன்றைய தினம் யாருடனும் சண்டை பிடிக்கமுடியவில்லை.

அம்மா அழுதுகொண்டிருக்கும் சத்தம் கேட்டு அடுப்பறைக்குள் எட்டிப் பார்த்தான் மால்கம். ஏதோ பிரச்னை என்று தெரிந்தது. விசும்பிக்கொண்டே முயலின் தோலை உரித்துக்கொண்டு இருந்தார் லூயிசா. அப்பா மற்றொரு அறையில் ஏதோ சொல்லி உறுமிக்கொண்டிருந்தார். முயலை இப்போதே சமைத்துக்கொடு என்று அவர் கத்தியது காதில் விழுந்தது. முயலை வைத்துக்கூடவா சண்டை போடுவார்கள்?

உள்ளே போய் என்ன விஷயம் என்று கேட்கலாமா என்று மால்கம் நினைத்துக்கொண்டிருந்தபோதே படாரென்று கதவைத் திறந்துகொண்டு அப்பா வெளியேற ஆரம்பித்துவிட்டார். லூயிசா சட்டென்று எழுந்து அவர் பின்னால் ஓட ஆரம்பித்துவிட்டார். என்னைவிட்டு போய்விடாதீர்கள் ஏர்ல் என்று கத்தியபடியே வீதியில் விரைந்து சென்றார். அப்பா திரும்பிக்கூட பார்க்காமல் மறைந்துவிட்டார்.

அன்றைய இரவை மால்கமால் தன் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியவில்லை. முட்டிக்காலை கட்டிக்கொண்டு அம்மா அழுதுகொண்டே இருந்தார். ஏர்ல், ஏர்ல், ஏர்ல். திரும்பத்திரும்ப மந்திரம்போல் உச்சரித்துக்கொண்டே விசும்பியப்டி இருந்தார். இதுபோல் அம்மா அழுது மால்கம் பார்த்ததில்லை. எத்தனை பெரிய துன்பம் வந்தாலும் உடனே தேறிவிடக்கூடியவர். கண்ணீரைத் துடைத்துவிட்டுக்கொண்டு அடுத்த வேலையை கவனிக்க ஆரம்பித்துவிடுவார். வீடு எரிந்தபோதுகூட இத்தனை

கலங்கியிருக்கவில்லை அவர். என்ன ஆனது? என் அன்பான அம்மா, ஏன் இன்று இத்தனை துயரம்? நான் இனி அடம்பிடிக்க மாட்டேன் அம்மா. வா, வந்து என்னைக் கட்டியணைத்துக்கொள். உன் பேச்சை இனி நான் தட்டமாட்டேன். தயவுசெய்து என்னை நிமிர்ந்து பாரேன்.

எப்போது உறங்கினோம் என்றே மால்கமுக்குத் தெரியவில்லை. ஏதோ சத்தம். கண்களைப் பிரிக்க முயன்றான். முடியவில்லை. எரிச்சல். நடு இரவாகத்தான் இருக்கவேண்டும். அம்மா பெருங்குரல் எடுத்து அழுவது கேட்டதும் வாரிச்சுருட்டிக்கொண்டு எழுந்தான். அம்மாவைப் பார்ப்பதற்கு முன்னால் மேற்கூரையைத்தான் பார்த்தான் மால்கம். இந்த வீட்டையும் கொளுத்திவிட்டார்களா?

கூரையில் நெருப்பு இல்லை. ஆனால் அறை முழுவதும் காவலர்கள் நிரம்பியிருந்தனர். அம்மா தரையில் படுத்துக் கதறிக்கொண்டிருந்தார். அம்மா என்று கத்தியபடியே அவரை நெருங்கினான் மால்கம். காவலர்கள் எதுவும் பேசாமல் பொம்மைபோல் நின்றுகொண்டிருந்தார்கள்.

லூயிசா, மால்கமைத் தன் மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டார். ஐயோ, மால்கம் உன் அப்பாவைக் கொன்றுவிட்டார்கள். காவலர்களில் ஒருவர் வாய் திறந்தார். சரி சரி உடனே கிளம்பி வாருங்கள்.

வழி முழுவதும் அரற்றிக்கொண்டே வந்தார் அம்மா. மருத்துவமனைக்குள் நுழைந்தபோது, மயக்கமே வந்துவிட்டது அவருக்கு. ஒரு மூலையில் மேஜையின் மீது உடல் கிடத்தப்பட்டிருந்தது. பெரிய போர்வை ஒன்றால் போர்த்தியிருந்தார்கள்.

காவல் அதிகாரி லூயிசாவை நெருங்கினார். இதோ பாரம்மா இவர் கொல்லப்படவில்லை. ஏதோ ஒரு வண்டி இவர் மீது ஏறிவிட்டது. இது ஒரு விபத்து. நீ பாட்டுக்குக் கொலை கொலை என்று ஊர் முழுவதும் சொல்லிக்கொண்டு திரியாதே. லூயிசா ஒரே ஒரு விநாடி மட்டும் அந்த அதிகாரியை உற்றுப் பார்த்தார். பிறகு தெளிவான குரலில் அனைவருக்கும் கேட்கும்படி உரத்துக் கத்தினார்.

‘சத்தியமாக இது கொலை.’

ஏர்ல் லிட்டிலின் இறுதிச் சடங்கு தேவாலயத்தில் நடைபெறவில்லை. ஊருக்கெல்லாம் இறுதிச்சடங்கு செய்வித்தவர். ஆனால் அவருடைய இறுதிச்சடங்குக்கு அனுமதி கிடைக்கவில்லை.

சடங்குகள் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, ஒரு பெரிய ஈ ஏர்லின் முகத்தில் வந்து அமர்ந்தது. வில்ஃப்ரெட் எழுந்து சென்று விரட்டிவிட்டு வந்தான். இறுதியாக ஒரு முறை தன் தந்தையின் முகத்தை உற்றுப் பார்த்தான் மால்கம். அவர் முகத்தில் நிறைய மாவு அப்பியிருந்தார்கள். அவரது முகத்தின் பெரும்பகுதி சிதைந்திருந்தது. அம்மா இறுதி வரை தன் கணவரின் உடலை நெருங்கி வராதது நல்லதுதான் என்று நினைத்துக்கொண்டான் மால்கம்.

# 3. மனிதனின் நிறம் கறுப்பு

இணையக்கூடாத இரண்டு விஷயங்கள் வீட்டில் இணைந்து கலந்திருந்தன. வறுமையும் குழந்தைகளும். என்ன செய்வது என்று அந்த முப்பத்து நான்கு வயது தாய்க்குத் தெரியவில்லை. ஏர்ல் லிட்டில் இரண்டு காப்பீடுகள் எடுத்து வைத்திருந்தார். ஒன்று சிறிய தொகை. மற்றொன்று கணிசமானது. சிறிய தொகையை உடனே கொடுத்துவிட்டார்கள். அது இறுதிச் சடங்குக்குச் சரியாக இருந்தது. மற்றொரு காப்பீடு வேண்டி நடையாக நடந்து பார்த்துவிட்டார் லூயிசா. உதட்டைப் பிதுக்கிவிட்டது காப்பீடு நிறுவனம். இதோ பாரம்மா உன் கணவர் தற்கொலை செய்துகொண்டதாக எல்லோரும் பேசிக்கொள்கிறார்கள். தற்கொலை செய்துகொண்டவருக்கு இழப்பீடு வழங்கமுடியாது. தயவு செய்து எங்களைத் தொந்தரவு செய்யாதே!

ஊர் மக்கள் யாரும் அப்படிப் பேசிக்கொள்ளவில்லை என்று லூயிசாவுக்குத் தெரியும். அவர்கள் என்ன பேசிக்கொண்டார்கள் என்பதும் அவருக்குத் தெரியும். ஏர்ல் லிட்டிலை அடித்தே கொன்று இருக்கிறார்கள். பலமாகத் தாக்கிவிட்டு மண்டையையும் உடைத்துவிட்டு நடு வீதியில் போட்டுவிட்டார்கள். விபத்து போல் ஏற்பாடு செய்துவிட்டார்கள். கொன்றவர்கள் யார் என்பது தெரியப்போவதே இல்லை.

எப்படியும் இறந்தவர் மீண்டு வரப்போவதில்லை. குடும்பத்தை எப்படித் தொடர்ந்து நடத்துவது? குழந்தைகளை எப்படிப் படிக்க வைப்பது? உணவுக்கு என்ன வழி? நான் இருக்கிறேன் அம்மா என்று வில்ஃபிரட் கையை

உயர்த்தினான். படிப்பை அப்போதே நிறுத்திக்கொண்டான். நகரத்துக்குச் சென்று வேலை பார்க்க ஆரம்பித்தான். அவன் என்னென்ன வேலை செய்வான் என்று மால்கமுக்குத் தெரியாது. ஆனால் அவ்வப்போது சிறிது பணம் கொண்டு வருவான்.

சகோதரி ஹில்டாவும் தன் பங்குக்கு ஏதாவது செய்ய விரும்பி, குழந்தைகளைப் பராமரிக்கும் வேலையை எடுத்துக்கொண்டார். அவளுக்கும் சிறிதளவு பணம் கிடைத்தது. லூயிசா வெளி வேலைக்குப் போக ஆரம்பித்தார். வெள்ளையர்களின் குடியிருப்புகளில் வேலை கிடைத்தது. தையல் வேலை. வீடு பராமரிக்கும் வேலை. உதவியாளர் வேலை. முகம் சுளிக்காமல் பம்பரம்போல் சுழன்று பணியாற்றினார் லூயிசா. பொதுவாகக் கறுப்பினப் பெண்களுக்கு வெள்ளையர்கள் வேலை அளிக்கமாட்டார்கள். லூயிசாவின் நிறம் அவர்களைக் குழப்பியதால், அவர் வெள்ளையராகத்தான் இருக்கவேண்டும் என்று அவர்கள் முடிவு செய்தனர். உண்மை என்றைக்குத் தெரிய வருகிறதோ அன்றைய தினம் அவர் வேலை பறிபோகும். மீண்டும் வேலை தேட ஆரம்பிப்பார். மீண்டும் வேலை பறிபோகும்.

விதவைகளுக்காக அளிக்கப்படும் கருணைத் தொகை கிடைத்தபோது கொஞ்சம் பெருமூச்சு விடமுடிந்தது. ஆனால், அதுவும் நீடிக்கவில்லை. அரசாங்க அதிகாரிகள் அடிக்கடி வீட்டுக்கு வந்து போக ஆரம்பித்தார்கள். விசாரணை என்றார்கள். பணம் அளிக்க வந்திருக்கிறோம் என்றார்கள். தேவைக்கும் அதிகமாக லூயிசாவைப் பார்த்து கடவாய்ப் பல் தெரிய இளித்தார்கள். நீங்களும் வேண்டாம் உங்கள் பணமும் வேண்டாம் என்று முகத்திலேயே தூக்கி எறிந்தார் லூயிசா.

அழுது அடம் பிடித்தாலும் இனி கேட்டது கிடைக்காது என்று மால்கமுக்குத் திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டது. வறுமை வீட்டை சீரழித்துக்கொண்டிருந்ததை அவனால் புரிந்துகொள்ளமுடிந்தது. என் பங்குங்கு நானும் ஏதாவது செய்யவேண்டியது அவசியம். அம்மா இத்தனை சிரமங்களை அனுபவிக்கும்போது, நான் மட்டும் உல்லாசமாக வாழ்க்கை நடத்தமுடியாது. தன் தந்தையின் வேட்டைத் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டான் மால்கம். அம்மா நான் கிளம்புகிறேன் என்று சொல்லிவிட்டு கிளம்பினான். முயல்களை வேட்டையாட ஆரம்பித்தான். மாலை வரை துப்பாக்கியுடன் திரிந்துகொண்டிருந்தான். பிறகு வீழ்த்திய முயல்களை அள்ளிப்போட்டுக்கொண்டு வெள்ளையர்களின் வீடுகளுக்குச் சென்று விற்க ஆரம்பித்தான். கிடைத்த பணத்தை அப்படியே எடுத்துச் சென்று அம்மாவிடம் கொடுத்தான்.

மால்கமுக்கு அப்போது ஒன்பது வயது. தின்பண்டங்கள் மீதான ஆசையை என்னதான் அடக்கிக்கொண்டாலும் ஏதாவதொரு புதிய உணவு வகையைக் காணும்போது நாக்கில் எச்சில் ஊற ஆரம்பித்துவிடும். கடைத்தெருக்களில் கூடை கூடையாக ஆப்பிள் கொட்டப்பட்டிருப்பதைப் பார்த்தாலே தடுமாற ஆரம்பித்துவிடுவான் மால்கம். கை துறுதுறுவென்று துடிக்கும். அருகில் செல்வான். மறைந்து நின்றுகொள்வான். கடைக்காரரின் கவனம் சிதறும் தருவாயை எதிர்நோக்கியிருப்பான். கண் இமைக்கும் நேரத்தில் கையில் ஆப்பிள்.

வீட்டில் பெரும்பாலும் ரொட்டியே பரிமாறப்பட்டது. இறைச்சியையும் பழங்களையும் பாலையும் கடைசியாகப் பார்த்தது எப்போது என்றே தெரியவில்லை. சில நாள்கள் தொடர்ந்து கீரையை மட்டுமே

உட்கொள்ளவேண்டியிருந்தது. அதுவுமே கிடைக்காத பொழுதுகளும் இருந்தன. கண்களை மூடிப் படுக்கையில் சாய்ந்தது உறக்கத்தாலா மயக்கத்தாலா என்பதைக் கண்டறிய முடியாமலே போனது.

உணவு பரிமாறப்படும் நேரம் பார்த்துத் தெரிந்தவர்களின் வீடுகளுக்குச் செல்ல ஆரம்பித்தான். வாப்பா வந்து சாப்பிடு என்று அவர்கள் அழைக்கும் அந்த மந்திரக் கணத்துக்காகக் காத்திருக்க ஆரம்பித்தான். உணவு வேண்டி அநாதை இல்லங்களுக்குப் படையெடுக்க ஆரம்பித்தான். பள்ளியில் அளிக்கப்படும் நிவாரண உதவிகளை முதல் வரிசையில் இருந்து பெற்றுக்கொண்டான் மால்கம். ‘இது விற்பனைக்கல்ல’ என்னும் பெயர் பொறித்தப் பல உணவுப் பொருள்கள் வீட்டில் நிரம்ப இருப்பதை மால்கம் கண்டுகொண்டான். ஆதரவற்றவர்களுக்கு அரசாங்கம் அளிக்கும் பிச்சைப் பொருள்கள் அவை.

எதுவுமே தவறில்லை என்று தோன்றியது மால்கமுக்கு. திருடுவதில் தவறில்லை. கை ஏந்துவதில் தவறில்லை.

தன் வயதையொத்த சிறுவர்களுடன் இணைந்து தர்ப்பூசணிப் பழங்கள் திருடினான். எல்லா சமயங்களிலும் அவனால் தப்பிக்க முடிந்ததில்லை. மாட்டிக்கொண்ட போதெல்லாம் அடிப்பட்டான். உன் பிள்ளை என்ன காரியம் செய்தான் தெரியுமா என்று அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் காட்டிக்கொடுத்தபோது, லூயிசாவிடம் இருந்து நிறைய திட்டும் அடியும் கிடைத்தன. வாங்கிக்கொண்டான். அவ்வப்போது சிறு சிறு வேலைகளும் கிடைத்தன. கிடைக்கும் வேலையை முழு ஈடுபாட்டுடன் சோம்பலின்றி செய்தான்.

ஒரு முறை ஸ்ட்ராபெர்ரி பழங்கள் சேகரிக்கும் பணி

கிடைத்தது. நாள் முழுவதும் மிகக் கடுமையாக உழைத்தான். முடிவில், ஒரு டாலர் கொடுத்தார்கள். உற்சாகமாக இருந்தது மால்கமுக்கு. ஒரு டாலர் என்பது பெரிய பணம். என்ன செய்யலாம்? பசித்தது. நகரத்துக்குப் போய் ஏதாவது வாங்கித் திங்கலாமா? நடந்து செல்லும்போது வெள்ளைக்காரச் சிறுவன் ஒருவன் மால்கமை ஓரம் கட்டினான்.

‘மால்கம் என்னுடன் விளையாட வருகிறாயா? விளையாடுவதன் மூலம் பணம் சம்பாதிக்க முடியும். உனக்குத் தெரியுமா?’

‘அதெப்படி? நான் இதுவரை கேள்விப்பட்டதே இல்லையே.’

‘நான் கற்றுத்தருகிறேன். உன்னிடம் இப்போது எவ்வளவு பணம் இருக்கிறது?’

ஒரு டாலரை எடுத்து நீட்டினான் மால்கம். அதை வாங்கிக்கொண்ட அந்தச் சிறுவன், நிறைய நிக்கல்களைக் கொடுத்தான். பூவா தலையா? ஒவ்வொரு நாணயமாக எடுத்துக் காற்றில் சுண்டிவிட்டான். சிறிது நேரத்தில் கையில் இருந்த நாணயங்கள் அனைத்தும் காலியாகிவிட்டன. கோபமும் அவமானமும் பொங்கி வந்தது மால்கமுக்கு. தான் ஏமாற்றப்பட்டுவிட்டோம் என்று அவனுக்குத் தெரிந்துபோனது. மால்கம் தனது முதல் பாடத்தை அன்று படித்துக்கொண்டான். சூதாட்டத்தில் தோற்றுப்போனதை நினைத்து வருந்தாதே. இதேபோல் மற்றவர்களை நீ தோற்கடி.

அவர் கறுப்பாக இருந்தார். குண்டாகவும். அசப்பில் ஏர்ல் லிட்டிலை நினைவுப்படுத்தினார். ஆகவே மால்கம் அவரை ஏற்றுக்கொண்டான். அவர் வீட்டுக்கு வரும்போதெல்லாம்

அம்மா நன்றாக உடையணிந்துகொண்டதையும் சிரித்துப் பேசியதையும் கண்டபோது, மால்கமுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. எப்படியோ அம்மாவின் வாழ்க்கையில் மீண்டும் வசந்தம் வீசினால் சரி என்று நினைத்துக்கொண்டான். ஆனால் இந்த மகிழ்ச்சி வெகு காலம் நீடிக்கவில்லை. அவர் வீட்டுக்கு வருவதைக் குறைத்துக்கொண்டார். அதற்குக் காரணம் வீடு முழுவதும் நிரம்பியிருந்த குழந்தைகள் என்பதை மால்கமால் உணரமுடியவில்லை.

லூயிசா முற்றிலுமாக உடைந்து போனார். அவர் நடவடிக்கைகள் மாற ஆரம்பித்தன. திடீர் திடீரென்று அழ ஆரம்பித்தார். உடைகளை மாற்றிக்கொள்ளவேண்டும் என்னும் உணர்வுகூட இல்லாமல் சுவற்றை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தார். தனக்குத்தானே பேசிக்கொள்ளவும் ஆரம்பித்தார். பிடிக்காதவர்களைத் தாக்கவும் செய்தார். வீடு குப்பைத்தொட்டியாக மாறியது.

அதிகாரிகள் மீண்டும் வீட்டுக் கதவைத் தட்டினார்கள். லூயிசாவுக்கு மனநிலை சரியில்லை என்று சான்றிதழ் அளித்தார்கள். குழந்தைகள் அனைவரும் அவரிடம் இருந்து பிரிந்துவிடவேண்டும் என்று அறிவுரை சொன்னார்கள். இனி நீங்கள் அனைவரும் அரசாங்கத்தின் குழந்தைகள் என்று ஒரு அதிகாரி சொன்னபோது, மால்கமுக்குச் சிரிப்புதான் வந்தது.

கறுப்பினக் குழந்தைகளைத் தத்து எடுத்து வளர்க்கும் வழக்கம் சில வெள்ளையர்களிடம் அப்போது இருந்தது. நாங்கள் மற்றவர்களைப்போல் கிடையாது எங்களுக்கு இனவெறி என்றால் என்னவென்றுகூட தெரியாது என்பதைக் காட்டிக்கொள்வதற்காகவே இந்த ஏற்பாடு. தத்து எடுக்கப்பட்டவர்கள் கிட்டத்தட்ட அடிமைகளாகவே நடத்தப்பட்டனர் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

வெள்ளைக்காரப் பெண்கள் கிளப்புகளில் கூடும்போது, காபி அருந்திக்கொண்டே தான், வளர்த்து வரும் கறுப்புக் குழந்தைகள் பற்றி கதைகள் பேசிக்கொண்டார்கள். எத்தனை காலத்துக்கு நாய், பூனை, கிளி வளர்க்கமுடியும்?

கோஹனாஸ் என்னும் வெள்ளைக்காரரின் வீட்டுக்கு மால்கம் அனுப்பிவைக்கப்பட்டான். கோஹனாஸ் குடும்பத்தினர் மற்றவர்களிடம் இருந்து மாறுபட்டிருந்தார்கள். மால்கமை நல்லவிதமாக வளர்க்க அவர்கள் விரும்பினார்கள். தன் வீட்டை விட்டு வெளியேறும்போது, மால்கம் தன்னோடு சேர்த்து கொண்டு போனது தன் தந்தையின் துப்பாக்கியை மட்டுமே. பாயின்ட் 22 காலிபர் துப்பாக்கி.

ஒரு முறை கோஹனாஸ் வீட்டில் இருந்தவர்கள் முயல் வேட்டைக்கு ஆயத்தமானர்கள். மால்கமும் தன் துப்பாக்கியைத் தூக்கிக்கொண்டு கிளம்பினான். அவனுக்கு முயல் வேட்டை முன்னரே பரிச்சயம். இருந்தாலும் இந்தப் புதிய வேட்டைக்காரர்கள் எப்படி வேட்டையாடுகிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்பினான்.

அவர்களிடம் வேட்டை நாய் இருந்தது. துள்ளியோடும் முயலைப் பார்த்ததும் வேட்டை நாயை அவிழ்த்துவிட்டார்கள். துரத்தப்பட்ட முயல் வட்ட வட்டமாக ஓடும். இறுதியில், எங்கிருந்து ஓடத் தொடங்கியதோ அங்கேயே வந்து சேரும். இதை நன்கு தெரிந்து வைத்திருந்த வேட்டைக்காரர்கள் முயல் வரும்வரை காத்திருந்து பிறகு சுட்டு வீழ்த்தினார்கள்.

மால்கமுக்கு வேறு ஓர் உபாயம் தோன்றியது. முயல் ஓடிவரும் பாதையை முன்னரே ஊகித்துக்கொண்டான்.

பிறகு முதல் ஆளாகத் துப்பாக்கியுடன் போய் நின்றுகொண்டான். இது வேலை செய்தது. மால்கம் காத்திருந்த இடத்தை நோக்கி ஓடி வந்தது முயல். மிகச் சுலபமாகச் சுட்டு வீழ்த்தினான் மால்கம். முயல் வரும் வரும் என்று காத்திருந்த வேட்டைக்காரர்கள் சோர்ந்து போனார்கள். கையில் நான்கு அல்லது ஐந்து முயல்களுடன் மால்கம் நடந்து வருவதைப் பார்த்ததும் அவர்கள் ஆச்சரியத்தில் வாயடைத்துப்போனார்கள். தம்பி நீ உண்மையிலேயே பெரிய ஆள்தான் என்று சிலாகித்தார்கள்.

மால்கம் கற்றுக்கொண்ட இரண்டாவது முக்கியப் பாடம் இது. உனக்கென்று ஒரு தனித்தன்மையை உருவாக்கிக்கொள். மற்றவர்களிடம் இருந்து சிறிய அளவிலேனும் மாறுபடு. நீ செய்யும் ஒவ்வொரு காரியமும் மற்றவர்களை ஆச்சரியப்பட வைக்கவேண்டும். அதிர்ச்சியில் வாயடைக்கச் செய்யவேண்டும். மற்றவர்கள் செய்யாமல் விட்டது எது என்பதைக் கண்டறிந்து அதை முதலில் செய்துவிடவேண்டும். மால்கம் தனக்குள் சொல்லிக்கொண்டான். நீ விசேஷமானவன்.

லேன்சிங்கைவிட்டு மிகவும் தள்ளியிருந்த மருத்துவமனை ஒன்றில் லூயிசா அனுமதிக்கப்பட்டார். வில்ஃபிரட்டும் ஹில்டாவும் வீட்டில் தங்கியிருந்தனர். பில்பெர்ட்டும் ரெஜினால்டும் வெஸ்லியும் வெவ்வேறு வெள்ளையர்களிடம் ஒப்படைக்கப்பட்டனர். குடும்பத்தில் உள்ள ஒவ்வொருவரும் ஒவ்வொரு திசையில் தூக்கியடிக்கப்பட்டனர்.

கறுப்பனாக இருந்ததால் அனைவரது கிண்டலுக்கும் ஆளாக வேண்டிய நிலை மால்கமுக்கு ஏற்பட்டது. நீக்ரோ என்றும் நிக்கர் என்றும் சத்தம் போட்டுச் சிரித்து கேலி செய்தார்கள். மால்கம் எதையும் சட்டை செய்யவில்லை. இந்தக்

கிண்டலான வார்த்தைகளுக்கான அர்த்தத்தை அறிய நேர்ந்தபோது அவன் இதயம் கனத்தது.

குத்துச்சண்டை மீது திடீரென்று காதல் பிறந்தது. எல்லோரும் மெச்சும்படி சிறந்த குத்துச்சண்டை வீரனாக மாறவேண்டும் என்னும் வெறி மால்கமை சிறிது காலம் ஆட்டிப்படைத்தது. பிரத்தியேகப் பயிற்சிகள் எல்லாம் எடுத்துக்கொண்டான். பள்ளி அளவில் நடைபெற்ற போட்டிகளில் ஆர்வத்துடன் பங்கெடுத்துக்கொண்டான். ஆனால் ஒரு போட்டியிலும் அவனால் ஜெயிக்க முடிந்ததில்லை. இதுவாவது பரவாயில்லை. போட்டி தொடங்கிய ஒரு சில நிமிடங்களிலேயே முகத்தில் குத்துப்பட்டு விழுந்தான். பிறகு சிறிது காலம் கூடைப்பந்து. குத்துச்சண்டை போலில்லாமல் கூடைப்பந்து அவன் விருப்பத்துக்கு ஏற்றாற்போல் அமைந்தது.

ஒரு சமயம் மால்கம் தலையில் தொப்பியுடன் வகுப்பறைக்குள் வந்துவிட்டான். முந்தைய தினம் குத்துச்சண்டையில் முகத்தில் பட்ட காயத்தை மறைக்கவே தொப்பி. ஆனால் ஆசிரியரால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. ‘என்னடா கறுப்புப் பயலே உனக்குத் தொப்பி வேறு கேட்கிறதா? பார்த்தீர்களா மாணவர்களே, கறுப்பர்கள் என்றாலே ஒழுக்கக்குறைவானர்கள் என்பது இவனைப் பார்த்தாலே புரிகிறது அல்லவா? நான் சொல்லும்வரை இந்தப் பள்ளியைச் சுற்றிச்சுற்றி ஓடிவா.’

மால்கம் ஓடத் தொடங்கினான். அதற்கு முன்னால் ஒரு காரியம் செய்தான். ஆசிரியர் அமரும் இருக்கையில் குண்டூசி ஒன்றை புதைத்து வைத்தான். வகுப்பறையைத் தாண்டி மைதானத்தில் காலடி எடுத்து வைத்தபோது ஆசிரியர் அலறுவதைக் கேட்க முடிந்தது.

அன்றைய தினமே பள்ளியில் இருந்து மால்கம் அகற்றப்பட்டான். நிர்வாகம் அவனை வீட்டுக்கு அனுப்பவில்லை. காவல்துறை அதிகாரிகள் வந்து அள்ளிப்போட்டுக்கொண்டு சென்றார்கள். மால்கமின் வாழ்க்கை ஆராயப்பட்டது. எது போன்றவன்? என்னென்ன அயோக்கியத் தனங்கள் செய்திருக்கிறான்? இவனால் யார் யாருக்கு என்னென்ன ஆபத்துகள் நேர்ந்திருக்கின்றன?

ஆச்சரியமூட்டும் தகவல்களே கிடைத்தன. நல்ல மாணவன். வகுப்பில் அவன்தான் முதல். நல்ல மதிப்பெண்கள் எடுத்து வந்திருக்கிறான். விளையாட்டுகளில் ஆர்வம் கொண்டவன். யாருடனும் வம்பு பேசமாட்டான். சண்டை போட்டதில்லை. ஒழுக்கம் தவறியதில்லை. என்ன செய்யலாம்? இரண்டே வாய்ப்புகள்தான் இருந்தன. ஒன்று தடுப்புக்காவலில் வைத்திருப்பது. இரண்டாவது சீர்திருத்தப் பள்ளியில் இணைத்துவிடுவது. திருமதி. ஸ்வியர்லின் என்பவர் மட்டும் இதில் தலையிடாமல் இருந்திருந்தால், மால்கமை நிச்சயம் சீர்திருத்தப் பள்ளியில் சேர்த்திருப்பார்கள். திருமதி ஸ்வியர்லின் மால்கமை மீட்டெடுத்தார். படிப்பின் மீது மால்கமுக்கு இருந்த ஆர்வத்தை அடையாளம் கண்டு வேறொரு பள்ளியில் (மேசன் ஜூனியர் பள்ளி) சேர்த்துவிட்டார்.

ஏழாவது வகுப்பில் அடியெடுத்து வைத்தான் மால்கம். அந்த வகுப்பிலேயே அவன் ஒருவன்தான் கறுப்பு. அக்கறையுடன் படிக்க ஆரம்பித்தான். கணக்கு சுத்தமாகக் கைகூடவில்லை. வரலாறு அவனை மிகவும் கவர்ந்தது. புதிய மக்களைப் பற்றியும் புதிய நாடுகளைப் பற்றியும் ஒவ்வொரு நாளும் ஆசிரியர் நடத்திய பாடங்கள் மால்கமை பரவசப்படுத்தின. கிரேக்கம், ரோமாபுரி, எகிப்து, பிரிட்டன், அமெரிக்கா போன்ற

தேசங்களைப் பற்றி வெகுவாகச் சிலாகித்து ஆச்சரியப்பட்ட ஆசிரியர், கறுப்பர்களைப் பற்றி சொன்ன கதைகளை மட்டும் மால்கமால் ரசிக்க முடியவில்லை.

ஆப்பிரிக்கர்களைப் பற்றியும் கறுப்பினத்தவர்கள் பற்றியும் கீழ்த்தரமான விமரிசனங்களை ஆசிரியர் முன்வைத்தார். கறுப்பர்களை வேடிக்கைக்கும் கேலிக்கும் உரிய பொருளாகச் சித்தரித்தார். கறுப்பர்களைப்போல் நடந்துகாட்டுகிறேன் என்று சொல்லி மாணவர்களை சிரிக்கவைக்க முயன்றார்.

கறுப்பன் நடந்து சென்ற பாதை எது என்பதை எப்படிக் கண்டுபிடிப்பாய்? ஒரு நாள் வேடிக்கையாகக் கேட்டார் ஆசிரியர். ஒருவருக்கும் பதில் தெரியவில்லை. பிறகு அவரே சொன்னார். கறுப்பன் ஒவ்வொரு முறை காலை எடுத்து வைத்து நடக்கும்போதும் சாலையில் ஆழமான குழிகள் ஏற்படும். அதை வைத்தே கண்டுபிடித்துவிடலாம். உலகின் ஆகச் சிறந்த நகைச்சுவை இதுதான் என்பதுபோல் விழுந்து விழுந்து சிரித்தார். வகுப்பறை முழுவதும் சிரிப்பொலி. அப்பட்டமான வெள்ளை இனவெறியை முதன் முறையாக வகுப்பறையில் கண்டுகொண்டான் மால்கம்.

வகுப்புகள் முடிந்ததும் மால்கம் அவசரமாக எங்கே வெளியேறுகிறான் என்பதை அறிந்துகொள்ள நண்பர்கள் ஆர்வம் காட்டினார்கள். நிச்சயம் யாராவது பெண் சிநேகிதி கிடைத்திருக்கவேண்டும். கறுப்பர்கள் நம்மைவிட உயர்ந்திருப்பது ஒரே ஒரு விஷயத்தில்தான். காதல். திடகாத்திரமான உடல் வாகும் வலிமையும் மூர்க்கமும் கொண்ட கறுப்பின ஆண்கள் பெண்களை எளிதில் கவர்ந்துவிடக்கூடியவர்கள். மால்கம் நிச்சயமாக யாரோ ஒரு வெள்ளைக்காரப் பெண்ணை வீழ்த்தியிருக்க

வேண்டும்.

விரைவில் அவர்கள் கண்டுபிடித்தார்கள். மால்கம் சென்றது ஓட்டலுக்கு. உள்ளே சென்றுவிட்டால் பல மணி நேரங்கள் கழித்தே வெளியில் வருகிறான். ஆக சந்தேகம் ஊர்ஜிதமாகிவிட்டது. இனி ஒன்றே ஒன்றுதான் பாக்கி. கையும் களவுமாகப் பிடித்துவிடவேண்டும். திட்டம் போட்டு நுழைந்தார்கள். மால்கமை பிடித்தார்கள். கையும் களவுமாக அல்ல கையும் கரண்டியுமாக. தவறை உணர்ந்து மன்னிப்பு கேட்டு வெளியில் வந்தார்கள் நண்பர்கள். மால்கம் அங்கே வேலை செய்துகொண்டிருந்தான். பகுதி நேரப் பணி. பாத்திரங்களையும் எச்சில் தட்டுகளையும் கழுவித் துடைக்கவேண்டும்.

வா நடனமாடலாம் என்று மாணவர்கள் அழைத்தபோது, கூச்சத்துடன் ஒதுங்கிக்கொண்டான் மால்கம். கூடைப்பந்து என்றால் மட்டும் முன்னால் நகர்ந்து வந்து ஆர்வத்துடன் கலந்துகொண்டான். வகுப்புப் பாடங்களைத் தவிர்த்து வேறு எதையும் படிக்க விரும்பவில்லை அவன்.

செய்வதற்கு எதுவும் இல்லாதபோது, லேன்சிங் வீதிகளில் உலாவினான். சனிக்கிழமை இரவு நேரங்களில் லேன்சிங்கில் நடைபெறும் சில நிழல் நடவடிக்கைகள் மால்கமை அதிர்ச்சி அடையச் செய்தன. கறுப்பினப் பெண்கள், பெரும்பாலும் சிறுமிகள் ஒப்பனை செய்துகொண்டு வீதியில் தயாராக நின்றுகொண்டிருந்தார்கள். வண்டிகளில் வரும் வெள்ளைக்காரர்கள் நிறுத்தி, ஆராய்ந்து, ஒரு பெண்ணை தேர்ந்தெடுத்து அழைத்துச் சென்றார்கள். வேறு ஒரு வீதியில் இதேபோன்ற வேறு ஒரு காட்சியை காண நேர்ந்தது. வெள்ளைக்காரப் பெண்கள் காரில் வந்து இறங்கி கறுப்பின ஆண்களை ஏற்றிச்சென்றார்கள். கறுப்பர்களை

வெள்ளைக்காரர்கள் பயன்படுத்திக்கொள்ளும் லட்சணம் இது. காசுக்கு ஆசைப்பட்டு இவர்களும் வீதியில் இறங்க நேரிடுகிறது. பசி ஒருவரை இத்தனை கீழ்த்தரமாகவா நடக்க வைக்கும்?

வகுப்புத் தலைவனாகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, மால்கம் பூரித்துப்போனான். தேர்வுகளில் முதலாவதாக வந்த காரணத்தாலேயே ஒரு கறுப்பனாக இருந்தாலும் தனக்கு இந்த அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பதை மால்கமால் புரிந்துகொள்ள முடிந்தது.

கிட்டத்தட்ட இதே நேரம் எல்லா என்பவரிடம் இருந்து கடிதம் வர ஆரம்பித்தது. ஏர்ல் லிட்டிலின் முதல் மனைவிக்குப் பிறந்தவர் எல்லா. பாஸ்டனில் குடியேறியிருந்தார் அவர். புதிய உறவு. புதிய கரிசனம். புதிய கவனிப்பு. தன்னைப் பற்றியும் தன் சகோதரர்கள் பற்றியும் சகோதரி பற்றியும் விலாவரியாக எழுதி அனுப்பினான் மால்கம். எல்லாவுக்கு மால்கமை மிகவும் பிடித்து போனது. குறிப்பாக, படிப்பில் அவன் சிறந்து விளங்கியதைக் கேள்விப்பட்டவுடன் மகிழ்ந்து போனார் எல்லா.

வகுப்பு முடிந்து தன் அறைக்கு வந்தபோது, எல்லாவைச் சந்தித்தான் மால்கம். நிறையப் பேசினார்கள். லேன்சிங்கில் இருந்த வீட்டுக்கு எல்லாவை அழைத்துச் சென்றான் மால்கம். வில்ஃபிரட்டும் ஹில்டாவும் எல்லாவை அன்புடன் வரவேற்றார்கள். நாம் அனைவரும் ஏர்ல் லிட்டிலின் குழந்தைகள். நாம் அனைவரும் தன்மானத்துடன் மகிழ்ச்சியாக வாழவேண்டும் என்று வாழ்த்தினார் எல்லா.

மால்கமுக்கு எல்லாவை மிகவும் பிடித்துபோனது. எல்லாவின் தைரியம். நம்பிக்கை. அவரது முற்போக்குச் சிந்தனை. எல்லாவற்றுக்கும் மேலாக, தான் ஒரு கறுப்பினப்

பெண் என்பதில் எல்லா கொண்டிருந்த பெரிமிதமும் கர்வமும் மால்கமைத் திகைக்கவைத்தது. இதுதான். இந்தக் கர்வமும் பெருமிதமும்தான் பிற கறுப்பினப் பெண்களிடம் இல்லை. அத்தனை அவமானங்களையும் அவர்கள் மென்று விழுங்கி ஜீரணித்துக்கொள்கிறார்கள். வெள்ளையர்களிடம் அடங்கி ஒடுங்கிப் போகிறார்கள். தேவையில்லாமல் அச்சப்படுகிறார்கள். நீ ஒரு குரங்கு என்று முகத்துக்கு நேராகத் திட்டினால்கூட மறுப்பேதும் பேசாமல் அமைதியாக இருந்துவிடுகிறார்கள்.

எல்லாவையும் அழைத்துக்கொண்டு அனைவரும் லூயிசாவைப் பார்க்கச் சென்றார்கள். மருத்துவ அதிகாரிகள் அவரைக் கைத்தாங்கலாக அழைத்து வந்தனர். மால்கமின் உதடுகள் துடித்துக்கொண்டிருந்தன. ஒவ்வொரு முறை தன் அம்மாவைப் பார்க்கும்போதும் அவன் உள்ளம் குமுற ஆரம்பித்துவிடும். பளிச்சென்று இளவரசிபோல் வலம் வந்துகொண்டிருந்த என் அம்மாவா இவர்? எப்படி மாறிவிட்டார்! அழுக்கு உடை. வெளிறிப் போன முகம். உயிரற்ற கண்கள். மருத்துவமனையைப் பொறுத்தவரை இவர் ஒரு நோயாளி. பதிவேட்டில் உள்ள மற்றொரு எண். இவர் இந்த நிலைக்கு வருவதற்கு யார் காரணம் என்று ஒருவரும் ஆராயப்போவதில்லை. இவர் கணவர் என்ன ஆனார் என்று விசாரிக்க ஒருவரும் இல்லை. ஒருவருக்கும் அது முக்கியமில்லை. குறிப்பாக, அரசாங்கத்துக்கு.

எல்லாவைச் சரியாக அடையாளம் கண்டு அனைவரையும் ஆச்சரியத்தில் மூழ்கடித்தார் லூயிசா. எல்லாவைக் கட்டி அணைத்துக்கொண்டு நீண்ட நேரம் பேசினார். தன் குழந்தைகளை ஒவ்வொருவராகப் பார்த்து புன்னகை செய்தார். ஒதுக்கப்பட்ட நேரம் முடிந்ததும் காவலர்கள் வந்து அம்மாவை அழைத்துச்சென்றார்கள். ஏதோ

முணுமுணுத்துக்கொண்டே உள்ளே சென்றுவிட்டார் அவர். அவர் புன்னகை செய்துகொண்டே உள்ளே சென்றதைப்போல் மால்கமுக்குத் தோன்றியது.

என்னுடன் ஒரு விடுமுறையை கழிக்க வாயேன் என்று எல்லா அழைத்தபோது, மிகுந்த உற்சாகத்துடன் தயாரானான் மால்கம். பாஸ்டனைப் பற்றிய ஏராளமான கனவுகளை எல்லா அவனிடம் விதைத்திருந்தார். காசு சேர்த்து வாங்கிய பச்சை சூட்டை அணிந்துகொண்டான் மால்கம். ஒரு கைப்பெட்டி. கண்ணாடி முன்னால் நின்று பலமுறை அழகு பார்த்துவிட்டு பேருந்தைப் பிடித்தான்.

தொப்பென்று கடைசி இருக்கையில் வந்து மால்கம் விழுந்தபோது, பேருந்தில் இருந்தவர்கள் அனைவரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். பச்சை நிற சூட்டைப் பார்த்ததுமே அவர்களுக்குச் சிரிப்புப் பொங்கி வந்தது. வழி நெடுக திரும்பித் திரும்பி பார்த்துக்கொண்டே இருந்தார்கள். மால்கம் ஜன்னலைவிட்டுப் பார்வையை எடுக்கவேயில்லை. அந்த ஒன்றரை தினப் பயணத்தை முழுமையாக ரசித்தான் மால்கம்.

பாஸ்டன் பேருந்து நிலையத்தில் இறங்கியதுமே எல்லா அவனை கண்டுகொண்டுவிட்டார். இப்படிக் கிளிப்பச்சை நிறத்தில் வேறு யாராலும் உடை அணிய முடியாது என்று நினைத்துக்கொண்டார் எல்லா. வீட்டுக்கு அழைத்துச்சென்றார். தன் கணவர் பிரேங்க்கையும், சகோதரன் ஏர்லையும் சகோதரி மேரியையும் மால்கமுக்கு அறிமுகம் செய்து வைத்தார் எல்லா. மால்கம் அவர்களுடன் தோழமையுடன் ஒட்டிக்கொண்டான்.

எல்லா வசித்தது ஹார்லெம் என்னும் பகுதியில். நியூ யார்க்கின் முக்கிய நகரம் ஹார்லெம். எல்லா அவனை பல

பகுதிகளுக்கு அழைத்துச் சென்றார். எங்கு திரும்பினாலும் கொத்துக் கொத்தாகக் கறுப்பர்கள் இருப்பதைப் பார்க்க பேரானந்தமாக இருந்தது மால்கமுக்கு.

வீதிகளில். கடைத்தெருக்களில். பேருந்துகளில். சகஜமாக உரையாடிக்கொண்டும் நடந்துகொண்டும் பூங்காக்களில் அமர்ந்து பேசிக்கொண்டும் இருந்தார்கள் அவர்கள். பெரும்பாலான வெள்ளையர்களுக்கு மத்தியிலேயே இதுவரை வாழ்ந்து பழக்கப்பட்டுவிட்ட மால்கமை பாஸ்டன் பரவசப்படுத்தியது. இது என்ன கறுப்பர்களின் கனவுத் தேசமா? நான் இருப்பது அமெரிக்காவிலா ஆப்பிரிக்காவிலா அல்லது சொர்க்கத்திலா?

ராக்ஸ்பெரியில் உள்ள இரவு விடுதிகளுக்குச் சென்றான் மால்கம். புதிய உலகத்தில் காலடி எடுத்து வைத்த சிலிர்ப்பு ஏற்பட்டது. பிரமாண்டமான கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்ததுமே அதிர்ச்சியில் வாயடைத்து போய்விட்டான் மால்கம். மேடையில் மைக் பிடித்து தலையை ஆட்டியபடி பாடிக்கொண்டிருந்தார் ஒரு கறுப்பினப் பெண். அவருக்குப் பக்கத்தில் கையில் கிடாரோடு மற்றொரு பெண். உடன் இரு ஆண்கள். பளபளக்கும் உடைகளில். அனைவருமே கறுப்பர்கள். உற்சாகமாகப் பெருங்குரலெடுத்து ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தார்கள் அவர்கள். திரண்டிருந்தவர்களில் ஒரு சிலரைத் தவிர, அனைவருமே கறுப்பர்கள். ஆண்களும் பெண்களும் முதியவர்களும் சிறுவர்களும் சிறுமிகளுமாக எங்கும் கறுப்பர்கள். அடடா, கனவில் மட்டுமே காணக்கூடிய உலகம் அல்லவா இது! நடனமாடும்போது வெள்ளைக்காரர்கள் கறுப்பர்களோடு இணைந்து, கைகோத்துக்கொண்டார்கள்.

மது நிலையங்களுக்குச் சென்றால் அங்கும் கறுப்பர்கள்.

உல்லாசமான கறுப்பர்கள். விதவிதமான கோப்பைகளில் நுரை பொங்கும் மதுவை நிரப்பி அருந்திக்கொண்டிருந்தார்கள். இரவு நேரங்களில் நியான் விளக்குகள் தெருக்கள் முழுவதும் பளிச்சிட்டுக்கொண்டிருந்தன. பாஸ்டனைவிட்டு வெளியேற மனமே இல்லை மால்கமுக்கு.

என்ன ஆச்சு இவனுக்கு? சரியாக முகம் கொடுத்துப் பேச மறுக்கிறான். எடுத்ததுக்கெல்லாம் கோபப்படுகிறான். ஒரு விளையாட்டுக்கு நீக்ரோ, அடிமைப் பயலே என்று சொன்னால்கூட கண்களை உருட்டி முஷ்டியை மடக்குகிறான். கொஞ்சம் விட்டால் அடித்துவிடுவான் போலிருக்கிறது. முன்பு போல் பழகுவதில்லை. தான் உண்டு தன் வேலை உண்டு என்று இருப்பதில்லை. கறுப்பர்களைப் பற்றி நிறைய கவலைப்பட்டுக்கொள்கிறான். பாஸ்டன் இவனை மாற்றிவிட்டதா? நண்பர்கள் புரியாமல் விழித்தனர்.

உன் அம்மாவுக்குப் பைத்தியமாமே என்று யார் கேட்டாலும் பாய்ந்து சென்று சட்டையைப் பிடித்தான் மால்கம். இன்னொரு முறை என் அம்மாவைப் பற்றித் தவறாகப் பேசினால் கொன்றுவிடுவேன் என்று மிரட்டினான். சாலையில் போகும் யாரோ ஒரு கறுப்பரை யாராவது திட்டினால்கூட நின்று நிதானித்து முறைத்துவிட்டுத்தான் அடுத்த காரியத்தைப் பார்த்தான்.

தனக்கு ஏற்பட்ட மாற்றத்துக்குக் காரணம் என்ன என்பது மால்கமுக்கு நன்றாகத் தெரிந்திருந்தது. இனி நான் தனிமனிதனல்ல. எனக்கென்று ஓர் இனம் உண்டு. எனக்கென்று மக்கள் இருக்கிறார்கள். நான் கறுப்பு சமூகத்தைச் சேர்ந்தவன். அந்த மாபெரும் சமூகத்தில் நான்

ஓர் உறுப்பு. என் சமூகம் பாதிக்கப்பட்டிருக்கிறது. என் இன மக்கள் வெள்ளையர்களால் ஒடுக்கப்படுகிறார்கள். வெள்ளையர்கள் பெரும்பான்மையாக வசிக்கும் லேன்சிங் போன்ற பகுதிகளில் என் இன மக்களால் நிம்மதியாக வாழ முடியாது. அவர்களுக்குச் சுதந்தரம் வேண்டும். வெள்ளையர்களிடம் இருந்து. இனவெறியர்களிடம் இருந்து. ஆதிக்கம் செலுத்துபவர்களிடம் இருந்து.

'நீ என்னவாக மாற விரும்புகிறாய்?'

'ஒரு விவசாயியாக.'

'மிகவும் நன்று. நீ?'

'நான் ஒரு சிறந்த தொழிலாளராக மாறுவேன்.'

மால்கம் தன்னுடைய முறைக்காகக் காத்திருந்தான். ஆங்கில ஆசிரியரை அவனுக்கு மிகவும் பிடிக்கும். ஆங்கிலத்தில் எப்போதும் மால்கம் அதிக மதிப்பெண்கள் பெற்றுவிடுவதால் அந்த ஆசிரியருக்கும் மால்கம் மீது தனி ஈடுபாடு இருந்தது. தன்னிடம் அந்தக் கேள்வி வரும்போது தக்க முறையில் பதிலளிக்க விரும்பினான் மால்கம்.

'நான் டாக்டராகப் போகிறேன்.'

'நான் சொந்தமாகத் தொழில் நடத்தப்போகிறேன்.'

'கப்பல் வாங்குவேன்.'

வெள்ளைக்காரர்களின் கனவுகள் மிகவும் பிரமாண்டமாக இருக்கின்றன. உலகில் சிறந்தவர்களாக இருக்க அவர்கள் ஆசைப்படுகிறார்கள். கறுப்பர்கள்? தொழிலாளியாகவும் விவசாயியாகவும் மாற விரும்புகிறார்கள். ஆசைப்படுவதில் கூடவா இத்தனை பெரிய இடைவெளி

வேண்டும்? ஒரு நத்தையைப்போல் ஏன் அவர்கள் சுருங்கிக்கொள்ளவேண்டும்? நான் இந்த வேலைக்குத்தான் லாயக்கு என்று அவர்களாகவே ஏன் ஒரு முடிவுக்கு வரவேண்டும்?

‘சொல் மால்கம். உன் கனவு என்ன?’

சிறிதும் தயங்காமல் பளிச்சென்று பதிலளித்தான் மால்கம்.

‘ஒரு வழக்கறிஞராக மாறப்போகிறேன்.’

ஆசிரியர் புன்முறுவல் செய்தார்.

‘யோசிக்காமல் பேசுகிறாய் மால்கம். நீ புத்திசாலி. யதார்த்தத்தை நன்கு அறிந்தவன். உன்னிடம் இருந்து இந்தப் பதிலை நான் எதிர்பார்க்கவில்லை.’

என்ன பேசிக்கொண்டிருக்கிறார் இவர்? என் மரியாதைக்குரிய ஆசிரியரா இவர்? நான் கண்ட கனவில் என்ன குறை கண்டுவிட்டார் இவர்? என்னிடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறார் இவர்?

மீண்டும் ஒரு முறை அழுத்தமாகப் பதிலளித்தான் மால்கம்.

‘நிச்சயம் நான் ஒரு வழக்கறிஞர் ஆவேன். என்னால் நன்றாகப் படிக்கமுடியும் என்று உங்களுக்குத் தெரியும்.’

‘உண்மைதான் மால்கம். உன் திறமைகளை நான் அறிவேன். இங்குள்ள வெள்ளைக்காரச் சிறுவர்களைவிட நீ நன்றாகவே படித்து வருகிறாய். அதில் சந்தேகம் எதுவும் இல்லை. ஆனால் ஒரு விஷயத்தை நீ மறந்துவிட்டாய். ஆயிரம் சொன்னாலும் நீ ஒரு கறுப்பன். உன்னால் வெள்ளையர்களுடன் போட்டிப்போட முடியாது. அவர்களுடன் மல்லுக்கட்டி நின்று ஜெயிக்க முடியாது. ஒரு

கறுப்பன் வழக்கறிஞர் ஆனதாக எங்காவது நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?’

கால்களுக்குக் கீழே தரை நழுவிக்கொண்டிருந்தது. இவருமா?

‘ஒழுங்காக நான் சொல்வதைக் கேள். உனக்குத் தச்சுத்தொழில் நன்றாக வருகிறது. அதையே செய். உன்னால் ஒரு சிறந்த தச்சுக் கலைஞராக மாறமுடியும். ஒரு கறுப்பன் இன்னின்ன வேலைகளைத்தான் செய்யலாம் என்னும் எழுதப்படாத விதி ஒன்று இருக்கிறதே. தெரியாதா?’

எல்லாவுக்கு உடனடியாகக் கடிதம் எழுதினான் மால்கம். என்னால் இனியும் இங்கே தங்கியிருக்க முடியும் என்று தோன்றவில்லை. இங்குள்ள வெள்ளைக்காரர்கள் சகித்துக்கொள்ளமுடியாதபடி நடந்துகொள்கிறார்கள். எனக்கு பாஸ்டன் மிகவும் பிடித்திருக்கிறது. நான் அங்கேயே வந்துவிடவா, அக்கா?

உடனே வா என்றார் எல்லா. மால்கம் அப்போது எட்டாவது வகுப்பை முடித்திருந்தான். இடம் மாறுவதற்கு ஏற்ற சமயம் அதுதான் என்று அவருக்குப் பட்டது. ஒரே ஒரு காரியம் மட்டுமே செய்யவேண்டியிருந்தது. மால்கம் இன்னமும் தடுப்புக்காவலில்தான் இருந்தான். அதாவது திருமதி ஸ்வியர்லின் அரவணைப்பில். மிச்சிகனைவிட்டு அவன் நிரந்தரமாகவோ நீண்ட காலத்துக்கோ வெளியேறவேண்டுமானால் முறைப்படி காவல் அதிகாரிகளிடம் விண்ணப்பித்து அனுமதி பெறவேண்டும். எல்லா, காவல்துறைக்குக் கடிதம் எழுதினார். அனுமதி கிடைத்தது.

பேருந்தில் ஏறி அமர்ந்து நீண்ட நேரம் ஆன பின்பும் அந்த ஆசிரியரைப் பற்றியே சிந்தித்துக்கொண்டிருந்தான் மால்கம். இத்தனை படித்தவர். என் ஆதர்சமாக இருப்பவர். ஆங்கிலப் பண்டிதர். உலக ஞானம் கொண்டவர். அவரும்கூடவா இப்படி மாறிப்போகவேண்டும்? வெள்ளைத் தோல் கொண்ட அனைவரும் ஒரே மாதிரிதான் சிந்திப்பார்களா? இந்த நிலை எப்போது மாறும்?

# 4. மலைப் பாம்பு

அதே பாஸ்டன். அதே நியான் விளக்கு வீதிகள்; இரவு விடுதிகள்; மதுபானக் கடைகள்; நடன அரங்குகள். வட்ட வட்டமாகச் சுழன்று ஆடிக்கொண்டிருக்கும் ஜோடிகள். ஆனால் இந்த முறை மட்டும் ஏன் இத்தனை வித்தியாசத்தை நான் உணர்கிறேன்? சென்ற முறை வரும்போது கவனிக்காத பல சங்கதிகள் இந்த முறை ஏன் எனக்குப் புலப்படவேண்டும்? பாஸ்டன் மாறிவிட்டதா?

ஒரு நகரம் அத்தனை சீக்கிரம் மாறாது. மாறியது நானாகத்தான் இருக்கவேண்டும். எல்லாவுக்குத்தான் நன்றி சொல்லவேண்டும். வீட்டுக்கு வந்ததுமே சொல்லிவிட்டார். பாஸ்டனை நன்றாகச் சுற்றிப்பார். இந்த நகரில் உள்ள ஒவ்வொரு தெருவும் மனப்பாடம் ஆகும் வரை நன்றாகச் சுற்று. காலை உணவு முடித்தவுடனே கிளம்பிவிடு. இரவு வீடு திரும்பினால் போதும். இல்லை, இல்லை இரவுகூட வீடு திரும்பவேண்டியதில்லை. நடன அரங்கங்களுக்குப் போ. கவனி. வேலைக்குப் போவதைப் பற்றி இப்போது சிந்திக்காதே. வேலைக்குப் போக ஆரம்பித்துவிட்டால் வேறு எதற்கும் நேரம் இருக்காது.

அதிகாலையிலேயே கிளம்பிவிடுவான் மால்கம். பேருந்து நிலையம். ரயில் நிலையம். சுரங்கப் பாதை. தபால் அலுவலகம். ஒன்றையும் விட்டுவைக்கமாட்டான். ஆரம்பத்தில் பளபளப்பாகவும் மினுமினுப்பாகவும் காணப்பட்ட நகரம் நாள்கள் செல்லச்செல்ல நிறம் மாற ஆரம்பித்தது. நுணுக்கமாக ஆராய்ந்தபோது, பல முரண்பாடுகள் தெரிய ஆரம்பித்தன.

கறுப்பர்களின் கனவு தேசம் அல்ல இது. இங்கிருக்கும்

கறுப்பர்களின் வாழ்க்கை நிலையில் பெரிதாக அப்படியொன்றும் வித்தியாசத்தைக் காணமுடியவில்லை. இரவு நடன விடுதிகளில் கூட்டம் நிரம்பி வழிவது உண்மை. விதவிதமான மதுபானங்களை கறுப்பர்கள் சுவைத்து ரசிப்பது உண்மை. ஆடிக்கொண்டும் பாடிக்கொண்டும் பொழுதைக் கழிப்பது உண்மை. ஆனால், இது ஒரு மாயத் தோற்றம் மட்டுமே.

மெய்யான கறுப்பர்கள் நகரங்களில் இல்லை. சேரிகளில் பதுங்கியிருக்கிறார்கள். தகர வீடுகள். அசுத்தமான சாலைகள். ஈக்கள் மொய்க்கும் நடைபாதைத் தின்பண்டக் கடைகள். ஆடைகள் அணியாமல் அங்கும் இங்கும் ஓடிக்கொண்டிருக்கும் குழந்தைகள். அழுக்கு. நாற்றம். கொல்லும் வறுமை. சேரிப் பகுதிகளுக்குப் போகாதே என்று எல்லா கேட்டுக்கொண்டதற்கு இதுதான் காரணமாக இருக்கவேண்டும். பாஸ்டனின் பகட்டை மட்டுமே நான் கண்டு ரசிக்கவேண்டும் என்று அவர் விரும்பியிருக்கிறார்.

நீங்கள் எங்கே வேலை செய்கிறீர்கள்? இந்த ஒரு கேள்வியை வைத்துக்கொண்டு பாஸ்டன் நகரத்தையே அளந்து பார்த்தான் மால்கம். நானா? நான் தபால் ஆபீஸில் வேலை செய்கிறேன் என்றார் ஒரு கறுப்பர். கறுப்பு கோட்டும் அதற்குத் தோதான சூட்டும் அணிந்திருந்தார் அவர். கால்களில் கச்சிதமான பூட்ஸ். நான் தந்தி அலுவலகத்தில் பணி புரிகிறேன் என்றார் மற்றொருவர். நான் சொந்தமாகத் தொழில் நடத்துகிறேன் என்றார் இன்னொருவர். கிட்டத்தட்ட அனைவருமே தங்களை மிக நல்ல நல்ல முறையில் அறிமுகம் செய்துகொண்டார்கள். கேட்கக் கேட்கப் பரவசமாக இருந்தது மால்கமுக்கு. அதாவது ஆரம்பத்தில்.

உண்மை தெரிந்தபோது, தள்ளாடிப்போனான். கோட், சூட்,

பூட்ஸ் எல்லாம் அணிந்துகொண்டு தபால் ஆபீஸ் சென்றவர் அங்கே தரையை கூட்டிப் பெருக்கிக்கொண்டிந்தார். தந்தி அலுவலகத்தில் வேலை செய்வதாகச் சொன்னவர் பக்கத்து கடையில் இருந்து டீயும் சிகரெட்டும் வாங்கிக்கொடுத்துக்கொண்டிருந்தார். சொந்தமாகத் தொழில் செய்வதாகப் பீற்றிக்கொண்ட அந்தத் தொழிலதிபர், சாலையோரம் துண்டு விரித்து பாட்டுப் பாடி நிக்கல் சேர்த்துகொண்டிருந்தார்.

எதற்கு இந்த வேஷம்? யாரை ஏமாற்ற? மற்றவர்களையா அல்லது தன்னையேவா? தரையைத் துடைத்து பெருக்குவதுதான் வாழ்க்கையின் லட்சியமா? அதை அடைந்துவிட்டதால்தான் இத்தனைப் பெருமிதமா? கடவுளே!

இதிலுள்ள முரண்பாடுகளையும் மால்கம் அறிந்தே இருந்தான். வெள்ளையர்களை ஒதுக்கிவைத்துவிட்டு பாஸ்டன் போன்ற பெருநகரத்தில் வாழ்க்கை நடத்த முடியாது. தபால் ஆபீஸில் ஆபீஸராக வேலை செய்வதற்குக் கறுப்பர்களுக்கு இங்கே அனுமதி இல்லை. கறுப்பர்களுக்குக் கனவு காணும் உரிமைகூட மறுக்கப்பட்டுள்ளது. ஒரு கறுப்பன் தொழிலாளியாகலாம். தச்சு வேலை செய்யலாம். பாட்டுப் பாடி பிச்சை எடுக்கலாம். ஆனால் ஆபீஸராக மட்டும் மாறிவிட முடியாது.

இதுதான் நிதர்சனம் என்றால் அதற்காக நாம் வெட்கப்படவேண்டுமே தவிர, பீற்றிக்கொள்ளக் கூடாது. கோட், சூட் போட்டு ஆபீஸர் போல் நடந்துகொள்ளக் கூடாது. இதுவே உன்னதம் என்று மயக்கம் கொள்ளக் கூடாது.

மற்றொரு அதிர்ச்சியையும் மால்கம் சந்திக்க வேண்டியிருந்தது. காலம் காலமாக பாஸ்டனிலேயே

குடியிருந்த கறுப்பர்கள், புதிதாகக் குடிபுகுந்த கறுப்பர்களை இளக்காரமாகப் பார்த்தனர். நீங்கள் வேறு ஜாதி என்பதாக அவர்களை ஒதுக்கி வைத்தனர். நாங்கள் உங்களைவிட உயர்ந்தவர்களாக்கும் என்று இடித்துக் காட்டி மகிழ்ந்துகொண்டனர். வெள்ளையர்கள் தங்கள் மீது கொட்டும் வெறுப்பை அள்ளி இந்தப் பக்கம் தெளித்து ஆசுவாசப்படுத்திக்கொண்டார்கள்.

ஆனால் மால்கமும் மாறித்தான் போனான். யாரிடமும் அகப்படமாட்டேன் என்று ஒரு சுண்டெலியைப்போல் வளைந்து நெளிந்து ஓடிக்கொண்டிருந்த மால்கமை, பாஸ்டன் என்னும் மலைப்பாம்பு சுற்றி வளைத்துக் கவ்வியது.

ஒரு மரப்பலகை. ஐந்தாறு பிரஷ்கள். பாலீஷ். கந்தல் துணி. தனது முதல் வேலையை ஆரம்பித்தான் மால்கம். பார்த்தால் முகம் தெரியும் அளவுக்கு ஒவ்வொரு ஷூவையும் பளபளவென்று துடைக்கவேண்டும். வெள்ளையர்களின் காலணிகள். கறுப்பர்களின் காலணிகள். இரண்டையுமே. சரி செய்கிறேன் என்றான் மால்கம். கால்களை மடக்கிக்கொண்டு தரையில் உட்கார்ந்தான்.

ரோஸ்லேண்ட் ஸ்டேட் பால்ரூம் என்று அந்த அரங்கம் அழைக்கப்பட்டது.பாஸ்டனில் யாரைக் கேட்டாலும் கொண்டு வந்து விட்டுவிடுவார்கள். வெள்ளையர்கள், கறுப்பர்கள் என்று அனைவரும் வந்து மொய்க்கும்இடம். எல்லோராலும் அறியப்பட்ட முக்கிய இசைக் குழுவினர் பலர் வருவார்கள். அரங்கம் அதிரும் இசை வெள்ளம். இசைக்கு ஏற்றபடி ஜோடிகளின் நடனம். வருடிக்கொடுக்கும் இசை அல்ல. எல்லாவற்றையும் தூக்கிப் போட்டுவிட்டு வெறியுடன் ஆடச் சொல்லும் இசை.

கழிப்பறைக்குப் போகும் வழியில் மால்கமுக்கு ஓர் இடம் அமைத்துக் கொடுத்திருந்தார்கள். பாலீஷ் போடுவது மட்டுமல்ல அவன் வேலை. கழிப்பறையைப் பயன்படுத்திவிட்டு, வெளியில் வரும் வெள்ளைக்காரர்களிடம் ஒரு சிறிய வெள்ளைத் துண்டை எடுத்து நீட்டவேண்டும். கைகளைத் துடைத்துக்கொண்டு துண்டை வீசிவிட்டு அவர்கள் போய்விடுவார்கள்.

இப்படி இருந்தால் பிழைக்க முடியாது தம்பி, நல்லதாக ஒரு சூட் வாங்கி அணிந்துகொள் என்று அக்கறையுடன் சிலர் சொன்னபோது, கடன் வாங்கி சூட் தைத்துக்கொண்டான். பேண்ட்டை மாற்று என்றபோது பேண்ட்டை மாற்றினான். பட்டிக்காடுபோல் நடந்துகொள்ளக் கூடாது; பட்டணத்துக்காரனாக மாறு என்று அறிவுரை சொல்லப்பட்டபோது, எப்படி ஐயா மாறுவது என்று கவனமாகக் கேட்டுக்கொண்டு, அதன்படி நடந்துகொண்டான். எந்த முரண்பாட்டைக் கண்டு கலங்கி நின்றானோ அதுவாகவே மாற ஆரம்பித்தான் மால்கம். எது அவனை உறுத்தியதோ அதையே ஏற்றுக்கொண்டான்.

ஷார்ட்டி என்னும் நண்பர் ஓர் உச்சகட்ட யோசனையை வழங்கினார். தம்பி, உன் தலைமுடி கோரமாக இருக்கிறது. வட்ட வட்டமாக, சுழன்று. சீச்சீ, பார்க்கவே சகிக்கவில்லை. இப்படி இருந்தால் வெள்ளையர்கள் எப்படி உன்னை நெருங்கி வருவார்கள்? உன்னை நம்பி எப்படித் தன் காலணிகளை அளிப்பார்கள்? வெள்ளையர்கள் சுத்தமானவர்கள் என்று யாரும் உனக்குச் சொல்லித்தரவில்லையா? அவர்களுக்குப் பிடித்தாற்போல் நாம் காட்சியளித்தால்தானே நமக்கு வரும்படி கிடைக்கும்? கோட், சூட் வாங்கி அணிந்துகொண்டால் போதுமா? உன் தலைமுடியை காங்க் செய்துகொள்ளவேண்டாமா?

காங்க் செய்தால் கூடுதல் காசு கிடைக்கும் என்றால் சரிதான் என்றான் மால்கம். ஷார்ட்டி அவனை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றார். கொதிக்கக் கொதிக்க காயவைக்கப்பட்ட எண்ணெய். அதில் வேக வைக்கப்பட்ட உருளைக் கிழங்கை போட்டு கிளறவேண்டும். மாவு தயார். முதலில் மால்கமின் தலைமுடியை வாசலீன் போட்டு சுத்தப்படுத்தினார் ஷார்ட்டி. தம்பி வலிக்கும் கத்தாதே என்று சொல்லி சிறிது சிறிதாக மாவை தலையில் ஊற்றினார். வலிக்கவில்லை, உயிரே போய்விடும் போல் இருந்தது.

ஆனாலும் மால்கம் தாங்கிக்கொண்டான். தம்பி, காங்க் செய்துகொண்டால்தான் தலைமயிர் நேராகும். தலைமுடி நேரானால்தான் ஸ்டைலாகத் தலைவாரிக்கொள்ளமுடியும். ஸ்டைல் இல்லேயேல் நிக்கல் இல்லை. ஷார்ட்டி வலியுறுத்தியபோது, மறுக்கவே இல்லை மால்கம். சத்தம் போட்டு அலறிவிட்டு, தனக்குத் தெரிந்த அத்தனை கெட்ட வார்த்தைகளாலும் ஷார்ட்டியைத் திட்டிவிட்டு, அன்று இரவு முழுவதும் அழுதுவிட்டு மறுநாள் காலை எழுந்து ஒன்றுமே நடக்காததுபோல் இருந்துவிட்டான். தலைமுடி நேராகிவிட்டது. போதாதா?

கால்களை மட்டும் வெளியில் நீட்டியபடி தத்தளித்துக்கொண்டிருந்த மால்கமை மலைப்பாம்பு முழுவதுமாக விழுங்கியது. ஒரு சிறு எதிர்ப்புக்கூடக் காட்டாமல் அடங்கிபோனான் மால்கம். இதுதான் விதி என்று ஏற்றுக்கொண்டான். கடனே என்று இல்லாமல் ரசனையுடன் வேலை செய்தான். அறையின் இடுக்குகளில் இருந்து கசிந்து வரும் இசைக்கு ஏற்றாற்போல் அவன் கையில் இருந்த பிரஷ் இயங்கியது. கழிப்பறையில் இருந்து வெளியில் வருபவர்களுக்கு நடன அசைவுடன் துண்டை

எடுத்து நீட்டினான். புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்டார்கள் வெள்ளையர்கள். சபாஷ் என்று தட்டினார்கள். கூடுதல் டிப்ஸ் கிடைத்தது.

மலைப்பாம்பு பற்றி இங்கே கொஞ்சம்.

காட்டைத் திருத்தவேண்டுமா? மூட்டை தூக்கவேண்டுமா? தண்டவாளம் அமைக்கவேண்டுமா? பாலம் கட்டவேண்டுமா? விவசாயத்துக்கு ஆள்கள் வேண்டுமா? உங்கள் வீட்டுக் குட்டிப் பாப்பாவை பொறுப்பாகவும் கவனமாகவும் பார்த்துக்கொள்ள ஆயா வேண்டுமா? கூப்பிடு அடிமைகளை. குறிப்பாக, ஆப்பிரிக்க அடிமைகளை.

கொஞ்சமும் சளைக்காமல் உலகம் முழுவதற்கும் அடிமைகளை ஏற்றுமதி செய்த தேசம் ஆப்பிரிக்கா. யார் வந்து கேட்டாலும் அள்ளிக்கொடுத்தார்கள். எத்தனை பேர் வேண்டும்? எத்தானம் தேதிக்குள்? ஆண்கள் எத்தனை? பெண்கள் எத்தனை? குழந்தைகளும்கூட மானாவரியாக இறைந்து கிடக்கிறார்கள். கூச்சமில்லாமல் கேட்டு வாங்கி உபயோகப்படுத்திக்கொள்ளுங்கள். மிகவும் சிரமப்பட்டு பிடித்துத் தருகிறோம். கொஞ்சம் மேலே போட்டுக் கொடுத்தால் தேவலை.

எனக்கு உனக்கு என்று வெவ்வேறு இனக்குழுத் தலைவர்கள் ஆப்பிரிக்காவைப் பிய்த்து பிராண்டிக்கொண்டிருந்த காலகட்டம் அது. யாருக்கு எந்தப் பகுதி கிடைக்கிறதோ அந்தப் பகுதிக்கு அவரே ராஜா. அவர் வைப்பதுதான் சட்டம். ஒவ்வொரு இனக்குழுவும் மற்றொரு இனக்குழுவுடன் மோதிக்கொண்டே இருக்கும். ஐரோப்பியர்களுக்கு இது மிகவும் வசதியாகிப் போனது. அடிமைகள் தேவைப்படும்போதெல்லாம் ஆப்பிரிக்காவில் உள்ள ஏதாவதொரு இனக்குழுவுடன் போர் தொடுத்தார்கள்.

போரில் தோற்றவர்களைக் கைதுசெய்து அடிமைகளாகக் கையோடு அழைத்துச்சென்றார்கள். பொன், பொருளுக்கு ஆசைப்பட்டு சில ஆப்பிரிக்கர்களே தங்கள் இன மக்களை வளைத்துப் பிடித்து அடிமைகளாக விற்று வந்தனர்.

அட்லாண்டிக் அடிமை வர்த்தகம் என்று சரித்திரம் இதைப் பதிவுச் செய்திருக்கிறது. எனில், ஆப்பிரிக்காவில் இருந்து அட்லாண்டிக் பெருங்கடலை ஒட்டியுள்ள நாடுகளுக்கு (பிரேஸில், போர்ச்சுகல், பிரான்ஸ், இங்கிலாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகள்) அடிமைகளை விற்கும் வியாபாரம் என்று பொருள். மேற்கு ஆப்பிரிக்காவில் இருந்தும் மத்திய ஆப்பிரிக்காவில் இருந்தும் பல மில்லியன் கணக்கான அடிமைகள் ஏற்றுமதி செய்யப்பட்டனர். 16-ம் நூற்றாண்டில் இருந்து 19-ம் நூற்றாண்டு வரை இந்த வர்த்தகம் கொடி கட்டிப் பறந்தது.

1492 தொடங்கி 1888 வரையிலான காலகட்டத்தில் மொத்தம் 12 மில்லியன் ஆப்பிரிக்கர்கள் அமெரிக்காவுக்குக் கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டனர்.

அமெரிக்கா என்று ஒரு தேசம் உருவாவதற்குப் பல நூற்றாண்டுகள் முன்பே அடிமைமுறை அங்கே அழுத்தமாக வேரூன்றிவிட்டது. இது பற்றி முதன் முறையாக நமக்குத் தெரிய வந்தது 1619-ம் ஆண்டு. மெக்ஸிகோவை நோக்கிச் சென்றுகொண்டிருந்த ஒரு ஸ்பானிஷ் கப்பல் மீது நடுக்கடலில் போர்தொடுத்தது ஒரு டச்சுக் கப்பல் (வெள்ளைச் சிங்கம் என்று பெயர் வைத்திருந்தார்கள்). பிடிபட்ட கப்பலில் இருந்து 20 ஆப்பிரிக்க அடிமைகளை அப்படியே தூக்கி தங்கள் கப்பலில் வைத்துக்கொண்டார்கள். வழியில் பல்வேறு சிக்கல்கள். உணவு கிடைக்கவில்லை. தேவையான பொருள்களை வாங்க முடியவில்லை. என்ன செய்யலாம்? அப்போதுதான்

தோன்றியிருக்கிறது. கையிருப்பில் உள்ள அடிமைகளை விற்றுவிட்டால் என்ன? ஒருத்தருக்கு எவ்வளவு தருவீர்கள் என்று கேட்டு, பேரம் பேசி கைமாற்றியிருக்கிறார்கள். இந்த இருபது பேரிடம் இருந்து தொடங்குகிறது அடிமை வர்த்தகம்.

ஒரு காலனியாக இருந்த அன்றைய அமெரிக்காவில் சொல்லிக்கொள்ளும்படியான மக்கள்தொகை எல்லாம் இல்லை. ஆக்கிரமிக்கும் பேராசையுடன் கால் பதித்த அத்தனை பேரும் அந்த மண்ணின் மைந்தர்களான பூர்வகுடிகளோடு போர் புரிந்துகொண்டிருந்தார்கள். பூர்வகுடிகளை அழித்தொழித்தால்தான் நிலத்தை முழுமையாகக் கைப்பற்றிக்கொள்ள முடியும் அல்லவா?

அதற்குப் பிறகு சிறிது சிறிதாகக் குடியேற்றங்கள் நடைபெற ஆரம்பித்தன. ஸ்பெயின், பிரான்ஸ், பிரிட்டன், டச்சு என்று ஒவ்வொரு தேசமும் உள்ளே புகுந்து இது எங்கள் பகுதி என்று பட்டா போட்டுக்கொண்டது. புதிய இங்கிலாந்து, புதிய ஸ்வீடன், புதிய நெதர்லாந்து என்று வேலிகள் போடப்பட்டன. இவர்களுள் அதிக வலுப்பெற்ற தேசம் பிரிட்டன். தன்னளவில் பிரதேசங்களைக் கைப்பற்றிக்கொண்டதோடு நின்றுவிடாமல் டச்சுக் குடியேற்றப் பகுதிகளையும் வளைத்துப்பிடித்துக்கொண்டது. Anglo-Dutch யுத்தம் என்று சரித்திரத்தில் இது இடம்பெற்றிருக்கிறது. 17 மற்றும் 18-ம் நூற்றாண்டில் நடைபெற்ற தொடர் யுத்தங்கள் அவை.

இதே காலகட்டத்தில் Indentured Labours என்று அழைக்கப்படும் தனிப்பெரும் பிரிவு தோன்றியது. அடிமைகளைவிட இவர்கள் சற்றே மேலானவர்கள். மூன்று ஆண்டுகள், ஏழு ஆண்டுகள் என்று ஒப்பந்தம் போட்டுக்கொள்வார்கள். ஒப்பந்த காலத்தில் எஜமானர்கள்

சொல்படி கேட்டு நடந்துகொள்ளவேண்டும். மொத்தமாகக் காசு கொடுத்து வாங்காமல் ஒப்பந்தம் தயாரித்து கையெழுத்து வாங்கி வைத்துக்கொள்வார்கள். கூலியோடு சேர்த்து ஆகாரம், உடை, போக்குவரத்து வசதிகள் எல்லாவற்றையும் எஜமானர்கள் கவனித்துக்கொள்வார்கள். 17, 18-ம் நூற்றாண்டுகளில் தெற்கு அமெரிக்கப் பகுதிகளில் உள்ள புகையிலைத் தோட்டங்களில் இந்த ஒப்பந்தப் பணியாளர்களே பயன்படுத்தப்பட்டனர்.

ஒப்பந்தப் பணியாளர்கள் வளர்ந்துகொண்டிருந்த அதேசமயம் அடிமைத்தனமும் மற்றொரு பக்கத்தில் வளர்ந்துகொண்டிருந்தது. ஆப்பிரிக்க அடிமைகள் முதன் முதலாக 1619-ம் ஆண்டு வர்ஜீனியாவில் உள்ள ஜேம்ஸ் டவுன் பகுதிக்கு அழைத்துவரப்பட்டனர். ஜான் கேஸர். சரித்திரத்தில் பதிவாகி உள்ள முதல் கறுப்பின அடிமை இவர். 1654-ல் இவர் நீதிமன்றம் சென்றார். என்னை என் எஜமானர் மிகவும் கொடுமைப்படுத்துகிறார். தயவு செய்து என்னை விடுதலை செய்யுங்கள். இவரது எஜமானரும் வழக்கு தொடுத்திருந்தார். நான் ஒண்ணும் சும்மா துன்புறுத்தவில்லை. ஜானைக் காசு கொடுத்து வாங்கியிருக்கிறேன். இவன் என் அடிமை. என்னை எதிர்த்து எப்படி இவன் வழக்கு தொடுக்கலாம்? இப்படியே விட்டால் ஆடுகளும் மாடுகளும்கூட அடிக்கிறார்கள் குத்துகிறார்கள் என்று வழக்கு தொடரும் போலிருக்கிறதே. நீதி இருக்கிறதா அல்லது செத்துப்போய்விட்டதா? இருதரப்பு வாதங்களையும் ஊன்றி கவனித்த நீதிபதி, இப்படி ஒரு தீர்ப்பை வழங்கினார். இதோ பார் ஜான் கேஸர், நீ ஓர் அடிமை. நீ உன் எஜமானனின் உடைமை. வாழும் காலம் முழுவதும் ஒழுங்கு மரியாதையாக உன் எஜமானனுக்குச் சேவை செய்யக் கடவது.

பிரிட்டன் எந்தெந்தப் பிரதேசங்களைக் கைப்பற்றியதோ அங்கெல்லாம் அடிமைத்தனத்தையும் அறிமுகம் செய்துவைத்தது. பிரிட்டனின் காலனி தேசங்கள் அனைத்திலும் அடிமைகள் பல்கிப் பெருகினார்கள். 1705-ம் ஆண்டு வர்ஜீனியாவில் அடிமைகள் சட்டம் (Slaves Code) என்று தனியே ஒன்று உருவாக்கினார்கள். ஒவ்வோர் அடிமையும் அவன் எஜமானனின் உடைமை என்பதுதான் சட்டத்தின் ஷரத்து. அடித்தாலும் உதைத்தாலும் கொன்றாலும் அவர்தான். அடிமைகளுக்குச் சுதந்தரம் என்று ஒன்றும் கிடையாது. என்னை துன்புறுத்துகிறார் காப்பாற்றுங்கள் என்று கண்ணைக் கசக்கிக்கொண்டு நீதி தேடமுடியாது.

சட்டமே சொல்லிவிட்டது. பிறகு என்ன? பஜாரில் நின்று நிதானமாகத் தேர்ந்தெடுத்து அடிமைகளை வாங்கி வீட்டுக்கு ஓட்டிச்சென்றார்கள் வெள்ளைக்காரர்கள். வடக்குப் பிரதேசத்தில் அடிமைகள் பெரும்பாலும் வீட்டுவேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர். தெற்குப் பகுதியில் வேளாண்மைப் பணிகள். நிலங்களைக் கொத்தி சீர் செய்து, விதைத்து, நீர் வார்த்து, அறுவடை செய்யும்வரை அடிமைகள் நிலத்தைவிட்டு அகல முடியாது. பருத்தி வேண்டுமா? புண்ணாக்கு வேண்டுமா? புகையிலை வேண்டுமா? அரிசி வேண்டுமா? கூப்பிடு அடிமைகளை. 1720-களில் தெற்கு கரோலினா பகுதியில் 65 சதவிகிதம் பேர் அடிமைகளாக இருந்தனர்.

1790 தொடங்கி 1860 முடிய கிட்டத்தட்ட பத்து லட்சம் அடிமைகள் மேரிலாண்ட், வர்ஜீனியா, கரோலினா போன்ற பகுதிகளுக்கு இழுத்துவரப்பட்டனர். ஜார்ஜியா, அலபாமா, மிஸ்ஸிஸிப்பி, லூசியானா, டெக்ஸாஸ் என்று அடிமை வியாபாரம் பரவியது. மற்ற தேசத்து அடிமைகளைக்

காட்டிலும் ஆப்பிரிக்க அடிமைகளுக்கே கிராக்கி அதிகம் இருந்தது. நல்ல உயரம். திடகாத்திரமான உடல் அமைப்பு. சிறிதளவு உணவு கொடுத்தாலே போதும். நாள் முழுவதும் ஓடவிடலாம். கடினமானப் பணிகள் அனைத்தையும் பயமில்லாமல் அளிக்கலாம். குதிரைகள்கூட சோர்ந்து போகக்கூடும். கறுப்பர்களுக்கு அசதி பிறக்காது. தவிரவும், அவர்கள் கறுப்பு. கடும்குளிரையும், கொளுத்தும் வெயிலையும் தாக்குப்பிடிக்கும் திறன் அவர்களது தோலுக்கு உண்டு. சொல்வதை உடனே கற்றுக்கொள்கிறார்கள். கோபம் வந்து நான்கு சாத்து சாத்தினாலும் கண்டுகொள்ளமாட்டார்கள். கறுப்பினப் பெண்கள் படுக்கை அறைக்கு ஏற்றவர்கள். இத்தனை வசதி மொத்தமாக வேறு எங்கே கிடைக்கும் சொல்லுங்கள்?

மிகவும் மென்மையானர், இரக்கக் குணம் கொண்டவர், தெய்வ பக்தி கொண்டவர் என்று அறியப்பட்ட வெள்ளையர்கள்கூட கறுப்பு அடிமைகளிடம் மிருகத்தனமாக மட்டுமே நடந்துகொண்டார்கள். சொன்ன வேலையை உடனே செய்யாவிட்டால் அடிக்கலாம், துன்புறுத்தலாம் தவறில்லை என்று அவர்கள் நம்பினார்கள். அடிமையைச் சித்திரவதை செய்து ரசித்த வெள்ளையர்கள் அதிக அளவில் இருந்தனர். கீழ்ப்படியாத அடிமைகளை அடித்துக் கொல்வது சகஜமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஒரு அடிமை போனால் இன்னொருவன்.

பண்ணை முதலாளிகள் கையில் சவுக்கோடு அலைந்துகொண்டிருந்தார்கள். வேலையில் சிறு பழுது, சிறு கவனச் சிதறல் இருந்தாலும் சவுக்கு விளாசிவிடும். அடிமைகளில் சிலரையே தேர்ந்தெடுத்து அவர்கள் கையில் சவுக்கைத் திணித்து அவர்களை சீனியர் அடிமைகளாக மாற்றும் வழக்கமும் இருந்தது. ஒழுங்கீனமான

அடிமைகளை அடித்து நல்வழிப்படுத்துவதுதான் இந்த சீனியர்களின் பணி. பாவம் நம் ஆள்தானே என்று விட்டுவிட்டால் அதே சவுக்கைப் பிடுங்கி இவர்களை விளாசிவிடுவார்கள்.

கறுப்பினப் பெண்களை பாலியல் பலாத்காரம் செய்வது மிக மிகச் சாதாரண நிகழ்வாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. பணம் கொடுத்து வாங்கிய பண்டம். சும்மா வைத்திருந்தால் கெட்டுவிடாதா? ஆகவே பயன்படுத்திக்கொண்டார்கள். ஏய் சிறுமி இங்கே வா. ஏய் பையா, என் அறைக்கு வா. அழைக்கக்கூடவேண்டாம். ஜாடையாக ஒரு பார்வை பார்த்தாலே பவ்யமாகப் பின்னுக்கு நகர்ந்து படுக்கை அறைக்குப் போய்விடவேண்டும். முரண்டு பிடித்தால், எடு சவுக்கை.

கிறிஸ்துமஸ் வந்தால் ஒரு துண்டு இனிப்பு. எப்போதாவது ஆடைகள். மிச்சமாகிப் போன உணவுகள். இவை போதும் அடிமைகளுக்கு. அவ்வப்போது சிறு சிறு கலகங்கள் ஆங்காங்கே வெடிக்கும். அடிமைத்தனத்துக்கு எதிராக இயக்கங்கள் உருவெடுக்கும். மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள் என்று அவ்வப்போது அரசாங்க அறிக்கைகள் வெளிவரும். அடித்தளத்தில் அடிமைத்தனம் ஒழியவில்லை.

1860-ல் தேர்தல் பிரசாரத்தில் அடிமைகளின் நிலைப்பாடு பற்றி பெரிய அளவில் விவாதங்கள் நடத்தப்பட்டன. அடிமைகள் கூடாது என்றார் ஆபிரஹாம் லிங்கன். வலுவான எதிர்ப்புகள் கிளம்பின. அடிமைகள் இல்லாமல் ஒரு தேசம் எப்படி இயங்கும்? வீட்டு வேலைகளை யார் செய்வார்கள்? பண்ணைகளில் யார் இறங்குவார்கள்? காசு கொடுத்து வாங்கிய நான்கு மில்லியன் அடிமைகளை என்ன செய்வது? கூண்டுகளைத் திறந்து புறாக்களைப்போல்

பறக்கவிட்டுவிடுவதா? அடிமை ஒழிப்பு எல்லாம் சரிப்பட்டு வராது; எங்களை விட்டுவிடுங்கள் என்று சொல்லி 11 மாகாணங்கள் ஐக்கிய அமெரிக்க தேசத்தில் இருந்து வெளியேறின.

இந்த விவகாரம் அமெரிக்க உள்நாட்டு யுத்தத்துக்கு (1861-1865) இட்டுச்சென்றது. அமெரிக்கச் சரித்திரத்தில் மிக அதிகம் பேரை பலிவாங்கிய யுத்தம் இதுதான். மொத்தம் 6,20,000 வீரர்கள் உயிர் இழந்தனர். ஜனவரி 1, 1863-ம் ஆண்டு அடிமைகளுக்கானச் சுதந்தரப் பிரகடனத்தை இயற்றினார் லிங்கன். அடிமைத்தனம் சட்டவிரோதமானது என்று அறிவித்தது இந்தப் பிரகடனம்.

இந்தப் பிரகடனம் மிகுதியான நம்பிக்கையை அடிமைகளின் மனத்தில் விதைத்தது நிஜம். பெரும்பாலானோர் விடுதலை செய்யப்பட்டதும் நிஜம். ஆனால் அடிமைத்தனம் அமெரிக்காவில் இருந்து அகற்றப்படவில்லை. லிங்கன் காலத்திலேயே இதற்கு மிகக் கடுமையான எதிர்ப்புகள் கிளம்பின. பெயருக்குச் சில அடிமைகளை விடுவித்துவிட்டு மற்றவர்களை கொல்லைப்புறத்தில் பதுக்கினார்கள் வெள்ளையர்கள்.

அடிப்படை உரிமைகளுக்கும்கூட அடிமைகள் மிகக் கடுமையாகப் போராடவேண்டியிருந்தது. ஓட்டுப் போடும் உரிமை வேண்டுமா? ரத்தத்தைக் கொடுத்து போராடவேண்டும். வெள்ளையர்கள் படிக்கும் பள்ளிகளில் இடம் வேண்டுமா? அதற்கொரு போராட்டம். வெள்ளையர்கள் செல்லும் உணவு விடுதிகளுக்குச் செல்லவேண்டுமா? அதற்குத் தனியே ஒரு போராட்டம். வெள்ளையர்களும் கறுப்பர்களும் சமமே என்று சட்டம் சொல்லிவிட்டது. கறுப்பர்களை அடிமைகளாகக் கொள்வது தண்டனைக்குரிய குற்றம் என்று சட்டப் புத்தகங்கள்

சொல்கின்றன. நிஜத்தில்?

இரண்டாம் தரக் குடிமக்களாகவே கறுப்பர்கள் தொடர்ந்து நடத்தப்பட்டு வந்தனர். கறுப்பர்கள் வெள்ளையர்களைவிடத் தாழ்ந்தவர்கள் என்று திரும்பத் திரும்ப சொல்லித்தரப்பட்டது. இருபதாம் நூற்றாண்டில்கூட இந்த நிலை மாறவில்லை. 1906-ம் ஆண்டு ஜியார்ஜியாவில் உள்ள அட்லாண்டா பகுதியில் செப்டம்பர் மாதம் நான்கே தினங்களில் 40 கறுப்பர்கள் கொல்லப்பட்டனர். இந்தக் கலவரத்துக்குக் காரணம் வெள்ளையர்களுக்குப் போட்டியாகக் கறுப்பர்களும் கல்வி, வேலைவாய்ப்பு என்று உரிமை கோரியதுதான். நவீன அமெரிக்க சரித்திரத்தை எடுத்து வைத்துக்கொண்டு கறுப்பர்களுக்கு எதிரான இனக்கலவரம் என்று தேடினால் பட்டியல் நீண்டுகொண்டே செல்லும். சிகாகோ கலவரம், ஒமாஹா கலவரம் என்று அதிர அதிர தகவல்களைத் திரட்ட முடியும்.

# 5. எதுவும் தவறில்லை!

மதுக்கோப்பையை முதன் முதலாகத் தொட்டபோது, மால்கமின் கைகள் நடுங்கவில்லை. குடிப்பா இதெல்லாம் இங்கே வெகு சகஜம் என்றபோது, மறுக்காமல் கை நீட்டி மடக்கென்று தொண்டைக்குள் இறக்கிக்கொண்டான். பீர். சாராயம். ஒயின். எது கிடைத்தாலும் குடித்தான். இந்தா என்று யாரோ நீட்டிய சிகரெட்டை வாங்கி உதட்டில் பொருத்திக்கொண்டான். சூதாடினான். லாட்டரி வாங்கினான். பரிசுக்காக ஏங்க ஆரம்பித்தான்.

லாரா அறிமுகமானபோது, மால்கம் ஒரு சிறிய உணவகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தான். லாரா தனியாக வருவார். ஐஸ் க்ரீம் ஆர்டர் செய்வார். கையோடு கொண்டு வந்த புத்தகங்களைப் படிப்பார். அரை மணி நேரம் பொறுமையாக ஐஸ் க்ரீம் சாப்பிட்டுவிட்டு எழுந்து போய்விடுவார். மால்கம் லாராவிடம் பேச்சுக்கொடுக்க ஆரம்பித்தான். லாரா உள்ளே நுழையும்போதே அவள் விரும்பும் ஐஸ் க்ரீமை கொண்டு வந்து டேபிளில் வைத்தான். லாராவுக்கும் மால்கமை மிகவும் பிடித்துப்போனது. இருவரும் ஒன்றாக நடன அரங்கத்துக்குப் போக ஆரம்பித்தார்கள். அது காதலா கவர்ச்சியா அல்லது அதற்கும் மேலா என்றெல்லாம் மால்கம் யோசிக்கவில்லை. லாராவைப் பிடித்திருந்தது. ஒட்டிக்கொண்டான்.

நீ ஏன் தொடர்ந்து படிக்கக் கூடாது? ஒருமுறை லாரா கேட்டபோது மால்கமால் சிரிக்க மட்டுமே முடிந்தது. சிரித்து முடித்தபிறகு அவள் கையைப் பிடித்து விளக்கினான். ஏன் படிக்கவேண்டும்? படித்து முடித்தால் மட்டும் என்ன வேலை

கிடைத்துவிடும் இங்கே? வழக்கறிஞர் ஆகவேண்டும் என்று ஆசைப்பட்டேன். ஹா, அதெல்லாம் வேண்டாம் மகனே, தச்சு வேலை செய்து பிழைத்துக்கொள் உனக்கு அதுதான் லாயக்கு என்று சொல்லிவிட்டார் என் வாத்தியார். தச்சு வேலைக்கு இது எவ்வளவோ பரவாயில்லை. அதோ என்னுடன் இருக்கிறானே அந்த நெட்டையான மனிதன், அவன் ஒரு பட்டதாரி. நல்ல மதிப்பெண்கள் பெற்றிருப்பதாக என்னிடம் பெருமையுடன் பல முறை சொல்லியிருக்கிறான். எந்தப் பாத்திரத்தையும் கறையின்றி அவனால் துடைத்துவிட முடியும். எத்தனைப் பெரிய கறை இருந்தாலும் அகற்றிவிடுவான். அந்த ஒரு தகுதியால் மட்டுமே இன்று வரை ஜீவித்துக்கொண்டிருக்கிறான். புரிந்திருக்கும் என்று நம்புகிறேன்.

சோஃபியாவை ரசிக்க ஆரம்பித்ததும் லாராவை மறக்க ஆரம்பித்தான் மால்கம். சோஃபியா பேரழகி. பால் வெள்ளை மேனி. இது நிச்சயம் காதல்தான் என்று சொல்லிக்கொண்டான் மால்கம். லாராவின் அழைப்புகளைத் தவிர்ப்பது பற்றி எந்தவித குற்றவுணர்ச்சியும் இல்லை அவனிடம். சோஃபியாவின் கையைப் பற்றிக்கொண்டு ஊர் சுற்றும்போது எல்லோரும் தன்னை கர்வத்துடன் பார்ப்பதை வெகுவாக ரசித்தான் மால்கம். லிண்டி—-ஹாட் நடனத்தில் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தான் மால்கம். சோஃபியாவை நடன அரங்கங்களுக்கு அழைத்துச் சென்றான்.

அடிக்கடி காங்க் செய்துகொண்டான். வீட்டிலேயே செய்துகொள்ளும் வலி தரும் காங்க் அல்ல. முடிதிருத்தும் கடைகளில் செய்யப்படும் காங்க். கடையில் செய்துகொண்டால் கூடுதல் செலவு. ஆனால் அதைப் பற்றி கவலைப்படும் மனநிலையில் இல்லை மால்கம்.

ஓரளவுக்குத் தாராளமாகவே கையில் பணம் புழங்க ஆரம்பித்திருந்தது. நிறைய டிப்ஸ் கிடைத்தது. பரிசுச்சீட்டிலும் அவ்வப்போது பரிசு விழுந்துகொண்டிருந்தது.

புதிய வேலை ஒன்று கிடைத்ததும் உற்சாகமானான் மால்கம். பாஸ்டனில் இருந்து நியூ யார்க் செல்லும் ரயிலில் உணவுப் பண்டங்கள் விற்கவேண்டும். மால்கம் உடனடியாக இதற்கு ஒப்புக்கொண்டதற்குக் காரணம் பயணங்கள் மீது அவனுக்கு இருந்த ஆர்வம். நியூ யார்க் பற்றி பலரும் பலவிதமாகச் சொல்லி கேள்விப்பட்டிருக்கிறான். ரயில்வேயில் வேலை செய்தால் நியூ யார்க் செல்லமுடியும். வேறு பல நகரங்களுக்கும் செல்லலாம். அமெரிக்கா முழுக்க சுற்றிவரலாம். இலவசமாக.

கான்க்ரீட் வீடுகள் குறைவாகவே கண்ணில் பட்டன. அப்படிக் கண்ணில் பட்ட வீடுகளும் சொல்லிக்கொள்ளும்படியாக இல்லை. குழந்தைகள் உருவாக்கும் சொப்புகளைப்போல் அமைந்திருந்தன வீடுகள். உடைந்துபோன தகரங்களைக் கொண்டு குடில்கள் அமைத்திருந்தார்கள். ஒரு சிறிய காரை செங்குத்தாக நிமிர்த்தி வைத்ததைப் போன்ற வீடு ஒன்றில் ஒரு கணவன், மனைவி, வயதான ஒரு பெண்மணி, மூன்று குழந்தைகள். இரவு நேரங்களில் குழந்தைகள் வீட்டுக்கு வெளியில் அதாவது சாலையின் ஓரங்களில் சுருண்டு படுத்து உறங்கினார்கள்.

தீப்பெட்டிகளை அடுக்கி வைத்ததைப் போன்ற அடுக்குமாடிக் குடியிருப்புகளும் இருந்தன. ஒரு கட்டடத்தில் எத்தனை ஆயிரம் பேர் இருப்பார்களோ?

ஒருவருக்கும் தெரியாது. கட்டடத்தின் முன்பக்கம் முழுவதும் குப்பைகள் மலைபோல் குவிந்துக் கிடந்தன. கார் டயர், பயன்படுத்தப்பட்ட சிரிஞ்சு, பஞ்சு, மனிதக் கழிவுகள், சமையல் கழிவுகள், இறந்துபோன நாயின் உடல் பாகங்கள், அறுந்து போன செருப்புகள், காலி மதுப் புட்டிகள். ஒன்றையும் விட்டுவைக்காமல் குழந்தைகள் கிளறிக்கொண்டிருந்தார்கள். குப்பை மேட்டிலிருந்து புகை கசிந்துகொண்டிருந்தது.

இது விஷப் புகை அல்லவா? இங்குதானா கறுப்பர்கள் வசிக்கவேண்டும்? இத்தனை பெரிய நியூ யார்க்கில் வேறு இடமே இல்லையா? வெள்ளையர்களின் பகுதிகளில் மட்டும் எப்படி இத்தனை செழுமை பூத்துக்கிடக்கிறது? சேரிகளில் பிறந்து சேரிகளில் சாக வேண்டிய அவசியம் கறுப்பர்களுக்கு மட்டும் ஏன் வாய்க்கவேண்டும்? லேன்சிங். பாஸ்டன். நியூ யார்க். எதுவானால் என்ன? கறுப்பர்களுக்கு எல்லாமே நரகத்தின் பிரதிகள்தானே?

காபிடல் ஹில் என்று ஒரு பகுதி. அமெரிக்காவின் அரசியல் இங்கிருந்துதான் தீர்மானிக்கப்படுகிறது. வாஷிங்டனில் இருந்து அங்கும் சென்று பார்த்தான். வெள்ளையர்களின் வாழ்விடங்கள் படு சுத்தமாக இருந்தன. ஒவ்வொரு வெள்ளையரின் வீட்டுக்கு முன்பாகவும் சீராகப் பராமரிக்கப்பட்ட அழகிய புல்வெளி. ஒரே அளவுக்கு நறுக்கப்பட்ட செடிகள். வண்ண வண்ண பூக்கள். குழந்தைகள் விளையாட தனியொரு பகுதி. சறுக்கு மரங்கள். விளையாட்டு பொம்மைகள். ஃபவுண்டேன்!

வெள்ளை மாளிகைக்கு மிக மிக அருகில் இருந்த அந்தக் கறுப்பர்களின் சேரிக்குள் கால்கள் வலிக்க வலிக்க நடந்து சென்றான் மால்கம். குடிசைகள். தேவாலயங்கள். அழுக்கேறிய அறிவிப்புப் பலகை. ‘இங்கு காங்க்

செய்யப்படும்.' கார் ஒன்று வந்து நின்றால் ஓடிவந்து தன் கறுத்த கைகளை முன்னால் நீட்டும் பிச்சைக்காரர்கள். சாப்பிட்டு நாளாகிறது, அம்மா தாயே! உயிரைக் கிழிக்கும் மரண ஓலம். தொளதொளப்பான உடைகளை அணிந்து குப்பை மேட்டில் சரிந்து விழுந்து சிரித்து விளையாடும் சிறுவர்கள், சிறுமிகள். வெள்ளையர்களுக்கு வெள்ளை மாளிகை. கறுப்பர்களுக்கு?

ஹார்லெம் பகுதியில் ஒரு தீப்பெட்டிக்கு உள்ளே தங்கியிருந்தான் மால்கம். வறுத்த கோழி, உருளைக் கிழங்கு துண்டுகள், கீரை. மூன்றுமாகச் சேர்த்து ஒரு தட்டு ஒரு டாலர். ஒரு குவளை பீர் அல்லது சாராயம் 50 செண்ட்கள். இதைவிட குறைச்சலாக வேறு எங்கும் கிடையாது. பரிமாறப்படுவது சுத்தமான உணவுதானா? சாராயத்தில் போதை கிடைக்கிறது. ஆனால் கலப்படம் ஏதும் இல்லையே?

யாருக்குத் தெரியும் தோழரே. கிடைத்ததை உண்டு, கிடைத்ததைக் குடித்து, கிடைத்த இடத்தில் சுருண்டு படுத்து காலத்தைக் கழிக்கவேண்டியதுதான். ஆம், வாழ யாரும் முயலவில்லை இங்கே. வாழவும் முடியாது. காலத்தைக் கழிக்கவேண்டியதுதான். எப்போது அழைப்பு வருகிறதோ அப்போது போய் சேர்ந்துவிடக் கடவது.

ஒழுக்கத்துடன் வாழ்வது இங்கே சிரமம். நான் ஒரு உத்தமன் தெரியுமா என்று நீங்கள் சொன்னால் உங்களைப் பரிதாபமாகப் பார்ப்பார்கள். நீங்கள் பிழைக்க லாயக்கற்றவன் என்று அந்தப் பார்வைக்குப் பொருள். நியூ யார்க் உங்களைத் தள்ளிக்கொண்டே வந்து ஒரு குப்பைத் தொட்டியில் கொண்டுபோய் சேர்த்துவிடும். மது அருந்த மாட்டேன், கஞ்சா புகைக்க மாட்டேன், பெண்களை ஏறெடுத்து பார்க்க மாட்டேன் என்றெல்லாம்

சொல்லிக்கொண்டு இந்தச் சேரியில் வாழ முடியாது நண்பரே. ஏர்ல் லிட்டில் வம்சத்தினராக இருந்தாலும் இதே கதிதான்.

டெய்லி ஒர்க்கர் என்னும் பெயரில் ஒரு பத்திரிகை ஹார்லெமில் வந்து கொண்டிருந்ததை மால்கம் அறிவான். கறுப்புத் தொழிலாளர்கள் சில சமயம் ஒன்றாகக் கூடி நின்று அந்தப் பத்திரிகையைப் பிரித்து வைத்துக்கொண்டு அரசியல் பேசுவதை மால்கம் அருகில் இருந்து கேட்டிருக்கிறான். ஏகாதிபத்தியம். வெள்ளை இனவெறி. அடங்கிப் போய்கொண்டிருந்தால் அவர்கள் மென்மேலும் குத்திக்கொண்டிருப்பார்கள். தேவை மக்கள் ஆட்சி. புரட்சி மட்டுமே தேவையான மாற்றத்தைக் கொண்டு வரும். ஆவேசமும் வீரமும் தெறிக்கும் அந்த வார்த்தைகளை சிறிது நேரம் கேட்டுக்கொண்டிருப்பான் மால்கம். பிறகு நகர்ந்துவிடுவான். ரயிலுக்கு நேரமாகிவிடும். இந்தப் பத்திரிகைக்கும் ரஷ்யாவுக்கும் ஏதோ ஒரு வகைத் தொடர்பு இருக்கவேண்டும் என்று மால்கம் யூகித்துக்கொண்டான்.

அமெரிக்க ராணுவத்தில் கறுப்பர்கள் நிறையப் பேர் பணியாற்றுகிறார்கள் என்று ஒரு முறை கேள்விப்பட்டபோது, அகமகிழ்ந்துபோனான் மால்கம். பரவாயில்லை, அந்த மட்டிலும் மரியாதை இருக்கிறதே என்று தேற்றிக்கொண்டான். கறுப்பர்களின் உடல் பலத்தைக் கண்டு ஆங்கிலேயர்கள் எப்போதும் திகைத்து வந்திருக்கிறார்கள் என்பதை மால்கம் அறிவான். ஆகவே, தேசப் பாதுகாப்புப் பணியில் அவர்களை ஈடுபடுத்தியிருக்கிறார்கள் போலும் என்று நினைத்துக்கொண்டான்.

நெருங்கி சென்று ஆராய்ந்தபோது, ஏமாற்றமே மிஞ்சியது. கறுப்பர்களை அதிக எண்ணிக்கையில் அமெரிக்கர்கள்

பயன்படுத்திக்கொண்டது உண்மை. ஆனால் உயர் அதிகாரிகளாக அவர்கள் என்றென்றும் நியமிக்கப்பட்டதில்லை. அதிக உயிர் இழப்பு ஏற்படும் பணிகளா? முன்வரிசையில் நின்று முட்டி மோத வேண்டுமா? பீரங்கிகளை எதிர்கொள்ள வேண்டுமா? கூப்பிடு கறுப்பர்களை. ஒரு வெள்ளை வீரனைக் காப்பாற்ற எத்தனை கறுப்பர்களை வேண்டுமானாலும் பலியிடலாம். தவறில்லை. இதுதான் ராணுவத்தில் கடைப்பிடிக்கப்பட்ட சட்டம். அமெரிக்காவின் நலனைக் காப்பாற்ற, உயிரைக் கொடுத்து போராட கறுப்பர்கள் தேவை. ஆனால் அந்தக் கறுப்பர்களுக்குப் பாதுகாப்பு அளிக்க குறைந்தபட்ச அக்கறைகூட இல்லை. எத்தனை தேர்ச்சி பெற்றிருந்தாலும் முக்கியப் பதவிகள் அவர்களுக்கு வழங்கப்பட மாட்டா.

‘ஏய் அடிமை நாயே இங்கே வா!’

மால்கம் திரும்பினான். குடி போதையில் தள்ளாடிக்கொண்டிருந்தான் அந்த ராணுவ வீரன்.

‘வா வந்து என்னோடு சண்டை போடு. நீ என்ன பெரிய இவனா? உனக்குத் தைரியம் இருந்தால் என்னோடு மோது. என்னை வீழ்த்து. கறுப்பன் என்றால் பெரிய கொம்பா? எங்களைவிட பலசாலியா நீ?’

குடிபோதை எதையும் உளறவைக்கும் என்பதை மால்கம் அறியாமல் இல்லை. ஆனால் அடிமை நாயே என்று அவன் அழைத்தது மால்கமின் ரத்தத்தைச் சூடேற்றியது. ஆடிப் பார்த்துவிடலாம் என்று தோன்றியது. கையில் இருந்த ட்ரேயை பக்கத்தில் இருந்த சீட்டில் வைத்துவிட்டு திரும்பினான்.

‘உன்னுடன் சண்டை போட நான் தயார். அதற்கு முன்னால்

உன் மேல்கோட்டை கழற்று.’

அந்த வீரன் கோட்டை கழற்றினான்.

‘போதாது. சட்டையைக் கழற்று.’

கழற்றினான்.

‘பேண்ட்? பனியன்? உன் உடல் வலிமையாக உள்ளதா என்பதை நான் தெரிந்துகொள்ளவேண்டாமா? என்னைப் போன்ற கட்டுமஸ்தான தேகம் உனக்கு உண்டா? ஒரு அசமஞ்சத்துடன் என்னால் மோத முடியாது. ஒரு வீரனுடன் மட்டுமே நான் நேருக்கு நேராகச் சண்டைபோடுவேன்.’

முன்னரே குடிபோதையில் இருந்த அந்த ராணுவ வீரனை மால்கம் எக்ஸின் வார்த்தைகள் கடுமையாக உசுப்பேற்றியது. தன் ஆடையை ஒவ்வொன்றாகக் கழற்றினான். உள்ளாடையைத் தவிர வேறு எதுவும் பாக்கியில்லை என்பதை அவன் உணர்வதற்குள் மால்கம் ஒரு குரூரப் புன்னகையுடன் அங்கிருந்து நகர்ந்துவிட்டிருந்தான்.

ஊர் உலகில் இருந்த அத்தனை அசிங்கமான வார்த்தைகளையும் அருவருப்பான திட்டுகளையும் மால்கம் மனப்பாடம் செய்து வைத்திருந்தான். கறுப்பர்கள் சிரமப்படுவதைப் பார்க்கும்போதெல்லாம் வெள்ளையர்களை திட்டிக்கொண்டான். குறிப்பாக இந்த வெள்ளையர் அந்த வெள்ளையர் என்றில்லை. வெள்ளையாக இருக்கும் வெள்ளையர்கள் அனைவரையுமே திட்டினான். அவர்கள் அனைவருக்கும் ஒரு பொதுவான உருவத்தை உருவாக்கி வைத்திருந்தான். அந்த ஒற்றை உருவத்தைத் திட்டினால் ஒட்டுமொத்த வெள்ளையின சமூகத்தையும் ஏசிவிட்டதாக அர்த்தம்.

1683 முதலே கறுப்பினத்தவர் நியூ யார்க்கில் நிறைந்திருக்கிறார்கள் என்பதை அறிந்துகொண்டபோது, மால்கம் ஆச்சரியமடைந்தான். தொடக்கக் காலத்தில் ஸ்ட்ரீட் பகுதியில் அவர்கள் குடியேறினார்கள். கறுப்பர்கள் நம்முடன் சேர்ந்து வாழ்வதா என்று அதிர்ந்த வெள்ளையினத்தவர் அவர்களை விரட்டியடித்தனர். அங்கிருந்து வெளியேறிய கறுப்பர்கள், கிரீன்விச் வில்லேஜ் என்னும் பகுதியில் குடியேறினார்கள். அங்கும் நிலையாக வாழ அனுமதி கிடைக்கவில்லை. பென்சில்வேனியா ஸ்டேஷனுக்கு கறுப்பர்கள் விரட்டப்பட்டனர். பிறகு அங்கிருந்து 52வது தெருவுக்கு. இறுதியாக ஹார்லெம்.

கறுப்பினத்தவர் எங்கே சென்றாலும் தங்கள் கலாசாரத்தையும் பண்பாட்டையும் அடையாளத்தையும் கையோடு கொண்டு சென்றனர். 1920-ல் ஹார்லெமில் இசை எட்டிப் பார்த்தது. இசை என்பது அவர்களுக்குப் பொழுதுபோக்குச் சாதனம் மட்டுமல்ல. ஒரு கறுப்பனின் கனவுகளை, ஏக்கங்களை, இச்சைகளை, விருப்பங்களை வெளிப்படுத்தும் மொழி அது. சமூகங்களுக்கு ஏற்ப இசையின் வடிவம் மாறுகிறது. கறுப்பர்களின் இசை துள்ளலும் துடிப்பும் கொண்டது. நரம்புகளை உசுப்பேற்றும் மந்திரம் பொதிந்த இசை அது.

கறுப்பர்களின் இசையால் ஹார்லெம் அதிரத் தொடங்கியது. நடன அரங்கங்கள் உற்பத்தி ஆக ஆரம்பித்தன. அடடா இதுபோல் இதற்கு முன்னால் கேட்டதில்லையே என்று மகிழ்ந்த வெள்ளையர்கள், ஹார்லெமை வட்டமடிக்க ஆரம்பித்தனர். குறிப்பாக, இளைஞர்கள். வெவ்வேறு வகையான இசைக் குழுக்கள் உருவாக ஆரம்பித்தன. வெவ்வேறு வகையான நடனங்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

கூடவே வேறு பல உபாதைகளும்கூட ஹார்லெமில் தலையெடுக்க ஆரம்பித்தன. பணம் புரளும் பகுதி என்பது தெரிந்ததுமே கடத்தல்காரர்கள் வலது காலை எடுத்து வைத்து உள்ளே வந்தனர். மது விற்பவர்கள் ஆங்காங்கே கடைகள் திறந்தனர். உள்ளூர், வெளியூர் சரக்குகள் விதவிதமான புட்டிகளில் புழங்கின. அத்தனை விலை கொடுத்து வாங்கிக் குடிக்க முடியாதவர்களுக்காகக் கள்ளச் சாராயம். சாராயம் போதாது என்பவர்களுக்காக கஞ்சா. போதை மாத்திரைகள். ஊசிகள். எல்லாவற்றையும்விட அதிக போதையளிக்கும் சமாசாரம் இருக்கிறது கொண்டுவரவா என்று சிலர் கண் சிமிட்டினார்கள். பாலியல் தொழில் ஒரு பக்கம் சூடு பிடிக்க ஆரம்பித்தது.

எல்லாம் முடிந்தபிறகு, சட்டம்ஒழுங்கை நிலைநாட்ட காவல்துறையினர் வந்து சேர்ந்தனர். அவர்களுள் சிலர் ஒழுங்காகச் சட்டத்தை நிலைநிறுத்தவும் செய்தனர். பெரும்பாலானோர் நிலைதடுமாறி, மாமூல் வாங்கி கொழித்தனர். மாமூலில் பெற்ற பணத்தை அதே ஹார்லெமில் வைத்து தொலைத்தார்கள். ஏராளமான குதூகலத்தையும் ஆபத்தையும் உள்ளடக்கிய புதிய சந்தை ஒன்று உருவானது.

மால்கமுக்கு ஒரு புதிய பெயர் கிடைத்தது. ரெட். ஹார்லெம் முழுவதும் பிரபலமான பெயர் அது. ஹார்லெமில் மட்டுமல்ல பாஸ்டனிலும் ரெட் பிரபலமான ஒரு பெயர்தான். ரெட் எங்கே? இன்று ரயில் வரவில்லையா? கேட்பதை அளிக்கும் காமதேனு அல்லவா நம் ரெட்? அவன் இல்லாமல் கையும் காலும் ஓடவில்லையே. இசைக் குழுவினர் ரெட்டை வலை வீசி தேடினார்கள். தொலைவில் ரெட் வருவதைப் பார்த்தால் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தார்கள். வா நண்பா வா என்று கட்டியணைத்து

கன்னத்தில் முத்தம் கொடுத்தார்கள். எங்கே, எங்கே? கொண்டு வந்தாயா? கொடு, கொடு.

ஷூ பாலீஷ் போடும்போது இருந்த அதே சிரத்தையுடன்தான் இப்போதும் பணியாற்றிக்கொண்டிருந்தான் மால்கம். ரயில்வே வேலையை உதறித் தள்ளிவிட்டான். அள்ளிக்கொடுக்கும் மற்றொரு தொழில் உலகம் அவனை இழுத்துக்கொண்டது. கஞ்சாவை கடத்தி வந்து கைமாற்றினான். பாஸ்டனில். நியூ யார்க்கில். ராக்ஸ்பெரியில். ஏதாவது ஓர் இடத்தில் இருந்து சரக்கு அவனுக்கு வந்துகொண்டே இருந்தது. வந்த வேகத்திலேயே தீர்ந்துகொண்டும் இருந்தது. பணம், பணம், பணம்.

தனக்கென்று ஒரு மாய உலகத்தை ஏற்படுத்தி வைத்திருந்தான் மால்கம். யாரிடம் இருந்து என்ன சரக்கு வாங்கவேண்டும்? எது நன்றாக இருக்கும்? எது போலி? எது அசல்? எவ்வளவு வாங்கலாம்? எவ்வளவுக்கு? எல்லாமே தெரிந்துவைத்திருந்தான். மிகவும் ரகசியமாக இயங்கிக்கொண்டிருந்தது அவனது போதை மருந்து வர்த்தகம். வரும் கஞ்சாவில் தனக்கென்று ஒரு பகுதி எடுத்துவைத்துக்கொள்வான். மற்றவை விற்பனைக்கு.

தன்னுடைய தலையைத் தடவிவிட்டுக்கொண்டான் மால்கம். புதுவிதமான சிவப்பு நிறத்தில் காட்சியளித்தது அவன் தலைமுடி. ரெட் என்னும் பெயரை ஈட்டித்தந்த முரட்டுக் கேசம். மால்கமின் சுயமதிப்பீடு மிக உச்சத்தில் இருந்த காலகட்டம் அது. உடல் முழுவதும் படர்ந்து பரவியிருந்த முரட்டுத்தனம். பேச்சில், செயலில், சிந்தனையில் தெறித்த மூர்க்கம். அனைத்தையும் ரசித்தான். அசைக்க முடியாத ஒரு சக்தியாக தான் உருவெடுத்துவிட்டதாக மால்கமுக்குத் தோன்றியது. ரெட்,

ரெட் எங்கே சரக்கு என்று வெள்ளைக்கார வயலின் மாஸ்டர் பின்னால் ஓடிவரும்போது, வெள்ளையர் இனத்தையே தன் பின்னால் ஓடிவர வைத்த திருப்தி கிடைத்தது மால்கமுக்கு.

சோஃபியாவின் வெண்மையான கை விரல்கள் காங்க் கேசத்துக்குள் ஊடுருவும்போது, சொர்க்கத்தைத் தரிசித்தான் மால்கம். பாஸ்டனுக்கு வரும்போதெல்லாம் சோஃபியாவுடன் தன் நேரத்தைச் செலவிட்டான். எல்லாவை ஓரிருமுறை சென்று பார்த்தான். எல்லா புரிந்துகொண்டார். பட்டிக்காட்டானாக மயில் வண்ண சூட் அணிந்து வந்த வெகுளி மால்கம் இல்லை இவன். பாஸ்டனும் நியூ யார்க்கும் ஹார்லெமும் இவனை நிறையவே மாற்றிவிட்டது. மால்கமிடம் கேட்டுப் பார்த்தார் எல்லா. ஏம்பா, லாரா என்று ஒரு பெண் இருந்தாளே? என்ன ஆனாள்? ஒரு முறை வீட்டுக்குக்கூட அழைத்து வந்தாயே? இப்போது யாரோ ஒரு வெள்ளைக்காரியுடன் சுற்றிக்கொண்டிருக்கிறாயாமே. பதில் ஏதும் சொல்லவில்லை மால்கம். சொல்வதற்கு பதிலேதுமில்லை அவனிடம்.

லாராவைப் பற்றி பின்னர் தெரிந்துகொண்டபோது, காலம் கடந்து வருத்தப்பட்டான். மால்கமைத் தேடி பாஸ்டன் முழுவதும் லாரா அலைந்திருக்கிறார். எப்போதும் புத்தகமும் கையுமாக இருந்த லாரா, புட்டியும் கையுமாக மாறியிருக்கிறார். மது மட்டுமல்ல. சிகரெட், கஞ்சா, சூதாட்டம் என்று எதையும் விட்டுவைக்கவில்லை. ஒரே ஒரு பாட்டி. கை கொடுத்த நண்பர்கள் லாராவை தவறான பாதையிலேயே செலுத்தியிருக்கிறார்கள். படிப்பு முற்றிலுமாக நின்றுபோனது. கனவுகள் கலைந்துபோய்விட்டன. உணர்வுகள் மரத்துவிட்டன. எஞ்சியிருந்தது உடல் மட்டுமே. ஆகவே, அதை விற்க

ஆரம்பித்திருந்தார் லாரா.

அச்சச்சோ இப்படி ஆகிவிட்டதே பாவம் என்று உச்சுக்கொட்டிவிட்டு அடுத்து காரியத்தைப் பார்க்கக் கிளம்பினான் மால்கம். அவனுடைய தற்போதைய கவலை யாரிடமும் மாட்டிக்கொள்ளாமல் இந்த மாய உலகத்தை ஆளவேண்டும் என்பது மட்டும்தான். காவல் துறையினர் மத்தியில் ரெட் என்னும் பெயர் அழுத்தமாகப் பதிந்திருந்தது. எப்படியும் பிடித்தே தீர்வது என்று கங்கணம் கட்டிக்கொண்டு அவன் பின்னாலேயே அவர்கள் சுற்றிக்கொண்டிருந்தார்கள்.

எது பருந்து எது புறா என்பதைச் சூட்சுமமாகக் கண்டறியும் திறன் மால்கமிடம் இருந்தது. பார்வையாலேயே எடை போட்டுவிடுவான். எந்த வேஷம் போட்டுக்கொண்டு வந்தாலும் ரகசிய ஏஜெண்டுகளைத் தனியே இனம் கண்டுவிடுவான். பருந்துகளின் கையில் சிக்கக்கூடாது. அதேசமயம், புறாக்களுக்கும் தீனி அளிக்கவேண்டும். மிகவும் சவாலான காரியமாக இருந்தது.

ரெட் அப்படியே நில். பாய்ந்து வந்து அமுக்குவார்கள். சட்டை, பேண்ட், காலணிகள் எதையும் பாக்கி வைக்காமல் தேடுவார்கள். எதுவும் கிடைக்காது. சலிப்புடன் தள்ளிவிடுவார்கள். போ, கண் முன்னால் நிற்காதே. இன்றில்லாவிட்டாலும் என்றாவது உன்னைப் பிடித்துவிடுவோம்.

கஞ்சா பாக்கெட்டுகளை மால்கம் பொதுவாகத் தன் சட்டையின் அக்குள் பகுதியில்தான் மறைத்து வைத்திருப்பான். கைகளை உடலேடு சேர்த்தாற்போல் வைத்துக்கொண்டு நடந்து செல்வான். ஏஜெண்டுகளைப் பார்த்துவிட்டால் மிக இயல்பாகக் கைகளை விரித்துவிடுவான். பாக்கெட்டுகள் கீழே விழுந்துவிடும். தன்

பாட்டுக்கு நடந்துகொண்டே இருப்பான். பிடித்து, தேடிப் பார்ப்பார்கள். ஒன்றும் கிடைக்காது. அவர்கள் போன பிறகு, பாக்கெட்டுகளைத் தவறவிட்ட இடத்துக்குச் செல்வான். எல்லாவற்றையும் சேகரித்துக்கொண்டு மீண்டும் அக்குளில் மறைத்துவைத்துக்கொள்வான்.

எல்லாச் சமயங்களிலும் இது கைகொடுக்காது. பல சமயங்களில் பாக்கெட்டுகள் காணாமல் போனதுண்டு. அல்லது திரும்பி போய் எடுப்பதற்குச் சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும். புதிது புதிதாக உத்திகளைக் கண்டுபிடித்துக்கொண்டே இருந்தால்தான் நஷ்டத்தைக் கட்டுப்படுத்த முடியும். பிய்ந்துபோன ஷூ ஒன்றில் கஞ்சா பாக்கெட்டுகளை மறைத்து குப்பைத் தொட்டிக்குள் வைத்துவிடுவான். பணம் கைக்கு வந்து சேர்ந்ததும் குப்பைத் தொட்டியை கைகாட்டிவிட்டு நழுவிவிடுவான். இதுவும் கூட எல்லோருக்கும் பொதுவானது அல்ல. இசைக் கலைஞர்களைக் குப்பைத் தொட்டிக்குள் துழாவச் சொன்னால் அது சரி வராது. ஆகவே அவர்களுக்கு மட்டும் மறைத்து மறைத்து கொண்டுபோய் கொடுத்துவிடுவான்.

பிறகு, இன்னொரு உபாயத்தைக் கண்டுபிடித்தான். செஞ்சிலுவைச் சங்கம் அளிக்கும் பிளாஸ்திரி டப்பாவுக்குள் கஞ்சாவை மறைத்து வைத்து எடுத்துச்செல்ல ஆரம்பித்தான். ஒருவராலும் கண்டுபிடிக்க முடியவில்லை. வெளியிடங்களுக்குப் பாதுகாப்பாகக் கொண்டு செல்ல ரயில்வே நிர்வாகம் அளித்த அடையாள அட்டை உதவியது. வேலையில் இல்லாவிட்டாலும்கூட, அந்த அடையாள அட்டையைப் பத்திரமாக வைத்திருந்து உபயோகித்துக்கொண்டான் மால்கம்.

ஏஜெண்டுகளை ஒரு கட்டத்துக்கு மேல் ஏமாற்ற முடியாது. ஆதாரத்துடன் கைது செய்ய முயல்வார்கள்.

முடியவில்லையா? குறுக்கு வழியில் மடக்கிவிடுவார்கள். அவர்கள் எப்படியெல்லாம் மடக்குவார்கள் என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தான் மால்கம். கூட்டத்தில் நடந்துபோகும்போது எச்சரிக்கையுடன் இருப்பான். நெரிசலைப் பயன்படுத்திக்கொண்டு, ஏஜெண்டுகள் சாதுரியமாக கஞ்சா பாக்கெட்டுகள் ஒன்றிரண்டை கோட் பாக்கெட்டில் போட்டுவிடக்கூடும். பிறகு அவர்களே மடக்கி கஞ்சாவை கண்டுபிடித்து கைது செய்வார்கள்.

அல்லது, சம்பந்தப்பட்டவரின் வீட்டில் கஞ்சா பொட்டலங்களை ஒளித்துவைத்துவிடுவார்கள். அவர்களே ரெய்ட் வந்து பிடிப்பார்கள். உடனடி கைது. தன் அறைக்குள் நுழைந்ததுமே மால்கம் செய்யும் முதல் காரியம் எதையும் தொடாமல் சிறிது நேரம் அறையை நோட்டம் விடுவது. யாராவது எதையாவது நகர்த்தி வைத்ததுபோல் தெரிகிறதா? குப்பைத் தொட்டியைத் திறந்து பார்ப்பான். காலையில் போட்டுவிட்டுப் போன குப்பைகள் மட்டும் உள்ளனவா அல்லது கூடுதலாக ஏதாவது தட்டுப்படுகிறதா? கட்டில்? அது ஏன் இடது பக்கம் நகர்ந்திருக்கிறது? அடுப்பங்கறையில் பாத்திரங்கள் இடம் மாறி இருக்கின்றனவே. சிறிய தடயம் போதும் அவனுக்கு. சிறிதும் யோசிக்க மாட்டான். உடனே அறையை காலி செய்துவிடுவான்.

இன்று மாலை சரக்கு வந்துவிடும் என்று மால்கம் உறுதி அளித்தால், சரக்கு வந்துவிடும். எப்படி, எவ்வழியில் என்பது அவனுக்கு மாத்திரமே தெரியும். வந்தாயா ரெட், சிங்கக்குட்டி ஓடி வா என்று இசைக்குழுவினர் பலமான வரவேற்புடன் மால்கமை ஏற்றுக்கொள்வார்கள். சில சமயம், அவர்களுடைய பேருந்திலேயே நகரம் விட்டு நகரம் போவான் மால்கம். பாஸ்டனிலும் நியூ யார்க்கிலும் பலர்

மால்கமை இசைக்குழுவைச் சார்ந்தவன் என்று நினைத்து ஏமாந்ததும் உண்டு. ஏஜெண்டுகள் பலரும்கூட அவன் ஆடையையும் நடவடிக்கைகளையும் வைத்து அவனை ஓர் இசைக்கலைஞராகவே நினைத்து வந்தனர். பல சமயங்களில், இளம்பெண்கள் ஓடியோடி வந்து மால்கமை சூழ்ந்துகொண்டார்கள். எனக்கு ஆட்டோகிரா ஃப் ப்ளீஸ்.

இருக்கும் அத்தனை வழிகளையும் முயன்று பார்த்துவிட்டு, இனி எதுவும் பாக்கியில்லை என்பது ஊர்ஜிதமானபிறகு முடிவு செய்தான் மால்கம். போதும். இனி கஞ்சா விற்க வேண்டாம். பல நாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டுவிடக்கூடும். அந்த ஒரு நாள் வரக்கூடாது. வரவே கூடாது. எப்போது பாயலாம் என்று காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாய்ப்பு கொடுக்கக் கூடாது.

வேறு தொழில்? செய்யலாம். ஆனால் என்ன தொழில்? இனி பாலீஷ் போட முடியாது. எச்சில் பாத்திரம் கழுவ முடியாது. வேலை என்று தேடிக்கொண்டு போவதும் சாத்தியமல்ல. எழுத்து, படிப்பு முடிந்துவிட்டது. மட்டுமல்லாமல் கௌரவமான வேலை எதையும் ஒரு கறுப்பனால் இங்கே தேடிக்கொண்டுவிடமுடியாது. கறுப்பர்களின் சாபக்கேடு அது. சட்டத்துக்கு விரோதமான காரியத்தில்தான் நிச்சயம் ஈடுபட்டாக வேண்டும்.

நிறைய யோசித்துவிட்டு இறுதியாக வழிப்பறியை தேர்ந்தெடுத்தான் மால்கம். தேவை ஒரு துப்பாக்கி. நெஞ்சம் முழுவதும் திடம். மிக மிகச் சுலபமாகக் கறந்துவிடலாம். ஹார்லெமில் நிறைய அடியாள்கள் இருப்பதை அவன் அறிவான். அவர்கள் அத்தனை பேரும் வழிப்பறியில் ஈடுபட்டு வருவது அவனுக்குத் தெரியும். எப்படிச் செய்யவேண்டும் என்ன செய்யவேண்டும் என்பதும்

அத்துப்படி.

துப்பாக்கி வாங்கி வைத்துக்கொண்டான். பாயிண்ட் 32 ரக துப்பாக்கி. முதுகுக்குக் கீழே செருகிக்கொண்டான். பகல் சமயங்களில் போகவேண்டாம். ஆறடி உயர, செம்பட்டை நிற தலைமுடி கொண்ட கறுப்பன் ஒருவன்தான் என்னிடம் மிரட்டி பணம் வாங்கிக்கொண்டான் என்று சுலபமாக அடையாளம் சொல்லிவிடுவார்கள். அனைவருக்கும் என்னைத் தெரிந்திருக்கிறது. ஒருத்தர் இல்லாவிட்டாலும் இன்னொருவர் காட்டிக்கொடுத்துவிடுவார். ஆகவே இரவுதான் உசிதம்.

எதிர்பார்த்ததைக் காட்டிலும் அது சுலபமாகத்தான் இருந்தது. வாகான நபரைத் தேர்ந்தெடுத்து பின்தொடர்ந்து செல்லவேண்டியது. ஆள் அரவமற்ற பகுதியில் ஒளிந்திருந்து மடக்குவது. துப்பாக்கியை எடுத்து நெற்றிப்பொட்டில் அழுத்தவேண்டியது. எல்லாவற்றையும் வெளியில் எடு! கொஞ்சம் கரகரப்பு சேர்த்த குரலில் ஓர் உத்தரவு. போதும். வெடவெட என்று ஆட்டம் காண ஆரம்பித்துவிடுவார். இருப்பதை அப்படியே கொடுத்துவிடுவார். சுருட்டிக்கொண்டு கிளம்பிவிடவேண்டியதுதான்.

சிறு திருட்டுகள் போதும் மால்கம். நாம் ஏன் வீடு புகுந்து கொள்ளையடிக்கக் கூடாது? சிரமம் பார்க்காமல் சிறிது காலம் செலவிட்டால் போதும். செட்டில் ஆகிவிடலாம். நல்ல பணக்கார வீடாகப் பார்த்து நுழையலாம். துப்பாக்கியை எடுத்து நீட்டலாம். எக்கச்சக்கமாகச் சிக்கும். காதும் காதும் வைத்ததுபோல், கச்சிதமாக முடிப்போம். என்ன சொல்கிறாய்?

சொன்னவர் சோஃபியா என்பதால் மட்டும் உடனே

ஒப்புக்கொண்டுவிடவில்லை மால்கம். அவனுக்குச் சிறிது ஓய்வு தேவைப்பட்டது. போதும் போதும் என்னும் அளவுக்கு ஓடியாகிவிட்டது. எப்போது யாரிடம் மாட்டுவோம் என்று தெரியாமல் பதைபதைப்புடன் இருந்தது போதும். வண்ண வண்ண புட்டிகளுக்கு மத்தியில் கண்களை மூடி படுத்துக்கிடக்கவேண்டும். கோழி இறகுபோல் மெலிதாக மாறும் வரை போதை ஏற்றிக்கொள்ளவேண்டும். எப்போதும், எப்போதும் சோஃபியா அருகில் வேண்டும்.

பெரிய கனவு. கூடுதல் ரிஸ்க் எடுத்தால் தவறில்லை. சோஃபியாவின் தோழிகளையும் திட்டத்தில் இணைத்துக்கொண்டான் மால்கம். அழகிய வெள்ளைக்காரப் பெண்மணிகளை உடன் வைத்திருப்பது நல்லது. யாரும் சந்தேகப்படமாட்டார்கள். தவிரவும், யார் வீட்டில் செல்வம் அதிகம் குவிந்துள்ளது என்பதை இந்தப் பெண்களால் மட்டும் சரியாகக் கண்டறிந்து வந்து சொல்லமுடியும். ஒரே ஓர் உத்தரவு மட்டுமே அளித்தான் மால்கம். நாம் கொள்ளையடிப்பது வெள்ளையர்களின் வீடுகளாக மட்டும் இருக்கட்டும்.

பாயிண்ட் 45 ரக துப்பாக்கி ஒன்றை வாங்கிக்கொண்டான். சோஃபியாவும் அவர் தோழிகளும் நகரம் முழுவதும் வலம் வந்தார்கள். துப்பறிந்தார்கள். குறிப்பெடுத்துக்கொண்டார்கள். கொள்ளையடித்தார்கள்.

அன்று கொகேய்னை நுகர்ந்து பார்த்துவிட்டுக் கிளம்பினான் மால்கம். சோஃபியாவும் தோழிகளும் தயாராக வந்திருந்தனர். எங்கே செல்லவேண்டும் என்பது பற்றி ஏற்கெனவே முடிவு செய்திருந்தார்கள். குறிப்பிட்ட தெரு. குறிப்பிட்ட வீடு. கதவைத் தட்டினான் மால்கம். யார் யார் என்று குழப்பத்துடன் மிரண்ட அந்த வெள்ளைக்காரரை ஒரு

புன்னகையுடன் நகர்த்திக்கொண்டு சென்று பஞ்சு நாற்காலியில் அமர வைத்தான் மால்கம். துப்பாக்கியை வெளியில் எடுத்தான். என் இனிய தோழிகளே வேலையை முடித்துகொண்டு வாருங்கள். அதுவரை நான் இவருடன் அளவளாவிக் கொண்டிருக்கிறேன். மூட்டை, முடிச்சுடன் அவர்கள் கிளம்பும் வரை வியர்த்துக்கொட்டிக்கொண்டு அமர்ந்திருந்தார் அந்த வீட்டுக்காரர்.

கொள்ளையடித்த பொருளை அழகாகப் பிரித்தெடுத்துக்கொண்டார்கள். நகைகளா? இந்தா விற்று பணமாக மாற்று. வீட்டு உபயோகப் பொருள்களா? இந்தா இவை உனக்கு. கலைப்பொருள்களைக் காசாக்குவதற்கு இன்னொரு தோழி. எல்லாவற்றையும்விட கலைப்பொருள்களில் இருந்துதான் அதிகப் பணம் கிடைக்கும். சிறிய சிலை. ஒரு நகைப்பெட்டி. புரிபடாத ஓவியம். தங்கம், வைரத்தை உள்ளிட்ட ஆபரணக் கற்களைவிடவும் இவற்றுக்கு அதிக விலை கொடுக்க சிலர் தயாராக இருந்தனர். மால்கமால் சிரிப்பை அடக்கவே முடியாது. இத்தனைக் கொட்டிக்கொடுக்க அப்படி என்னத்தைக் கண்டார்கள் இதில்?

கூடுதலாக, அன்று ஒரு கைக்கடிக்காரம் கிடைத்தது. அழகிய வேலைப்பாடுகள். ஆர்ப்பாட்டமான தங்கப்பட்டை. என்ன செய்யலாம்? இவ்வளவு சிறப்பான ஒரு கடிகாரம் இன்னொன்று கிடைக்குமா? கொடு மாற்றிக்கொள்ளலாம் என்று கை நீட்டிய தோழியிடம் புன்னகையுடன் சொன்னான் மால்கம். வேண்டாம், இது என்னிடமே இருக்கட்டும்.

அப்படியே வைத்துக்கொண்டிருக்கலாம். ஆனால், அதைச் சரிசெய்ய வேண்டும் என்றும் தோன்றியது மால்கமுக்கு. ஒரு முள்ளில் பிரச்னை. நின்றுவிட்டது. கண் மூடி திறப்பதற்குள் சரிசெய்துவிடலாம். ஓடாத கடிகாரம்

இருந்தென்ன லாபம்? எடுத்துக்கொண்டு கடைக்குப் போனான் மால்கம். கடிகாரத்தைக் கொடுத்தான். திருப்பித் திருப்பிப் பார்த்தார் கடைக்காரர். கொஞ்சம் பொறுத்தால் வாங்கிக்கொண்டு போய்விடலாம் என்றார். தலையசைத்துவிட்டு திரும்பினான் மால்கம்.

கடைக்காரருக்கு அந்த ஒரு நொடி போதுமானதாக இருந்தது. விசையை அழுத்தினார். என்ன ஏது என்று மால்கம் உணர்வதற்குள் அவன் முன்னால் நின்றுகொண்டிருந்தார் அந்தக் காவல்காரர். கண்கள் இருட்டிக்கொண்டு வந்தது மால்கமுக்கு. நான் வீழ்ந்துவிட்டேனா? அவ்வளவுதானா? ஆட்டம் முடிந்துவிட்டதா? முதுகுக்குப் பின்னால் உள்ள துப்பாக்கியை உருவி எடுக்க எத்தனைக் காலம் பிடிக்கும்? அதுவரை இந்தக் காவலாளி சும்மாவிடுவானா?

வேண்டாம், கையைத் தூக்கிவிடு என்றது மாற்றுக்குரல். இரண்டு கைகளையும் உயரே தூக்கினான் மால்கம்.

‘நண்பரே, என் முதுகுக்குப் பின்னால் ஒரு துப்பாக்கி இருக்கிறது. அதை நீங்கள் எடுத்துக்கொள்ளலாம்.’

முரடன், நிச்சயம் தாக்குவான் என்று அந்தக் காவலர் எதிர்பார்த்திருக்கவேண்டும். வியப்பு அவர் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. ரெட், அத்தனைச் சுலபத்தில் தன்னை ஒப்படைத்துவிட்டானா? ஒரு சிறு எதிர்ப்பும் இல்லாமலா? என்ன ஆனது இவனுக்கு? மார்புக்கு நேராகத் துப்பாக்கியைக் காட்டியபடியே அவன் முதுகுப் பகுதியில் மற்றொரு கையைப் படரவிட்டார் அவர். துப்பாக்கி சிக்கியது. பறிமுதல் செய்துகொண்டார். அதற்குள் எங்கிருந்தோ பாய்ந்து வந்துவிட்டார் இன்னொருவர்.

மால்கமை வண்டியில் ஏற்றி கொண்டுபோனார்கள். நிறைய அடிப்பார்கள் என்று எதிர்பார்த்திருந்தான் மால்கம். ஆனால், சுண்டுவிரல் நகம்கூட படாமல்தான் விசாரணையை மேற்கொண்டார்கள். ஆச்சரியமாக இருந்தது மால்கமுக்கு. அதற்கான காரணத்தை அவனால் விரைவில் புரிந்துகொள்ளமுடிந்தது. சாகசம் எதுவும் செய்யாமல் நல்லவிதமாகச் சரணடைந்தது அவர்களைக் கவர்ந்திருக்கவேண்டும். ஆகவே, மரியாதை கொடுத்திருக்கிறார்கள். துப்பாக்கியை உருவி சுட்டிருக்க முடியாதா என்ன?

நல்லவேளை அப்படிச் செய்யவில்லை. உள்மனத்தில் இருந்து குரல் கொடுக்கத்தான் செய்தான் சாத்தான். குடி என்று கோப்பையை நோக்கி நகர்த்திய அதே சாத்தான். சிகரெட்டையும் கஞ்சாவையும் அறிமுகப்படுத்திய அதே சாத்தான். அப்போதெல்லாம் கேட்டேன். ஆனால் இன்று கேட்கவில்லை. ஒரு வேளை துப்பாக்கியை உருவியிருந்தால், பின்னால் இருந்து கண்காணித்துக்கொண்டிருந்த மற்றொரு காவலர் என்னைச் சுலபமாகச் சுட்டு வீழ்த்தியிருக்கமுடியும். போலீஸ்காரனைத் தாக்க வந்த ஒரு கறுப்பனைச் சுட்டுக்கொல்வதில் அவர்களுக்கு என்ன தயக்கம் வந்திருக்கும்?

விசாரணையில் எதையும் மறைக்கவில்லை மால்கம். ஆம், செய்தது நான்தான். மால்கமின் அறை அன்றே தேடப்பட்டது. ஒன்றுவிடாமல் அத்தனை பொருள்களும் கைப்பற்றப்பட்டன. சோ ஃபியாவும் தோழிகளும் கூண்டோடு கைது செய்யப்பட்டனர். கூடவே, ஷார்ட்டியும். அதிகாரிகள் மால்கமை மீண்டும் மீண்டும் கேட்டார்கள். ஆச்சரியத்துடனும். அதிர்ச்சியுடனும். வெள்ளைக்காரப்

பெண்களுடன் கூட்டுச் சேர்ந்தா இந்தக் கொள்ளையை நடத்தினாய்? சொல்? இவர்களுள் யார் யாரை நீ காதலிக்கிறாய்? எத்தனை காலமாக? எப்படி ஏற்பட்டது உங்கள் தொடர்பு? இன்னும் யார் யார்?

அதாவது, நீ கொள்ளையடித்தாயா இல்லையா என்பதல்ல இங்கே கேள்வி. எம்குலப் பெண்களுடன், அதுவும் அழகியப் பெண்களுடன் ஏன் கூட்டு வைத்துக்கொண்டாய் என்பதுதான் விஷயம். அதைவிட முக்கியம், அவர்களுள் யாரையாவது காதலித்தாயா என்பது. கறுப்பர்கள் தவறிழைக்கவே பிறந்தவர்கள். வெள்ளையர்கள் சுத்தமானவர்கள். அதிகாரிகள் அடைந்த அதிர்ச்சிக்கு இந்த நம்பிக்கைதான் அடிப்படை.

தண்டனை குறித்த விவரங்கள் அறிவிக்கப்பட்டபோது, மால்கமால் இதை அழுத்தமாக உணர முடிந்தது. சோஃபியாவுக்கும் மற்றவர்களுக்கும் ஒன்று முதல் ஐந்து ஆண்டுகள். மால்கமுக்கு மட்டும் பத்து ஆண்டுகள். அது 1946-ம் ஆண்டு. பிப்ரவரி மாதம். மால்கமுக்கு அப்போது 21 வயதுகூடப் பூர்த்தியாகவில்லை.

மனித மூளை சிறை வாழ்க்கையை நினைவில் வைத்துக்கொள்வதில்லை. கைதிகள் உடை. குழி விழுந்த அலுமினிய தட்டு. மிரட்டும், உருட்டும் காவலர்கள். மூட்டைப்பூச்சிக் கடிகள். அவ்வப்போது சுழலும் லத்திகள். உறக்கம் வராமல் புரண்ட இரவுகள். இம்சிக்கும் வீட்டு நினைவுகள். ஒரு நாளைப் போலவே மற்றொரு நாளும் அமைந்துவிடுவதால், எதுவொன்றும் தனியாக நினைவில் தங்குவதில்லை. சிறை சென்று மீண்டவர்களை இறுதி வரை துரத்தும் ஒரே சங்கதி, சிறைக் கம்பிகள். எத்தனை முயன்றாலும் கம்பிகளை மட்டும் ஞாபகத்தில் இருந்து

அழித்துவிடமுடிவதில்லை.

சார்லஸ் டவுன் சிறைச்சாலை. கம்பிகளைப் பிடித்தபடி நின்றுகொண்டிருந்தான் மால்கம். வாளி ஒன்றை கொண்டு வந்து கொடுத்தார்கள். அதில்தான் மலம் கழிக்கவேண்டும். மறுநாள் காலை வந்து எடுத்துச்செல்வார்கள். நாற்றம் குடலைப் புரட்டும். பெயருக்கு ஒரு கட்டில். படுத்தபடி இரண்டு கைகளையும் அகலமாக நீட்டினால் இரு பக்கச் சுவர்களையும் தொட்டுவிட முடியும். வெளியேற்றும் மூச்சுக் காற்றையே மீண்டும் சுவாசித்தாக வேண்டும். மருத்துவர் ஒருவர் வந்து பார்த்தார். என்னப்பா உடம்பு சரியாக இருக்கிறதா? அவர் போன பிறகு மத போதகர் ஒருவர் எட்டிப் பார்த்தார். தம்பி, செய்த பாவங்களுக்குப் பிரயாசித்தம் தேடிக்கொள். கர்த்தர் உன்னை வழிநடத்துவார். பிரார்த்தனை செய். பைபிள் படி. கையைக் கட்டியபடி அமைதியாகத்தான் பேசிக்கொண்டிருந்தார் அவர். எழுந்து நின்று அசிங்க அசிங்கமாகத் திட்ட ஆரம்பித்துவிட்டான் மால்கம்.

ஒட்டுமொத்த சிறைச்சாலையும் திரும்பி பார்த்தது. இவன் என்ன பைத்தியக்காரனா? கிறிஸ்தவப் பாதிரியை யாராவது திட்டுவார்களா? அதுவும் கெட்ட வார்த்தைகளில்? அப்பப்பா, எத்தனை அநாகரிகமான சேரிப் பையனாக இருக்கிறான்! ஊர், உலகில் உள்ள அத்தனைக் கெட்ட வார்த்தைகளும் அசிங்கங்களும் இவனுக்குத் தெரிந்திருக்கிறது. நாள்கள் செல்லச்செல்ல மால்கமைப் பற்றி மென்மேலும் அவர்கள் தெரிந்துகொண்டார்கள். கடவுளைப் பற்றி யார் பேசினாலும், கர்த்தர் வழிகாட்டுவார் என்று யார் சொன்னாலும் அவர்களை அசிங்கமாகத் திட்டினான் மால்கம். கர்த்தர் என்று ஒருவர் இல்லவே இல்லை என்று கத்தினான். கடவுளைப் பழித்தான். கடவுள் மீது பழி சுமத்தினான்.

சைத்தான் என்று மால்கமை அவர்கள் அழைக்க ஆரம்பித்தனர்.

சிறிது காலம் தனிமைச் சிறையில் வைத்திருந்து பார்த்தார்கள். பட்டினி போட்டார்கள். மால்கம் தன்னை சிறிதும் மாற்றிக்கொள்ளவில்லை. என்ன கொடுத்துவிட்டார் கடவுள்? உள்ளே வந்த நாள் முதலாக மது புட்டியைப் பார்க்கவில்லை. கஞ்சா ஒரு துளிக்கூட புகைக்கவில்லை. நாக்கும், மூக்கும், இதயமும் செத்துப்போய்விட்டது. ஒரே ஆறுதல் சிகரெட். குறைவில்லாமல் கட்டுக்கட்டாகக் கிடைத்தது. காரணம், எல்லா. சிறைக்கு வரும்போதெல்லாம் மால்கமின் கையைப் பிடித்து பணத்தைத் திணித்துவிட்டுச் செல்வார். சிறைக் காவலர்களிடம் அந்தப் பணத்தைக் கொடுத்து சிகரெட் பெட்டிகள் வாங்கி அடுக்கிக்கொண்டான் மால்கம்.

இரண்டு ஆண்டுகள் கழித்து 1948-ல் கான்கார்ட் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டான் மால்கம். ஓரளவுக்குச் சீராக இயங்கும் சிறை இது. நல்ல கழிப்பறை. நல்ல நூலகம். நூலகத்தைப் பார்த்ததும் படிக்கும் ஆசை மீண்டும் அரும்பியது. தபால் முறையில் படிப்பைத் தொடரலாம் என்பதைத் தெரிந்துகொண்டான். ஆங்கிலம் படிக்க ஆரம்பித்தான். கூடவே, லத்தீனும். ஒரு விஷயம் புரிந்தது. ஒரு மனிதனின் நடத்தையைத் தீர்மானிப்பது அவன் சூழல்தான். அசிங்கமான சூழலில் அசிங்கமாகத்தான் நடந்துகொள்ளமுடியும்.

வில்ஃப்ரெட் கடிதம் எழுதியிருந்தான். பக்திப் பரவசத்துடன் எழுதப்பட்ட கடிதம். மால்கம், புத்துணர்ச்சியூட்டும் புது விஷயம் ஒன்றைக் கண்டுபிடித்துவிட்டேன். நம்முடைய அத்தனை பிரச்னைகளும் சுமுகமாகத் தீரப்போகின்றன. நமக்கு மட்டுமல்ல. நம் இன மக்கள் அனைவருக்கும் கூடிய

விரைவில் விடுதலை கிடைக்கப்போகிறது. ஆம், நான் கண்டறிந்திருப்பது ஒரு புதிய மதம். நம்மை உருமாற்றப்போகும் மதம். கறுப்பர்களின் மதம். கறுப்பர்களுக்கான மதம். அதன் பெயர் நேஷன் ஆ◌ஃப் இஸ்லாம். இது பற்றி மேலும் விரிவாக... வாயைத் திறந்து கொட்டாவி விட்டான் மால்கம். அதற்கு மேல் படிக்கப் பிடிக்கவில்லை. வாய்க்கு வந்ததைத் திட்டி பதில் அனுப்பினான். இதுபோல் இன்னொரு அபத்தக் கடிதம் அனுப்பினால் கிழித்துவிடுவேன் ஜாக்கிரதை. கடிதத்தை அல்ல. உன்னை.

மீண்டும் ஒரு கடிதம். இந்த முறை ரெஜினால்டிடம் இருந்து. சிறிய கடிதம்தான். மால்கம், இனி பன்றிக்கறி சாப்பிடாதே. சிகரெட் குடிக்காதே. நீ தப்பிச் செல்வதற்கான வழியை நான் உனக்குக் காட்டுகிறேன்.

மீண்டும் மீண்டும் அந்தக் கடிதத்தைப் படித்துப் பார்த்தான் மால்கம். புரியவில்லை. பன்றிக்கறிக்கும் சிகரெட்டுக்கும் தப்பிச் செல்வதற்கும் என்ன தொடர்பு? யோசித்துப் பார்த்தபோது, ஒரு புதிய கோணம் கிடைத்தது. சிறைக் கைதிகள் அனைவரும் கட்டாய ராணுவப் பணியில் ஈடுபடவேண்டும் என்று அப்போது உத்தரவாகியிருந்தது. ஒரு நோஞ்சானாக இருந்தால் மட்டுமே இதிலிருந்து தப்பிக்க முடியும். பன்றி இறைச்சி சாப்பிடாவிட்டால் நிச்சயம் உடல் இளைத்துவிடும். ராணுவப் பணி இருக்காது. உடல் நலத்தைக் காரணம் காட்டி விடுதலை சுலபமாகக் கிடைத்துவிடக்கூடும். ரெஜினால்ட் சொல்ல விரும்புவது இதைத்தானா?

நிச்சயமாகத் தெரியவில்லை. ஆனாலும் முயன்று பார்க்கலாம் என்று தோன்றியது. காசா பணமா? ஆசையை அடக்கிக்கொள்ளவேண்டியதுதான். அதுவும் சிறிது

காலத்துக்கு மட்டுமே. ரெஜினால்ட் நல்லவன். சொல்வதைச் செய்யக்கூடியவன். நிச்சயம் ஏதாவது யோசித்து வைத்திருப்பான். அவன் சொல்வதை அலட்சியப்படுத்தாமல் கேட்டுக்கொள்வதுதான், புத்திசாலித்தனம். விடுதலை கிடைக்கும் என்று திட்டவட்டமாகத் தெரிந்துவிட்டால் எதையும் செய்யலாம்.

மனத்துக்குள் உறுதியாகத் தீர்மானம் எடுத்துக்கொண்டுவிட்டான் மால்கம். ஆனால் நடைமுறையில் கடைப்பிடிப்பதற்கு மிகவும் சிரமப்படவேண்டியிருந்தது. கிடைக்கும் ஒரே திட உணவு பன்றி மாமிசம் மட்டுமே. அதை வேண்டாம் என்று மறுக்க முடியுமா? எனில் எதைத் தின்பது? போதைப் பொருள்கள், மது இரண்டும் இல்லை. இருக்கும் ஒரே ஆறுதல் சிகரெட். அதையும்கூட அல்லவா துறக்கச் சொல்கிறான் இந்தப் பாவி.

தட்டை ஏந்தி வரிசையில் வரும்போதுகூட இரட்டை மனநிலையில்தான் இருந்தான் மால்கம். ஆனால் அவன் முறை வரும்போது சட்டென்று சுதாரித்துவிட்டான். வேண்டாம் என்று சொல்வதற்குள் தட்டில் வந்து விழுந்துவிட்ட அந்த மாமிசத் துண்டுகளை அப்படியே எடுத்து பின்னால் வருபவருக்கு அளித்தான். அன்று முழுவதும் சிறைச்சாலையில் இதைப் பற்றித்தான் பேசிக்கொண்டார்கள். சைத்தான் பன்றிக்கறியை சாப்பிடுவதில்லையாமே. ஆமாம், ஆமாம் புகைப்பதைக்கூட அது விட்டுவிட்டது. என்ன ஆகிவிட்டதோ தெரியவில்லை.

நூலகங்களில் இருந்து நூல்களைப் பெற்று படிக்க ஆரம்பித்திருந்தான் மால்கம். முதலில் அவன் தேர்ந்தெடுத்தது வரலாறை. கறுப்பர்களின் வரலாறை.

சாப்பிட்டு முடித்ததும் ஓடியோடி வந்து வாசிப்பான். சிறையில் மங்கலான வெளிச்சம் மட்டுமே கிடைத்தது. ஆனால் என்ன? இரவு முழுவதும் கண்விழித்துப் படித்துக்கொண்டே இருந்தான் மால்கம். வாசிக்க வாசிக்க வேதனை அதிகரித்துக்கொண்டே போனது. மனித இனம் இதுவரை சந்தித்திராத கொடுமையான அடக்குமுறை அல்லவா இது. உலகம் முழுவதும் கறுப்பர்கள் பரவியிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கென்று தனியாக ஒரு சுதந்தர தேசம் இல்லை. உபயோகத்திற்கான ஒரு பண்டமாகத்தான் கறுப்பனை வெள்ளையர்கள் இதுகாறும் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். உபயோகம் முடிந்ததா? இனி அவனால் பிரயோஜனம் இல்லையா? தூக்கி எறி.

கறுப்பர்களால் ஏன் வெள்ளையர்களை எதிர்க்க முடியவில்லை? ஏன் அவர்களால் ஒரு குடையின் கீழ் ஒன்றிணைய முடியவில்லை? ஏன் இப்படித் தனித்தனியே சிதறிக்கிடக்கிறார்கள்? ஏன் உதிரி உதிரியாகக் கலைந்து கிடக்கிறார்கள்? யாருக்கோ ஏதோ நடக்கிறது என்பதுபோல், ஏன் எல்லோரும் அவரவர் வேலையை மட்டும் கவனித்துக்கொண்டு திருப்திபட்டுக்கொள்கிறார்கள்?

ஆ, அதிர்ச்சியில் வாய் பிளந்தான் மால்கம். நான் மட்டும் எப்படி இருந்தேன்? நேற்று வரை? ஏன் நேற்று, இந்தப் புத்தகங்களைப் பிரித்து வைத்துக்கொண்டு படிப்பதற்கு முன்னால் நானும் பிரக்ஞை இல்லாமல்தானே அலைந்துகொண்டிருந்தேன். மது புட்டிகளில்தானே தஞ்சம் அடைந்தேன். கஞ்சாவில்தானே என்னை புதைத்துக்கொண்டேன். கட்டுக்கட்டாக சிகரெட்டுகளை ஊதித்தள்ளி உல்லாசமாகப் பொழுதைக் கழித்துக்கொண்டிருந்தேனே. பெண். எத்தனை பெரிய போதை அவள். அவளைவிட ஏது மற்றொரு சொர்க்கம்?

இப்படி நினைத்ததால்தானே மிருகம்போல் அலைந்துகொண்டிருந்தேன். வெள்ளையினப் பெண், கறுப்பினப் பெண் என்று தேடித்தேடிக் காதலித்துக் களைத்துக்கொண்டிருந்தேன். உலகில் உள்ள அத்தனை இழிவான செயல்களையும் அல்லவா செய்துகொண்டிருந்தேன்.

ரெஜினால்டுக்குக் கடிதம் எழுதினான் மால்கம். அன்பு சகோதரா, நீ சொல்வதைப்போல் நடந்துகொண்டிருக்கிறேன். பன்றி மாமிசத்தின் பக்கம்கூட போவதில்லை நான். சிகரெட் பெட்டிகளைத் தூக்கி எறிந்துவிட்டேன். புத்தகங்களில் மட்டுமே என்னை மூழ்கடித்துக்கொண்டிருக்கிறேன். சொல், இப்போதாவது சொல். தப்பிக்கும் வழி என்ன? மண்டையே வெடித்துவிடும்போல் இருக்கிறது. சொல்.

ரெஜினால்ட் பதில் எழுதினார். அல்லா!

# 6. வெளிச்சம் வேண்டும்!

அந்த ஒற்றை வார்த்தையில் மயங்கிக் கிடந்தான் மால்கம். அல்லா. வில்ஃப்ரெட் சொன்னதும் இவரைத்தான். பேரருளாளன் என்று அவன் வருணித்தது இவனைத்தான். அல்லா. இஸ்லாமியர்கள் தொழும் தெய்வம் அல்லவா இவர்? நானும்கூட இவரைத்தான் தொழவேண்டுமா? ஆனால் ஏன்? அதைவிட முக்கியம், எப்படி?

அல்லாவை நோக்கி நீ ஓரடி எடுத்து வைத்தால் அவர் உன்னை நோக்கி இரண்டடி எடுத்து வைப்பார். இந்த ஒற்றை வரியை மீண்டும் மீண்டும் வாசித்துக்கொண்டிருந்தான் மால்கம். அல்லாவை நோக்கி நான் எப்படி முதல் அடியை எடுத்து வைப்பது? அவர் என்னை நோக்கி எப்படி வருவார்? அவருக்கும் எனக்குமான தொடர்பு என்ன?

எழுந்து ஓடினான் மால்கம். வெறி கொண்டு நூலகத்தைச் சல்லடையாகத் தேடினான். இஸ்லாமிய மார்க்கம் பற்றிய அத்தனை புத்தகங்களையும் நெஞ்சோடு சேர்த்து வாரிக்கொண்டு வந்தான். கபகபவென்று கண்கள் எரியும்வரை வாசித்தான். இஸ்லாம் என்னும் புதிய உலகம் அவனை இழுத்துக்கொண்டது. நடு இரவில் திடீர் திடீரென்று உடல் நடுங்கும். சட்டென்று எழுந்து அமர்ந்துவிடுவான். அதற்குப் பிறகு தூங்க முடியாது.

கடிதங்கள் வந்துகொண்டே இருந்தன. மால்கம், எலிஜா முகமதுவைப் பற்றி நீ அவசியம் தெரிந்துகொள்ள வேண்டும். நம் இனத்தைக் காக்க வந்த ரட்சகர் அவர். நம் சமூகத்தை மீட்டெடுக்க வந்த மீட்பர் அவர். நம் குடும்பத்தில் உள்ள அனைவரும் அவரிடம் சரணடைந்துவிட்டோம். முழு முற்றாக எங்களை அவர் பாதத்தில்

ஒப்படைத்துவிட்டோம். நீயும்கூட அவரிடம் உன்னை ஒப்புக்கொடுத்துவிடு.

நேரில் வந்து சந்தித்தார் ரெஜினால்ட். மால்கமின் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு மணிக்கணக்கில் பேசினார். கறுப்பர்களின் கடவுள் எலிஜா. அவரை நம்பு. அவரை மட்டும். தீய பழக்க வழக்கங்களைத் தவிர். வெள்ளையர்கள் பிசாசுகள் என்பதைப் புரிந்துகொள். ஆம், நம்மை உறிஞ்ச வந்த பிசாசுகள் அவர்கள். சரித்திரம் முழுக்க இந்த உண்மை பதிவாகியிருப்பதை நீ உணர்ந்துகொள்ளலாம். கறுப்பர்கள் சிந்திய, சிந்திக்கொண்டிருக்கும் ரத்தத் துளி ஒவ்வொன்றும் இந்த உண்மையை உனக்கு ஓங்கி உரைக்கும்.

எலிஜா நம்மை மீட்டெடுப்பார். பிசாசுகளை விரட்ட வந்த கடவுள் அவர். நம் காலத்து அல்லா அவரே. ஆமாம் மால்கம். என்னை நம்பு. நான் அவரைப் பார்த்திருக்கிறேன். கனிவு கொஞ்சும் அவர் முகத்தை நான் தரிசித்திருக்கிறேன். ஒளியை பார்த்திருக்கிறாயா நீ? ஆதவனைவிடவும் பிரகாசமான ஒளியை? எலிஜா முகமது அப்படித்தான் இருப்பார். நாம் தூசுகள் மட்டுமே. ஆனால் அவரிடம் இணைந்துவிட்டால் நாமும்கூட பிரகாசிக்கலாம்.

ரெஜினால்டும் வில்ஃப்ரெட்டும் மால்கமை மாறி மாறி வந்து சந்தித்துக்கொண்டே இருந்தனர். நீண்ட நேரம் பேசினார்கள். எலிஜா முகமது டெட்ராய்ட் வந்தால் என் வீட்டில்தான் தங்குவார் தெரியுமா என்று பெருமை பொங்கக் கூறினார் வில்ஃப்ரெட். ஆச்சரியமாக இருந்தது மால்கமுக்கு. கறுப்பர்களின் கடவுள் இவர் வீட்டில் தங்கியிருந்தாரா?

உடல் நடுங்கியது மால்கமுக்கு. எலிஜா முகமது என்னும் பெயர் அவனைத் தொடர்ந்து தாக்கிக்கொண்டே இருந்தது. எங்கு திரும்பினாலும் அவர் பிம்பம் தெரிவதுபோல்

உணர்ந்தான் மால்கம். வெளிச்ச பிம்பம். கண்களைக் கூசச்செய்யும் வெளிச்சம் அல்ல. கண்கள் மயங்கி சொக்கிப்போகும் வெளிச்சம். உடல் முழுவதும் பரவி நிற்கும் பெரும் வெளிச்சம்.

எலிஜா முகமதுவுக்குக் கடிதம் ஒன்று எழுதிப் பார்க்கலாமா? என்னவென்று எழுதுவது? எதை எழுதுவது? என்னைப் பற்றி எழுதுவதற்கு என்ன இருக்கிறது? ஆனாலும் எழுதினான் மால்கம். அவர் பதில் அனுப்புவார் என்று எதிர்பார்க்க முடியாது. ஆனால் கடவுளுக்குக் கடிதம் ஒன்று எழுதினேன் என்னும் திருப்தி போதாதா? இந்தத் திருப்தியை மட்டுமே கொண்டு ஒரு வாழ்க்கைக் காலத்தை ஓட்டிவிட முடியாதா?

தப்பும் தவறுமாக எழுத ஆரம்பித்தான் மால்கம். தன் குடும்பத்தைப் பற்றி. தன் சகோதரர்கள் பற்றி. அவர்கள் அனைவரும் இஸ்லாத்தில் தங்களை ஒப்படைத்துக்கொண்டதைப் பற்றி. தன்னைப் பற்றி சொல்லும்போது, ஆத்மசுத்தியுடன் எழுதினான் மால்கம். தான் செய்த தவறுகளை தயங்காமல் ஒப்புக்கொண்டான். தான் இருப்பது சிறைச்சாலையில் என்பதை அழுத்தம் திருத்தமாகப் பதிவு செய்தான்.

எலிஜா முகமது, நான் என்னை உங்களிடம் ஒப்புக்கொடுக்க விரும்புகிறேன். நான் ஒரு தூசு. பழுதடைந்த, பாழாய்ப்போன தூசு. ஆனால் நான் என்னை உணர்ந்துவிட்டேன். இனியும் என்னால் புழுதியில் கலந்து திளைத்திருக்க முடியாது. என்னை தயவுசெய்து ஏற்றுக்கொள்ளுங்கள். என்னை ரட்சியுங்கள். உங்கள் வெளிச்சக்கடலில் நானும் மிதக்க விரும்புகிறேன். என்னைப் பரிசுத்தப்படுத்துங்கள்.

எலிஜா பிறந்தது ஜார்ஜியாவில். (அக்டோபர் 7, 1897). தன்

பதினாறாவது வயதில் வீட்டைவிட்டு வெளியேறிவிட்டார் எலிஜா. அமெரிக்கா முழுவதும் சுற்ற ஆரம்பித்தார். ஏன் எதற்கு என்றல்லாம் தெரியாது. எங்கே போகவேண்டும் என்ன செய்யவேண்டும் என்று தெரியாது. இருபதாவது வயதில் கிளாரா என்பவரைத் திருமணம் செய்துகொண்டார். (மதர் கிளாரா என்று பின்னாளில் இவர் அழைக்கப்பட்டார்). உலகம் சுற்றியது போதும் என்று 1923-ல் இவர் முடிவு செய்தபோது, மிச்சிகனில் இருந்தார். வாகனங்கள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றில் வேலைக்குச் சேர்ந்துகொண்டார்.

எலிஜாவுக்கு இருபது வயது ஆனபோது, முகத்தில் பளாரென்று அறைந்ததுபோல் ஒரு சம்பவம். ஒரு பெரிய கூட்டம். உள்ளே மூன்று கறுப்பர்கள் மாட்டிக்கொண்டிருந்தார்கள். என்ன பிரச்னை ஏது என்று சரியாகத் தெரியவில்லை. ஆனால் இப்படியா போட்டு அடிப்பார்கள்? இப்படியா சுற்றி நின்று வேடிக்கை பார்ப்பார்கள்? எல்லாம் முடிந்து கூட்டம் கலைந்தபோது, அந்த மூன்று கறுப்பர்களும் நாய்களைப்போல் நட்ட நடு சாலையில் பிணமாகக் கிடந்தனர்.

எலிஜாவை உலுக்கி எடுத்துவிட்டது இந்தப் படுகொலை. உல்லாசத்தை அழித்தொழித்துவிட்டு அக்கறையுடன் சமூகத்தைப் பார்க்க ஆரம்பித்தார். என் இன மக்கள் இத்தனைக் கீழ்த்தரமாகவா நடத்தப்படுகிறார்கள்? இத்தனை அயோக்கியர்களா வெள்ளையர்கள்? கறுப்பர்களை அடித்துக்கொல்லலாம் என்று யார் சொல்லிக் கொடுத்தார்கள் அவர்களுக்கு? எலிஜாவின் மண்டைக்குள் கிடந்து நிரந்தரமாக நெளிந்துகொண்டு இருந்தன இந்தக் கேள்விகள்.

இஸ்லாம் அவருக்கு அறிமுகமானது அப்போதுதான்.

அறிமுகம் செய்து வைத்தவர் W.D. வார்ட். Temple of Islam என்னும் அமைப்பை டெட்ராய்டில் தொடங்கியிருந்தார் இந்த வார்ட். பரிபூரண மதவாதி. பரிபூரண விஷய ஞானி. இஸ்லாத்தின் கொள்கைகளை மட்டும் கற்றறிந்திருக்கவில்லை அவர். பண்டைய எகிப்திய நம்பிக்கைகள், நியூமராலஜி, சூ◌ஃபிஸம், கிழக்கத்திய தத்துவ ஞானம். கூடவே, கறுப்பர்களின் ரத்தச் சரித்திரம். தாம் படித்த அனைத்தையும் ஒன்று சேர்த்து உருட்டித் திரட்டி ஒரு கோட்பாட்டை உருவாக்கினார்.

கறுப்பர்களுக்கு விடிவுகாலம் என்று ஒன்று இருந்தால் அது இஸ்லாத்தின் மூலமாகத்தான் கிடைக்கவேண்டும் என்று நம்பினார் வார்ட். இந்த நம்பிக்கையை எலிஜாவுக்கும் அவர் ஊட்டினார். வார்ட் போதித்த புதிய இஸ்லாமியக் கோட்பாடுகளை மிகுந்த ஆர்வத்துடன் உள்வாங்கிக்கொண்டார் எலிஜா. வார்டுக்கும் எலிஜாவை மிகவும் பிடித்துப்போனது. எலிஜா பூலேவாக இருந்தவரை எலிஜா முகமதுவாக மாற்றியவர் அவரே.

வெறும் பெயர் மாற்றம் அல்ல அது. சிந்தனையில், செயலில், பழக்கவழக்கங்களில் முற்றிலுமாக ஏற்பட்ட பெரும் மாற்றம். மே 1931ல் டெட்ராய்டில் இருந்து பார்ட் வெளியேற்றப்பட்டார். வெளியேற்றியவர்கள் வெள்ளையர்கள். எங்களுடன் இருந்துகொண்டு எங்களையே ஏசுகிறாயா? கறுப்பர்களுக்கு வெறியேற்றி எங்களுக்கு எதிராகத் திருப்பி விடுகிறாயா? போதும் உன் மதச் சேவை. போ வெளியே. வெள்ளை மண்ணில் இனி இஸ்லாம் தழைக்கக் கூடாது.

இஸ்லாம் தழைத்தது. பார்ட்டைவிட பன்மடங்கு வீரியத்துடன் இயக்கத்தை முன் நகர்த்திச் சென்றார் எலிஜா முகமது. அந்த இயக்கத்தின் பெயர் நேஷன் ஆ◌ஃப் இஸ்லாம்.

அல்லா மட்டுமே கடவுள். இஸ்லாத்தின் கோட்பாடு இது. நேஷன் ஆ்ஃப் இஸ்லாமின் கோட்பாடு இதிலிருந்து முற்றிலுமாக மாறுபடுகிறது. காரணம் இயக்கத்தைத் தொடங்கி வைத்த பார்ட்; அவருக்குப் பிறகு பொறுப்பேற்றுக்கொண்ட எலிஜா முகமது இருவரையும் கடவுளாக உருமாற்றுகிறது நேஷன் ஆ்ஃப் இஸ்லாம். அல்லா கடவுள். உண்மை. பார்டும்கூட கடவுள். எலிஜா முகமதுவும் கடவுள்தான். மனிதர்களை கடவுளாக்குவதை இஸ்லாம் ஏற்றுக்கொள்வதில்லை. மட்டுமல்லாமல், கடவுளுக்கு மனித உருவத்தையும் மனிதப் பண்புகளையும் கொடுப்பதை இஸ்லாம் நிராகரிக்கிறது.

மனித இனத்தை மூன்று பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறது நேஷன் ஆ்ஃப் இஸ்லாம். முதல் பிரிவில் 85 சதவிகிதம் பேர் இருக்கிறார்கள். இவர்கள் முதிர்ச்சியற்றவர்கள். இவர்களுக்குச் சுய சிந்தனை கிடையாது. யோசிக்க மாட்டார்கள். யார் எது சொன்னாலும் தலையசைப்பார்கள். இந்த 85 சதவிகித மக்களையும் ஆட்டிப்படைப்பவர்கள் 10 சதவிகிதம் பேர். இவர்கள் ஆதிக்கம் செலுத்துபவர்கள். தங்களுக்கு அனுகூலமான கருத்துகளை மற்றவர்கள் மீது வலுக்கட்டாயமாகத் திணிப்பவர்கள். மூன்றாவது பிரிவினரான 5 சதவிகிதம் பேர் நேர்மையானவர்கள். உண்மையை உணர்ந்தவர்கள். 10 சதவிகித ஆதிக்க மனப்பான்மையினரிடம் இருந்து 85 சதவிகித தலையாட்டி மக்களை மீட்டெடுப்பதுதான் இவர்களது லட்சியம்.

அதாவது, பெரும்பான்மை மக்களைக் கிறிஸ்தவர்களாக மாற்றுவதற்குப் பிரயத்தனம் செய்துகொண்டிருக்கிறது பத்து சதவிகித வெள்ளை கும்பல். அவர்களிடம் இருந்து மக்களைக் காப்பாற்றுவது நேஷன் ஆ்ஃப் இஸ்லாத்தின்

பணி. புனிதப் பணி. ஆகவே, துடிப்பான இளைஞர்களே அணிசேருங்கள். பத்து சதவிகிதத்துக்கு எதிராகப் போர் தொடுப்போம். 85 சதவிகித மக்களை நம் அணியில் கொண்டு வருவோம். அஸ்ஸலாம் அலைக்கும்.

நேஷன் ஆ்ஃப் இஸ்லாம் முன்வைக்கும் நம்பிக்கைகள் விசித்திரமானவை. நிலவும் பூமியும் இன்று வெவ்வேறாக இருக்கின்றன. ஒரு காலத்தில் இந்தப் பிரிவினைகள் எல்லாம் இல்லை. இரண்டும் ஒன்றாகவே இருந்தன. ஆதாம் தோன்றுவதற்கு முன்பாகவே பூமி இருந்தது. கிறிஸ்துதான் எல்லாவற்றையும் படைத்தார் என்பதை ஏற்பதற்கில்லை.

கறுப்பர்களின் விசேஷத் தன்மையை அழுத்தமாகச் சுட்டிக்காட்டுகிறது இந்த அமைப்பு. ஆதி மனிதர்கள் கறுப்பர்களே. வெள்ளையர்கள் உள்ளிட்ட அனைவரும் கறுப்பர்களிடம் இருந்தே உற்பத்தியானார்கள். வெள்ளையர்கள் மட்டுமல்ல, சிவப்பு நிறம் கொண்டவர்கள், மஞ்சள் வண்ண மனிதர்கள் என்று அனைவருமே. குர் ஆன் சொல்வது என்ன? கறுப்பு மண்ணைப் பிசைந்து ஆதாமை உருவாக்கினார் இறைவன். கறுப்பாகப் பிறந்ததற்காக ஒருவரும் வெட்கம் கொள்ளக் கூடாது. உங்கள் உரிமைகளை விட்டுக்கொடுக்கக் கூடாது. நீங்கள் விசேஷமானவர்கள். இறைவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள். உங்கள் இறைவன் அல்லா.

ஒன்று, நல்லவனாக மாறியிருக்கவேண்டும். அல்லது இவனுக்குப் பைத்தியம் பிடித்திருக்கவேண்டும். கடவுளை ஏசிக்கொண்டிருந்த அதே சைத்தான். கடவுள் இல்லை, இல்லவே இல்லை என்று ஆக்ரோஷத்துடன் குரலை உயர்த்தி கர்ஜித்த அதே சைத்தான். வாயைத் திறந்தால்

வசவு வார்த்தைகளை அள்ளித்தெளித்துக்கொண்டிருந்த அதே சைத்தான். இன்று? சப்தநாடியும் ஒடுங்கிக்கிடக்கிறது. யாருடனும் பேசுவது கிடையாது. மாமிசத்தையும் சிகரெட்டையும் மட்டுமல்ல வாகாகக் கிடைத்த அத்தனை சொகுசுகளையும் உதைத்து தள்ள ஆரம்பித்துவிட்டது இந்தச் சைத்தான். நிறைய வாசிக்கிறது. நிறைய யோசிக்கிறது. கண்களை மூடி உருகிக்கிடக்கிறது. மூர்க்கத்தை மட்டும் வெளிப்படுத்திக்கொண்டிருந்த அதன் கண்கள் கலங்கிக்கிடக்கின்றன. இந்தச் சைத்தானை ஆட்டுவித்துக்கொண்டிருக்கும் அந்த மாய சக்தி எதுவோ?

தலைகீழாகத்தான் மாறிப்போயிருந்தார் மால்கம். கால்களை மடக்கி அமர்ந்து தொழுகையில் ஈடுபட ஆரம்பித்திருந்தார். வாரம் தவறாமல் தொழுகை. இஸ்லாத்தின் அடிப்படைகளை ஓரளவுக்குக் கற்றுத் தேர்ந்திருந்தார் மால்கம். புதிய வாழ்க்கை முறை இனித்தது. மனம் சஞ்சலப்படாமல் அமைதியில் உறைந்திருப்பதை அவரால் உணர முடிந்தது. வெகுகாலமாகத் தேடிக்கொண்டிருந்த ஒன்று கிடைத்துவிட்ட திருப்தி.

மழிக்காமல் தாடி வளர்க்க ஆரம்பித்தார். எந்தச் சூழலிலும் தொழுகையைக் கைவிடவில்லை. அனைவரிடமும் இனிமையாகப் பழக ஆரம்பித்தார். கடும்சொற்களை களைந்தார். போட்டிப்போட்டு முட்டி மோதி உணவு சாப்பிடுவதை நிறுத்திக்கொண்டார். வெட்டிப் பேச்சுகளிலும், கிண்டல், கேலிகளிலும் நாட்டம் செலுத்துவதில்லை என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டார். இது ஒரு சத்திய சோதனை. வெல்கிறேனா என்பதல்ல முக்கியம். நானும் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறேன் என்னும் சிறு திருப்தியே கூடப் போதுமானது.

இந்தா மால்கம் உனக்கு ஒரு கடிதம் என்று காவலாளி

கொடுத்தபோது, ஆர்வத்துடன் வாங்கிக்கொண்டார் மால்கம். மின்சாரத்தால் தாக்கப்பட்டதுபோல் இருந்தது. அப்படியே சரிந்து தரையில் உட்கார்ந்துவிட்டார். யார்? எலிஜா முகமதுவா? அவரேதானா? அவர் எனக்குக் கடிதம் எழுதியிருக்கிறாரா? கடவுள் அனுப்பிய கடிதத்தையா நான் கையில் சுமந்துகொண்டிருக்கிறேன்?

நீண்ட நேரத்துக்கு அப்படியே அமர்ந்திருந்தார் மால்கம். பிறகு, நடுங்கும் விரல்களால் மெல்ல மெல்ல பிரித்தார். ஒவ்வொரு வார்த்தையாகப் படித்தார். அன்புள்ள மால்கம், உன் கடிதம் கிடைத்தது. அல்லா உன்னை நிச்சயம் காப்பார். நம் இன மக்களை மறந்துவிடாதே. அவர்களைப் பற்றி சிந்திப்பதை விட்டுவிடாதே. அல்லா உனக்குத் துணையிருப்பார். உண்மையான அறிவை நோக்கிய உனது பயணம் வெற்றியடையட்டும். கடிதத்துடன் சேர்த்து ஐந்து டாலர்களையும் அவர் அனுப்பி இருந்தார். ஆசீர்வாதம். பரிசு. அங்கீகாரம்.

எத்தனை முறை அந்தக் கடிதத்தை மால்கம் படித்திருப்பார் என்று நிச்சயமாகச் சொல்வதற்கில்லை. சாப்பிடும்போதும் உறங்கும்போதும் வார்த்தைகள் கண் முன்னால் உருண்டோடிக்கொண்டிருந்தன. கடவுளின் அங்கீகாரம் தனக்குக் கிடைத்துவிட்டதை அவரால் சர்வநிச்சயமாக உணரமுடிந்தது. இனி கடந்த கால நினைவுகளில் மூழ்கிக்கொண்டிருக்கவேண்டிய அவசியம் இல்லை. அழுது அழுது சுயபச்சாதாபத்தில் கரைத்துக்கொள்ளவேண்டியதில்லை. நிகழ்காலமும் எதிர்காலமும்தான் முக்கியம். இதுவரை எப்படி இருந்தேன் என்பதை வைத்து என்னை சரித்திரம் மதிப்பிடப் போவதில்லை. இனி நான் என்னவாக மாறப்போகிறேன் என்பதுதான் சரித்திரத்தில் தங்கவேண்டும். அதற்கு

ஏற்றாற்போல் என்னை நான் உருமாற்றிக்கொள்ளவேண்டும். அதற்குக் கடவுளின் ஆசீர்வாதம் எனக்கு உதவும்.

நன்றி எலிஜா முகமது. என் வாழ்க்கைக்கான அர்த்தத்தை மீட்டெடுத்துக்கொடுத்ததற்கு நன்றி. என்னை எனக்கே மறுஅறிமுகம் செய்து வைத்ததற்கு நன்றி. என்னை நல்வழிப்படுத்தியதற்கு நன்றி. என்னை ஏற்றுக்கொண்டதற்கு நன்றி.

எலிஜாவுக்குத்தொடர்ந்து கடிதங்கள் எழுத ஆரம்பித்தார் மால்கம். எலிஜாவின் பதில்கள் ஆழமாகவும் அகலமாகவும் இருந்தன. பல்வேறு சரித்திரக் குறிப்புகளை அவர் தொட்டுச் சென்றிருந்தார். எலிஜாவின் ஒரு கடிதத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு, ஒன்பது புத்தகங்களை தேடிப்பிடித்துப் படிக்க முடிந்தது. அந்த ஒன்பது புத்தங்களில் தனக்கு ஏற்பட்ட சந்தேகங்களை குறித்து வைத்துக்கொண்டு மீண்டும் கடிதம் எழுதினார் மால்கம்.

ஒவ்வொரு நாளும் புதுப்புதுக் கதவுகள் திறந்துகொண்டே இருந்தன. இதுகாறும் எழுதப்பட்ட வரலாறு அனைத்தும் வெள்ளையர்களால் எழுதப்பட்டவை. அவர்களுக்குச் சாதகமானதை மட்டுமே அவர்கள் எழுதிவந்திருக்கிறார்கள். இந்த உலகத்தை உய்விக்க வந்தவர்கள் நாங்கள்தாம் என்பது அவர்கள் கருத்து. ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு வார்த்தையிலும் இந்த ஆணவமும் செருக்கும் பளிச்சிடுகிறது. ஆப்பிரிக்காவைச் சுரண்டியதைப் பற்றி அவர்கள் எழுதவில்லை. ஆப்பிரிக்காவில் இருந்து பல லட்சக்கணக்கான அடிமைகளை ஆடு மாடுகளைப்போல் பிடித்து வந்து வியாபாரம் செய்ததைப் பற்றி ஒரு வரியும் இல்லை. கறுப்பினப் பெண்கள் மீது நிகழ்த்தப்பட்ட பாலியல் அக்கிரமங்களை அவர்கள் எழுதவில்லை. இத்தனை

செல்வமும் இத்தனை அதிகாரமும் வெள்ளையர்களுக்கு மட்டும் எப்படிக் கிடைத்தது என்னும் உண்மை சரித்திரத்தில் இல்லை.

மாறாக, மிகக் கேவலமான முறையில் கறுப்பர்களை அவர்கள் சித்தரித்திருக்கிறார்கள். ஒரு கறுப்பன் நடந்து சென்ற பாதையை எப்படிக் கண்டுபிடிப்பாய்? அவன் காலடி தடம் பட்ட இடம் குண்டும் குழியுமாக மாறிவிடும். ஹா ஹா ஹா. கறுப்பினப் பெண்கள் எதற்காகப் படைக்கப்பட்டிருக்கிறார்கள்? வெள்ளையர்களின் சந்தோஷத்துக்காகத்தான். கறுப்பின ஆண்கள்? கறுப்பினப் பெண்கள் ரகசியமாகக் காதல் புரிவதற்காகப் படைக்கப்பட்டவர்கள். நடுத்தர வயதுடைய கறுப்பின ஆணை வைத்து என்ன செய்யலாம்? மரம் அறுக்கச் சொல்லலாம். பாதை செப்பனிடச் செய்யலாம். மூட்டை தூக்கவைக்கலாம். எத்தனை காலத்துக்குக் கால்நடைகளைப் பயன்படுத்துவது. பாவம். நடுத்தர வயதுடைய கறுப்பினப் பெண்கள்? கொண்டு வா உடனே. ஆயாவாக இருப்பதற்கு ஏற்றவர்கள் அவர்கள். பிறந்த குழந்தைக்கு அவர்களை வைத்துத்தான் தாய்ப்பால் புகட்ட முடியும். மூதாட்டிகளை என்ன செய்யலாம்? வீட்டு வேலைகளுக்கு உபயோகிக்கலாம். வெள்ளையர்களின் துணிகளை வெளுக்கச் சொல்லலாம். சரி, குழந்தைகள்? எடுபிடி வேலைகளுக்கு ஏற்றவர்கள். சகாய விலையில் நாலைந்து கிடைத்தால் அள்ளிப்போட்டு எடுத்து வா.

அடச்சீ, இத்தனை அருவருப்பானவர்களா வெள்ளையர்கள். பிசாசுகள் என்று சும்மாவா சொன்னார் எலிஜா? கறுப்பர்களின் ரத்தத்தை உறிஞ்சுக் குடிக்கும் அவர்களை எந்த வார்த்தையில் அழைத்தாலும் தகும். இந்தியாவில் நுழைந்தது இதே பிசாசுகள்தாம். கிழக்கிந்திய கம்பெனி

என்னும் பெயரில் உள்ளே நுழைந்தார்கள். வர்த்தகம் செய்கிறோம் என்று பல்லை இளித்தார்கள். ராஜாக்களை மடக்கிப்போட்டுக்கொண்டார்கள். இங்கே அங்கே என்று கிருமிகள்போல் பரவிப் படர்ந்து, பல்கிப் பெருகி ஒட்டுமொத்த தேசத்தையும் விழுங்கிக்கொண்டுவிட்டார்கள். சீனாவிலும் இதே கதைதான். ஆப்பிரிக்காவில் இதைவிட மோசம்.

வெள்ளையர்களுடன் தொடர்பு கொண்டிருக்கும் அத்தனை சங்கதிகளும் இப்படித்தான் இருக்கின்றன. கிறிஸ்தவத்தை எடுத்துக்கொள்ளுங்கள். அன்பால் நேசத்தால் மனித நேயத்தால் பரப்பப்பட்ட மதமா அது? சரித்திரத்தைப் புரட்டிப் பாருங்கள். கிறிஸ்தவம் எப்படித் தோன்றியது? எப்படி வேரூன்றியது? எப்படிக் கிளைகள் பரப்பியது? உன்னதமான கருத்துக்களாலா? நேர்மையான மதப் பிரசாரத்தாலா? சுய எழுச்சியின் காரணமாகவா? தெய்வ சக்தியாலா? இதுதான் அசலான பாதை என்று கோடிக்கணக்கான மக்கள் ஏற்றுக்கொண்டதாலா?

கிடையாது. அது வாளால் பரப்பப்பட்ட மதம். உண்மையில், இஸ்லாத்தைத்தான் அவர்கள் அப்படிப் பழிக்கிறார்கள். இஸ்லாம் சகோதரத்தை முன்னிறுத்துகிறது. சமதர்மத்தை முன்னிறுத்துகிறது. எல்லையற்ற கருணையை, அன்பை முன்னிறுத்துகிறது. இஸ்லாத்துக்கு நேர் எதிரான மார்க்கத்தைக் கிறிஸ்தவம் சுட்டிக்காட்டுகிறது. சிலுவைப் போர்கள் மூலமாகத்தான் அந்த மதம் தன்னை ஸ்தாபித்துக்கொண்டது.

அப்போது மட்டுமல்ல. இப்போதும்கூட இதுதான் நிலைமை. ஒரு மதமாக அல்ல, ஆபத்தான ஒரு கோட்பாடாகத்தான் கிறிஸ்தவத்தை வெள்ளையர்கள் பயன்படுத்தி வந்திருக்கிறார்கள். புதிய நிலத்தையும் மக்களையும்

ஆக்கிரமிக்க அவர்கள் கொண்டு சென்ற ஆயுதம், கிறிஸ்தவம். இந்தியாவிலும் ஆப்பிரிக்காவிலும் ஆஸ்திரேலியாவிலும் அமெரிக்காவிலும் இதை அவர்கள் செய்து காட்டியிருக்கிறார்கள். முதலில் சிலுவை நுழையும். பிறகு பாதிரிமார்கள். பிறகு, அரசாங்க அதிகாரிகள். பிறகு, வணிகர்கள். பிறகு, மக்கள். அவர்களுக்குப் பின்னால் ராணுவம். ஆக்கிரமிப்பு. அடக்குமுறை. அடிமைத்தனம். தீர்ந்தது கதை.

சந்தேகமே வேண்டாம். வெள்ளையர்கள் வன்முறையாளர்கள். அன்பு காட்டுவதில் அவர்களுக்கு அக்கறையில்லை. கறுப்பர்களின் வளமான வரலாறை, வண்ணமயமான பண்பாட்டை, தொன்மையான கலாசாரத்தைத் துடைத்து அழித்து நீக்ரோ என்னும் அருவருக்கத்தக்கப் பெயரை ஒவ்வொரு கறுப்பனின் மார்பிலும் ஈட்டியாகக் குத்திச் சென்றவர்கள் அவர்கள். அளவுகடந்த மூர்க்கமும் மிருகத்தனமும் இருந்தால் மட்டுமே மற்றொரு இனத்தின் மீது இந்த அளவுக்கு வெறுப்பை உமிழ முடியும். விலங்குகள் என்று நம்மை ஏசும் இவர்கள் அல்லவா விலங்குகள்?

வரலாற்றோடு சேர்த்து தத்துவங்களையும் உள்வாங்கிக்கொண்டார் மால்கம். Kante, Scopenhauer, Nitezsche. பிறகு, Will Durant, H.G. Wells, W.E.B. Duois. காந்தியின் எழுத்துகளை ஆர்வத்துடன் வாசித்தார். இந்திய வரலாறையும் சீன வரலாறையும் முறைப்படிப் பயின்றுகொண்டார்.

உள்ளுக்குள் அமைதியாக ஒரு எரிமலை உருவாகிக்கொண்டிருப்பதை மால்கமால் உணர முடிந்தது. உறங்கும்போது மட்டுமல்லாமல் விழித்திருக்கும்போதும்

சில விசித்திரக் காட்சிகளை அவர் தரிசித்தார். சிறைக்குள் வேறு யாரோ உடன் இருப்பதுபோல் இருந்தது. ஒளி வடிவிலான மனிதன். அல்லது மனித வடிவில் ஓர் ஒளி. பயமாகவும் பரவசமாகவும் இருந்தது.

ஒரு நாள் தகவல் வந்து சேர்ந்தது. இயக்கத்தில் இருந்து ரெஜினால்டை எலிஜா முகமது நீக்கிவிட்டார். இயக்கத்தின் விதிகளை மீறியதால் இந்த வெளியேற்றம். உடனே எலிஜாவுக்குக் கடிதம் எழுதினார் மால்கம். ஏன் இப்படிச் செய்தீர்கள்? இஸ்லாத்துக்கு என்னை அறிமுகம் செய்துவைத்தவரே அவர்தான். உங்களைப் பற்றிய மிக உயர்வான பிம்பத்தை என்னிடம் ஏற்படுத்த அவர் நிறையவே உழைத்திருக்கிறார். நேஷன் ஆஃப் இஸ்லாம் பற்றி விலாவரியாக அனைவரிடமும் பேசிக்கொண்டிருக்கிறார். அல்லாவின் பேரருளை எங்கும் பரப்பிக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்டவரை ஏன் நீக்கினீர்கள்?

எலிஜா பொறுமையாகப் பதிலளித்தார். மால்கம், உன் சகோதரன் என்பதற்காக நீ அவனுக்காக வழக்காட வந்திருக்கிறாய். யோசித்துப் பார். உன் சகோதரப் பாசம் ஏன் உன்னை இந்த அளவுக்கு உந்தித்தள்ளவேண்டும்? இயக்கத்தின் விதிகளுக்கு அனைவரும் கட்டுப்படவேண்டும் என்று உனக்குத் தெரியாதா? கட்டுப்படாதவர்கள் நீக்கப்படுவார்கள் என்பது உனக்குத் தெரியாதா? உயர்ந்த லட்சியம் கொண்டவர்கள் தெரிந்தவர், அறிந்தவர், உறவினர் என்றெல்லாம் பார்த்துக்கொண்டிருக்க மாட்டார்கள் என்பதை நீ அறியவில்லையா?

ஏன் கேட்டோம் என்று ஆகிவிட்டது மால்கமுக்கு. வெட்கித் தலைகுனிந்தார். இனியொருமுறை இப்படி ஒரு தவறு

செய்யமாட்டேன். எலிஜா எடுத்த முடிவு சரிதான் என்பதை மால்கமால் ஆத்மார்த்தமாக உணர முடிந்தது. ரெஜினால்ட் முற்றிலுமாக மாறிப்போயிருந்தான். அல்லாவை ஒருமுறை ஏற்றுக்கொண்டவர்கள் யாரும் அவரிடம் அவநம்பிக்கை கொள்ளக் கூடாது என்பது விதி. ரெஜினால்ட் அதை மீறினான். சிறைக்கு வரும்போது நாகரிக ஆடைகள் அணிந்துகொள்ள ஆரம்பித்தான். எலிஜா முகமது மீதான அவன் நம்பிக்கை வறண்டு போயிருந்ததைக் கண்டு அதிர்ந்து போனார் மால்கம். ஐயோ உன் தாடியைப் பார்க்க மிகவும் பயமாக இருக்கிறது. ஒவ்வொரு முடியும் பாம்புபோல் இருக்கிறது என்று ரெஜினால்ட் சத்தம் போட்டு அலறியபோது, பயந்து போனார் மால்கம். ரெஜினால்ட் மனநிலை காப்பகத்தில் சேர்க்கப்பட்டார்.

ஆகவேதான் சொல்கிறேன் அடிப்படை ஒழுங்கு அவசியம் என்றார் எலிஜா. நட்சத்திரத்தில் இருக்கும் ஐந்து முனைகளும் ஐந்து புலனுணர்வுகளைக் குறிக்கின்றன. அல்லாவை ஏற்றுக்கொள்பவர்கள் அனைவரும் இந்த நட்சத்திரத்தை மனத்தில் இருத்திக்கொள்ளவேண்டும். நம்மை தவறான பாதையில் அழைத்துச்செல்வதற்காக சைத்தான் காத்துக்கொண்டிருக்கிறது. போ போ, இன்பம் அங்கே இருக்கிறது என்று நம்மைப் பிடித்து அது தள்ளிக்கொண்டே இருக்கிறது. சரி ஒரு முறை மட்டும் என்று சபலப்பட்டுவிட்டால் பிறகு மீள்வது சிரமம். அல்லா உனக்குத் துணை இருக்கவேண்டுமானால் நீ அதற்கு ஒத்துழைக்கவேண்டும். நம்பிக்கை. அது முக்கியம்.

எலிஜா சொன்ன சைத்தான் எது என்று மால்கமுக்கு நன்றாகவே புரிந்தது. முதல் சிகரெட். முதல் மதுக் கோப்பை. முதல் கஞ்சா. முதல் பெண். முதல் கொள்ளை. முதல் திருட்டு. முதல் துரோகம். அப்பப்பா, எத்தனை பாடுபட்டு

அந்தச் சைத்தானை அடித்து விரட்டவேண்டியிருந்தது. பாவம், ரெஜினால்ட் மாட்டிக்கொண்டுவிட்டான்.

ஹார்வார்ட் திருச்சபையில் இருந்து யாரோ ஒருவர் வந்திருப்பதாக அறிவிப்பு வந்தது. மால்கமும் சென்றார். யாரோ ஒரு வெள்ளை அங்கி பாதிரிமார். ஆ, உண்மையான பிசாசு. உள்ளுக்குள் சொல்லிக்கொண்டார் மால்கம். கைதிகள் அனைவரையும் அமர வைத்து பேசிக்கொண்டே போனார் அந்தப் பாதிரியார். கர்த்தரின் எல்லையற்ற அன்பு. இயேசுவின் ரத்தமே ஜெயம். அவரிடம் அடைக்கலம் புகுந்தவர்களுக்கு ஒரு குறையும் ஏற்படாது. ஆங்காங்கே லாகவமாக பைபிள் வசனங்கள். வசன எண் இது, அது. சொன்னவர் இவர், அவர். கண்களை மூடி மூடிப் பிரித்து பேசினார். உருகினார். மருகினார். கண்கள் கலங்கினார். ஒரு கையால் பைபிளை தன் மார்போடு அணைத்துக்கொண்டு மற்றொரு கையால் வானத்தை அவர் சுட்டிக்காட்டியபோது, அத்தனை பேரும் தலையை உயர்த்தி அங்கே பார்த்தார்கள்.

மால்கம் தன் கையை உயர்த்தினார்.

‘ஐயா எனக்குச் சில சந்தேகங்கள்.’

மால்கமை நோக்கி புன்முறுவலுடன் திரும்பினார் அந்தப் பாதிரியார்.

‘கேள் மகனே உனக்கு விடையளிப்பது என் கடமை. கர்த்தர் அதற்காகத்தான் என்னைப் பணித்திருக்கிறார்.’

‘நீங்கள் மிக அழகாகப் பேசுகிறீர்கள். நியாயமாகவும் நடந்துகொள்கிறீர்கள். சொல்லுங்கள், நீங்கள் பெருமையுடன் குறிப்பிட்ட பவுல் என்ன நிறம்?’

மென்று விழுங்கினார் அவர்.

‘எதற்காகக் கேட்கிறாய்?’

‘வரலாறைத் தெரிந்துகொள்வதற்குத்தான். சொல்லுங்கள்.’

‘கறுப்பு.’

‘மிகச் சரி. உண்மையான யூதர்கள் அனைவரும் அந்தக் காலத்தில் கறுப்பாகத்தான் இருந்திருக்கிறார்கள் இல்லையா?’

‘ம்.’

‘கறுப்பு என்பது வெறுத்தொதுக்கப்படவேண்டிய நிறம் அல்ல என்பது புரிகிறது அல்லவா?’

‘ம்.’

‘எனில், இயேசுநாதர் என்ன நிறம்?’

அவர் தவித்தார். விழித்தார். உதடுகள் துடித்தன. வார்த்தைகள் வெளிவர துடித்தன. இயலவில்லை. சுட்டெரித்துவிடுவதைப் போல் மால்கமைப் பார்த்தார். மால்கம் அமைதியாகக் கைகளைக் கட்டிக்கொண்டு அவரைப் பார்த்தார்.

‘சொல்லுங்கள்.’

கைதிகள் அனைவரும் இப்போது மால்கமை நோக்கித் திரும்பியிருந்தனர். அந்தப் பாதிரியார் பைபிளை அழுத்தமாக, சத்தம் எழுப்பும்படி மூடி மேஜையின் மீது வைத்தார்.

‘இயேசுநாதர் உண்மையான யூதர். யூதர்கள் அனைவரும் கறுப்பு நிறத்தில் இருந்தனர். இதில் இருந்து தெரிவது என்ன?’

உனக்குப் பதில் சொல்லவேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்பதுபோல் அவர் வெளியேறிவிட்டார்.

சிறைக்கதவுகள் அகலமாகத் திறந்துகொண்டன. விடுதலை. மால்கம் வெளியேறினார். எங்கே போகவேண்டும் அடுத்து என்ன செய்யவேண்டும் என்று அவர் முன்னரே யோசித்து வைத்திருந்தார். எல்லாவைச் சந்தித்தார். தன் விருப்பத்தைத் தெரிவித்தார். நன்றி சகோதரி. பாஸ்டனுக்கு என்னை அழைத்து வந்தது நீதான். புதிய உலகத்தை அறிமுகப்படுத்தியதும் நீதான். இனி அந்த உலகத்தில் எனக்கு வேலையில்லை. நான் டெட்ராய்ட் செல்கிறேன். புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கிறேன்.

மால்கமின் குடும்பத்தில் உள்ள அத்தனை பேரும் இஸ்லாத்தை அப்போது தழுவியிருந்தார்கள். எல்லாவைத் தவிர. எலிஜா முகமதுவின் மார்க்கம் ஏனோ அவரை மட்டும் கவரவேயில்லை. இதுவே போதும் என்று ஒதுங்கிக்கொண்டுவிட்டார். மால்கமை இஸ்லாம் ஈர்த்தது பற்றி அவருக்கு எந்தவிதக் கருத்தும் இருக்கவில்லை. இனி தவறான பாதையில் அவன் செல்லமாட்டான் என்னும் நம்பிக்கை மட்டும் திடமாக ஏற்பட்டது.

மால்கம் எந்த அளவுக்கு மாறிப்போயிருக்கிறான் என்பது அவன் தோற்றத்தில் இருந்தே தெரிந்தது. காங்க் செய்யப்படாத தலைமுடி. தாடி. இதற்கு முன் பார்த்திராத சாந்தம். ஆடி அடங்கிவிட்டேன், இனி அலைகழிக்கப்பட மாட்டேன் என்பதை உணர்த்தும் உடல் மொழி. மற்றொரு வகையிலும் ஆறுதல் அடைந்தார் எல்லா. பாஸ்டனிலோ நியூ யார்க்கிலோ இனி மால்கம் தங்கியிருப்பது பாதுகாப்பானது அல்ல. காவல்துறையினர் சுற்றிக்கொண்டே இருப்பார்கள். இவன் திருந்திவிட்டாலும்

அவர்கள் விடமாட்டார்கள். மீண்டும் பிடித்து உள்ளே தள்ளிவிடக்கூடும். டெட்ராய்ட் பாதுகாப்பானது.

போய் வருகிறேன் அக்கா என்று சொன்னபோது, கர்த்தர் உன்னுடன் இருப்பார் கலங்காதே மால்கம் என்றுதான் வாழ்த்தினார் எல்லா. மால்கம் எல்லாவின் கரங்களைப் பற்றி தீர்மானமான குரலில் மறுத்தார். கர்த்தர் அல்ல சகோதரி, அல்லா.

# 7. எக்ஸ் என்னும் ஆயுதம்

தன்னுடன் எடுத்துச்செல்வதற்காக மூன்று பொருள்களை மட்டும் வாங்கிக்கொண்டார் மால்கம். ஒரு சூட்கேஸ். ஒரு கைக்கடிகாரம். ஒரு மூக்குக்கண்ணாடி. மங்கலான வெளிச்சத்தில் தொடர்ந்து வாசித்து வந்ததால் பார்வை பழுதடைந்திருந்தது. பின்வரும் காலங்களில் மால்கம் தொடர்ந்து பயன்படுத்தியவை இந்த மூன்று பொருள்களை மட்டுமே.

எலிஜாவிடம் முன்னரே சொல்லிவிட்டார். வருகிறேன். வந்தவுடன் நேஷன் ஆ்ஃப் இஸ்லாமில் இணைந்துவிடுகிறேன். வந்தோம் இணைந்தோம் என்று இந்த அமைப்பில் சேர்ந்துவிடமுடியாது. கறாரான சட்டத்திட்டங்கள் இருக்கும் என்று மால்கமுக்குத் தெரியும். அமைப்பு நடத்தும் பொதுக்கூட்டங்களில் கலந்துகொள்ளவேண்டும். என் வேலை என் குடும்பம் என்று ஒடுங்கிப்போகாமல் விசாலமாகச் சிந்திக்கவேண்டும். ஓடியாடி வேலை செய்யவேண்டும். அமைப்பின் கொள்கைகளை நான்கு திசைகளிலும் கொண்டு செல்லவேண்டும். அல்லாவை, எலிஜா முகமதுவை கடவுளாக ஏற்றுக்கொள்ளவேண்டும். கேள்வி எழுப்பாத, கீழ்ப்படிதல் அவசியம். தொழுகை அவசியம். சடங்குகள், சம்பிரதாயங்கள் அவசியம். சமூக அக்கறை அவசியம்.

அல்லாவின் பெயரால் நான் புனித நீராடுகிறேன் என்று வாய்விட்டுச் சொல்லவேண்டும். முதலில் வலது கரத்தைக் கழுவவேண்டும். பிறகு இடது கரம். ஆனபிறகு, பற்களைச் சுத்தமாகத் துலக்கவேண்டும். மூன்று முறை வாய் கொப்பளிக்கவேண்டும். மூக்குத் துவாரங்களை மூன்று

முறை சுத்தப்படுத்தவேண்டும். பிறகு, உடலை குளிப்பாட்ட வேண்டும். நேர்த்தி முக்கியம். எதற்குப் பின் எது என்பதில் குழப்பம் கூடாது. சுத்தம் முக்கியம். விரதம் முக்கியம்.

வில்ஃப்ரெட்டின் வீட்டில் தங்கிக்கொண்டார் மால்கம். முதலாம் எண் மசூதியில் ஒட்டிக்கொண்டார். புதன், வெள்ளி, சனிக்கிழமைகளில் கூட்டம் நடைபெறும். இஸ்லாமிய மார்க்கம் பற்றி அறிஞர்கள் உரையாற்றுவார்கள். ஒன்றையும் விட்டுவிடாமல் ஆர்வத்துடன் கலந்துகொண்டார் மால்கம். வணங்கும்போது, அஸ்ஸலாம் அலைக்கும் என்று சொல்லிக்கொண்டார்கள். பதிலுக்கு, லா அஸ்ஸலாம் அலைக்கும். குறித்துவைத்துக்கொண்டார் மால்கம்.

வகுப்புகள் நடைபெறும்போது, முன்வரிசையில் அமர்ந்துகொள்வார். பேச்சாளர்களின் உரையில் தொனித்த ஆவேசத்தை அப்படியே உள்வாங்கிக்கொள்வார். நண்பனே, கறுப்பனாகப் பிறந்ததற்குச் சந்தோஷப்படு. உன் நிறத்தின் மேன்மையை உணர்ந்திரு. யாருக்கும் இனி நான் அடிமையில்லை; என்னைவிட உயர்ந்தவர் யாருமில்லை. மந்திரம்போல் தினமும் இந்த ஒற்றை வரியை ஜெபி. வெள்ளையர்கள் உன்னை ஒடுக்கிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்துகொள். உறக்கத்தில் இருந்து விழித்தெழு. என்னால் என்ன செய்யமுடியும் என்று கேட்காதே. ஓர் அணியாகத் திரண்டு வா. சகக் கறுப்பர்களிடம் சகோதரத்துவத்துடன் பழகு. அவர்களுக்கு உண்மையைப் புரியவை. வெள்ளைப் பிசாசுகளுடன் போர் தொடுக்க எந்நேரமும் ஆயத்தமாக இரு. படை திரட்டு. மென்மேலும் இளைஞர்கள் நமக்குத் தேவை. அழைத்து வா. இயக்கத்தில் அவர்களை இணைத்துவிடு.

இரண்டாம் எண் மசூதியில் உரையாற்றுவதற்காக, எலிஜா

முகமது வந்திருந்தார். துள்ளலும் துடிப்புமாக ஓடிச் சென்றார் மால்கம். என் ஆசான். என் வித்து. என் கடவுள். காண்பதற்குக் கண்கள் கோடி வேண்டாமோ? திரண்டிருந்த கூட்டத்தை விலக்கிக்கொண்டு தனக்கென்று ஓர் இடத்தில் அமர்ந்துகொண்டார். அதோ வருகிறார், வருகிறார். எங்கும் பரபரப்பு. எங்கே, எங்கே? மால்கம் கண்களைக் குறுக்கிக்கொண்டு பார்த்தார். கைகளை வீசியபடி நடந்து வந்தார் எலிஜா முகமது. மிகவும் எளிமையான தோற்றம். குள்ளமான உருவம். இவரா? இவரா எலிஜா? அவர் நிறம் என்ன என்பதைத் தெரிந்துகொள்ள ஆர்வமாக இருந்தார் மால்கம். உற்றுப் பார்த்தார். வெள்ளையாகவும் இல்லை; கறுப்பாகவும் இல்லை. பழுப்பு நிறச் சருமம்.

எலிஜா பேச ஆரம்பித்தபோது, அவர் குரலில் தொனித்த கம்பீரத்தைக் கண்டுணர்ந்து மகிழ்ந்தார் மால்கம். அவரது கோர்வையான உரை, மால்கமை வசீகரித்தது. இமைகளை மூடாமல் அவரையே பார்த்துக்கொண்டிருந்தார். எலிஜா தன் உரையை முடித்துக்கொண்டார். கூட்டத்தினரைப் பார்த்து புன்னகை செய்தார். கைகளை மேலே உயர்த்தினார்.

‘மால்கம் என்னும் பெயரை உடைய அன்பர் ஒருவர் இங்கே எங்கோ இருக்கிறார். அவரை நான் பார்க்கவேண்டும்.’

யார்? என்னையா சொன்னார்? என் பெயரையா இவர் உச்சரித்தார்? மால்கம். அடடா, எத்தனை அழுத்தமான உச்சரிப்பு. என்னையா அழைத்தார்? கண்களை திறந்துவைத்துக்கொண்டு கனவு காண்கிறேனா. அவர் ஏன் என்னை அழைக்கவேண்டும்? எலிஜாவின் வாயை உற்றுப் பார்த்தபடி பேசாமல் அமர்ந்திருந்தார் மால்கம்.

‘மால்கம்... மால்கம்... இங்கே இல்லையா நீங்கள்? நான் சொல்வது கேட்கிறதா? எழுந்து நில்லுங்கள்.’

மின்அதிர்ச்சியில் தாக்கப்பட்டதுபோல், உடல் ஒருமுறை நடுநடுங்கி ஓய்ந்தது. என்னைத்தான். என்னையேதான் அழைத்துக்கொண்டிருக்கிறார். எனில் என்னை அவர் நினைவில் வைத்திருக்கிறார் என்றுதானே பொருள்? நான் எழுதிய கடிதங்களை அவர் ஊன்றி வாசித்திருக்கிறார் என்றுதானே அர்த்தம்? அவர் நினைவுகளில் என் பெயரும் ஓர் ஓரத்தில் தேங்கிக்கிடக்கிறது இல்லையா?

‘எழுந்து நில்லுங்கள் மால்கம்!’

கைகளை உயர்த்தியபடி எழுந்து நின்றார் மால்கம்.

‘இதோ நம் முன்னால் இருக்கும் இவர்தான் மால்கம். நம் பாதையில் இணைய வந்திருக்கும் இவரை வாழ்த்துவோம். அத்தனைத் தடைகளையும் கடந்து, அத்தனை சபலங்களையும் முறியடித்து வெற்றி பெற்றிருக்கிறார் மால்கம்.’

கூச்சத்தில் கூனிக்குறுகி நின்றுகொண்டிருந்தார் மால்கம். நிகழ்ச்சி முடிந்ததும் இயக்கத்தில் சேர விரும்புபவர்களைத் தனியே பிரித்தெடுத்துப் பேசினார்கள். விதிமுறைகள் விளக்கப்பட்டன. எல்லாம் முடிந்ததும் எலிஜா மீண்டும் தோன்றினார்.

‘நேஷன் ஆ்ஃப் இஸ்லாமில் சேர விருப்பம் தெரிவித்திருக்கும் உங்களை வாழ்த்தி வரவேற்கிறேன். நீங்கள் இறுதிக்கட்டத்தை நெருங்கிவிட்டீர்கள். இப்போது உங்கள் பெயர்கள் மாற்றி அமைக்கப்படும். அதற்கு முன்னால் இந்தப் பெயர் மாற்றம் எதற்கு என்று உங்களுக்குச் சொல்லவேண்டாமா? ஏதாவதொரு பெயரை எடுத்துக்கொள்ளுங்கள். பெஞ்சமின் வில்சன். இதில் பெஞ்சமின் என்பது உங்கள் பெற்றோர் உங்களுக்கு வைத்த

பெயர். வில்சன் என்பது யார்? உங்கள் தந்தையின் பெயரா? கிடையாது. அவருடனும்கூட இந்தப் பெயர் ஒட்டிக்கொண்டுதான் இருந்தது. எனில், இது குடும்பப் பெயரா? வில்சன் என்னும் பெயரில் உங்களுக்கு ஒரு தாத்தா இருந்தார் என்று கொள்ளமுடியுமா? முடியாது. இதிலிருந்து தெரிவது என்ன? வில்சன் என்பது உங்களுக்குப் பொருந்தாத ஒரு பெயர். யாரோ ஒரு வெள்ளைக்காரன் உங்களுக்குத் தூக்கிப்போட்ட ஒரு பெயர். உங்கள் குடும்பத்தைக் கெடுத்த பிசாசின் பெயர்தான் அது. சிறிது யோசித்துப் பார்த்தால் நீங்களே இதை ஒப்புக்கொள்வீர்கள்.'

உண்மைதான். நான் மால்கம் லிட்டில். என் தந்தையின் பெயர் ஏர்ல் லிட்டில். ஏர்ல் என்பது என் தந்தையின் பெயர். லிட்டில்? யார் இந்த லிட்டில்? ஒரு வெள்ளைக்காரனின் பெயர் அல்லவா இது? இதைக்கூட இத்தனை காலம் எப்படிக் கவனிக்காமல் விட்டேன்?

'இத்தனைக் காலமும் இதை நீங்கள் கவனிக்காமலே இருந்துவிட்டீர்கள் என்பது எத்தனை பெரிய சோகம் தெரியுமா? நீங்கள் கவனிக்காததற்குக் காரணம், அத்தனை ஆழமாக அந்தப் பெயர் உங்கள் ரத்தத்தில் ஊறிவிட்டது. இது வெறும் பெயர் சம்பந்தப்பட்ட சங்கதி அல்ல. ஒடுக்குமுறையின் சின்னத்தை நீங்கள் சுமந்துகொண்டிருக்கிறீர்கள். யார் உங்களை அழித்துக்கொண்டிருக்கிறார்களோ அவர்களது பெயரை நீங்கள் மிக்க மரியாதையுடன் பாதுகாத்துக் கொண்டிருக்கிறீர்கள். முகம் தெரியாத அந்தப் பிசாசை நீங்கள் ஆராதித்துக்கொண்டு இருக்கிறீர்கள்.'

அதிர்ச்சியில் தாக்குண்டதைப்போல் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருந்தார் மால்கம். ச்சீ, இதுகூட தெரியாமல் போய்விட்டதே.

‘நேஷன் ஆஃப் இஸ்லாமில் இணைய விரும்பும் நீங்கள் அனைவரும் இப்போது செய்ய வேண்டியது இதுதான். உங்களிடம் ஒளிந்துள்ள பிசாசை அடித்து விரட்டுங்கள். இனி அந்தப் பிசாசின் பெயரை உச்சரிக்காதீர்கள். உங்களை அறிமுகப்படுத்திக்கொள்ளும்போது, ஜாக்கிரதையாக இருங்கள்.’

‘பிசாசின் பெயர் ஒழியட்டும். பிசாசின் பெயர் ஒழியட்டும்.’

அந்த மைதானம் முழுவதும் எதிரொலித்தது பெரும் குரல்.

‘பெஞ்சமின் வில்சன் என்பவர் இனி பெஞ்சமின் எக்ஸ் என்று அழைக்கப்படுவார். ஆம், இப்போதைக்கு எக்ஸ் என்று வைத்துக்கொள்வோம். நாம் அனைவரும் இறைவனின் குழந்தைகள். நமக்குப் பெயர் வைக்கவேண்டியது அல்லாதான். தக்கதொரு பெயரை அவரே நமக்குச் சூட்டும் வரை எக்ஸ் என்னும் அடையாளம் போதும் நமக்கு. சரியா? இங்குள்ள அத்தனை பேருக்கும் இது பொருந்தும்.’

சிலிர்த்துக்கொண்டார் மால்கம். ஆம், இனி நான் மால்கம் எக்ஸ். எக்ஸ்! இது என் குறியீடு. எலிஜா அளித்த குறியீடு. எதிர்ப்பின் குறியீடு. போராட்டத்தின் குறியீடு. இதை ஒரு பெயராக மட்டும் அல்லாமல் எனக்கானதொரு ஆயுதமாகவும் பயன்படுத்திக்கொள்வேன். பிசாசுகளுக்கு எதிரான போரில் இந்த ஆயுதம் எனக்கு உதவும். மற்றொரு பெரும் ஆறுதலும் கிடைத்தது மால்கமுக்கு. தேவையற்ற சுமையை இறக்கி வைத்த திருப்தி. நண்பர்களே, உறவினர்களே, புதியவர்களே இனி என்னை மால்கம் எக்ஸ் என்று அழையுங்கள். மால்கம் எக்ஸ் என்று மட்டுமே அழையுங்கள். அல்லா நம் பக்கம் இருப்பார்.

என்ன செய்யவேண்டும் சொல்லுங்கள். உத்தரவிடுங்கள்.

உதடு திறந்து கட்டளை இடவேண்டிய அவசியம்கூட இல்லை. கண்ணால் ஒரு பார்வை, ஒரு ஜாடை காட்டுங்கள். ஓடுகிறேன். என்ன வேண்டுமானாலும் செய்கிறேன். எங்கு வேண்டுமானாலும் செல்கிறேன். ஏதாவதொரு வகையில், சிறிய சிறிய வகையில் இயக்கத்துக்குத் தொண்டாற்றிக்கொண்டே இருப்பதுதான் என் ஆசை.

ஆச்சரியத்துடன் பார்த்தார் அந்த மதகுரு. சிறையில் இருந்து வந்தவர் என்று சொன்னாரே எலிஜா. இந்த இளைஞரா இவர்?

சுழற்றிவிட்ட பம்பரம்போல் ஒரு நொடியும் நிற்காமல் சுற்றிக்கொண்டிருந்தார் மால்கம். பொதுக்கூட்டங்களுக்கான அத்தனை ஏற்பாடுகளையும் முன்னின்று நடத்தினார். இடத்தைச் சுத்தம் செய்வது, பிளாஸ்டிக் நாற்காலிகளை கொண்டு வந்து வரிசையாகப் போடுவது, மேடையை அலங்கரிப்பது, வரவிருக்கும் பேச்சாளர்களை வரவேற்று உபசரித்து அறைக்குக் கொண்டு செல்வது, வந்திருக்கும் கூட்டத்தினரை அமரவைப்பது. இங்கே வா, அங்கே போ, இதைச் செய், அதைச் செய் என்று ஒருவரும் மால்கமுக்குக் கட்டளை இட வேண்டிய அவசியம் இருக்கவில்லை. எது தேவை என்பதை ஊகித்தறிந்து ஓடினார். ஆம், நடக்கவேயில்லை அவர். ஓடிக்கொண்டுதான் இருந்தார்.

மதகுருமார்கள் பேச ஆரம்பித்துவிட்டால் போதும். புறவுலகம் ஒன்று இருப்பதையே மறந்துவிட்டு அவர் பேசுவதையே கவனித்துக்கொண்டு நிற்பார். எந்தவொரு சலனத்துக்கும் இடமில்லை. அவர் வாயில் இருந்து புறப்படும் ஒவ்வொரு ஓசையையும் ஒவ்வொரு சொல் உச்சரிக்கப்படும் முறையையும் உன்னிப்பாக மனத்தில் தைத்துக்கொள்வார்.

கூட்டம் முடிந்து நாற்காலிகளை ஒழுங்குப்படுத்தும்போது, மால்கமுக்குக் கோபமும் வருத்தமும் பொங்கும். நல்வழிப்படுத்தும் இத்தகைய பேச்சாளர்களின் சிந்தனைகளைத் தெரிந்துகொள்ள ஏன் எல்லோருக்கும் ஆர்வம் பிறக்கவில்லை? இது அவர்களுக்கான கூட்டம் இல்லையா? அவர்களைத் திருத்தி அமைப்பதற்காகத்தானே இங்குள்ளவர்கள் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள்? சதா சர்வகாலமும் கறுப்பர்களைப் பற்றித்தானே இவர்கள் சிந்தித்துக்?

நானே உதாரணம். காட்டு விலங்குபோல் அல்லவா திரிந்துகொண்டிருந்தேன்? எலிஜா முகமதுவின் அறிமுகம் மட்டும் கிடைக்காமல் இருந்திருந்தால் இன்று இப்படிப் பெருமையுடன் தலையை உயர்த்தி நின்றுகொண்டிருக்க முடியுமா?

சேரிப்பகுதிகளுக்குச் சென்றார் மால்கம். ஆண்களை, பெண்களை, முதியோர்களை, குழந்தைகளை அமர வைத்துப் பேசினார். தன்னை அறிமுகம் செய்துகொண்டார். தான் சார்ந்துள்ள இயக்கத்தைப் பற்றி நைச்சியமாக எடுத்துக்கூறினார். வாரந்தோறும் நடைபெறும் பொதுக்கூட்டங்கள் பற்றி பேசினார். தயவுசெய்து வாருங்கள் என்று விண்ணப்பித்துக்கொண்டார். ஓ அப்படியா சரி வருகிறோம் என்று சொல்லி தட்டிவிட்டுக்கொண்டு எழுந்துகொண்டார்கள். நூறு பேரில் ஒருவர் மட்டும் கூட்டத்தில் எட்டிப் பார்த்தார்.

மால்கம் குறிப்பாகச் சந்திக்க விரும்பியது கறுப்பின இளைஞர்களை. அரும்பப் போகும் வயதில் உள்ள குருத்துகள். இப்போதே, இப்போதே இனம் கண்டு நல்ல சிந்தனைகளை புகுத்திவிட்டால் பூத்துக்குலுங்குவார்கள். ஓடியோடிச் சென்றார். இளைஞர்கள் எங்கெல்லாம்

இருப்பார்கள் என்று அவருக்குத் தெரியும். மதுக்கடைகளுக்குச் சென்றார். நடன அரங்கங்களுக்குச் சென்றார். இசைக்கலைஞர்களின் இருப்பிடங்களுக்குச் சென்றார். பாலியல் தொழிலாளர்களின் கோட்டைக்குள் ஊடுருவினார்.

கம்பளிப்பூச்சிகளைப் போல் எல்லா இடங்களிலும் இளைஞர்கள் சுருண்டுகிடந்தார்கள். மதுவைச் சுவைத்தபடி. கஞ்சா புகைத்தபடி. நடனம் ஆடியபடி. வெறிகொண்டு பாடியபடி. குடித்துவிட்டு சாக்கடைக்கு அருகே மயங்கியபடி. இளம் பெண்களின் கைகளைப் பற்றி உல்லாசக் கனவுகள் கண்டபடி. சொக்கிப்போய் கிடந்தார்கள். தோளைத் தொட்டு அசைத்துப் பார்த்தாலும் மயக்கம் தெளியவில்லை. கிறக்கம் கலையவில்லை.

சோடா வாங்கி முகத்தில் அடித்து மன்றாடிப் பார்த்தார் மால்கம். இனி இதுபோன்ற இடங்களுக்கு வராதீர்கள். கறுப்பர்களின் இன்றைய நிலைமை என்னவென்று தெரியுமா உங்களுக்கு? உலகம் எந்தத் திசையில் சென்றுகொண்டிருக்கிறது தெரியுமா? உல்லாசமாக அல்ல அடிமைகளைப்போல்தான் நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை நீங்கள் அறிவீர்களா? இந்த மாய போதையை ஏற்படுத்தியது பிசாசுதான் என்பது தெரியுமா உங்களுக்கு? நீங்கள் அனைவரும் நிரந்தர மயக்கத்தில் இருந்தால்தான் பிசாசுகள் வளமாக இருக்கமுடியும் என்பதை உங்களால் உணர முடிகிறதா?

சர்தான் போப்பா, சும்மா தொணதொணக்காதே. மால்கமைப் பிடித்து தள்ளினார்கள் அவர்கள். சட்டை பாக்கெட்டில் இருந்து கஞ்சாவை எடுத்து உள்ளங்கையில் கொட்டிக்கொண்டார்கள். மால்கம்

பார்த்துக்கொண்டிருக்கும்போதே புகைக்க ஆரம்பித்தார்கள்.

இதோ வந்துவிட்டேன் என்று பகடைக்காய்களை கீழே போட்டுவிட்டு மால்கமோடு இணைந்துகொள்ள அவர்கள் தயாராக இல்லை. உதாசீனப்படுத்தினார்கள். அலட்சியப்படுத்தினார்கள். அவமானப்படுத்தினார்கள். மால்கம் நிதானம் இழக்கவில்லை. மனமே பொறு. மறுப்பது இவர்கள் கிடையாது. இவர்கள் ஆராதிக்கும் பிசாசுகள். அல்லது இவர்களைப் பீடித்திருக்கும் பிசாசுகள். எங்கோ படித்தது அல்லது யாரோ சொல்லி கேட்டுக்கொண்டது நினைவுக்கு வந்தது. பிசாசுகளை என்றும் குறைத்து மதிப்பிட முடியாது. கடவுள் மட்டும் இல்லாவிட்டால் பிசாசுகள் இந்த ஒட்டுமொத்த உலகத்தையும் விழுங்கியிருக்கும். ஒருவரையும் விட்டு வைத்திருக்காது. பிசாசின் பிடியில் இருந்து விடுபடுவது அத்தனைச் சுலபமானதா என்ன?

மீண்டும் வந்து பார்த்தார். போதையில் இல்லாத சமயம் பார்த்து அவர்கள் தோள் மீது கைபோட்டு பேசினார். மதபோதகராக அல்ல. ஒரு தோழனாக. ஒரு புன்னகையுடன் சிறு சிறு கொக்கிக் கேள்விகளை வீசினார். வாகாகச் சிக்கிக்கொண்டார்கள் சிலர்.

‘உங்கள் தாய் நாடு எது?’

‘வேறு என்ன? அமெரிக்காதான்.’

‘அப்படியா? அமெரிக்கர்கள் வெள்ளையர்களாகத்தானே இருக்கிறார்கள். நாம் மட்டும் ஏன் கறுப்பாக இருக்கிறோம்?’

‘எனில், என்ன சொல்ல வருகிறாய்?’

இது ஒரு கொக்கி.

‘உன் தாய்மொழி என்ன?’

‘வேறு என்ன? ஆங்கிலம்.’

‘அது வெள்ளையர்களின் மொழி அல்லவா? நாம் ஆப்பிரிக்கர்கள். நம் மொழி எப்படி ஆங்கிலமாக இருக்கமுடியும்? ஆங்கிலம் நம் மீது வலுவாகத் திணிக்கப்பட்டுள்ளது. நமது ஆப்பிரிக்க மூல மொழி என்னவென்றுகூட நமக்குத் தெரியவில்லை பார்த்தீர்களா?’

இது ஒரு கொக்கி.

‘நீயும் உன் வெள்ளைக்கார நண்பனும் சமமானவர்களா?’

‘ஆம் அதிலென்ன சந்தேகம்? நாங்கள் இருவரும் ஒரே பாருக்குத்தான் செல்வோம். ஒரே மாதிரியாகக் கஞ்சா புகைப்போம். ஒரே இரவு விடுதிக்குத்தான் செல்வோம்.’

‘ஆனால் ஏதாவது பிரச்னை என்றால் உங்கள் வெள்ளைக்கார நண்பனை விட்டுவிட்டு உங்களை மட்டும் ஏன் காவல்துறையினர் பிடித்துக்கொண்டு போகிறார்கள்? உங்கள் நண்பருக்குக் கிடைத்த வசதிகளும் வாய்ப்புகளும் உங்களுக்கு மறுக்கப்படுவது ஏன்? உங்கள் நண்பரைவிட அதிக திறமைசாலியாக நீங்கள் இருந்தாலும் நீங்கள் சேரியிலும் அவர் அடுக்குமாடிக் குடியிருப்பிலும் இருப்பது ஏன்?’

இது ஒரு கொக்கி.

நீங்கள் சொல்வது சரிதான் என்று தலையசைத்தவர்களைத் தனியே அழைத்துச் சென்று பேசினார். நண்பர்களே, நம் அடையாளத்தை நாம் இழந்துகொண்டிருக்கிறோம். நம் கலாசாரம் அழிந்துகொண்டிருக்கிறது. நம் பழக்கவழக்கங்கள் அனைத்தும் மாறிவிட்டன.

வெள்ளையர்களைப் பார்த்து நமக்கு நாமே சூடு போட்டுக்கொண்டிருக்கிறோம். நம் தோற்றம் மாறிவிட்டது. எதற்காக உங்கள் தலைமுடியை காங்க் செய்துகொள்கிறீர்கள்? எதற்காக உங்களை நீங்களே சித்ரவதை செய்துகொள்கிறீர்கள்? வெள்ளை நிறத்தின் மீது ஏன் இத்தனைக் காதல் உங்களுக்கு? அவர்களைப்போல் மாற ஏன் துடிதுடிக்கிறீர்கள்?

ஒரு காலத்தில் நானும் உங்களைப் போல்தான் இருந்தேன் என்று ஆரம்பித்துத் தான் மாறிய அந்த மந்திர கணத்தை மிகுந்த உற்சாகத்துடன் விவரித்தார் மால்கம். இதுவரை நீங்கள் எப்படி வாழ்ந்தீர்கள் என்பது முக்கியமல்ல. உங்களுக்கு ஒரு வாய்ப்பு இப்போது புதிதாக வழங்கப்படவுள்ளது. மனிதர்களால் வழங்கப்பட்ட வாய்ப்பு அல்ல இது. கடவுள் உங்கள் மீது கொண்ட அக்கறையால் இந்த நல்வாய்ப்பை வழங்குகிறார். கிறிஸ்தவம் போலியானது. வெள்ளையர்களின் கோட்பாடுகள் அனைத்துமே போலியானவைதான். அவர்கள் சொல்கிற எதையும் நீங்கள் நம்பவேண்டாம். உங்கள் ரத்தத்தை உறிஞ்சி அவர்கள் கொழுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த வலியை நீங்கள் உணரக்கூடாது என்பதற்காகத்தான் உங்களுக்குக் கிறிஸ்தவத்தை அவன் வழங்கியிருக்கிறான்.

மாறுங்கள். இந்த விநாடியே மாறிவிடுங்கள். வெள்ளையர்கள் அளித்த அத்தனை அடையாளங்களையும் மதுக் கோப்பையோடு சேர்த்துத் தூக்கி எறியுங்கள். சிகரெட் பெட்டிகளைத் தூக்கி குப்பைத் தொட்டியில் கொட்டுங்கள். பன்றி இறைச்சி சாப்பிடவேண்டாம். கறுப்பர்கள் பன்றி இறைச்சி சாப்பிடுவதை எத்தனை இளக்காரமாக அவர்கள் கிண்டல் செய்கிறார்கள் தெரியுமா? பன்றி இல்லாவிட்டால் நாம் ஒரு நாள்கூட உயிர் வாழ மாட்டோமாம்.

சொல்கிறார்கள். அவர்கள் யார் நம்மைச் சொல்வதற்கு?

உங்களுக்குத் தேவை ஒரு புதிய பாதை. ஒரு புதிய கோட்பாடு. புதிய சிந்தனை. புதிய ஆவேசம். உங்கள் குடியிருப்புக்கு மிக அருகில்தான் இருக்கிறது நேஷன் ஆ்ஃப் இஸ்லாம். வாரா வாரம் பொதுக்கூட்டங்கள் நடைபெறுகின்றன. வந்து அமர்ந்து கேளுங்கள். நல்ல சிந்தனைகளை உள்வாங்கிக்கொள்ளுங்கள். புதிய புரட்சிக்கு உங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளுங்கள்.

என் பெயர் மால்கம் எக்ஸ். மசூதிக்கு வந்தால் என்னை நீங்கள் பார்க்கலாம். உங்கள் வரவை ஆவலோடு எதிர்பார்த்து காத்திருப்பேன். மறக்காமல் வந்துவிடுங்கள் தோழர்களே.

வர ஆரம்பித்தார்கள். ஒருவர், இருவராக. ஒன்றிரண்டு கூட்டங்களில் கலந்துகொண்டபிறகு தங்கள் நண்பர்களை அழைத்த வர ஆரம்பித்தார்கள். பிறகு, குடும்பத்தினரையும். சேரிப்பகுதிகளைத் தேடிச் சென்றார் மால்கம். சளைக்காமல் மணிக்கணக்கில் பேசினார். கொக்கிகளை வீசினார். பற்றிக்கொண்டவர்களை கைகொடுத்துத் தூக்கிக் கரை சேர்த்தார். பற்றிக்கொள்ளாதவர்களை சரி போகட்டும் என்று விட்டுவிடாமல் அதிதீவிரமாகத் தொடர்ந்து சென்றார். தோழர்களே, நீங்கள் மட்டும் ஏன் இத்தனை விடாப்பிடியுடன் இருக்கிறீர்கள்? உங்கள் தெருவில் உள்ள அத்தனை பேரும் எங்களுடன் இணைந்துவிட்டார்கள் தெரியுமா? ஊரோடு ஒட்டாமல் தனித்து இருந்து என்ன லாபம்?

மசூதியில் நண்பர்கள் ஆர்வத்துடன் மால்கமிடம் ஓடி வந்தார்கள்.

‘நாற்காலிகள் காலியாகிவிட்டது மால்கம். இன்னும் நிறைய வாங்கவேண்டியிருக்கும் என நினைக்கிறேன். இருபத்தைந்து போதுமா? ஐம்பது?’

‘நூறு!’

மதகுரு மால்கமை அழைத்துப் பேசினார்.

‘மிகவும் மகிழ்ச்சியளிக்கும்படியாக உள்ளது உன் பணி. அல்லா எப்போதும் உன்னுடன் இருப்பார். இதே சுறுசுறுப்புடன் எப்போதும் நீ இயங்கிக்கொண்டிருக்கவேண்டும்.’

‘நிச்சயமாக. அதற்காகத்தானே நான் வந்திருக்கிறேன்.’

பணிவுடன் தலையைத் தாழ்த்தி விடைபெற்றுக்கொண்ட மால்கமை, ஆச்சரியத்துடன் பார்த்துக்கொண்டிருந்தார் மதகுரு. விரைந்து சென்று எலிஜாவிடம் பேசினார். நீங்கள் சிபாரிசு செய்த இளைஞர் மிகவும் உபயோகமாக இருக்கிறார். மால்கமின் வருகைக்குப் பிறகு இயக்கத்தில் இணைய முன்வருபவர்களின் எண்ணிக்கை வியக்கத்தக்க வகையில் அதிகரித்திருக்கிறது. ‘எனில் அவரை வந்து என்னைப் பார்க்கச் சொல்லுங்கள்’ என்றார் எலிஜா.

ஒரு துள்ளலுடன் சென்று அவர் முன்னால் நின்றார் மால்கம்.

‘மால்கம் எக்ஸ், உன்னைப் பற்றி நல்லவிதமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. இயக்கத்தின் வளர்ச்சிக்கு நீ முக்கிய அளவில் பங்காற்றிக்கொண்டிருக்கிறாய். நல்லது. இயக்கத்துடன் சேர்ந்து நீயும் நிச்சயம் வளர்ச்சி பெறுவாய். வாழ்த்துகள்.’

எலிஜா முகமதுவால் மட்டுமே கறுப்பர்களுக்கு விடிவுகாலம் ஏற்படும் என்பதை உள்ளப்பூர்வமாக நம்ப ஆரம்பித்திருந்தார் மால்கம். கிறிஸ்தவம் எத்தனைப் போலியானது என்பதை எலிஜாவே ஒரு சமயம் விளக்கினார். மால்கம், கிறிஸ்தவத்தின் பிடியில் சிக்கி மயங்கிக் கிடப்பவர்களை நாம் மீட்கவேண்டியது அவசியத்திலும் அவசியம். காலம் காலமாக வெள்ளையர்கள் ஏற்படுத்தி கொண்டிருக்கும் காயங்கள் மீது உப்புத் தேய்க்கிறது கிறிஸ்தவம். நம் தலைக்கு மேலே சொர்க்கம் இருக்கிறதாம். அந்தச் சொர்க்கத்தை நம்மாலும் அடைய முடியுமாம். அதற்கு என்ன செய்யவேண்டும் தெரியுமா?

கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளவேண்டும். நாம் அனுபவிக்கும் துயரங்களை பொறுமையுடன் சகித்துக்கொள்ளவேண்டும். எத்தனைப் பெரிய இடர் வந்தாலும் விடாமல் பிரார்த்தனை செய்யவேண்டும். எந்த நிலையிலும் மன எழுச்சிகொள்ளக் கூடாது. நிதானத்தை இழக்கக் கூடாது. நம் எஜமானர்களான வெள்ளையர்களைப் பகைத்துக்கொள்ளக் கூடாது. அடிமைகளையும் கிறிஸ்து ஏற்றுக்கொள்வார். இந்தமுறை துயரங்களுடன் பிறந்துவிட்டீர்கள். கவலை வேண்டாம். அடுத்தப் பிறவியில் நிச்சயம் நீங்கள் மீட்டெடுக்கப்படுவீர்கள்.

இது அயோக்கியத்தனம் இல்லையா? அவர்கள் அடிக்க அடிக்க நாம் நம் கன்னங்களை திருப்பிக்காட்டிக் கொண்டே இருக்கவேண்டுமாம். பல்லைக் கடித்துக்கொண்டு சகித்துக்கொள்ளவேண்டுமாம். ஏன் என்பதுதான் என் கேள்வி. ஏன்? நாம் ஏன் இவர்களுக்கு அடங்கிப் போகவேண்டும்? அடுத்த பிறவி வரும்வரை வாயை மூடிக்கொண்டு இருக்கச்சொல்வது நயவஞ்சகம்

இல்லாமல் வேறென்ன?

நாம் செய்த பாவங்களுக்கு நம்மை கிறிஸ்து மன்னிப்பது இருக்கட்டும். வெள்ளையர்களை யார் மன்னிப்பது? அதே கிறிஸ்துவா? எனில், நாம் செய்த பாவங்களும் அவர்கள் செய்த பாவங்களும் ஒன்றேதானா? இரண்டின் விளைவுகளும் சமமானவையா? யார் இவற்றை கணக்கிட்டது? உண்மையிலேயே அவர்களுக்குத் தன்மானம் இருந்தால், தாம் செய்த தவறுகளுக்கு உண்மையிலேயே அவர்கள் வருந்தினால், ஒவ்வொரு கறுப்பனின் கால்களிலும் விழுந்து மண்டியிட்டு மன்னிப்பு கேட்கவேண்டும். செய்வார்களா? கறுப்பர்கள் மீது நாங்கள் நிகழ்த்தியிருக்கும், நிகழ்த்திக்கொண்டிருக்கும் வன்முறைக்குப் பொறுப்பேற்கிறோம் எங்களை மன்னியுங்கள் என்று பகிரங்கமாக மன்னிப்பு கேட்பார்களா?

மாட்டார்கள். வெள்ளையர்கள் கறுப்பர்களை வெறுப்பது ஏன் தெரியுமா? ஒரு கறுப்பனை பார்த்தவுடனேயே முகத்தைச் சுளித்துக்கொள்வது ஏன் தெரியுமா? எதை நாம் காயப்படுத்துகிறோமோ அதை நம்மால் நேசிக்க முடியாது. குற்றவுணர்வு உள்ளே கிடந்து புழுவாக நெளிந்துகொண்டிருக்கும். நம்மையும் நம் மூதாதையர்களையும் காலில் போட்டு மிதித்து தேய்த்தவர்களால் நம்மை நேருக்கு நேர் நோக்கமுடியாது. கனிவு வார்த்தைகள் பேச முடியாது. இயல்பாகப் பழகமுடியாது. நட்புக் கொள்ளமுடியாது.

நீயும்கூட கவனித்திருப்பாயே! தனிப்பட்ட முறையில் நல்ல பண்பாளராக இருக்கும் வெள்ளையர்கள்கூட கறுப்பர் ஒருவர் வந்துவிட்டால் தம் இயல்பை மாற்றிக்கொண்டுவிடுவார். சிடுசிடுப்பும் கடுமையும் கூடிவிடும். ஆகவேதான் மால்கம் அவர்களைப் பிசாசுகள்

என்று அழைக்கிறேன். பிசாசுகளில் நல்லது கெட்டது கிடையாது. அனைத்துக்கும் ஒரே பண்பு. அனைத்துக்கும் ஒரே இயல்பு. கெடுக்க மட்டுமே தெரியும் பிசாசுகளுக்கு.

என்னைப் பார்த்து சிலர் கேட்கிறார்கள். எலிஜா, எதற்காக வெள்ளையர்கள் மீது இப்படி வெறுப்பை உமிழ்கிறீர்கள்? நானா உமிழ்கிறேன்? சீன டிராகன்கள்போல் வாய் முழுவதும் நெருப்பாக வலம் வருபவர்கள் யார்? கணக்குத் தெரியுமா மால்கம்? பத்துக் கோடிக்கும் அதிகமான கறுப்பர்கள், நம் மூதாதையர்கள் வெள்ளையர்களால் மாண்டு போயிருக்கிறார்கள். பத்துக் கோடிகள். கப்பல் கட்டி ஆப்பிரிக்கா சென்று சங்கிலியால் கட்டி இழுத்து வந்தார்கள். வழியில் யாருக்காவது நோய்வாய்ப்பட்டால் அல்லது அடங்க மறுத்தால் குண்டுக்கட்டாகத் தூக்கிக் கடலில் எறிந்துவிடுவார்கள். கப்பல்கள் மிதந்து வந்தாலே சுறா மீன்கள் வாயைப் பிளந்துகொண்டு பின்னால் செல்லுமாம். எப்போது கறுப்பு அடிமைகளை எடுத்து வீசுவார்கள் என்னும் பரிதவிப்போடு. வளர்ச்சியடைந்த மினுமினுப்பான தேசமாக அமெரிக்கா இன்று ஜொலித்துக்கொண்டிருக்கிறது. இன்றைய தேதியில் இங்கே ஒன்றரைக் கோடி கறுப்பர்கள் அடிமைகளாக கட்டுண்டுக் கிடக்கிறார்கள் தெரியுமா?

நியூ யார்க்கில் உள்ள ஏழாம் எண் மசூதியின் மதகுருவாக நியமிக்கப்பட்டபோது, நெகிழ்ந்துபோனார் மால்கம். கண்ணீர்ப் பெருகி உருண்டது. இது உன் திறமைக்குக் கிடைத்த பரிசு. முதுகில் தட்டி வாழ்த்தினார் எலிஜா முகமது. ஒரு தொண்டனாக உள்ளே வந்தாய். இன்று ஒரு மசூதியே உன் கட்டுப்பாட்டில் வந்துவிட்டது. அல்லாவின் கிருபை எப்போதும் உன்னிடம் இருக்கட்டும். பார்த்துக்கொண்டே இரு. அபரிமிதமாக வளரப்போகிறாய் நீ. நினைத்து நினைத்துப் பரவசப்பட்டார் மால்கம்.

மேடையை நோக்கி நகர்த்திவிட்டார் முன்பிருந்த மதகுரு. மால்கம் எக்ஸ், இனி உனக்குப் பேச்சாளர்கள் தேவையில்லை. எத்தனையோ கூட்டங்களில் கலந்துகொண்டிருக்கிறாய். எலிஜாவுடன் பிரத்தியேகமாகப் பல்வேறு உரையாடல்கள் நிகழ்த்தி இருக்கிறாய். இனி உன் உரைகளை நீயே தயாரித்துக்கொள். சரி என்று சொல்லிவிட்டார் மால்கம். எலிஜா இருக்கிறார். அல்லா இருக்கிறார். அவர்கள் பார்த்துக்கொள்வார்கள்.

கார் ஒன்று தந்தார்கள். பக்கத்து நகரங்களுக்கும் இனி நீங்கள் போகவேண்டும். இரவு, பகல் பாராமல் நிறைய பயணங்கள் மேற்கொள்ளவேண்டும். இயக்கத்துக்கு ஆள்கள் சேர்ப்பதோடு நின்றுவிடக் கூடாது உங்கள் பணி. நம்மை விளம்பரப்படுத்த வேண்டும். நாம் யார் என்பதை அனைவருக்கும் தெரியப்படுத்தவேண்டும். அமெரிக்கா முழுவதும் நேஷன் ஆஃப் இஸ்லாம் பரவவேண்டும். அமெரிக்கா மட்டுமல்ல, உலகம் முழுவதுமே.

தனது முதல் உரையை இப்படி ஆரம்பித்தார் மால்கம். நான் மிகச் சாதாரண ஒரு நபர்தான். உங்களைப்போல் ஒருவன். உங்களில் ஒருவன். வெள்ளையர்கள் பற்றிப் பேசுவதற்கு இவன் யார், இவனுக்கு என்ன தெரியும் என்று நீங்கள் நினைக்கலாம். வெள்ளையர்களை நான் அறிவேன். அந்தப் பிசாசுகளும் என்னை அறிவார்கள். எனக்குத் தெரிந்ததை மட்டுமே நான் உங்களிடம் பேசப்போகிறேன். என் வாழ்க்கையை உங்களுக்கு முன் சமர்ப்பிக்கப்போகிறேன்.

மால்கம் எக்ஸ் எப்போது பேசப்போகிறார் என்று விசாரித்து வைத்துக்கொண்டு வர ஆரம்பித்தார்கள் மக்கள். எத்தனை மணியானாலும் பேசிமுடிக்கும்வரை காத்திருந்தார்கள். மால்கம் பேசப்போகிறார் வாருங்கள் என்று அறிந்தவர் தெரிந்தவர்களிடம் சொல்லி கையைப் பிடித்து இழுத்து

வந்தார்கள். இதற்குக் காரணம் எளிமைதான் என்று மால்கமுக்குத் தெரியும். கிறிஸ்தவப் பாதிரிமார்கள்போல் அச்சுறுத்தாமல், புரியாத பதங்களைச் சொல்லி இம்சிக்காமல் யாருக்குப் போய் சேரவேண்டுமோ அவர்களுக்குப் முழுவதுமாகப் புரியும் வகையில் தனது உரைகளைத் தயார் செய்துகொண்டார் மால்கம்.

ஆகவே நண்பர்களே இயக்கத்தில் இணைந்துகொள்ளுங்கள் என்று மால்கம் முடித்துக்கொண்டபோது, கணிசமானவர்கள் கையை உயர்த்தினார்கள். என்னையும் இணைத்துக்கொள்ளுங்கள் என்று எல்லா கையை உயர்த்தியபோது, முதலில் ஆச்சரியப்பட்ட மால்கம், பின்னர் புன்னகை பூத்தார். இஸ்லாத்தில் இணையாமல் குடும்பத்தில் எஞ்சியிருந்தவர் இவர் ஒருவர்தான். இப்போது இவரும் ஒட்டிக்கொண்டுவிட்டார்.

ஒரு முழுமையான மதகுருவாகத் தன்னை வளர்த்தெடுத்துக்கொண்டார் மால்கம். நாடி வருபவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இஸ்லாமிய அறிஞர்களின் பொன்மொழிகளை நயமாக மேற்கோள் காட்டிப் பேசினார். இவருடன் பேசினால் சிறிது நேரம் நிம்மதி கிடைக்கும் என்னும் நம்பிக்கையை ஏற்படுத்தினார்.

நினைத்தபோதெல்லாம் சிகாகோவுக்குப் பயணம் செய்தார் மால்கம். கடவுள்தான் என்றாலும் எட்டாத உயரத்தில் இல்லை எலிஜா முகமது. மிக சகஜமாக அருகில் அமர வைத்துத் தேநீர் பரிமாறினார். கடைத்தெருவுக்குப் போகும்போது உடன் அழைத்துச் சென்றார். வீட்டு வேலைகள் செய்யும்போது பக்கத்தில் இருத்தி வைத்துப் பேசினார். தானே துடைப்பத்தை எடுத்து பெருக்கும்போது, மால்கம் இடையில் புகுந்து தடுக்க நினைத்தால்

அமைதிப்படுத்தினார். தன்னுடைய வேலைகள் எதையும் பிறர் செய்ய அனுமதிக்கவில்லை அவர்.

இடையில் ஷார்ட்டி ஒரு முறை வந்து பார்த்தார். ரெட் நீயா? வாய் பிளந்து நின்றார். மெய்யாகவே மாறிவிட்டாயா? ஏதோ ஒரு மதத்தில் ஈடுபாடு கொண்டதாக யாரோ சொன்னார்கள். சரி சிறிது காலம் போனால் சரியாகிவிடும் என்றுதான் நினைத்திருந்தேன். இப்படித் தலைகீழாக மாறிப்போவாய் என்று கனவிலும் நினைக்கவில்லை. ஏதோ மசூதியில் இருக்கிறாயாமே. உனக்கு எதற்கப்பா இந்த வேலை? சம்பளம் கிடைக்கிறதா? என்ன, என்ன சம்பளம் முக்கியம் இல்லையா? பணம் இல்லாமல் எப்படிப்பா பிழைக்கமுடியும்? இரவு நேரங்களில் என்ன வேலை, போவோமா வெளியில்? என்னது வரமாட்டாயா? மது, சிகரெட்டை விட்டுவிட்டாயா? ரெட் ஏன் இப்படி... ஷார்டியின் வாயைப் பொத்தினார் மால்கம்.

‘இனியொரு முறை அந்தப் பெயரால் என்னை அழைக்கவேண்டாம்.’

‘சரி மால்கம், ஏன் இப்படி...’

‘மன்னிக்கவும் என் பெயர் மால்கம் எக்ஸ்.’

‘எக்ஸ்? எனில், என்ன அர்த்தம்?’

அவர் தோள் மீது கையைப் போட்டுக்கொண்டு மெல்லிய குரலில் பேச ஆரம்பித்தார் மால்கம் எக்ஸ்.

# 8. இரண்டு முகங்கள்

‘அவள் பெயர் என்ன சொன்னீர்கள்?’

மிகச் சாதாரணமாக முகத்தை வைத்துக்கொண்டு கேட்டார் மால்கம்.

‘யார்?’

‘சமீப காலமாக நம் மசூதிக்கு வந்துகொண்டிருக்கிறாரே, ஒரு பெண். அவர் பெயர் என்ன சொன்னீர்கள்?’

‘பெட்டி. பெட்டி எக்ஸ்.’

ஆங் நன்றி என்று சொல்லி நகர்ந்துகொண்டார். சந்தேகம் ஏற்பட்டிருக்குமா? எத்தனையோ பேர் வருகிறார்கள் போகிறார்கள் எல்லாருடைய பெயரையும் நீங்கள் கேட்பதில்லேயே என்று அவர் பதிலுக்குக் கேட்டிருந்தால் நிச்சயம் தடுமாறி இருப்பேன்.

முன்னெப்போதும் ஏற்படாத புதிய தடுமாற்றம் இது. எல்லோரையும்போல் மற்றொரு பெண்ணாக ஏன் இவரை நினைக்க முடியவில்லை? பெட்டி எக்ஸ் என்னும் பெயரை ஏன் இத்தனை முறை உச்சரித்துப் பார்த்து மகிழ்கிறேன்? ஏன் எனக்குள் இத்தனைப் பரவசம்? ஏன் இத்தனை பயம்?

நண்பர்களிடம் விசாரித்து மேலும் பல செய்திகளைத் தெரிந்துகொண்டார். பிறந்தது மிச்சிகனில். வசதிக் குறைவான குடும்பம். அலபாமாவில் ஆரம்பக் கல்வி. தற்சமயம் நியூ யார்க்கில் உள்ள செவிலியர் பள்ளியில் சேர்ந்து படித்துக்கொண்டிருக்கிறார். இயக்கத்தின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்டு

இணைந்துகொண்டிருக்கிறார். இயக்கப் பணிகளில் ஆர்வத்துடனும் துடிதுடிப்புடனும் பங்கேற்றுக்கொள்கிறார். நம் இன மக்களுக்கு ஏதாவது உருப்படியாகச் செய்யவேண்டும் என்று தோழிகளிடம் அடிக்கடிச் சொல்லிக்கொள்வாராம். எந்த வேலை கொடுத்தாலும் மறுப்பதில்லை. இயக்கத்தில் உள்ளவர்கள் நோய்வாய்பட்டால் அருகில் இருந்து கவனித்துக்கொள்கிறார். மொத்தத்தில், மிக நல்ல பெண்.

அவரைப் பார்க்காமலே இருந்துவிடலாம் என்று முயற்சி செய்து பார்த்தார் மால்கம். பெட்டி உள்ளே நுழைந்தால் வெளியில் சென்றுவிடுவார். வழியில் எப்போதாவது அவரைக் காண நேர்ந்தால் கவனத்தை வேறு திசையில் செலுத்திவிடுவார். ஆனால் இந்த முயற்சிகள் பலனளிக்கவில்லை. நேரில் பார்க்கவில்லையே தவிர மனம் முழுக்க பெட்டியே நிறைந்திருந்தார். மேடையில் ஏறினால், கண்கள் பெட்டியைத் தேடிச் சென்றன. உறக்கத்திலும் பெட்டியின் நினைவுகள்.

இன்னொரு தகவல் கிடைத்தது. பெட்டியால் தொடர்ந்து படிக்க முடியவில்லை. பணக் கஷ்டம். நிறுத்திக்கொள்ளலாமா என்று யோசித்துக்கொண்டிருக்கிறார். ஐயோ வேண்டாம் ஏன் படிப்பை நிறுத்திக்கொள்ளவேண்டும்? சத்தம் போட்டுப் பதைபதைப்புடன் கேட்ட மால்கமை, நண்பர்கள் விசித்திரமாகப் பார்த்தார்கள். மால்கம் சுதாரித்துக்கொண்டார். நன்றாகப் படித்துக்கொண்டிருக்கும் பெட்டிக்கு நாம் ஏன் உதவக் கூடாது? முன்போல் இல்லை நாம். நலத்திட்டங்களுக்காகக் கணிசமான அளவில் நிதி திரட்டி வைத்திருக்கிறோம். பெட்டிக்கு அதிலிருந்து சிறு தொகை அளிப்பதில் தவறேதுமில்லையே? ச்சே ச்சே

அதெல்லாம் இல்லை என்று அவர்கள் சொன்னாலும் உள்ளுக்குள் சந்தேகம் கிளம்பியிருக்கலாம்.

இனி மறைத்துப் பயன் இல்லை என்று தோன்றியது மால்கமுக்கு. திருமணம் செய்துகொள்ளத் தடை எதுவும் இல்லை இங்கே. பிறகு ஏன் நான் பயப்படவேண்டும்? எலிஜா முகமதுவின் மனைவி எத்தனைப் பாந்தமாக அவருக்கு உதவி செய்கிறார்? பெட்டியும் அதுபோல் எனக்கு உதவுவாரே? எலிஜாவிடம் பேசிப் பார்க்கலாமா?

ஐயோ! சட்டென்று இரண்டு விஷயங்கள் நினைவுக்கு வந்தன. எலிஜா முகமது இந்தத் திருமணத்தை எதிர்ப்பதற்கு இரண்டு காரணங்கள் இருக்கின்றவே. பெட்டி உயரமானவர். என்னைவிடவும் அவர் உயரமாக இருக்கக்கூடும். எலிஜாவின் திருமண இலக்கணப்படி இது தவறு. ஆண், பெண்ணைவிட உயரமாக இருக்கவேண்டும். இந்த வித்தியாசம் வாழ்க்கையிலும் நீடிக்கவேண்டும் என்பது அவர் கருத்து. ஆணுக்குப் பிறகுதான் பெண். ஆண் சொல்வதைக் கேட்டு பெண் நடந்துகொள்ளவேண்டும். எந்த வகையிலும் தன் கணவரை அவள் மிஞ்சிவிடக் கூடாது. மற்றொன்று, வயது. ஒரு ஆண் தன் வயதில் பாதியோடு ஏழைக் கூட்டினால் கிடைக்கும் எண்தான் அவன் மணந்துகொள்ளும் பெண்ணின் வயதாக இருக்கவேண்டும். இதுவும் இடிக்கிறது. பெட்டியின் பிறந்த ஆண்டு.

எலிஜாவிடம் அனுமதி பெறுவதைக் காட்டிலும் முக்கியமானது பெட்டியிடம் சொல்லி அவள் அனுமதியைப் பெறுவது. என்னவென்று சொல்வது? ஹாலிவுட் திரைப்படங்களில் வருவதுபோல் முட்டிக்கால் போட்டு அமர்ந்து ஒற்றை ரோஜாவை நீட்டி நான் உன்னைக் காதலிக்கிறேன் என்று முணுமுணுக்கவேண்டுமா? ம்ஹூம் அது சாத்தியமில்லை. என்ன நினைத்துக்கொள்வார்

என்னைப் பற்றி? இதற்குத்தான் என் செவிலியர் படிப்பைத் தொடரச் செய்தீர்களா என்று குத்தலாகக் கேட்டுவிட்டால்? எலிஜாவின் முக்கியச் சீடரான நீங்கள் இப்படி நடந்துகொள்வீர்கள் என்று சற்றும் எதிர்பார்க்கவில்லை என்று அதிருப்தி தெரிவித்துவிட்டால்? முடியாது என்று மறுத்துவிட்டால்? அப்படி ஆகாது என்றது உள்மனம். அப்படி ஆகக்கூடாது என்றும் அது சொன்னது.

எப்படி இருந்தாலும் முயன்று பார்ப்பதில் தவறில்லையே? முதலில் எலிஜாவைச் சந்தித்தார். தயங்கித் தயங்கி விஷயத்தைச் சொன்னார். எலிஜா பொறுமையாகக் கேட்டுக்கொண்டார். நல்லது மால்கம். வயதும் உயரமும் உன்னைப் பொறுத்தவரை ஒரு தடையாக இருக்காது என்று நம்புகிறேன். மற்றவர்களைப் போன்றவன் அல்ல நீ. அல்லாவின் விசேஷக் கருணை நிழல் உன் மீது படிந்திருக்கிறது. இயக்கத்துக்கு நீ முக்கியம். அந்தப் பெண்ணை ஒரு முறை அழைத்து வா. அவள் உனக்கு ஏற்றவளா என்பதை நான் கண்டறிந்து சொல்கிறேன்.

எலிஜா உன்னைப் பார்க்க விரும்புகிறார் என்று பெட்டியிடம் சென்று சொல்லமுடியாது. எதற்கு என்று கேட்டால் மறுமொழி அளிக்கமுடியாது. ஆகவே ஓர் உபாயம் செய்தார் மால்கம். தகவல் மட்டும் அனுப்பினார். பெண்கள் அணிக்கு. எலிஜா முகமதுவை அடுத்த வாரம் அனைவரும் சென்று சந்தித்துவிட்டு வாருங்கள். எலிஜாவைப் பார்ப்பதற்கு பல்வேறு அணிகளை மால்கம் அனுப்பிவைப்பது வழக்கம் என்பதால் ஒருவரும் சந்தேகப்படவில்லை. வண்டி ஏற்றி அனுப்பிவிட்டு நகத்தைக் கடித்துக்கொண்டு காத்திருந்தார் மால்கம்.

பெட்டி எக்ஸ் யார் என்று கேட்டு அவரிடம் பிரத்தியேகமாகச் சில வார்த்தைகள் பேசினார் எலிஜா. மால்கமுக்குச் செய்தி

அனுப்பினார். பெட்டி உனக்குச் சரியான ஜோடி. வாழ்த்துகள்.

பறந்து வந்து காரை நெருங்கினார் மால்கம். டெட்ராய்ட்டை நோக்கி கார் விரைந்தது. டெட்ராய்டில் உள்ள ஒரு மசூதியில்தான் வில்ஃப்ரெட் மதகுருவாக நியமிக்கப்பட்டிருந்தார். ஆனால், மால்கம் டெட்ராய்ட் நோக்கி பறந்துகொண்டிருந்தது தனது சகோதரனைப் பார்க்க மட்டுமல்ல. பெட்டியின் வளர்ப்புப் பெற்றோர் அங்கேதான் இருந்தனர். அவர்கள் சம்மதத்தையும் பெறவேண்டியது அவசியம்.

வழியில் ஓரிடத்தில் காரை நிறுத்தினார். எரிபொருள் நிரப்பிக்கொண்டார். அருகில் மாட்டப்பட்டிருந்த தொலைபேசியை நெருங்கினார். பெட்டி எக்ஸின் எண் என்ன? நினைவில் இல்லை. பெட்டி பணிபுரிந்துகொண்டிருந்த மருத்துவமனையைத் தொடர்பு கொண்டார். பெட்டியின் எண்ணை வாங்கிக்கொண்டார். சுழற்றினார்.

‘பெட்டி எக்ஸ்?’

‘ஆம், சொல்லுங்கள்.’

‘நான் மால்கம் எக்ஸ் பேசுகிறன். ஏழாம் எண் மசூதியில்....’

‘உங்களைத் தெரியாமலா? சொல்லுங்கள்.’

‘என்னைத் திருமணம் செய்துகொள்ள உனக்குச் சம்மதா?’

பதிலில்லை. மால்கம் திரும்பவும் சொன்னார். பெட்டி தடுமாறுவதை அவரால் புரிந்துகொள்ளமுடிந்தது. ஐஸ் கட்டியின் மீது திடீரென்று தூக்கிப்போட்டதைப் போன்ற நடுக்கம் அவர் குரலில். நான், நீங்கள், இப்படி திடீரென்று... திக்கினார். திணறினார். சொல்லிவிட்டார்.

‘சரி.’

‘நல்லது. நமக்கு நேரம் அதிகம் இல்லை. உடனடியாக ஒரு விமானத்தைப் பிடித்து டெட்ராய்ட் வந்துவிடு. நாளை நம் திருமணம்.’

பெட்டி, எக்ஸ் வரும்வரை காத்திருந்து அவரை வில்ஃப்ரெட்டின் வீட்டுக்கு அழைத்துச்சென்றார் மால்கம். அறிமுகம் செய்துவைத்தார். நாங்கள் உடனே திருமணம் செய்துகொள்ளவேண்டும். உடனே என்றால் நாளைக்குள். பதிவுத் திருமணம் செய்துகொள்ளும் வழிமுறைகள் என்னென்ன என்று விசாரித்து வைத்துக்கொள். அதைக் கொடு இதைக்கொடு என்று ஆயிரத்தெட்டு விஷயங்கள் கேட்டு அவர்கள் நச்சரிக்கக் கூடாது. அடுத்த மாதம் வா, அடுத்த வாரம் வா என்று தட்டிக்கழிக்கக் கூடாது. போன கையோடு கையெழுத்துப் போட்டுவிட்டு வந்துவிடவேண்டும். புரிந்ததா?

பெட்டியின் கையைப் பிடித்து காருக்கு அழைத்துச்சென்றார். பெட்டியின் வளர்ப்புப் பெற்றோரைச் சந்தித்துப் பேசினார். ஒரு சுருக்கமான அறிமுகம். சில ஆறுதல் வார்த்தைகள். நம்பிக்கை அளிக்கும் உறுதிமொழிகள். முடிந்தது. எங்களுக்கு மனப்பூர்வமான சம்மதம் என்றார்கள் அவர்கள். மிக்க நன்றி. பெட்டியை அழைத்துக்கொண்டு கிளம்பிவிட்டார் மால்கம்.

மறுநாளே இண்டியானாவுக்குப் பறந்துவிட்டார்கள். உடனுக்குடன் திருமணத்தைப் பதிவு செய்யும் ஒரே இடம் இண்டியானாதான் என்பதால் அங்கே. எல்லாம் தயாராக இருந்தது. விண்ணப்பத்தைப் பூர்த்தி செய்தார்கள். மதம் என்று எழுதப்பட்டிருந்த இடத்தில் முஸ்லிம் என்று எழுதி இருவரும் கையெழுத்திட்டார்கள். பெட்டியின் கைகளைப்

பிடித்தபடி வெளியில் வந்தபோது சட்டென்று நினைவுக்கு வந்தது. படித்ததா அல்லது திரைப்படத்தில் பார்த்ததா என்று நினைவில் இல்லை. ஒரு சுழற்சியுடன் திரும்பி பெட்டியை தன் இரு கைகளால் அப்படியே தூக்கிக்கொண்டார். திகைப்பில் விரிந்த பெட்டியின் கண்களை மிக நெருக்கத்தில் கண்டு ரசித்தார்.

பெட்டியை அழைத்துக்கொண்டு நியூ யார்க் திரும்பியபோது ஏழாம் எண் மசூதியில் உள்ள பலரும் புருவத்தை உயர்த்தினார்கள். ஒருவருக்கும் தெரியப்படுத்தாமல் இத்தனை ரகசியமாக இவர் திருமணம் செய்துகொள்ளவேண்டுமா என்னும் வருத்தம் அவர்கள் முகத்தில் அப்பட்டமாகத் தெரிந்தது. மால்கம் நம்பிக்கைத் துரோகம் செய்துவிட்டதாக மதகுருமார்கள் முணுமுணுத்துக்கொண்டார்கள். மால்கம் பதில் எதுவும் தரவில்லை. குழுமியிருந்த பெண்கள் பெட்டியிடம் மகிழ்ச்சியுடன் பேசிக்கொண்டிருந்ததைக் கண்டதும் ஒரு கணம் அப்படியே நின்றுவிட்டார். அவர்களுள் ஒரு பெண் பெட்டியின் கையைப் பிடித்து இழுத்தார்.

‘அட, நீ நினைத்ததைப் போலவே இவரை அடைந்துவிட்டாயே!’

சில நிமிடங்கள் கழித்தே அவருக்குப் புரிந்தது. அடிக்கள்ளி! இத்தனை காலமாக நீயும் என்னைக் காதலித்துக்கொண்டுதான் இருந்தாயா?

1957 ஏப்ரல் மாதத்தில் ஒரு நாள். ஹார்லெம்மில் உள்ள அந்தச் சிறிய தெருவில் அன்று கூட்டம் கூடிவிட்டது. ஒரே கூச்சல். உன்னை வெட்டுகிறேனா இல்லையா பார்? பதிலுக்கு ஒரு மிரட்டல். உன்னை இன்று போகவிட்டால்தானே நாளை வந்து வெட்டுவாய்? இதற்கு

ஒரு சவடால் மறுமொழி. என் மீது கையை வைத்துவிடுவாயா நீ? அவர்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொண்டார்கள். சத்தம் போட்டு ஏசிக்கொண்டார்கள். நித்தம் நித்தம் இதுபோல் பல நூறு சண்டைகள் ஹார்லெமில் நடைபெறும் என்றாலும் ஒவ்வொரு சண்டையைப் பார்க்கவும் மறக்காமல் கூட்டம் கூட்டிவிடும். இந்த முறை ஏதாவது சுவாரஸ்யமாக நடக்காதா என்னும் எதிர்பார்ப்புடன்.

வரும்போதே லத்தியைச் சுழற்றிக்கொண்டுதான் வந்தனர் காவல்துறையினர். வெறுப்பும் கோபமும் கலந்த குரலில் அவர்கள் கத்தினார்கள். கறுப்பு அடிமைகளே, தினமும் ஏன் இப்படி அடித்துக்கொண்டு சாகிறீர்கள்? எங்களுக்கு வேறு வேலை இல்லையா? உடனே கலைந்து செல்லுங்கள் இல்லாவிட்டால் பிய்த்து எடுத்துவிடுவேன். நிஜமாகவே பிய்த்து எடுக்கக்கூடியவர்கள்தாம் என்று கறுப்பர்களுக்குத் தெரியும். ஆகவே கலைய ஆரம்பித்தார்கள். சண்டை போட்டிருந்த நபர்கள்கூட பிரிந்து நகர்ந்துவிட்டார்கள். இருவரைத் தவிர.

‘உங்களுக்குத் தனியாகச் சொல்லவேண்டுமா? கலைந்துசெல் அடிமையே.’

ஒருவர் யோசித்துக்கொண்டே நின்றுகொண்டிருந்தார். மற்றொருவர் கையைக் கட்டிக்கொண்டார்.

‘இது சாலை. இங்கே நிற்பதற்கு எங்களுக்கு உரிமை இல்லையா?’

‘ஹா, உரிமை பற்றியெல்லாம் இந்த அடிமை பேசுகிறதே. வேடிக்கைதான். உன்னை அடிப்பதற்குள் ஓடிவிடு.’

மாட்டேன் என்பதுபோல் இறுக்கமாக

நின்றுகொண்டிருந்தார் அவர். அந்தக் காவலாளி அவரை நெருங்கினார்.

‘நீ யார்?’

‘ஜான்சன் ஹிண்டன்.’

‘பெயரைச் சொன்னால் தெரிந்துகொள்ளும் அளவுக்கு நீ பெரிய ஆள் இல்லை. எங்கிருந்து வருகிறாய்?’

‘ஏழாம் எண் மசூதியில் இருந்து.’

‘ஆ, அந்தக் கறுப்பு முஸ்லிம் தீவிரவாதிகளுள் ஒருவனா நீ? இத்தனைத் திமிர் ஒரு சாதாரண கறுப்பனிடம் இருக்காது என்று அப்போதே நினைத்தேன். உன் விதி எங்களிடம் வந்து மாட்டிக்கொண்டாய்.’

ஜான்சன் ஹிண்டனை நெருங்கினார் அந்தக் காவலாளி. அவர் கைகளை அழுத்தமாகப் பிடித்துக்கொண்டார். ம், வந்து இவனை மடக்குங்கள் என்று அவர் பின்னால் திரும்பிக் குரல் கொடுப்பதற்குள் நான்கைந்து காவலாளிகள் விரைந்து வந்தனர். ஜான்சன் திமிற ஆரம்பித்தார். இதையே சாக்காக வைத்துக்கொண்டு லத்தியை உருவினார்கள் காவலாளிகள். ஐயோ என்று தலையைப் பிடித்துக்கொண்டு அப்படியே உட்கார்ந்துவிட்டார் ஜான்சன். யார் எங்கிருந்து தாக்குகிறார்கள் என்றே தெரியவில்லை. தலையை கைகளால் மூடிக்கொள்வதற்குள் மார்பில் அடி விழுந்தது. கைகளில். கால்களில். ரத்தத்தால் சட்டை நனைந்துபோனதை அவரால் உணரமுடிந்தது. கண்கள் இருட்ட அப்படியே கீழே விழுந்தார். மேலும் இரண்டு அடிகள் அடித்தபிறகே அவரைத் தூக்கி ஜீப்பில் போட்டார்கள் காவலாளிகள்.

காவல் நிலையத்தின் வாசலில் திடீரென்று சலசலப்பு. முதலில் ஒரு கார் வந்து நின்றது. பின்னாலேயே இன்னொன்று. அதன் பின்னால் மற்றொன்று. அதற்குப் பிறகு எத்தனை கார்கள் வந்து சேர்ந்தன என்று எண்ண முடியவில்லை. பெருத்த சத்தத்துடன் கதவை மூடியபடி கீழே இறங்கி வந்தார் மால்கம் எக்ஸ். கறுப்பு நிற கோட், சூட், கறுப்புக் கண்ணாடி. கண்கள் முழுவதும் அனல் போல் கோபம். வாசலில் காவல் காத்துக்கொண்டிருந்த அந்த அதிகாரி தன்னிச்சையாக எழுந்து நின்றார். யார் நீங்கள், யார் நீங்கள்? எங்கே வந்தீர்கள்? அந்தக் காவலாளி நிச்சயம் மால்கமின் பதிலை எதிர்ப்பார்க்கவில்லை. சம்பிரதாயமாகக் கேட்கவேண்டுமே என்பதற்காக மட்டுமே கேட்டு வைத்தார்.

கதவைப் படீரென்று திறந்தபடி மால்கம் உள்ளே நுழையும்போதே வாசலில் கூட்டம் கூடிவிட்டது. இத்தனை வாகனங்கள் ஒருசேர வந்து அவர்கள் பார்த்தது இல்லை. அதுவும் காவல் நிலையத்தை யார் இப்படிப் படையெடுக்கப்போகிறார்கள்? ஆர்வத்துடன் வந்து எட்டிப் பார்த்தார்கள். காரை விட்டு இறங்கிக்கொண்டிருந்த அத்தனை பேருமே கறுப்பர்கள் என்பதைக் கண்டுகொண்ட பிறகு ஆச்சரியம் பன்மடங்கு கூடியது. யாரோ ஒரு மூதாட்டி ஒரு இளைஞரைச் சுட்டிக்காட்டினார். அதோ, அந்த நபரை நான் மசூதியில் பார்த்திருக்கிறேன். யார், யார்? வெள்ளை சூட் அணிந்திருக்கிறாரோ, அதோ அவர். வேறு சிலரும்கூட அதையே சொன்னார்கள். அங்குள்ளவர்களில் மூன்று நான்கு பேரைப் பொதுக்கூட்டங்களில் கவனித்திருக்கிறேன்.

ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாக வீதியில் திரண்டுவிட்டார்கள். தங்களுக்குள் மெல்லிய குரலில்

கிசுகிசுத்துக்கொண்டார்கள். மிகவும் சாந்தமாக மதப்பிரசாரத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தவர்கள் அல்லவா இவர்கள்? நாம் வரும்போது நாற்காலியை இழுத்துப் போடுவார்கள். புன்சிரிப்புடன் வரவேற்று உள்ளே அழைத்துச் செல்வார்கள். அருகில் வந்து விசாரிப்பார்கள். இவர்களுக்கு ஒரு தலைவர் இருந்தாரே. அவர் பெயர் என்ன, ஆங் மால்கம் எக்ஸ். அவர் எங்கே? அவரும்கூட வந்திருக்கிறாரா? காவல்துறையில் அவர்களுக்கு என்ன வேலை? ஏன் இத்தனைக் கோபத்துடன் படபடப்புடனும் அவர்கள் காத்துக்கொண்டிருக்கிறார்கள்?

மேஜையின் மீது சாய்ந்திருந்த அந்த அதிகாரியை நெருங்கினார் மால்கம். எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்தார். ஒரு கையால் கண்ணாடியைச் சரிசெய்தபடி அந்த அதிகாரியைப் பார்த்தார்.

‘ஜான்சன் ஹிண்டன் எங்கே?’

‘யார், யார்? அப்படி ஒருவரும் இங்கே இல்லையே.’

கோபத்துடன் ஏதோ பேச வந்த தன் நண்பர்களை சைகையால் அடக்கினார். மீண்டும் அந்த அதிகாரியிடம் திரும்பினார்.

‘ஜான்சன் ஹிண்டன் எங்கே?’

அந்தக் குரலில் தொனித்த கடுமையை அந்த அதிகாரியால் உணர முடிந்தது. அந்த அறை முழுவதும் நிலவியிருந்த அசாதாரணமான அமைதி அவர் பயத்தை தூண்டிவிட்டது. ஆனாலும் தன் முன்னால் அமர்ந்திருப்பது ஒரு கறுப்பன் என்னும் நினைப்பை அவரால் உதறித்தள்ள முடியவில்லை. ஒரு கறுப்பன் என் முன்னால் வந்து இப்படி அமர்வதா? கால் மேல் கால் போட்டுக்கொண்டு இப்படித்

திமிர்த்தனமாகக் கேள்வி கேட்பதா? அப்போதுதான் இன்னொரு விஷயமும் அவருக்கு உரைத்தது. வாசலில் காவல் காத்துக்கொண்டிருந்த காவலாளி உள்பட ஏன் எல்லோரும் இப்படி உறைந்து போய் நின்றுகொண்டிருக்கிறார்கள். வேறு யாராவது இப்படி அத்துமீறி நுழைந்திருந்தால் இந்த நேரத்துக்குள் அவனை கிழித்து எறிந்திருப்பார்களே. எனில், என்னைப் போலவே அவர்களையும் பயம் தாக்கியிருக்கிறதா? யார் இந்த மனிதன்?

குரலில் நடுக்கத்தைக் காட்டக்கூடாது என்றுதான் அவர் விரும்பினார். முடியவில்லை.

‘நீங்கள் யார்?’

‘மால்கம் எக்ஸ்.’

இந்தப் பெயர் அவருக்குத் தெரிந்திருந்தது. ஒரு நிமிடம் எழுந்து நிற்கலாமா என்றுகூட யோசித்தார் அவர். கறுப்பு முஸ்லிம்களின் தலைவர். இளைஞர்களை ஈர்த்து வளைத்துக்கொண்டவர். பொதுக்கூட்டங்களில் பேசும்போது இவர் வெளிப்படுத்திய ஆவேசத்தைக் கவலையுடன் கண்டறிந்து வந்து சொல்லியிருக்கிறார்கள் உளவாளிகள். நேஷன் ஆஃப் இஸ்லாம் இந்த அளவுக்கு இன்று பரவியிருப்பதற்குக் காரணம் இந்த எக்ஸ். எருமைகளைப்போல் உறங்கிக்கொண்டிருந்த கறுப்பர்களை உசுப்பி உரிமை கொடு, ஒதுக்கீடு கொடு, அங்கீகாரம் கொடு என்று கேட்க வைத்தவர் இந்த எக்ஸ். கட்டுக்கட்டாகக் குற்றச்சாட்டுகள் உள்ளன இவர் மீது. என்ன செய்யலாம்?

‘ஹிண்டன் இங்கேதான் இருக்கிறான் என்று எனக்குத் தெரியும். அவனை நீங்களாகவே அழைத்துவந்தால்

நல்லது.’

அந்த அதிகாரி எழுந்துகொண்டார். தொலைவில் ஒடுங்கிப்போய் நின்றுகொண்டிருந்த காவலாளியிடம் சைகையில் ஏதோ சொன்னார். அடுத்த சில விநாடிகளுக்குள் ஜான்சன் ஹிண்டன் அழைத்துவரப்பட்டார். அவரைப் பார்த்தும் மால்கமின் கண்கள் சிவந்தன. ஆவேசத்துடன் அந்த அதிகாரியிடம் திரும்பினார்.

‘என்ன செய்து வைத்திருக்கிறீர்கள் இவனை? ஏன் இப்படி ரத்தத்தோடு இருக்கிறான்?’

அந்த அதிகாரி தலையைக் கவிழ்த்துக்கொண்டார்.

ஆள்காட்டி விரலை நீட்டி எச்சரித்தார் மால்கம்.

‘இப்போதே, இந்த நிமிடமே இவனை மருத்துவமனைக்குக் கொண்டு செல்லவேண்டும்.’

காவல் நிலையத்தைவிட்டு அவர்கள் வெளியேறுவதற்குள் வெளியில் இருந்தவர்கள் கணக்குப் போட்டு முடித்திருந்தார்கள். அப்பாடி, மொத்தம் ஐம்பது கார்கள். உள்ளே என்ன நடந்திருக்கக்கூடும் என்பதை அவர்களால் உணரமுடிந்தது. சற்று முன்னால் காவலாளிகள் அடித்துத் துவைத்து இழுத்துச் சென்ற அதே கறுப்பனை பயபக்தியுடன் பிடித்து ஆம்புலன்ஸில் ஏற்றுவதை அவர்கள் பார்த்தார்கள்.

அவர்களால் ஆச்சரியத்தை அடக்கமுடியவில்லை. இதுபோல் இப்படி ஒரு சம்பவம் நடந்ததை நீ அறிவாயா? ஒவ்வொருவராகக் கேட்டுக்கொண்டார்கள். ஒருவருக்கும் நினைவில்லை. ஒரு வெள்ளைக்காரக் காவல் அதிகாரியை ஒரு கறுப்பர் மிரட்டிப் பணியவைத்த கதையை அவர்கள்

இதுவரை கேட்டதில்லை. தங்கள் கணவரை, சகோதரர்களை, நண்பர்களை, உறவினர்களைக் காவலாளிகள் அடித்து உதைத்து சித்ரவதை செய்த கதைகளை மட்டுமே அவர்கள் அறிந்துவைத்திருந்தார்கள். காரணம் எதுவும் சொல்லாமலேயே சிறையில் கறுப்பர்களை அடைத்து வைத்தக் கதைகளை அவர்கள் அறிவார்கள். என் கணவரை விட்டுவிடுங்கள் என்று அதிகாரியிடம் விழுந்து புரண்டு கெஞ்சிய சம்பவங்களை அவர்களால் நினைவுகூர முடிந்தது. தற்கொலை செய்துகொண்டுவிட்டார் என்று சொல்லி இறந்துபோனவர்களின் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டதை அவர்களால் மறக்க முடியவில்லை.

முதல் முறையாக ஒரு மாற்றம். மால்கம் எக்ஸ் சாதித்துக்காட்டியிருக்கிறார். ஐம்பது கார்களில் வந்து இறங்கி அந்தப் பகுதியை கிடுகிடுக்கச்செய்துவிட்டார் மால்கம் எக்ஸ். பொதுக்கூட்டத்துக்கு மறக்காமல் உங்கள் நண்பர்களையும் அழைத்துவாருங்கள் என்று நம்மிடம் பவ்யமாக வந்து நின்ற அதே மால்கம் எக்ஸ் ஒரு புயலாக மாறி உலுக்கியெடுத்திருக்கிறார்.

மால்கம் எக்ஸ், எங்களையும் உங்களுடன் தயவு செய்து இணைத்துக்கொள்ளுங்கள். நம் இன மக்களைக் காப்பாற்ற ஒருவரும் இல்லை இங்கே. உங்கள் துடிதுடிப்பும் துணிச்சலும் எங்களைப் பிரமிக்க வைக்கின்றன. உங்கள் நோக்கத்தை நாங்கள் இதுகாறும் புரிந்துகொள்ளாமல் போனதற்கு மன்னியுங்கள். உங்கள் அழைப்புகளைத் தட்டிக்கழித்தற்கு மன்னியுங்கள். உங்கள் தேவையை நாங்கள் மானசீகமாக உணர ஆரம்பித்துவிட்டோம். எங்களை அறியாமலேயே உங்களை ரசிக்க ஆரம்பித்துவிட்டோம். உங்களைப் போலவே நடக்க,

உங்களைப் போலவே பேசப் பழகிக்கொண்டிருக்கிறார்கள் எங்கள் இளைஞர்கள். உங்களைப் போலவே அவர்களாலும் மாற முடிந்துவிட்டால் எத்தனை அற்புதமாக இருக்கும். மால்கம் எக்ஸ், எங்களை வழிநடத்துங்கள். எங்களைவிட்டு ஒரு நொடியும் விலகிச்செல்லாதீர்கள்.

வெள்ளையர்களின் எண்ணங்களிலும்கூட மால்கம் எக்ஸ் அதிரடியாக நுழைந்திருந்தார். ஹார்லெம்மில் இருந்து செய்தி பயணம் செய்துகொண்டிருந்தது. வெள்ளையர்கள் பயத்துடன் கிசுகிசுத்துக்கொண்டார்கள். மால்கம் எக்ஸ் என்னும் பெயரை அவர்கள் அச்சத்துடன் தயங்கித் தயங்கி உச்சரித்தார்கள். கறுப்பினத் தலைவனாக மால்கம் எக்ஸ் உருவெடுத்துவிட்டதை சொல்லிச் சொல்லி மாய்ந்துபோனார்கள். மால்கம் தனி நபர் அல்ல; ஓர் இயக்கம் என்பதை அவர்களால் உணரமுடிந்தது.

தெருமுனையில் நின்று பேசிக்கொண்டிருந்தது போக, பத்திரிகைகளிலும் செய்திகள் வெளிவர ஆரம்பித்தன. கவனம், கவனம், கவனம். அபாயகரமான எண்ணிக்கையில் கறுப்பு முஸ்லிம்கள் நம்மிடையே பெருகிக்கொண்டிருக்கிறார்கள். இந்தப் பெயர்களை குறித்து வைத்துக்கொள்ளுங்கள். எலிஜா முகமது. நேஷன் ஆஂப் இஸ்லாம். மால்கம் எக்ஸ். நம்மைத் தாக்க வந்திருக்கும் மூன்று பெரும் புயல்களின் பெயர்களே இவை. குறிப்பாக, மால்கம் எக்ஸ். மிகவும் அபாயகரமான மனிதர் இவர். சமீபத்தில், ஹார்லெமில் உள்ள காவல்துறைக்குள் தன் அடியாள்களுடன் நுழைந்து அட்டகாசம் செய்திருக்கிறார். அங்குள்ள காவல்துறை உயர் அதிகாரியை மிரட்டி கைதிகளை விடுதலைச் செய்து அழைத்துச் சென்றிருக்கிறார். பெரும் பண பலமும், ஆள்கள் பலமும் அவர்களிடம் உண்டு. தலையை வெட்டிக்கொண்டு வா

என்று மால்கம் உத்தரவிட்டால் செவ்வனே செய்து முடிக்க ஒரு படை காத்துக்கொண்டிருக்கிறது.

கவனித்துக்கொண்டே இருங்கள். மிகப் பெரிய அளவில் இனக்கலவரங்கள் வெடிக்க இருக்கின்றன. யாரோ ஒருசிலர் எப்போதோ செய்த சில தவறுகளுக்காக, வெள்ளையர்கள் தாக்கப்படப்போகிறார்கள். கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கறுப்பு முஸ்லிம்கள் திரண்டுகொண்டிருக்கிறார்கள். மாபெரும் ஆயுதங்கள் அவர்களிடத்தில் உண்டு. ஆவேசமான கோட்பாட்டை நெஞ்சங்களில் சுமந்துகொண்டிருக்கிறார்கள். மால்கம் எக்ஸ் அவர்களுக்குத் தீ வைத்துவிட்டார். காட்டுத் தீயாக அது இன்று வளர்ந்து நிற்கிறது. வெள்ளையர்களே, உங்களை எச்சரிப்பது எங்கள் கடமை. இஸ்லாமியர்களிடம் ஜாக்கிரதையாகப் பழகுங்கள். கறுப்பர்களை விலக்கி வையுங்கள். ஒருவன் கறுப்பாகவும் இருந்து முஸ்லிமாகவும் இருந்துவிட்டால் அவன் நம் எதிரி என்று இனம் கண்டுகொள்ளுங்கள்.

# 9. பார், பயம் கொள்!

திருமணம் முடிந்து இரண்டு ஆண்டுகள் கழித்து 1958-ம் ஆண்டு, முதல் மகள் அட்டல்லா பிறந்தாள். இரண்டாண்டு இடைவெளிக்குப் பிறகு மீண்டும் ஒரு பெண் குழந்தை. க்யூபிலா. இவர்களுக்குப் பிறகு பிறந்த இருவரும் (இலிஷா, அமிலா) பெண் குழந்தைகளே. பதிவாளர் அறையில் இருந்து பெட்டியை இரு கரங்களாலும் சுமந்து வந்த அந்த தினத்தை மால்கம் அழுத்தமாகத் தன் நினைவுகளில் தேக்கி வைத்திருந்தார். அப்போது எடுத்துக்கொண்ட உறுதிமொழி இது. இதே தீவிரத்துடன் பெட்டியை என்றும் காதலிப்பேன். பெட்டி என் மனைவி மட்டுமல்ல. என்றென்றைக்கும் நிரந்தரமான என் சிநேகிதியும்கூட.

மதப்பணிகள் தடையில்லாமல் நடந்துகொண்டிருந்தன. மால்கம் சந்திக்க வரும்போதெல்லாம் எலிஜா முகமது முகம் முழுவதும் மலர்ச்சியுடன் வரவேற்றார். உட்கார வைத்து உபசரித்தார். பெட்டி குறித்தும் குழந்தைகள் குறித்தும் விசாரித்தார். இயக்கத்தின் மேன்மைக்காக, தேனீ போல் ஓயாமல் மால்கம் சுற்றிக்கொண்டிருப்பதை அவர் அறிவார். தவிரவும், மால்கம் பற்றி நல்ல விதமாக எல்லோரும் பேசிக்கொண்டதைக் கேட்டபோது பூரித்துப்போனார். என் மாணவன். நான் கண்டெடுத்த ரத்தினக் கல். ஜொலிக்காமல் எப்படி இருக்கும்?

நேஷன் ஆஃப் இஸ்லாமைத் தெரியாதவர்களே இருக்கமுடியாது என்னும் அளவுக்கு அந்தப் பெயர் பிரபலமாகியிருந்தது. நல்லவிதமாகவும். கெட்ட விதமாகவும். இதனால் மால்கம் சிறிது பாதிக்கப்பட்டது உண்மை. தீவிரவாதிகள் என்று வெள்ளையர்கள்

முன்வைத்த ஆவேசமான குற்றச்சாட்டால் ஏற்பட்ட கலக்கம் அல்ல அது. இதுபோன்ற விமரிசனங்களை அவர் முன்கூட்டியே எதிர்பார்த்திருந்தார்.

இயக்கத்தின் மூலமாக மாபெரும் கறுப்புப் படையை அணிதிரட்டிக்கொண்டிருக்கிறோம். வெள்ளையர்களுக்கு எதிராகப் பட்டவர்த்தனமாகக் கூக்குரல் எழுப்பிக் கொண்டிருக்கிறோம். பிசாசுகள், பிசாசுகள் என்று மேடைக்கு மேடை ஏசிக்கொண்டிருக்கிறோம். கொதிக்காதா அவர்கள் ரத்தம்? ஜான்சன் ஹிண்டன் போன்றவர்கள் பாதிக்கப்படும்போது, முன்னால் வந்து நின்று குரல் எழுப்பிக்கொண்டிருக்கிறோம். தெருச்சண்டை, இனக்கலவரம் என்று செய்தித்தாள்கள் வருணித்துக்கொண்டிருந்த இடங்களுக்குச் சென்று, உண்மையைக் கண்டறிந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி வழங்க முயற்சி செய்துகொண்டிருக்கிறோம். கண் முன்னால் கறுப்பர் ஒருவருக்கு அநீதி இழைக்கப்பட்டால் பார்த்துக்கொண்டு சும்மா நிற்காமல் மோதுகிறோம். வார்த்தைக்கு வார்த்தை. அடிக்கு அடி.

பிரச்னை அதுவல்ல. அச்சத்தின் காரணமாக வெள்ளையர்கள் கட்டவிழ்த்துவிட்ட வதந்திகளை கறுப்பர்களில் ஒருசிலரே கூட அப்போது நம்ப ஆரம்பித்திருந்தார்கள். இதைத் தடுத்து நிறுத்தவேண்டியது அவசியம். ஓர் இயக்கத்தின் வளர்ச்சி வதந்திகளால் சிறிதளவும் பாதிக்கப்படக் கூடாது. மால்கம் ஒரு முடிவுக்கு வந்தார். பத்திரிகைகள்தாமே நம்மைப் பற்றிய வதந்திகளைப் பரப்புகின்றன? அந்த வதந்திகளை முறியடிக்கும் வகையில் நாமே ஒரு பத்திரிகையைத் தொடங்கினால் என்ன? எலிஜாவிடம் இதுபற்றிப் பேசினார். அவருக்கும் அது நல்ல யோசனையாகப் பட்டது.

சொந்தப் பத்திரிகை (Mohammad Speaks) வரும் வரை காத்திராமல், வெளிப்பத்திரிகைகளுக்கு எழுத ஆரம்பித்தார் மால்கம். ஹார்லெமில் இருந்து வெளியான ஆம்ஸ்டர்டாம் நியூஸ். லாஸ் ஏஞ்செல்ஸில் இருந்து வெளியான ஹெரால்ட் டெஸ்பேட்ச். ஒடுக்கப்பட்டவர்களின் உண்மையான நிலையையும், நேஷன் ஆ்ஃப் இஸ்லாத்தின் பணிகளையும் பற்றித் தொடர்ந்து எழுதினார். பழைய புகைப்படக் கருவி ஒன்றை வாங்கி வைத்துக்கொண்டார். புகைப்படங்கள் எடுக்கக் கற்றுக்கொண்டார். இயக்கத்தின் செயல்பாடுகள் பற்றியும் மதகுருமார்களின் உரைகள் பற்றியும் விரிவாகச் சிந்தித்துக் கட்டுரைகள் எழுதினார்.

வாசித்த வெள்ளையர்கள் கிடுகிடுத்துப் போனார்கள். ஆவேசம் பொங்கும் அவர் உரைகளைக் கேட்டபோது நடுங்கினார்கள். ஆள்காட்டி விரலை உயர்த்தியபடியே பேசிக்கொண்டிருந்தார் மால்கம் எக்ஸ். ஒரு பெண்ணை பாலியல் பலாத்காரம் செய்துமுடித்துவிட்டு, என்னை நீ வெறுக்கிறாயா என்று கேட்டால் அந்தப் பெண் என்ன சொல்வார்? கடித்துத் தின்பதற்கு முன்னால் செம்மறி ஆட்டைப் பார்த்து ஓர் ஒநாய், என்னை வெறுக்கிறாயா என்று கேட்டால் அந்த ஆடு என்ன பதில் சொல்லும்? இதோ பட்டவர்த்தனமாக அறிவிக்கிறேன். எந்தவிதக் குழைவும் இல்லாமல் வெளிப்படையாகப் படீரென்று உடைக்கிறேன். ஆங்கிலேயர்களை நான் வெறுக்கிறேன். முழுமுற்றாக வெறுக்கிறேன். தன்னிச்சையான வெறுப்பு அல்ல. வெறுப்பு உற்பத்தி செய்த வெறுப்பு இது.

Fruit of Islam பற்றிய செய்திகள் வெளிவந்தபோது முழு அதிர்ச்சியைச் சந்தித்தது அமெரிக்கா. அதாவது, வெள்ளை அமெரிக்கா. செய்தி இதுதான். நேஷன் ஆ்ஃப் இஸ்லாம் அடியாள் படை ஒன்றை வைத்திருக்கிறது. Fruit of Islam.

கட்டான உடல்வாகு கொண்ட கறுப்பு இளைஞர்களைக்கொண்டு கட்டமைக்கப்பட்ட அதிரடிப் படை. இவர்களுக்கு ஜூடோ, கராத்தே உள்ளிட்ட சண்டைக் கலைகள் கற்பிக்கப்படுகின்றன. நவீனஆயுதங்களைக் கையாள்வதற்கு பயிற்சியளிக்கப்படுகிறது. மிகவும் ரகசியமாக இயங்கிக்கொண்டிருக்கிறது இந்தப் படை. வெள்ளையர்களைக் கண்டவுடன் தாக்க மால்கம் எக்ஸ் இவர்களுக்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அப்படியா, அப்படியா என்று மைக்கைத் தூக்கிக்கொண்டு ஓடிவந்தவர்களை அமர வைத்து சாந்தமாகத்தான் மால்கம் விளக்கினார். தாக்குதலுக்கான படை அல்ல அது. தற்காத்துக்கொள்வதற்கான இயக்கம்தான். திரும்பத் திரும்ப அழுத்தமாகச் சொன்னார். கத்தியின் வீச்சுபோல் மிகத் தெளிவாகத்தான் சொன்னார். ஆனால் பத்திரிகைகள் அந்தச் செய்திகளை அப்படியே வெளியிட்டுவிடவில்லை. வதந்திகளின் உதவியால் கட்டப்பட்டிருந்த அந்த விசித்திரமான மாளிகையை உடைத்து நொறுக்க அவர்கள் தயாராக இல்லை. வெறும் தற்காப்புப் படைதானாம் என்று எல்லாவற்றுக்கும் முற்றுப்புள்ளி வைக்க அவர்கள் தயாராக இல்லை. ஆகவே மேலும் திரித்து எழுதினார்கள். அச்சமூட்டும் சொற்பிரயோகங்களை உபயோகித்தார்கள். மால்கம் எக்ஸ் ஒரு தலைமைத் தீவிரவாதி. நேஷன் ஆ ்ப் இஸ்லாம் வெறுப்பில் விளைந்த பெரும் பயங்கரவாத இயக்கம். ஆகவே, என் அருமை அமெரிக்கா, கறுப்பு முஸ்லிம்களிடம் நெருங்காதீர்கள்.

மால்கமுக்குப் புரிந்தது. இவர்களிடம் மன்றாடிப் புரியவைக்க முடியாது. இனி பிரசாரம் மக்களிடம் மட்டும்தான். பத்திரிகையாளர்களிடம் இல்லை. எடுத்தவுடன் உண்மையைக் கொன்றுவிட்டுத்தான்

ஒவ்வொரு பத்திரிகையாளனும் எழுத ஆரம்பிக்கிறான் போலும். வேடிக்கையாகத் தன் நண்பர்களிடம் இப்படி ஒரு முறை கூறினார் மால்கம். Mary had a little lamb என்று நான் சொன்னால்கூட ஆடுகளுக்கு எதிராக மால்கம் அதிரடிப் பேச்சு, மாபெரும் சதி என்று கொட்டை எழுத்துகளில் எழுதிவிடுகிறார்கள். என்னவென்று சொல்ல?

நீங்கள் நடத்துவது தீவிரவாத இயக்கமா என்று கேட்கப்பட்டபோது, சூடாக ஒரு கப் டீ சாப்பிடுகிறீர்களா என்று மட்டுமே கேட்டார். வானொலியில் இருந்தும் தொலைக்காட்சியில் இருந்தும் ஓடிவந்தார்கள். அமெரிக்காவை உலுக்கியெடுக்கும் படு பயங்கர அமைப்பு பற்றிய எக்ஸ்க்ளூஸிவ் ஒலிபரப்பு. வெள்ளையர்களை அச்சுறுத்திக்கொண்டிருக்கும் கறுப்பு முஸ்லிம் தலைவரான மால்கம் எக்ஸ் என்ன சொல்கிறார் என்று கேட்போம். நேஷன் ஆ◌ஃப் இஸ்லாம் குறித்த ஸ்கூப் நியூஸ் இதோ. மால்கம் எக்ஸ் பற்றிய ரகசியங்கள் அம்பலம். இயக்கத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட முக்கியத் தலைவரின் பேட்டி இன்று இரவு பத்து மணிக்கு. காணத் தவறாதீர்கள்.

அலட்டிக்கொள்ளவேயில்லை மால்கம். உளவாளிகளை அனுப்பியது காவல்துறை. மால்கம் எக்ஸ் பற்றிய செய்திகளைத் திரட்டிக் கொண்டுவா. இயக்கத்தின் செயல்பாடுகள் பற்றிய பின்னணி விவரங்கள் வேண்டும். எங்கிருந்து இவர்களுக்குப் பணம் கிடைக்கிறது? எலிஜா முகமதுவின் செல்வாக்கு எப்படிப்பட்டது? எங்கெல்லாம் பரவியிருக்கிறார்கள்? எப்படி ஊடுருவுகிறார்கள்? அத்தனையும் வேண்டும். உங்கள் இயக்கத்தில் இணைந்துகொள்ள வந்திருக்கிறேன் மால்கம், என்னையும் தயவு செய்து இணைத்துக்கொள்ளுங்களேன் என்று வந்து

நின்ற புதியவர்களை மிகுந்த கவனத்துடன் விலக்கி வைத்தார் மால்கம். ஆதிகாலத்தில் கற்றுக்கொண்ட பாடங்களை இன்னமும் மறக்கவில்லை அவர். யார் நல்லவர் யார் கெட்டவர் என்பதை ஒரு பார்வையில் கண்டறிந்துவிடமுடிந்தது அவரால்.

அப்படியும்கூட ஓரிருவர் புறவாசல் வழியாக உள்ளே ஊடுருவினார்கள். செய்தி சேகரித்தார்கள். தத்தம் தலைமையகத்துக்கு அனுப்பினார்கள். கொடுக்கப்பட்ட வேலையைச் சரிவரச் செய்தால்தான் பலன் கிடைக்கும் என்பதால் கண்டதையும் கேட்டதையும் மட்டும் எழுதாமல் கற்பனைகூட்டிச் சுவைபட எழுதினார்கள். ஆங்கிலேயர்களுக்கு எதிராகவும் அரசுக்கு எதிராகவும் மாபெரும் சதித்திட்டங்கள் தீட்டப்படுவதாக ஆதாரபூர்வமாக இவர்கள் நிரூபிக்க முயன்றார்கள். சாட்சியம் என்னும் பெயரில் என்னென்னவோ தகிடுதத்தங்கள் செய்தார்கள்.

என்ன செய்துகொண்டிருக்கிறோம், என்ன செய்யவேண்டும் என்பதில் மால்கம் தெளிவாக இருந்தார். எதிரிகளின் சதிவேலைகள் எதுவொன்றுக்கும் அவர் அசைந்துகொடுக்கவில்லை. செலுத்தப்பட்ட அம்புபோல் நேர்க்கோட்டில் காற்றைக் கிழித்துக்கொண்டு பறந்துகொண்டிருந்தார். இவர் நம்மைக் காட்டிக்கொடுத்துவிட்டார் என்று நண்பர்கள் காதருகில் வந்து கிசுகிசுத்தபோது அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை அவர். கவலை வேண்டாம் நண்பர்களே, நாம் வளர வளர இதுபோன்ற சில்லறைத்தனங்களும் பெருகும். இதில் கவனம் செலுத்திக்கொண்டிருந்தால் இலக்கை அடையமுடியாது. அல்லா நம்மைப் பாதுகாப்பார். உற்சாகம் குறையாமல் என்னுடன் ஒத்துழையுங்கள். அதுபோதும்.

நன்றி.

ஒட்டுமொத்த வெள்ளையர்களையும் உங்களால் ஒழித்துக்கட்டிவிடமுடியுமா என்ன? உங்களால் என்னதான் செய்யமுடியும் என்று நினைக்கிறீர்கள்? அமெரிக்காவை அப்படியே தலைகீழாகப் புரட்டிப்போட்டுவிடப் போகிறீர்களா என்ன? வந்து விழுந்த கேள்விகளை அப்படியே அள்ளி எடுத்துக் குப்பைத்தொட்டியில் வீசினார். நண்பர்கள் சஞ்சலத்துடன் இதே கேள்விகளைக் கேட்டபோது, அவர்களுக்கு மட்டும் பதிலளித்தார். நம்மால் எல்லாவற்றையும் செய்துவிடமுடியாது என்பது உண்மையே. ஆனால் நம்மால் என்ன செய்யமுடியுமோ அதைக் குறைவில்லாமல் செய்துகொண்டிருக்கவேண்டும். வெள்ளையர்களைத் தொடர்ந்து அம்பலப்படுத்துவோம். அவர்கள் முகத்திரையைக் கிழித்தெறிவோம். இனிமேலும் நம்மை ஏய்த்து பிழைக்கமுடியாது என்பதை அவர்களுக்கு அழுத்தமாக உணர்த்துவோம். நம்மை அடிக்க வரும் கையைப் பிடித்து முறுக்குவோம். அதைவிட முக்கியம் நம் இன மக்களின் மனத்தில் விடுதலைக்கான விதைகளைத் தூவுவது. விடாமல் தூவிக்கொண்டே இருக்கவேண்டும். நிரந்தர உறக்கத்தில் இருக்கும் அவர்கள் கன்னங்களைத் தட்டி எழுப்பவேண்டும்.

ஏறி நிற்கும் ஒவ்வொரு மேடையிலும் முழங்கினார் மால்கம். எதிரிகளின் அவதூறுகளுக்குச் செவிசாய்க்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டார். ஒவ்வொரு நாளும் சேகரித்து வைத்திருந்த செய்திகளை மேடையிலேயே ஆய்வு செய்தார். அடிமைமுறை ஒழிந்துவிடவில்லை என்று எடுத்துக்காட்டுகளுடன் சுட்டிக்காட்டினார். வெள்ளையர்கள் எத்தனைப் போலியானவர்கள் என்பதை சரித்திரபூர்வமான

ஆதாரங்களுடன் விவரித்தார். கறுப்பர்களிடம் கருணையாக நடந்துகொள்கிறோம் என்று சொல்பவர்களைத் தோலுரித்தார்.

கல்லூரிகளில் இருந்தும் பல்கலைக்கழகங்களில் இருந்தும் மால்கமுக்குப் பிரத்தியேக அழைப்புகள் வர ஆரம்பித்தன. சம்பந்தப்பட்ட அமைப்புகளை அழைத்துக் கடிந்துகொண்டார் மால்கம். ஏன் என் பெயரை அழைப்பிதழில் போட்டீர்கள்? எலிஜா முகமதுதான் எங்கள் இயக்கத்தின் தலைவர். அழைப்பிதழை அவருக்கு அனுப்புங்கள். எலிஜாவிடம் ஓடிச்சென்றார். தவறாக நினைத்துக்கொள்ளவேண்டாம் தவறுதலாக என் பெயரை அச்சடித்துவிட்டார்கள். தயவு செய்து நீங்கள் செல்லுங்கள். மாணவர்களிடம் பேசுங்கள். இருக்கட்டும் பரவாயில்லை மால்கம் நீயே போய்வா என்றுதான் சொன்னார் எலிஜா முகமது.

இந்தத் தருணத்துக்காகவே காத்துக்கொண்டிருந்த நபர்கள் வெளிப்படையாகப் புகைய ஆரம்பித்தார்கள். மால்கமின் முதுகுக்குப் பின்னால் மறைந்து நின்றுகொண்டு முகத்தைக் காட்டாமால் அவர்கள் சங்கடப்பட்டுக்கொண்டார்கள். நான்தான் அப்பொழுதே சொன்னேனே. இவரை நம்ப முடியாது. மிகத் திறமையாக எலிஜாவை ஓரங்கட்டிவிட்டார் பார்த்தாயா? தன்னைப் பற்றியே எல்லோரும் பேசும்படி மாற்றிவிட்டார். அழைப்பிதழ்களில் அவர் பெயர். கூட்டங்களில் கலந்துகொள்ள அவர் பெயர். எங்கிருந்தெல்லாமோ மால்கமைத் தேடி வருகிறார்கள். இனி எலிஜா அவ்வளவுதான். இயக்கம் அவ்வளவுதான். வெளியில் இருப்பவர்கள் பேசிக்கொண்டால் புறந்தள்ளிவிடலாம். உள்ளுக்குள் இருப்பவர்களே புகைந்தால் என்ன செய்வது? குற்றம் சுமத்துபவர்களுள்

நெருங்கிய நண்பர்களும் அடக்கம் என்பதை அறிந்தபோது வருத்தம் மேலும் கூடியது.

நியூ இங்கிலாந்து கல்லூரியில் உரையாற்றிக்கொண்டிருந்தபோது, ஓர் இளம்பெண் கையைத் தூக்கினார். அவரை உட்காரச் சொல்லி பார்வையாளர்கள் கட்டாயப்படுத்தினார்கள். மால்கம் அந்தப் பெண்ணை நோக்கித் தன் பார்வையைத் திருப்பினார்.

‘அவரைப் பேச அனுமதியுங்கள்.’

நன்றி என்பது போல் ஒரு பார்வை பார்த்துவிட்டு அந்தப் பெண் உணர்ச்சிப் பொங்க கேட்டார்.

‘நீங்கள் கிறிஸ்தவத்துக்கு எதிரானவரா?’

‘ஆம்.’

‘நீங்கள் ஏன் இயேசு நாதரை மறுதலிக்கவேண்டும்? அவரால் இந்த உலகத்துக்கு என்ன தீமை நேர்ந்துவிட்டது என்று கருதுகிறீர்கள்? கறுப்பினத்தவர் மீது வெள்ளையர்கள் நடத்தும் அக்கிரமங்களை நான் அறிவேன். குருட்டாம்போக்கில் வெள்ளையர்களை நான் ஆதரிப்பதில்லை. இன்னும் சொல்லப்போனால் உங்கள் உரைகளை கேட்டுப் பல விஷயங்களை நான் அறிந்துகொண்டிருக்கிறேன். இயேசுவின் மீது எனக்கு மிகுந்த நம்பிக்கை உண்டு. அதை நீங்கள் உடைத்துவிடுவீர்களோ என்னும் பயம் உங்களிடம் இருந்து என்னைப் பிரித்துவிடுகிறது.’

‘பெண்ணே, கிறிஸ்தவத்தை நான் ஏற்றுக்கொள்ளவில்லை என்றுதானே சொன்னேன். இயேசு நாதரைப் பற்றி நான் தவறாகப் பேசி நீ இதுவரை கேட்டிருக்கிறாயா? என்னுடைய

கூட்டங்களில் தொடர்ந்து கலந்துகொள்வதாகச் சொல்கிறாய். எனில், என்னைப் பற்றி ஏன் நீ தவறாகப் புரிந்துகொள்ளவேண்டும்?’

‘ஆனால் பத்திரிகைகளில்...’

‘ஓ, நீ படித்தவள் அல்லவா? அதனால்தான் பத்திரிகைகள் வாசிக்கிறாய். நல்லது, நல்லது. ஆனால் பத்திரிகைகளில் வந்துவிட்டது என்ற ஒரே காரணத்துக்காக வாசித்தது அனைத்தையும் ஏற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. வெள்ளையர்கள் நடத்தும் பத்திரிகைகளில் என்னைப் பற்றியும் எங்கள் இயக்கத்தைப் பற்றியும் சரியாக எழுதுவார்கள் என்று எப்படி நீ எதிர்பார்க்கலாம்?’

‘சரி இப்போது சொல்லுங்களேன். நீங்கள் இயேசுவை நம்புகிறீர்களா இல்லையா?’

‘இஸ்லாம் மூன்று தீர்க்கத்தரிசிகளைக் குறிப்பிடுகிறது. முகமது, மோசஸ் மற்றும் இயேசு. இந்த மூவரையும் நான் மதிக்கிறேன். வணங்குகிறேன். இயேசு மீது எனக்கு மிகுந்த அபிமானம் உண்டு. பலரும் நினைப்பதுபோல் அவர் ஒரு வெள்ளையர் கிடையாது. கறுப்பர். அந்தக் காலத்து யூதர்கள் கறுப்பர்களாகவே இருந்திருக்கிறார்கள். இயேசு போதித்த நற்செய்திகளை நான் உள்வாங்கிக்கொண்டிருக்கிறேன். ஆனால், இயேசுவை முன்னிறுத்தி தோற்றுவிக்கப்பட்ட கிறிஸ்தவ மதத்தின் மீது எனக்குச் சிறிதும் நம்பிக்கை இல்லை. அதற்குக் காரணம் பாதிரிமார்கள். தாங்கள் எத்தனைப் போலியானவர்கள் என்பதை அவர்களே பல தருணங்களில் மீண்டும் மீண்டும் நிரூபித்துக்காட்டியிருக்கிறார்கள். கிறிஸ்தவத்தின் பெயரால் அப்பாவி கறுப்பர்கள் மீது, அப்பாவி முஸ்லிம்கள் மீது அவர்கள் நிகழ்த்திய அக்கிரமங்கள் சரித்திரம் நெடுக

ரத்தத்தால் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. அவற்றை ஒரு முறை நீ வாசித்துப் பார்த்தால் கிறிஸ்தவத்தை நான் வெறுக்கும் காரணத்தைப் புரிந்துகொள்ளலாம்.'

திருப்தியுடன் அந்தப் பெண் அமரும்போது மால்கம் புன்னகையுடன் கை நீட்டினார்.

'பெண்ணே, நாளை காலை மறக்காமல் செய்தித்தாள்களை எடுத்துப் பார். இயேசுவை நான் எப்படியெல்லாம் அவமானப்படுத்தினேன் என்பதை ஆதாரத்துடன் போட்டிருப்பார்கள்.'

நிகழ்ச்சியின் முடிவில் வேறொரு பெண் மால்கமைத் தேடி ஓடி வந்தார்.

'இதற்கும் விடை சொல்லிவிட்டுச் செல்லுங்கள். வெள்ளையர்களில் நல்லவர்களே இல்லையா? என்னை எடுத்துக்கொள்ளுங்கள். நான் எந்தவொரு கறுப்பருக்கும் விரோதமாக நடந்தது கிடையாது.'

உதடுகள் துடிக்க வந்து நின்ற அந்தப் பெண்ணைப் பார்த்துக்கொண்டே நின்றார் மால்கம். என்ன சொல்லி புரியவைப்பது என்று அவருக்குத் தெரியவில்லை.

'சொல்லுங்கள் மால்கம். நானும்கூட உங்கள் பார்வையில் மோசமான வெள்ளைக்காரப் பெண்தானா? நான் என்ன செய்தால் நீங்கள் என்னை நம்புவீர்கள்? என்னை மெய்ப்பிக்க நான் என்ன செய்யவேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்? சொல்லுங்கள். நீங்கள் எது சொன்னாலும் செய்வதற்குத் தயாராக இருக்கிறேன்.'

'தனிப்பட்ட முறையில் நீங்கள் செய்வதற்கு ஒன்றுமில்லை.'

சொல்லிவிட்டு நடக்க ஆரம்பித்தார் மால்கம். காரில் ஏறும்போது அந்தப் பெண் வெடித்து அழும் சத்தம் கேட்டது.

கல்வி நிலையங்களில் நடைபெறும் கூட்டங்களில் கலந்துகொள்ள எலிஜா முகமது முன்வராததன் காரணத்தை மால்கமால் முழுவதுமாக உணர முடியவில்லை. எத்தனைப் பெரிய பொதுக்கூட்டமாக இருந்தாலும் மிக நயமாகப் பேச முடியும் அவரால். கல்லூரி, பல்கலைக்கழக வளாகங்கள் என்றால் மட்டும் மறுத்துவிடுவார். மால்கம் போய்வா என்று அனுப்பிடுவார். ஒரு வேளை தயக்கம் காரணமாக இருக்கலாம். அல்லது எளிமையான மக்களை மட்டுமே தன்னால் ஈர்க்கமுடியும் என்று அவர் நினைத்திருக்கலாம். எப்படி இருந்தாலும் அது அவருடைய முடிவு. நான் போகமாட்டேன் நீ போய் வா என்று அவர் உத்தரவிடும்போது மாட்டேன் என்றா சொல்லமுடியும்?

முன்பு மறைந்து நின்று அவதூறு கிளப்பிக்கொண்டிருந்தவர்கள் வெளியில் வந்த மால்கம் காதுபட முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். நேஷன் ஆஃப் இஸ்லாமை முழுவதுமாகக் கைப்பற்றுவதுதான் இவன் கனவு. தனக்கென்று ஒரு கூட்டத்தை உருவாக்கிக்கொண்டுவிட்டான். பெரிய நிகழ்ச்சிகள், முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளும் விழாக்கள் என்றால் நான், நான் என்று அந்த வாய்ப்பை அபகரித்துக்கொண்டுவிடுகிறான். பாவம், எலிஜா. இவனுடைய நிஜ முகம் தெரியாமல் வளர்த்துவிட்டுக் கொண்டிருக்கிறாரே.

கூப்பிட்டு அறையலாமா என்றுகூடப் பலமுறை தோன்றி இருக்கிறது மால்கமுக்கு. என்னைப் பற்றி என்ன தெரியும்

இவர்களுக்கு? கலந்துகொள்ளும் அத்தனை நிகழ்ச்சிகளிலும் நான் என்ன சொல்லிக்கொண்டிருக்கிறேன்? என் உரையை எப்படி ஆரம்பிக்கிறேன்? எப்படி முடிக்கிறேன்? நான் எலிஜா முகமதுவின் பிரதிநிதி. சொல்கிறேனா இல்லையா? இவர்கள் கவனித்திருக்கிறார்களா அல்லது கவனித்ததை சௌகரியமாக மறந்துவிட்டார்களா?

இதோ என் சட்டைப் பையைத் திறந்து பாருங்கள். இந்தப் பழுப்புநிற கவரில் என்ன இருக்கிறது என்று பாருங்கள். கீழே கொட்டுங்கள். சொல்லுங்கள். யாருடைய புகைப்படங்கள் இவை? என்னுடையதா? என் ஆசை மனைவி பெட்டியுடைதா? அல்லது என் குழந்தைகளுடையதா? ஏன் திகைத்துப் போய் நிற்கிறீர்கள்? சொல்ல முடியவில்லையா உங்களால்? எலிஜாவை ஒழித்துக்கட்ட விரும்பும் நான் ஏன் அவர் புகைப்படங்களை வைத்துக்கொள்கிறேன்? என் இதயத்துக்கு நெருக்கமானவராக அவரை நான் கருதுவதால்தானே?

இல்லை இல்லை இதெல்லாம் வெறும் வேஷம் என்று சொல்லப்போகிறீர்களா? ஒரு நிமிடம். இந்தப் புகைப்படங்களை நான் என்னுடன் வைத்திருப்பதற்கு இன்னொரு காரணமும் உண்டு. நிகழ்ச்சிகளின்போது ஒவ்வொரு முறை என்னைப் புகைப்படம் எடுக்கும்போதும் நான் என்ன செய்கிறேன் தெரியுமா? புகைப்படக்காரர்களை நெருங்கி அவர்களிடம் எலிஜா முகமதுவின் படங்களைத் தருகிறேன். தயவு செய்து என் படத்தைப் பிரசுரிக்காதீர்கள். எலிஜாதான் எங்கள் இயக்கத்தின் கடவுள். இதோ அவர் படம். வெளியிடுங்கள்.

இது பொய் என்று உங்களால் சொல்லமுடியாது. எந்தவொரு பத்திரிகையாளரையும் நீங்கள்

தொலைபேசியில் அழைத்து இதை ஊர்ஜிதப்படுத்திக்கொள்ளலாம். ஏன் எப்போதும் அவர் படத்தைத் தருகிறீர்கள் என்று பலர் என்னிடம் சங்கடப்பட்டதும் உண்டு. எதையும் தெரிந்துகொள்ளாமல், எதைப் பற்றியும் சிந்திக்காமல் இப்படி அபாண்டமாக என் மீது குற்றம் சுமத்துவது எந்த வகையில் நியாயம்? என் பணிகளில் குறை இருந்தால் சுட்டிக்காட்டுங்கள். சிரம் தாழ்த்தி ஏற்றுக்கொள்கிறேன். போகிற போக்கில் நெருப்பை அள்ளி வீசும் வேலை மட்டும் வேண்டாம்.

மால்கம் எத்தனை மன்றாடியும் அவர்கள் நிறுத்திக்கொள்ளவில்லை. புதிதுப் புதிதாகப் பல குற்றச்சாட்டுகளைக் கண்டுபிடித்துக்கொண்டே இருந்தார்கள். மால்கமின் ஒவ்வொரு நடத்தையிலும் குற்றம், குறை தேடினார்கள். அவர் சிரித்தால் ஆணவம் என்றார்கள். கோபப்பட்டால் திமிர் என்றார்கள். இன்றில்லாவிட்டாலும் ஒரு நாள் பதவியைக் கைப்பற்றுவான் என்று ஆருடம் சொன்னார்கள்.

இந்த வதந்திகளை எலிஜா முகமது நம்பவில்லை என்பதை அவரிடம் பேசும்போது உணரமுடிந்தது. எப்போதும் போலவே சிரித்துப் பேசினார். நலம் விசாரித்தார். மெக்கா செல்ல அவர் முடிவெடுத்தபோது, பொறுப்புகளை மால்கமிடம் ஒப்படைத்தார். வருத்தங்களை ஒதுக்கிவைத்துவிட்டு இயக்கப் பணிகளில் முழுக்கவனத்தையும் செலுத்தினார் மால்கம்.

என்ன தீனி கிடைக்கும் என்று காத்துக்கொண்டிருந்த பத்திரிகையாளர்களுக்குப் பெரும் விருந்து கிடைத்தது. பரிமாறியவர்கள் இயக்க நண்பர்கள். இந்த விஷயம் நமக்குள் இருக்கட்டும். இயக்கத்தின் மாபெரும் தலைவலியாக மால்கம் எக்ஸ் உருவெடுத்து வருகிறார்.

எல்லோரும் எலிஜா முகமதுவின் தலைமையை ஏற்று பணியாற்றிக்கொண்டிருக்கும்போது இவர் தனியொரு பிரிவை தோற்றுவிக்க நினைக்கிறார். நெருங்கிப் பழகுவதுபோல் நடித்து எலிஜாவைக் கவிழ்த்துக் கொண்டிருக்கிறார். இயக்கத்தில் உள்ள உயர் மட்டத் தலைவர்களிடம் பழக மறுக்கிறார். எப்போது எலிஜாவை ஒழித்துக்கட்டலாம் என்பது மட்டுமே அவர் சிந்தனையாக இருந்து வருகிறது. ஏதோ நண்பர் என்பதால் உங்களிடம் இப்படி மனம் விட்டுப் பேசிவிட்டேன். வெளியில் பரப்பிவிடாதீர்கள். ஆயிரம் இருந்தாலும் மால்கம் எங்கள் மதகுரு அல்லவா?

பண விவகாரத்திலும் மால்கமைப் பிடித்து இழுத்தபோது, மால்கம் மனம் வெதும்பிப் போனார். இந்த அளவுக்கா துணிவார்கள்? நேஷன் ஆ்ஃப் இஸ்லாத்தின் நிதியை நான் சுவீகாரம் செய்துகொண்டுவிட்டதாக எப்படி அவர்களால் சொல்ல முடிகிறது? என் சொந்த உபயோகங்களுக்கு அமைப்பின் நிதியைச் சுருட்டிக்கொண்டேனாம். என் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டேனாம்.

என்னைப் பற்றி என்ன தெரியும் இவர்களுக்கு? பெட்டியிடம் நான் நடத்திய வாக்குவாதங்களை இவர்கள் அறிவார்களா? நம் குழந்தைகளின் எதிர்காலத்துக்குப் பணம் சேமியுங்கள் என்று எத்தனை முறை சொல்லியிருக்கிறாள் அவள்? ஒரு முறையாவது காது கொடுத்துக் கேட்டிருப்பேனா? குடும்பத்தினர் மீது அக்கறையே இல்லை என்று எத்தனை முறை ஏசியிருக்கிறார்! இந்தா பணம் என்று அமைப்பின் நிதியில் இருந்து அள்ளிக்கொடுத்துவிட்டேனா? அல்லது என் மனைவியின் பெயரிலும் குழந்தைகளின் பெயரிலும் வங்கிக்கணக்கு ஆரம்பித்து ரகசியமாகச் சொத்து சேர்த்துக்கொண்டிருக்கிறேனா? என்னைப் புரிந்துகொள்ள

யாருமே இல்லையா இங்கே?

ஃபிடல் காஸ்ட்ரோ மால்கம் எக்ஸை நன்கு புரிந்துவைத்திருந்தார். மால்கம் பற்றி வெளிவந்துகொண்டிருந்த செய்திகளை நாள் தவறாமல் வாசித்துக்கொண்டிருந்தார் அவர். ஏகாதிபத்திய எதிர்ப்பு யுத்தத்தில் காஸ்ட்ரோ தன் கவனத்தை முழுமையாகச் செலுத்திக்கொண்டிருந்த சமயம் அது. அமெரிக்காவின் மேலாதிக்கம் அகற்றப்படவேண்டும். லத்தீன் அமெரிக்க நாடுகள் மட்டுமல்லாமல் அனைத்து நாடுகளும் அமெரிக்காவின் காலனியாதிக்கத்தில் இருந்து விடுவிக்கப்படவேண்டும். காஸ்ட்ரோவின் சிந்தனையும் செயலும் இந்த நோக்கத்தை ஒட்டியே அமைந்திருந்தன.

அமெரிக்க வெள்ளை இனவெறிக்கு எதிராக மால்கம் நிகழ்த்திக்கொண்டிருக்கும் தொடர் யுத்தம் காஸ்ட்ரோவைக் கவர்ந்தது. மால்கமின் அனல் வீசும் உரைகளை வாசித்தபோது, அட உள்ளிருந்தே அமெரிக்காவுக்கு இப்படி ஒரு பலமான எதிர்ப்பு கிளம்பியிருக்கிறதே என்று பல முறை துள்ளி குதித்து மகிழ்ந்திருக்கிறார். க்யூபாவின் அதிபர் என்னும் முறையில் ஐ.நா. சபையில் உரையாற்றுவதற்காக செப்டெம்பர் 1960ம் ஆண்டு காஸ்ட்ரோவுக்கு அழைப்பு வந்தபோதே அவர் முடிவு செய்துவிட்டார். மால்கம் எக்ஸை நிச்சயம் சந்திக்கவேண்டும்.

காஸ்ட்ரோவின் வரவை பெரிய அளவில் கொண்டாடவேண்டும் என்று மால்கம் முடிவு செய்திருந்தார். நேஷன் ஆஃப் இஸ்லாம் சார்பில் அவரை வரவேற்றுத் தக்க முறையில் உபசரிக்கவேண்டும் என்று விரும்பினார். க்யூபப் புரட்சி பற்றியும், புரட்சிக்குப் பிறகு

காஸ்ட்ரோ கொண்டு வந்த அதிரடி மாற்றங்களையும் பற்றி நிறைய வாசித்து வியந்திருக்கிறார் மால்கம். இப்படிப்பட்ட ஒரு மாற்றம் அமெரிக்காவுக்குத் தேவை. காஸ்ட்ரோவின் தீரமும் துடிதுடிப்பு மிக்கத் தலைமையும் அமைந்துவிட்டால் கறுப்பின மக்களின் விடுதலை சுலபமாகிமால்கமின் கணிப்பு இது.

நான் ஹார்லெமில்தான் தங்கப்போகிறேன் என்று காஸ்ட்ரோ அறிவித்ததும் அந்தப் பகுதியே வண்ணமயமாக ஜொலிக்க ஆரம்பித்துவிட்டது. கறுப்பர்களின் சேரிப்பகுதிக்கு ஃபிடல் வருகிறாரா? எனில், நம்மை எந்த அளவுக்கு அவர் மதிக்கிறார் பார்த்தீர்களா? மால்கம் எக்ஸின் நண்பராமே அவர்? வரட்டும் வரட்டும், நாம் எப்படி வாழ்ந்துகொண்டிருக்கிறோம் என்பதை அவர் நேரடியாகப் பார்க்கட்டும். அவரிடம் சில வார்த்தைகள் பேசினால் போராடும் உத்வேகம் வந்துவிடும் நமக்கு.

தெரசா ஓட்டலில் காஸ்ட்ரோவுக்காக ஓர் அறை ஏற்பாடு செய்திருந்தார் மால்கம். நேஷன் ஆஃப் இஸ்லாமின் தொண்டர் படை தயாராக இருந்தது. தொலைவில் அவர் கார் வரும்போதே பரபரப்பு தொற்றிக்கொண்டது. ஃபிடல், ஃபிடல்! தன் தொப்பியை எடுத்து அசைத்தபடியே வந்து இறங்கினார் ஃபிடல். ஆசையாசையாக அவரைச் சூழ்ந்துகொண்டார்கள் மக்கள். உங்கள் கையைப் பற்றி குலுக்கட்டுமா? எங்களை நீங்கள் தொடுவீர்களா? உங்களுடன் புகைப்படம் எடுத்துக்கொள்ள முடியுமா? எங்களுடன் சில வார்த்தைகள் பேசுவீர்களா?

மக்கள் கடலில் நீந்திக் கரை சேர்ந்த பிறகு, மால்கம் எக்ஸை சந்தித்து விவாதித்தார் காஸ்ட்ரோ. உடைந்த ஆங்கிலத்தில் தொடர்ந்து பல கேள்விகள் கேட்டுக்கொண்டிருந்தார் காஸ்ட்ரோ. ஹார்லெம் மக்கள் என்ன சொல்கிறார்கள்?

உங்கள் போராட்டம் எந்த அளவில் இருக்கிறது? கறுப்பர்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த என்னென்னத் திட்டங்கள் வைத்திருக்கிறீர்கள்? அமெரிக்க அரசு உங்களை எப்படியெல்லாம் எதிர்க்கிறது? எப்படிச் சமாளிக்கிறீர்கள்?

தனக்கும் காஸ்ட்ரோவுக்கும் உள்ள அடிப்படை வித்தியாசங்களை மால்கம் உணர்ந்திருந்தார். காஸ்ட்ரோ மனத்தளவில் ஒரு கம்யூனிஸ்ட். என்னால் கம்யூனிசத்தை உள்வாங்கிக்கொள்ள முடியவில்லை. கிறிஸ்தவத்தில் எனக்கு நம்பிக்கை இல்லை. ஆனால் காஸ்ட்ரோ கிறிஸ்தவத்தின் அடிப்படைகளை எதிர்ப்பதில்லை. பைபிளையும் கிறிஸ்தவ மத நூல்களையும் அவர் இன்னமும் வாசித்துக்கொண்டிருக்கிறார். தன் உரைகளில் அடிக்கடி மறைநூல்களில் இருந்து உதாரணம் எடுத்தாண்டுகொண்டிருக்கிறார் காஸ்ட்ரோ. ('இயேசுநாதர் எப்படி ரொட்டியைப் பெருக்கச் செய்தாரோ அதேபோல் புரட்சியாளர்களான நாங்களும் ஏழை மக்களுக்கு உணவு பெருக்கச் செய்யப் போராடுவோம்'). இஸ்லாத்தின் மீது காஸ்ட்ரோவுக்கு ஈடுபாடு இல்லை. எனக்கு அல்லாதான் கடவுள்.

அமெரிக்கா என்று எடுத்துக்கொண்டாலும் காஸ்ட்ரோவின் அணுகுமுறையும் மால்கமின் அணுகுமுறையும் அடிப்படையில் வெவ்வேறாகவே இருந்தன. காஸ்ட்ரோ அமெரிக்க அரசியல் அமைப்பை எதிர்த்தார். காலனியாதிக்க மனோபாவத்தை எதிர்த்தார். பிற தேசங்களின் வளங்களை அமெரிக்கா சூறையாடும் முறைகளை எதிர்த்தார். அமெரிக்கர்களை அவர் எதிர்க்கவில்லை. அரசாங்கத்தின் கொள்கைகளோடு ஏற்பட்ட முரண்பாடு அது.

மால்கமின் அணுகுமுறை வேறு. அமெரிக்காவை அவர்

பார்த்த பார்வையும் கூட வேறுதான். அரசியல் நோக்கங்கள் என்பதோடு நின்றுவிடாமல் அமெரிக்காவின் வெள்ளையின வெறியையும் மிகத் துல்லியமாக இனம் கண்டுகொண்டார் மால்கம். ஆகவே அவரது எதிர்ப்பு முறை காஸ்ட்ரோவைக் காட்டிலும் கடுமையாக இருந்தது. தவிரவும், அமெரிக்கா வேறு அமெரிக்கர்கள் வேறு என்று பிரித்துப் பார்க்க இயலவில்லை அவரால். ஒரு தேசம் செய்த தவறுக்காக அந்தத் தேசத்து மக்களை பழிவாங்குவது தவறு என்பது காஸ்ட்ரோவின் எண்ணம். மால்கம் இதில் இருந்தும் விலகிச்சென்றார்.

கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் இருந்து பேச மால்கமை அழைத்திருந்தார்கள். பெரும் கூட்டம் கூடிவிட்டது. எட்டாயிரத்துக்கும் அதிகமானவர்கள் திரண்டுவிட்டார்கள். மால்கமே கொஞ்சம் அசந்துதான் போனார். பெரும்பாலும் மாணவர்கள். மால்கமின் வாயில் இருந்து புறப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் மிகவும் உன்னிப்புடன் கவனித்து உள்வாங்கிக்கொண்டார்கள் அவர்கள். தன் பேச்சுக்கு இடையே கிரேக்கத் தத்துவத்தில் இருந்தும் குர் ஆனில் இருந்தும் லத்தீன் இலக்கியத்தில் இருந்தும் வளமான விஷயங்களை ஆங்காங்கே மால்கம் தூவிச்சென்றதை ஆச்சரியமும் வியப்பும் மேலிட ரசித்தார்கள். எங்கே பேசினாலும் எதைப் பற்றிப் பேசினாலும் மால்கமின் உரைகளில் அடிநாதமாக ஒரு சீற்றம் இருந்தது. வெள்ளையர்களுக்கு எதிரான சீற்றம்.

கலிஃபோர்னியா முழுவதும் அதுதான் முக்கியச் செய்தி. கறுப்பு முஸ்லிம்களின் இளம் தலைவர் என்று அடையாளம் காணப்படும் மால்கம் எக்ஸின் மிகச் சிறந்த உரை இது. ஒட்டுமொத்த நகரமும் ஒன்றுகூடி கேட்டு ரசித்தார்கள். பல மணி நேரங்கள் நீண்ட இந்த உரையின் வாயிலாக நேஷன்

ஆஃப் இஸ்லாம் பற்றிய பல முக்கியமான உண்மைகளை தெரிந்துகொண்டார்கள். இயக்கத்தின் மீது முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் குறித்தத் தெளிவான பதிலையும் மால்கம் முன்வைத்தார். புகைப்படத்தோடு கூடிய செய்திக் கட்டுரைகள்.

நியூ யார்க் திரும்பிய மால்கம் எக்ஸ் அதிர்ந்தே போனார். நேஷன் ஆஃப் இஸ்லாமின் செய்தி ஏட்டில் (முகமது பேசுகிறார்!) மால்கமின் உரை பற்றி ஒரு வரி செய்திகூட இல்லை. விசாரித்தபோது இப்படிச் சொன்னார்கள். அவசியம் இல்லை என்று எலிஜா முகமது சொல்லிவிட்டார். யார் சொன்னார், யார் சொன்னார்? திரும்பத் திரும்பக் கேட்டார் மால்கம். நம்ப முடியவில்லை. தெருமுனையில் கூட்டம் கூட்டினால்கூட சம்பிரதாயமாகச் செய்தி வெளியிட்டுவிடுவார்களே. இத்தனாம் தேதி இத்தனை மணிக்குக் கூட்டம் நடத்தப்பட்டது. குறிப்பிட்ட மதகுரு பேசினார். அருகில் சிறியதாக ஒரு புகைப்படம். பேச்சாளர் பேசுவதுபோல். தெருமுனைக்கூட்டத்துக்கு உள்ள தகுதிகூட கலிஃபோர்னியா உரைக்கு இல்லையா? கிட்டத்தட்ட அமெரிக்காவின் முக்கியப் பத்திரிகைகள் அனைத்துமே ஆர்ப்பாட்டமாகச் செய்திகள் வெளியிட்டுவிட்டன. ஆனால் அமைப்பின் சொந்தப் பத்திரிகையில் இருட்டடிப்பு.

வேண்டாம் என்று சொல்லிவிட்டாராமே எலிஜா முகமது. நிஜமாகவே அப்படிச் சொல்லியிருப்பாரா? ஒரே ஒரு நொடிதான். சட்டென்று சுதாரித்துக்கொண்டார் மால்கம். ச்சே சே, எலிஜா முகமதுவைப் போய் சந்தேகப்படுவதா? எலிஜாவைச் சந்தேகப்படுவது கடவுளைச் சந்தேகப்படுவதற்குச் சமமானது. வழக்கம்போல் நண்பர்கள் கதை கட்டி விட்டிருக்கிறார்கள். எனக்கும் எலிஜாவுக்கும்

முட்டிக்கொள்ளவேண்டும் என்பதுதான் அவர்களது கனவு. இந்தப் பொறியில் நான் சிக்கிக்கொள்ள மாட்டேன். செய்தி வராவிட்டால் எனக்கென்னப் போச்சு?

1963-ல் பிலடெல்ஃபியாவில் ஒரு மாநாடு நடந்தது. அனைவருக்கும் முன்னிலையில் மால்கமைக் கட்டிப்பிடித்து உச்சி முகந்தார் எலிஜா முகமது. சத்தம் போட்டு அறிவிக்கவும் செய்தார். மால்கம் எக்ஸை நான் நேசிக்கிறேன். என் மெய்யான சீடர் இவர். சாகும்வரை விசுவாசமாக இருக்கக்கூடிய சீடர் இவர். எலிஜாவின் கைகளை வாஞ்சையுடன் பற்றி கண்களில் ஒத்திக்கொண்டார் மால்கம். இந்த ஒரு ஆசீர்வாதம் போதும். காலம் முழுவதும் இவர் காலடியில் விழுந்து கிடக்கலாம்.

கிட்டத்தட்ட அதே சமயம் மால்கமுக்குக் கொலை மிரட்டல்கள் வர ஆரம்பித்தன. பெரும்பாலும் மொட்டைக் கடிதாசிகள். மரியாதையாக அமைப்பில் இருந்து விலகிவிடு. அதுதான் உனக்கு நல்லது. உனக்கு மட்டுமல்ல உன் குடும்பத்தினருக்கும். மால்கம் எக்ஸின் உடலைக் கொண்டு வந்து அளிப்பவர்களுக்கு பத்தாயிரம் டாலர்கள்! யாரோ எங்கோ அறிவித்தார்கள். எல்லாவற்றையும் விட அச்சமூட்டும் வகையில் சில செய்திகள் வெளிவர ஆரம்பித்தன. துடிதுடித்துப்போனார் மால்கம் எக்ஸ்.

# 10. என் உலகம், என் வழி!

ஆதாரமில்லாத குற்றச்சாட்டு என்றுதான் ஆரம்பத்தில் நினைத்தார் மால்கம். அங்கே தொட்டு இங்கே தொட்டு கடைசியில் எலிஜாவின் அடிமடியிலேயே கை வைத்திருக்கிறார்கள் படுபாவிகள். கடவுளோடு ஒப்பிடப்படவேண்டியவர் மீது சாக்கடையை வாரித் தெளித்திருக்கிறார்கள். அமைப்பில் இருந்து என்னை அகற்ற எவ்வளவோ முயன்றார்கள். முடியவில்லை. அடுத்த குறி எலிஜாவுக்கு. ஆனால், இதை வளரவிடக் கூடாது. தொடக்கத்திலேயே அழித்துவிடவேண்டும்.

அழிப்பதற்கு யத்தனிப்பதற்குள் காடாக வளர்ந்து நின்றது. அமைப்பில் இருந்தவர்களே அப்படியா மால்கம் என்று கேட்டார்கள். கோபம். மேலதிகம், எரிச்சல். பிடித்து வைத்துக்கொண்டு கத்தவேண்டும் போலிருந்தது. என்னை கேட்கிறாயே உனக்கெங்கே போனது புத்தி? யார் எது சொன்னாலும் அப்படியே நம்பிவிடுவதா? புறம் பேசுபவனின் கையைப் பிடித்து முறுக்கவேண்டாமா? அவன் முகத்தில் குத்தவேண்டாமா?

இந்த ஆவேசம் மெல்ல மெல்ல வடிய ஆரம்பித்தது. யாரோ ஒருவர் இருவர் சொன்னால் பரவாயில்லை. சந்தித்த அத்தனை பேரும் துக்கம் விசாரித்தார்கள். எதிரிகள் கிண்டலடித்தார்கள். எங்கள் தலைவர் சுத்தமான ஆவி; தெய்வப்பிறவி என்றெல்லாம் அளந்தாயே. என்ன ஆனது இப்போது? இத்தனைக்கும் எலிஜா ஏற்கெனவே திருமணம் ஆனவர் இல்லையா? இந்த வயதில் ஏன் அவருக்குப்பெண் ஆசை?

கூனிக்குறுகிப் போனார் மால்கம். பத்திரிகையாளர்கள்

துரத்தித் துரத்திக் கேட்டார்கள். வேறு ஒரு சந்தர்ப்பமாக இருந்தால் கடிந்துகொண்டிருப்பார். இப்போது பொறுமை காப்பது அவசியம். இல்லாவிட்டால் விவகாரத்தை மேலும் அசிங்கப்படுத்திவிடுவார்கள். ஆனால், என்ன சொல்லி அவர்களைச் சமாதானப்படுத்துவது? சொல்லி வைத்தாற் போல் எல்லோரும் எப்படி ஒரே குற்றச்சாட்டை அவர் மீது சுமத்துகிறார்கள்? எதிரிகள் என்ன வேண்டுமானாலும் சொல்லலாம். அமைப்பில் உள்ளவர்கள் புகைச்சல் காரணமாக பற்றவைக்கலாம். உண்மையான நலவிரும்பிகளுக்கும்கூட அல்லவா இந்த விவகாரம் தெரிந்திருக்கிறது. இதையெல்லாம் வைத்து என்ன முடிவெடுக்கமுடியும்?

எலிஜாவின் இரண்டாவது மகன் வாலஸ் முகமதுவைச் சந்தித்தார் மால்கம். வாருங்கள் மால்கம் என்று புன்னகையுடன் வரவேற்றார் வாலஸ் முகமது. தயங்கித் தயங்கிப் பேசினார் மால்கம். இப்படிக் கேட்பதற்காகத் தயவு செய்து என்னைத் தவறாக நினைத்துவிடாதீர்கள், உங்கள் தந்தையைப் பற்றி பலரும் பல்வேறு விதமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவற்றையெல்லாம் நீங்கள் கேட்டால் நிச்சயம் மனமொடிந்து போவீர்கள். உங்களைச் சங்கடப்படுத்துவது அல்ல என் நோக்கம். உங்கள் தந்தையை நேரடியாகச் சந்தித்துப் பேசவும் தயக்கமாக இருக்கிறது. வாலஸ் முகமது ஒரு சிறிய புன்னகையுடன் மால்கமின் கரங்களைப் பற்றிக்கொண்டார். மால்கம், அனைத்தையும் நான் அறிவேன். அவர்கள் சொல்வது உண்மைதான். என் தந்தையாக இருந்தால் என்ன? யார் செய்தாலும் தவறு தவறுதான்.

தன்னிச்சையாக நடந்துகொண்டிருந்தார் மால்கம். எலிஜா முகமது, நீங்களா இப்படி? ஏன் இப்படி மாறிப்போனீர்கள்? எது

உங்களை மாற்றியது? ஆசையை அடக்கக் கற்றுக்கொடுத்தவர் அல்லவா நீங்கள்? நீங்கள் போதித்த அந்த ஐந்து நட்சத்திரங்களையும் மறந்துபோனீர்களா? அதுவும் ஒரு பெண்ணுக்காகவா? ஒரு பெண்ணா அல்லது பல பெண்களா? ஐயோ, நான் இதை எப்படித் தாங்கிக்கொள்வேன்?

ஒழுக்கத்தை விட்டுக்கொடுக்கலாமா? அடிப்படை அல்லவா அது? ஒழுக்கம், கட்டடத்தின் அடித்தளம் போன்றது என்று நீங்கள் தானே சொல்லித்தந்தீர்கள்? பருந்துபோல் நம் மீது வட்டமடித்துக்கொண்டிருக்கும் எதிரிகள் இனி நம்மைக் கொத்தி தின்றுவிட மாட்டார்களா? எகத்தாளமாகச் சிரிக்க மாட்டார்களா? எலிஜா முகமது என்றால் நேஷன் ஆஃப் இஸ்லாம். நேஷன் ஆஃப் இஸ்லாம் என்றால் எலிஜா முகமது. இப்படித்தானே உலகம் நம்பிக்கொண்டிருக்கிறது?

எத்தனை மேடைகளில் நான் முழங்கியிருப்பேன்! கிறிஸ்தவ பாதிரிகளைப் போன்றவர்கள் அல்லர் நாங்கள். எந்த காரணத்துக்காகவும் எங்களை நாங்கள் களங்கப்படுத்திக்கொள்ள மாட்டோம். பொறாமையின் காரணமாகப் பலரும் பலவிதமான அவதூறுகளை எங்கள் மீது சுமத்தலாம். நாங்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது எங்கள் உள்ளுணர்வுக்குத் தெரியும். அல்லாவுக்கு நாங்கள் என்றும் துரோகம் செய்யமாட்டோம்.

இனி நான் என்னவென்று சொல்வேன்? அமைப்பின் தலைவரே இப்படி, தொண்டர்கள் எப்படி இருப்பார்கள் என்று கேட்டால் என்ன பதிலளிப்பேன்? உரை முடிந்ததும் ஓடி வரும் பத்திரிகையாளர்களை எப்படி எதிர்கொள்வேன்? நண்பர்களை? எதிரிகளை? நம்மைச் சந்திக்க ஆர்வத்துடன் குறிப்பேட்டுடன் வரும் மாணவர்களை?

இத்தனைக் காலம் தேடித்தேடி, அலைந்து திரிந்து கட்டிக்காத்த புகழை ஒரே நொடியில் நாசமாக்கிவிட்டீர்களே எலிஜா. உங்களால் இதை உணரமுடிகிறதா? உங்களிடம் வந்து கேட்டால் என்ன பதில் அளிப்பீர்கள்? எப்படி உங்களை நியாயப்படுத்திக்கொள்வீர்கள்? எந்தத் தத்துவத்தை துணைக்கு அழைத்துக்கொள்வீர்கள்? நீரில் அமுக்கி வைக்கப்பட்ட ரப்பர் பந்து மேலே எழும்புவதுபோல், ரெஜினால்டின் நினைவு மேலே நீந்தி வந்தது. ஒழுக்கக் குறைபாடு என்று காரணம் காட்டித்தானே அவனை இயக்கத்தில் இருந்து விலக்கினீர்கள்? சிறையில் இருந்து நான் உங்களுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தேனே, நினைவில் இருக்கிறதா? எவ்வளவு கறாராக மறுத்துவிட்டீர்கள். ஒழுக்கம் இல்லாதவனுக்கு இங்கே இடமில்லை. ஹா!

மால்கம் எக்ஸின் கொள்கைகளோடு ஒன்றிப்போகமுடியவில்லை என்றாலும் அவர் மீது மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார் மார்ட்டின் லூதர் கிங். அமெரிக்கா இந்த இருவரையும் எப்போதுமே ஒப்பிட்டு வந்துள்ளது. கறுப்பர்களின் மெய்யான தலைவர் யார்? மார்ட்டினா அல்லது மால்கம் எக்ஸா?

மார்ட்டின் லூதர் கிங் (ஜனவரி 15, 1929 -- ஏப்ரல் 4, 1968) வெளிச்சத்துக்கு வந்ததற்கு முக்கியக் காரணம் மாண்ட்கோமெரி சம்பவம். டிசம்பர் 1, 1955. ரோஸா பார்க்ஸ் அன்றைய வேலையை முடித்துக்கொண்டு பேருந்தில் ஏறினார். ஏதோ நினைவில் பேருந்தின் நடுப்புற இருக்கையில் அமர்ந்துவிட்டார். பதறிப்போனார் நடத்துனர். இங்கே நீங்கள் உட்காரக் கூடாது. பின் பக்கம் செல்லுங்கள். கோபமும் சிடுசிடுப்பும் கலந்திருந்தது அவர் குரலில். எழுந்து செல்ல விருப்பமில்லை ரோஸாவுக்கு. மாட்டேன்

என்றார். காரசாரமான வாக்குவாதங்களுக்குப் பிறகும் தன் இருக்கையை விட்டுக்கொடுக்கவில்லை அவர். தன் உரிமையையும்.

மாண்ட்கோமெரியில் இது சட்டம். கறுப்பினத்தவர்கள் பேருந்தின் கடைசி இருக்கைகளில் மட்டுமே உட்கார வேண்டும். கடைசி இருக்கைகள் நிரம்பி முன் பக்க இருக்கைகள் காலியாக இருந்தால், நின்றபடியே பயணம் செய்யவேண்டும். வெள்ளையர்கள் அமரும் பகுதிகளை கறுப்பர்கள் அசுத்தம் செய்யாமல் இருப்பதற்காக இயற்றப்பட்ட விசேஷ சட்டம் இது.

ரோஸா பார்க்ஸ் கைது செய்யப்பட்டபோது, மாண்ட்கோமெரி திரண்டு வந்தது. இதென்ன அநியாயம்? கறுப்பர்கள் கீழ்த்தரமானவர்களா? பேருந்தின் கடைசி இருக்கைகள் மட்டும்தான் எங்களுக்கு ஒதுக்கப்படுமா? பேருந்தில் மட்டுமா நடக்கிறது இந்தப் பிரிவினை? பள்ளிக்கூடங்களில். கல்லூரிகளில். கடை வீதிகளில். அரசாங்க அலுவலகங்களில். தேநீர் கடைகளில். ஏன், பூங்காக்களில்கூட கறுப்பர்களைத் தனியேதான் பிரித்து வைத்திருக்கிறீர்கள். சீ, உலகில் இதுபோல் வேறு எங்கும் நடந்து பார்த்ததுண்டா?

மார்டின் லூதர் கிங்கின் தலைமையில் போராட்டம் வெடித்தது. கறுப்பர்கள் பிரதானமாக வாழும் பகுதி மாண்ட்கோமெரி. கறுப்பர்களின் பணத்தைக் கொண்டுதான் பேருந்துகள் இங்கே இயக்கப்படுகின்றன. இது அனைவரும் அறிந்ததே. அப்படியிருக்கும்போது, கறுப்பர்களை பின் இருக்கையில் தள்ளிவிடுவது எத்தனை அயோக்கியத்தனம்? இதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கலாமா? இன்று ரோஸா பார்க்ஸ். நாளை நாம் அனைவரும் பாதிக்கப்படுவோம். இனவெறி கொண்ட

ஆங்கிலேயர்களின் பேருந்துகளை நாம் ஏன் பயன்படுத்தவேண்டும்? எங்கு செல்வதாக இருந்தாலும் இனி நடந்தே செல்லலாம். பேருந்துகளைப் புறக்கணிப்போம். வெற்றிகரமாகத் தொடங்கிய இந்தப் புறக்கணிப்புப் போராட்டம் அமெரிக்காவின் ஒட்டுமொத்த கவனத்தையும் ஈர்த்தது.

ஆகஸ்ட் 28, 1963-ம் ஆண்டு வாஷிங்டனில் மாபெரும் பேரணி ஒன்று நடந்தது. கறுப்பர்கள் தங்கள் கோரிக்கைகளை முன்னிறுத்த நடத்திய பேரணி இது. நாடு தழுவிய அளவில் இதற்காக கறுப்பர்கள் ஒருங்கிணைக்கப்பட்டார்கள். இந்தப் பேரணி நடைபெறாமல் இருக்க நிறைய பிரயத்தனம் செய்தது கென்னடி அரசு. முடியவில்லை. சரி, குறைந்தபட்சம் சாத்வீகமான முறையிலாவது போராட்டம் நடைபெறட்டும் என்று கீழே இறங்கி வந்தார் கென்னடி. பேரணிக்கு மார்ட்டின் லூதர் தலைமையேற்றுக்கொண்டார் என்பதைக் கேள்விப்பட்டதும் நிம்மதியடைந்தார் கென்னடி. மார்ட்டின் லூதர் மென்மையானவர். ஆகவே பேரணியும் அமைதியாக நடைபெறும்.

மார்ட்டின் லூதரின் தலைமையில் பேரணி என்பதைக் கேள்விப்பட்டவுடன் உதட்டைப் பிதுக்கிவிட்டார் மால்கம். பேரணிக்காக எடுத்து வைத்திருந்த பதாகைகளை அமெரிக்கக் காவல்துறையினர் கைப்பற்றிவிட்டனர் என்னும் செய்தி கூடுதலாகக் கிடைத்தது. அமெரிக்க அரசின் மேற்பார்வையில் நடத்தப்படும் பேரணியில் அப்படி என்ன பெரிதாகச் சாதித்துவிடமுடியும்?

மால்கம் எதிர்பார்த்ததைப் போலவே இந்தப் பேரணியால் மேலதிகம் எதையும் சாதிக்கமுடியவில்லை. ஆனால், ஆபிரஹாம் லிங்கன் நினைவகத்துக்கு முன் நின்று

மார்ட்டின் லூதர் கிங் நிகழ்த்திய உரை வரலாற்றில் நிரந்தமாகப் பதிந்துபோனது. அந்த உரையின் தொடக்க வாசகம் இது. ‘நான் ஒரு கனவு காண்கிறேன்.’

மால்கம் எக்ஸை அல்ல மார்ட்டின் லூதர் கிங்கையே ஆராதித்தது அமெரிக்கா. கறுப்பர்களிடம் நாங்கள் கருணையுடன் நடந்துகொள்கிறோம் என்று காண்பித்துக்கொள்ள விரும்பிய அனைவரும் மார்ட்டின் லூதரை அரவணைத்துக்கொண்டார்கள். பல வகைகளிலும் அது அவர்களுக்குச் சௌகரியமாக இருந்தது. இன்னும் சொல்லப்போனால் கறுப்பினத்தவர்கள் அனைவரும் மார்ட்டின் லூதர் கிங்கின் பின்னால் அணிதிரளவேண்டும் என்பதுதான் அமெரிக்கர்களின் ஆவலாக இருந்தது.

மால்கம் எக்ஸைப்போல் மார்ட்டின் லூதர் அமெரிக்கர்களின் இதயத்தைக் குத்திக்கொண்டிருக்க மாட்டார். உன்னால்தான் எங்களுக்கு இந்த நிலை என்று முகத்துக்கு நேராகக் குற்றம் சுமத்த மாட்டார்கள். வன்முறை தவறானது அது நமக்குச் சரிவராது என்று ஊர் ஊராகச் சென்று பிரசாரம் செய்து வருகிறார் மார்ட்டின். பிட் நோட்டீஸ் அடித்து நேரத்தை வீணாக்கவேண்டாம் நேருக்கு நேர் நின்று போராடுவோம் என்கிறார் மால்கம். ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தைக் காட்டு என்றார் மார்ட்டின். அறைந்த கையைப் பிடித்து முறுக்கி இரண்டு கன்னங்களிலும் அறை என்றார் மால்கம்.

மார்ட்டினா, மால்கமா? யாரிடம் நெருங்குவது வசதியானது? யாரை திடமாக நம்பமுடியும்? அமைதிக்கான நோபல் பரிசை யாருக்கு அளிக்கமுடியும்? யாருடைய பொதுக்கூட்டங்களுக்கு உடனே அனுமதி அளிக்கமுடியும்? யாரைத் தொடர்ந்து கண்காணிப்பில் வைத்திருக்கவேண்டும்? யாரால் ஆபத்து அதிகம்?

கறுப்பினத்தவரின் சிவில் உரிமைகளுக்காக மார்ட்டின் லூதர் கிங் போராட வந்ததில் மால்கமுக்கு மகிழ்ச்சியே. நாடு தழுவிய அளவில் மார்ட்டினுக்கு ஆதரவு பெருகி வருவதையும் அவர் உணர்ந்தே இருந்தார். ஆனால் மார்ட்டின் லூதரின் போராட்ட முறையை ஏற்றுக்கொள்ள மால்கம் தயாராக இல்லை. அறவழி போராட்டம் நமக்கு உதவாது. சாந்தமாகக் கொடி பிடித்துப் போராடிக்கொண்டிருந்தால் அமெரிக்கா நம் தலையில் மிளகாய் அரைத்துவிடும். தவிரவும், வெள்ளையர்களின் அங்கீகாரம் பெற்ற போராட்ட முறை நமக்குத் தேவையில்லை. நாம் அறவழியில் போராடவேண்டுமா அல்லது ஆயுதம் கொண்டு எதிர்க்கவேண்டுமா என்பதை முடிவு செய்ய வேண்டியது நாம். அமெரிக்கா அல்ல.

1963-ம் ஆண்டு நவம்பர் 22-ம் தேதி அதிபர் கென்னடி கொலை செய்யப்பட்டார். வழக்கம்போல் மைக்கைத் தூக்கிக்கொண்டு மால்கம் எக்ஸிடம் ஓடி வந்தார்கள் பத்திரிகையாளர்கள். இது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்? மால்கம் மிகக் கவனமாகத்தான் பதிலளித்தார். கென்னடியின் கொலைக்குக் காரணம் வெறுப்பு. எதை விதைத்ததோ அதையேதான் அமெரிக்கா அறுவடை செய்துகொண்டது. வழக்கம்போல் இதையும் திரித்தே எழுதினார்கள். அதிபர் கொலையை மால்கம் எக்ஸ் நியாயப்படுத்துகிறார் என்பதாக.

உங்களைப் பார்க்கவேண்டும் என்று சொல்லி அனுப்பினார் எலிஜா முகமது. மறுக்காமல் சென்றார் மால்கம். இருவரும் கட்டியணைத்துக்கொண்டார்கள். அந்த அணைப்பில் கதகதப்பு இல்லை. நட்பு இல்லை. இருவராலும் அதை உணர முடிந்தது. சம்பிரதாய விசாரிப்புகள் எதுவும் இல்லாமல் நேரடியாக விஷயத்துக்கு வந்தார் எலிஜா

முகமது.

‘நீ அப்படிப் பேசியிருக்கக் கூடாது.’

‘நான் பேசியதில் என்ன தவறு? கென்னடியின் கொள்கைகளை நாம் எக்காலத்திலும் ஆதரித்தது இல்லையே. அவர் தூவிய வெறுப்பின் காரணமாகத்தானே அவர் கொல்லப்பட்டிருக்கிறார்? அதைத்தானே நான் பேட்டியில் சொன்னேன். இதில் என்ன தவறு?’

‘எல்லோராலும் நேசிக்கப்படும் நபர் கென்னடி. இதை நீ மறந்துவிட்டாய்.’

‘நேசிக்கப்படும் நபரா? வியத்நாமில் அவர் மேற்கொண்ட அராஜக நடவடிக்கைகள் பற்றி பலமுறை நாமே விவாதித்திருக்கிறோமே.’

‘அது வேறு சந்தர்ப்பத்தில். கென்னடியின் மறைவுக்காக எல்லோரும் அஞ்சலி செலுத்திக்கொண்டிருந்த சமயத்தில் உன் பேட்டி, குட்டையைக் குழப்பியிருக்கிறது. பார். உன்னால் நேஷன் ஆஃப் இஸ்லாத்தின் கௌரவம் குறைந்துபோயுள்ளது.’

இறுக்கமாக அமர்ந்திருந்தார் மால்கம். என்னால் அமைப்பின் கௌரவம் குறைந்துவிட்டதா? அலட்டிக்கொள்ளாமல் எப்படி இவரால் பொய் சொல்ல முடிகிறது?

‘அடுத்த 90 நாள்களுக்கு நீ எதுவும் பேசக் கூடாது. பொதுக்கூட்டங்கள் எதிலும் கலந்துகொள்ளவேண்டியதில்லை. பேட்டிகள் அளிக்கவேண்டியதில்லை. உன்னால் ஏற்பட்ட இழப்பைச் சமாளிக்கும் வரை நீ மௌனம் காக்கவேண்டும். இனி நீ

போகலாம்.’

வீட்டுக்கு நடந்துசெல்லும்போது சட்டென்று காஸியஸ் க்ளேயின் நினைவு வந்து அழுத்தியது. ஆ, நண்பனே, எனக்கும் எலிஜாவுக்குமான உறவு அறுந்துபோனதற்கு நீயும்கூட ஒரு காரணம். நினைவிருக்கிறதா? 1962-ல் தானே நாம் முதலில் சந்தித்துக்கொண்டோம்? ஆம், டெட்ராய்டில் நடந்தது அந்தச் சந்திப்பு. எலிஜா முகமதுவின் உரையைக் கேட்பதற்காக நீ வந்திருந்தாய். கூட்டம் முடிந்ததும் முண்டியடித்து ஓடிவந்து ஒரு புன்னகையுடன் கையை நீட்டினாய். கைகுலுக்கிக்கொண்டோம். உன்னிடம் என்ன பேசினேன் என்று நினைவில் இல்லை.

நீ ஒரு விளையாட்டு வீரன், அதுவும் குத்துச்சண்டை வீரன் என்று தெரிந்தும் நான் உன்னிடம் பழகினேன். ஆம், விளையாட்டு வீரர்கள் மீது எலிஜா முகமது என்றுமே ஆர்வம் செலுத்தியது இல்லை. எந்த விளையாட்டிலும் அவருக்கு விருப்பம் கிடையாது. எனக்கு இருந்தது. நானும்கூட சிறுவயதில் குத்துச்சண்டை வீரன் ஆக ஆசைப்பட்டிருக்கிறேன். குத்துகள் பட்டு முகம் வீங்கியதுதான் மிச்சம். ஆனால் உன்னிடம் ஒரு வெறி இருந்தது.

ஆகவேதான் உன் மீது தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தினேன். வீட்டுக்கு அழைத்துச்சென்றேன். என் குழந்தைகளுடன் ஆர்வமாக விளையாடினாய். நான் செல்லும் இடங்களுக்கு வர ஆரம்பித்தாய். என் நண்பன் அலெக்ஸ் ஹெய்லியிடம் உன்னைப் பற்றிப் பெருமையுடன் பிரஸ்தாபித்திருக்கிறேன். உன் மீது பந்தயம் கட்டினால் நிச்சயம் நீ ஏமாற்ற மாட்டாய் என்று சொன்னேன். உன் மீது அசைக்கமுடியாத நம்பிக்கை

இருந்தது எனக்கு. நிச்சயம் நீ உலகப் புகழ் பெற்ற சாம்பியனாக வருவாய் என்று சொன்னேன். ஒரு கறுப்பு முஸ்லிமாக உன்னை நீ அறிவித்துக்கொண்டபோது, உள்ளம் மகிழ்ந்துபோனேன். உன் மத போதகராக நான் அறியப்பட்டேன். உன் வெற்றியை ஒருவராலும் தடுத்து நிறுத்தமுடியவில்லை. நான் எதிர்பார்த்ததைப் போலவே நீ ஜொலிக்க ஆரம்பித்தாய்.

உன் வெற்றிக்குப் பின்னால் நான் இருப்பதை எலிஜா முகமதுவால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. உன் புகழ் உயர்ந்துகொண்டே போனது. உலகம் மதிக்கும் சாம்பியனாக நீ பரிமளிக்க ஆரம்பித்திருந்தாய். உனக்குக் கிடைத்த விளம்பரம் அமைப்புக்குக் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று யோசித்தார் எலிஜா. உன்னை மகிழ்விக்கும் வகையில் முகமது அலி என்னும் புதிய பெயரையும் சூட்டினார். ஆனால் நண்பனே, நீ என்னுடன் தொடர்பு கொண்டிருந்ததை மட்டும் அவரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை. ஆகவேதான் உன்னை அழைத்து இனி மால்கமிடம் தொடர்பு கொள்ளாதே என்று சொல்லிவிட்டார். பரவாயில்லை நண்பா, என்னால் உன்னைப் புரிந்துகொள்ள முடிகிறது. மேலும் மேலும் வளம் பெற்று நீ மினுமினுப்பாய் என்னும் நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

எலிஜா முகமது பற்றிய மாய பிம்பத்தை மால்கம் சிறிது சிறிதாக மாற்றிக்கொள்ள ஆரம்பித்திருந்தார். கடவுள் என்னும் நிலையில் இருந்து அவரை முதலில் கீழே இறக்கி வைத்தார். ஆகச் சிறந்த சிந்தனையாளர் என்னும் மாயத் தோற்றத்தைக் கிழித்து எறிந்தார். ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு கணமும் மானசீகமாக அவரைத் தொழுது வந்ததற்காக வருந்தினார். கறுப்பர்களுக்கு விடிவுகாலம்

என்று ஒன்று இருந்தால் அது இவர் மூலமாகத்தான் என்று எத்தனை மூடத்தனமாக நம்பியிருந்தேன். அனைத்தையும் சுக்குநூறாக உடைத்துவிட்டாரே!

நான் பணியாற்றும் அமைப்பின் உரிமையாளர் எலிஜா முகமது. அவர் சொல்வதைக் கேட்பது என் கடமை. இதைத் தாண்டி எனக்கும் அவருக்கும் தனிப்பட்ட உறவு எதுவும் இல்லை. பேசாதே என்று எலிஜா சொன்ன ஒரே காரணத்துக்காக அமைதி காத்தார் மால்கம். ஆனால் அதுவும்கூட ஒரு சூழ்ச்சிதான் என்பது பின்னால் தெரியவந்தது. இந்த 90 நாள்களை தனக்குச் சாதகமான முறையில் பயன்படுத்திக்கொண்டார் எலிஜா முகமது. மால்கம் மீது அடுக்கடுக்காகப் பல குற்றச்சாட்டுகள் வைக்கப்பட்டன. மால்கம் ஒரு துரோகி. ஆள்காட்டி. பச்சோந்தி. எதிரிகள் அவரை விலைக்கு வாங்கிவிட்டார்கள். அமைப்பில் குழப்பம் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார். பணத்தைச் சூறையாடிவிட்டார். தலைமையைக் கைப்பற்றச் சதி ஆலோசனை நடத்திக்கொண்டிருக்கிறார். வாக்களித்துவிட்டோமே என்று எதற்கும் பதிலளிக்காமல் மால்கம் அமைதி காத்தார்.

இல்லை என் மீது தவறில்லை என்று நிரூபிக்க வேண்டிய அவசியம் தனக்கு இல்லை என்பதில் தெளிவாக இருந்தார் மால்கம். அந்தப் பேச்சுக்கே இனி இடமில்லை. குற்றமற்றவன் என்று நான் எதற்கு நிரூபிக்க வேண்டும்? அதைவிட முக்கியம் யாருக்கு? எலிஜா முகமதுவுக்கா? எலிஜாவுடன் இனி இணைந்திருப்பது சாத்தியமில்லை. நான் ஆர்வத்துடன் வந்து இணைந்த நேஷன் ஆஃப் இஸ்லாம் இப்போது இல்லை. அது மாறிவிட்டது. நான் கடவுளாக நம்பித் தொழுத எலிஜா முகமது மாறிவிட்டார். நண்பர்கள் என்று நான் நம்பியவர்கள் எல்லாம் என்னைக்

கைவிட்டுவிட்டார்கள். மீண்டும் எலிஜாவுடன் உறவைப் புதுப்பித்துக்கொள்ள முயல்வது இறந்துபோன உடலுக்கு உயிர் கொடுப்பது போன்றதொரு செயல்.

பன்னிரண்டு ஆண்டுகாலத் தொடர்பு அறுந்துவிட்டதை மால்கமால் தெளிவாக உணர முடிந்தது. நான் விலகிக்கொள்கிறேன். எனக்கும் எலிஜா முகமதுவுக்கும்; எனக்கும் நேஷன் ஆ்ப் இஸ்லாமுக்கும் இனி தொடர்பேதும் இல்லை. மார்ச் 8, 1964 அன்று வெளிவந்தது இந்த அறிவிப்பு.

இப்படியாக, மால்கம் எக்ஸின் சகாப்தம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டது என்று பத்திரிகையாளர்கள் பேனாவை திறந்து வைத்துக்கொண்டு ஆசையாசையாக முடிவுரை எழுத ஆரம்பித்தார்கள். சற்றுப் பொறு நண்பா என்றார் மால்கம் எக்ஸ். புதிய அமைப்பு ஒன்றை தொடங்கியிருக்கிறேன். Muslim Mosque Inc. நேஷன் ஆ்ப் இஸ்லாமைவிட அதி தீவிரமான அமைப்பு இது. முன்பைவிட பலமாக, முன்பைவிட அதிக சக்தியுடன் இயங்க ஆரம்பித்திருக்கிறேன். அமெரிக்காவுக்கு என் வந்தனங்கள். நேஷன் ஆ்ப் இஸ்லாமில் இருந்து வெளியேறிய நான்கே தினங்களில் வந்து சேர்ந்தது இந்த அறிவிப்பு.

வாஷிங்டனில் மார்ட்டின் லூதர் கிங்கைச் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது (மார்ச் 28, 1964). ஆனால் அவருடன் அதிக நேரம் பேசமுடியவில்லை. பரஸ்பரம் நலம் விசாரித்துக்கொண்டார்கள். மால்கம் இப்படி நினைத்துக்கொண்டார். அற்புதமான தலைவர். கூடுதலாக, ஆவேசமும் போராட்டக் குணமும் இருந்தால் சிறப்பாக இருக்கும். மார்ட்டின் லூதரின் கரிசனம் வேறு மாதிரியாக இருந்தது. அனைவரையும் வசீகரிக்கும் அற்புதமான

தலைவர் மால்கம். பாவம், தேர்ந்தெடுத்த பாதைதான் தவறு. அவரை நொந்து பயனில்லை. காலத்தின் குழந்தை அவர்.

# 11. பயணம், பாதை, புரிதல்

மெக்காவுக்குச் செல்ல முடிவு செய்திருந்தார் மால்கம். பெட்டியிடம் இருந்து விடைபெற்றுக்கொண்டார். எல்லாவைச் சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார். மற்றபடி ஒருவருக்கும் தெரியாமல் பயணத்தை ஆரம்பித்தார். வெளியில் தெரிந்தால் கண், காது, மூக்கு வைத்து கதை பேசுவார்கள். விட்டால் போதும் என்று அமெரிக்காவைவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டார் என்று சொன்னாலும் சொல்வார்கள். மட்டுமல்லாமல், அரசாங்கத் தரப்பில் இருந்து குறுக்கீடு வரலாம். ஏன் எதற்கு என்று தோண்டித் துருவி குடையலாம். பயணத்தை ரத்து செய்தாலும் செய்யலாம்.

முடிந்தவரை உலகத்தை ஒரு சுற்று சுற்றிவர ஆசைப்பட்டார் மால்கம். வெவ்வேறு நிலப்பகுதிகளையும் அங்கே உள்ள புதிய மனிதர்களையும் சந்திக்க ஆர்வமாக இருந்தார் மால்கம். ஜெர்மனி வழியாகச் செல்வதாக ஏற்பாடு. விமான நிலையத்தில் பயணிகள் அடையாளம் கண்டுபிடித்து புன்னகையுடன் நெருங்கி வந்தார்கள். நீங்கள் மால்கம் எக்ஸ்தானே? கறுப்பு முஸ்லிம்கள் பற்றி நாங்கள் நிறைய கேள்விப்பட்டிருக்கிறோம். உங்கள் கோட்பாடுகள் என்ன? அமெரிக்காதான் உங்கள் எதிரியா? அமெரிக்காவுக்கு எதிராக நீங்கள் போர் தொடுக்கப்போகிறீர்களா? ஆ◌ஃப்ரோ அமெரிக்க ஒற்றுமை நிறுவனம் (Organisation for AfroAmerican Unity) தொடங்கியிருக்கிறீர்களாமே?

இன்னும் சிலர் மால்கமுடன் சேர்ந்து புகைப்படம் எடுத்துக் கொள்ள விரும்பினார்கள். சிலருக்கு அவருடைய கையொப்பம் தேவைப்பட்டது. சிலரிடம், ஆம் நான் மால்கம்

எக்ஸ்தான் என்று சத்தம் போட்டு மீண்டும் மீண்டும் சொல்லவேண்டியிருந்தது. ஜெர்மனியில் இத்தனை பேர் தன்னைத் தெரிந்துவைத்திருப்பார்கள் என்று மால்கம் எதிர்பார்க்கவில்லை. ஆச்சரியமாக இருந்தது அவருக்கு. கூடவே, வருத்தமும். எல்லோரும் என்னிடம் இருந்து நிறைய எதிர்பார்க்கிறார்கள். அவர்களுக்கு நான் என்ன செய்திருக்கிறேன்?

கெய்ரோ சென்றபோது அங்கும் ஆர்வத்துடன் பாய்ந்துவந்து விசாரித்தார்கள். எல்லோரும் அமெரிக்காவைப் பற்றித்தான் கேட்டார்கள். அங்கே நிறவெறி எப்படி இருக்கிறது இப்போது? நிலைமையில் சிறிதளவு முன்னேற்றமாவது தெரிகிறதா இல்லையா? கறுப்பர்களின் கதி என்ன? எந்த மாதிரியான அணிதிரட்டலில் நீங்கள் ஈடுபட்டுவருகிறீர்கள்?

லெபனான் சென்றபோது மக்கள் மால்கமின் கைகளைப் பிடித்து ஆர்வத்துடன் குலுக்கினார்கள். அவர்களுக்காக அங்கே உரையாற்றினார் மால்கம். அடுத்து எகிப்து, நைஜீரியா. கானாவின் அதிபர் க்யாமே நுக்ருமாவைச் சந்தித்து உரையாடினார். மொராக்கோ சென்றார். மால்கம் காலடி எடுத்து வைத்த ஒவ்வொரு தேசமும் அவரை அன்புடன் அணைத்துக்கொண்டது. அன்புடன் கூடிய உபசரிப்பு. கனிவான விசாரிப்புகள். உரையாடல்கள்.

ஆப்பிரிக்காவை முழுமையாகத் தெரிந்துகொள்ள இந்தப் பயணம் பெரும் உதவி செய்தது மால்கமுக்கு. ஆப்பிரிக்கன் ஒருவனை ஒவ்வொரு முறை பார்க்கும்போதும் தன் மனத்துக்குள் மானசீகமாக இப்படிச் சொல்லிக்கொள்வார் மால்கம். நண்பரே, நீயும் நானும் சகோதரர்கள். ஆப்பிரிக்கா எங்கள் தாய் நாடு. நீங்கள் இந்த மண்ணின் மைந்தர்கள். நான் உங்களை வணங்குகிறேன்.

மே 19, 1964 அன்று அல்ஜீர்ஸ் வந்து சேர்ந்தார் மால்கம். அன்று அவரது 39-வது பிறந்த தினம். ஒரு விடுதிக்குச் செல்லும் வழியில் வாகன ஓட்டுநரிடம் பேச்சுக்கொடுத்துக்கொண்டே வந்தார் மால்கம். பயணம் முழுவதும் கேள்வி மேல் கேள்வி கேட்டுக்கொண்டிருந்தார். ஃபிரான்ஸ் அல்ஜீரிய மக்கள் மீது எத்தனைக் கடுமையாக ஒடுக்குமுறையை கட்டவிழ்த்துவிட்டுள்ளது என்பதை அவரால் தெளிவாக உணர முடிந்தது.

வெள்ளைக்காரர்கள் எங்கும் ஒன்றுபோலவே இருக்கிறார்கள். இங்கிலாந்து, அமெரிக்கா, ஃபிரான்ஸ் எல்லாமே ஒன்றுதான். கறுப்பர்கள் என்றாலே இளித்தவாயர்கள் என்று இவர்களுக்கு நினைப்பு. ஆப்பிரிக்காவின் ஒவ்வோர் அங்குலத்தையும் பிழிந்து நாசமாக்கிக்கொண்டார்கள். வெள்ளையர்கள் மினுமினுப்புடன் வெளிச்சத்தில் ஜொலிப்பதற்கும் ஆப்பிரிக்கா இருண்ட கண்டமாகத் தேய்ந்து நிற்பதற்கும் நேரடித் தொடர்பு உண்டு.

நிறவெறி அரசாங்கத்துக்கு எதிராக ஆப்பிரிக்கர்கள் நடத்திக்கொண்டிருக்கும் போராட்டத்தை நேரடியாகக் கண்டுகொண்டார் மால்கம். எந்தவொரு ஆப்பிரிக்க நாடும் சுபிட்சமாக இல்லை என்னும் உண்மை அவரை ரணமாக்கியது. பசி, பட்டினி, பஞ்சம். இயற்கை வளங்கள் கொஞ்சும் தேசத்தில் கொத்துக் கொத்தாகப் பட்டினிச் சாவுகள்.

கானா தேசத்துப் பாராளுமன்றத்தில் உரையாற்றும் வாய்ப்பு வந்தது. தக்க முறையில் பயன்படுத்திக்கொண்டார். இந்த உரை பலத்த சலசலப்பை ஏற்படுத்தியது. ஆ, அமெரிக்காவா டாலர் மழை கொட்டும் தேசம் அல்லவா என்று வாய் பிளப்பவர்களை ஒரு பிடி பிடித்தார் மால்கம். எங்கிருந்து

அவர்களுக்குக் கிடைத்தது இத்தனை செல்வம்? உங்கள் தேசத்து வறுமையைப் பற்றி சிந்திக்காமல் ஏன் அமெரிக்காவைப் பார்த்து கொட்டாவி விடுகிறீர்கள்? கைகளைக் கட்டிக்கொண்டு நம் எதிரிகளை ரசித்துக்கொண்டு நிற்கவேண்டும் என்று யார் சொன்னது உங்களுக்கு?

கூட்டத்தில் இருந்த வெள்ளையர்கள் சிலர் எழுந்து நின்றார்கள். மிஸ்டர் மால்கம் எக்ஸ், நாங்கள் வெள்ளையர்கள். ஆனால் நாங்கள் நிறவேற்றுமை பாராட்டுவதில்லை. இதோ இங்குள்ள கறுப்பு நண்பர்களைக் கேட்டுப்பாருங்கள். அவர்களிடம் என்றாவது நான் விசித்திரமாக நடந்துகொண்டிருக்கிறேனா என்று விசாரியுங்கள். இப்போது என்ன சொல்கிறீர்கள்? ஒட்டுமொத்த வெள்ளை இனத்தையும் தாக்குவதை இப்போதாவது நிறுத்திக்கொள்வீர்களா?

மாட்டேன் என்றார் மால்கம். நிர்த்தாட்சண்யமாக. கேள்வி கேட்டவரை நோக்கி சீறினார். நீங்கள் மிக அழகாக நடித்துக்கொண்டிருக்கிறீர்கள். வெளிப்புறத்தில் நல்லவர் போல் தோற்றம் காட்டுகிறீர்கள். கறுப்பர்களின் கைகளைப் பிடித்து குலுக்கிக்கொண்டிருக்கும்போது, நண்பரே என்று நீங்கள் கரங்களை நீட்டும்போது, அவர்களுடன் அமர்ந்து ஒன்றாகச் சாப்பிடும்போது, உங்கள் அடிமனத்தில் என்ன ஓடிக்கொண்டிருக்கும் என்று எனக்குத் தெரியும். அப்பாவிக் கறுப்பர்கள் உங்களிடம் ஏமாறலாம். ஆம் இவர் என் நண்பர் என்று உங்களைக் கட்டியணைத்துக்கொள்ளலாம். கறுப்பர்களிடம் திரும்பினார் மால்கம். இவருடைய வாதத்தை நான் ஏற்க மாட்டேன். என் கருத்தில் எந்த மாற்றமும் இல்லை. வெள்ளையர்களுக்கு வேண்டியது எல்லாம் கறுப்பர்களின் வளங்கள் மட்டும்தான்.

புகழ்பெற்ற இஸ்லாமிய மதகுருமார்கள் சிலரை மால்கம் சந்தித்துப் பேசினார். குர் ஆன் குறித்தும் பண்டைய இஸ்லாமிய மறை நூல்கள் பற்றியும் அவர்கள் மால்கமுக்கு எடுத்துச் சொன்னார்கள். நேஷன் ஆ்ஃப் இஸ்லாம் முன்வைத்த கோட்பாடுகளுடன் ஒப்பிடுகையில் இஸ்லாம் ஒரு பெருங்கடல் என்பது புரிந்தது. தவிரவும், எலிஜா முகமது விரித்துரைத்த பல விஷயங்கள் இஸ்லாத்தில் இல்லவே இல்லை. இன்னும் சொல்லப்போனால் இஸ்லாத்துக்கு நேர் விரோதமான சிந்தனைப் போக்குகள் சிலவற்றைகூட எலிஜா முகமது போதித்திருப்பது தெரிந்தது.

எலிஜா முகமது இவற்றை எல்லாம் வாசித்திருப்பாரா? பின், இஸ்லாம் என்று அவர் முன்னிறுத்தியது எதை? தீவிரமாகக் கற்றறிந்தோ கேட்டறிந்தோ இஸ்லாத்தை அவர் கற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. தன் மனத்துக்குப் பட்டதை எல்லாம் அவர் சொல்லிச் சென்றிருக்கிறார். அதனால் பாதகமில்லை. ஒருவன் தன் அனுபவங்களின் மூலம் பெற்றுக்கொண்ட பாடங்களின் தொகுப்புதான் வாழ்க்கை. ஆனால் எலிஜா செய்துகொண்டிருக்கும் தவறு என்ன தெரியுமா? தான் கூறுவதுதான் இஸ்லாம் என்று அடித்துப் பேசுவது. நிறைய வாசிக்கவேண்டும். அதற்கு முன்னால் இதுவரை வாசித்த பல சங்கதிகளை நினைவில் இருந்து துடைத்து அழிக்கவேண்டும். முன்னதைவிட பின்னது கடினம் என்பது புரிந்தது.

இஸ்லாம் அன்பை போதிக்கிறது. நேசத்தை போதிக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக, அனைத்து உறவுகளுக்கும் மேலானதாகச் சகோதரத்துவத்தை இஸ்லாம் முன்வைக்கிறது. ஆனால் எலிஜா கற்றுக்கொடுத்தது வெறுப்பை மட்டுமே. இன வெறுப்பைத்தான் அவர்

வெவ்வேறு வார்த்தை ஜாலங்களில், வெவ்வேறு கலவைகளில், வெவ்வேறு வண்ணங்களில் சொல்லித்தந்திருக்கிறார். நம்மை வெள்ளையர்கள் வெறுக்கிறார்கள். நம்மை வெள்ளையர்கள் ஒதுக்குகிறார்கள். ஆகவே நாம் வெள்ளையர்களை ஒதுக்குவோம். வெள்ளையர்களை வெறுப்போம்.

உண்மை. நம்மை அடித்துத் துரத்தும் வெள்ளையர்களிடம் நாம் சிநேகம் கொள்ளமுடியாது. மார்ட்டின் லூதரைப் போல் அமைதி ஊர்வலம் நடத்திக்கொண்டிருக்க முடியாது. நம் எதிர்ப்பை வெளிப்படுத்தியே தீரவேண்டியது அவசியம். உங்களுக்கு நாங்கள் இளைத்தவர்கள் அல்லர் என்பதை மீண்டும் மீண்டும் நிரூபித்துக்கொண்டிருக்க வேண்டியது அவசியமும்கூட. சக கறுப்பனுக்கு அநீதி இழைக்கப்படும்போது ஒரு குழுவாக இணைந்து போராடுவது அவசியமானதுதான்.

ஆனால், எல்லையில்லா வெறுப்பை நாம் உமிழ்ந்துகொண்டே இருக்கவேண்டுமா? அதுவும் எல்லோர் மீதும்? வெறுப்புக்கு வெறுப்பா தீர்வா?

குற்றவுணர்ச்சிக்கு ஆட்பட்டதைப்போல் வெட்கி தலைகுனிந்தார் மால்கம். அடடா, எத்தனைப் பெரிய உண்மையை நான் எளிதாக மறந்திருக்கிறேன்! போகட்டும். இப்போதாவது வெளிச்சம் கிடைத்ததே.

புனித ஹஜ் பயணத்தையும் திருப்திகரமாக முடித்துக்கொண்டார். பல ஆயிரம் பேர் ஒன்று சேர்ந்து தொழுத அந்தக் கணத்தை தன் வாழ்நாள் முழுவதும் பொத்திக் காக்க விரும்பினார் மால்கம். வார்த்தைகளில் விவரிக்க முடியாத சிலிர்ப்பான அனுபவத்தை ஹஜ் பயணம் அளித்தது.

மே 29 அன்று அமெரிக்கா திரும்பினார் மால்கம். பத்திரிகையாளர்கள் மால்கமைச் சூழ்ந்துகொண்டார்கள்.

‘என்ன ஆனது உங்களுக்கு? எங்கே போயிருந்தீர்கள்?’

‘என் தேசத்துக்கு. ஆப்பிரிக்காவுக்கு.’

‘அங்கே யாரையெல்லாம் சந்தித்தீர்கள்? என்ன பேசினீர்கள்?’

‘என் சகோதரர்களைச் சந்தித்தேன். என் மூதாதையர்களைச் சந்தித்தேன். கறுப்பின மக்களின் சோகமான வரலாறைச் சந்தித்தேன்.’

‘உங்கள் சொந்தக்காரர்கள் அங்கே இருக்கிறார்களா என்ன?’

‘ஆம். மொத்தம் 750 மில்லியன் முஸ்லிம்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் அனைவருடனும் நான் தொடர்பு கொண்டிருக்கிறேன். நாங்கள் ஒரே இனத்தைச் சேர்ந்தவர்கள். எங்களுக்குள் ரத்த சம்பந்தம் உண்டு.’

‘அமெரிக்காவில் நடைபெறும் வன்முறை அத்துமீறல்களுக்குக் காரணம் நீங்கள்தான் என்று சொல்லப்படுகிறதே?’

‘எங்கு எது நடந்தாலும் அதற்கு என்னைக் காரணம் காட்டுவதை நீங்கள் எப்போது நிறுத்திக்கொள்ளப் போகிறீர்கள்?’

‘வெள்ளையர்களுக்கு எதிராக அதி தீவிரமாகப் பிரசாரம் செய்துகொண்டிருப்பவர் நீங்கள்தானே? உங்களால் உந்தப்பட்டுதானே இளைஞர்கள் கலவரத்தில் குதிக்கிறார்கள்?’

‘வன்முறையில் ஈடுபடும்படி நான் என்றுமே பிரசாரம்

செய்தது கிடையாது. தாக்கினால் தற்காத்துக்கொள்ளத் தயங்காதே என்று மட்டுமே சொல்லி வருகிறேன்.’

‘நேஷன் ஆஃப் இஸ்லாமில் நீங்கள் இருந்தபோது ஆற்றிய உரைகளிலும் சமீப காலங்களில் நீங்கள் சொல்லிக்கொண்டிருக்கும் கருத்துகளுக்கும் இடையே பல வித்தியாசங்களைக் காண முடிகிறதே.’

‘உண்மை. இன்னும் பல மாற்றங்களை நீங்கள் என்னிடம் இருந்து எதிர்ப்பார்க்கலாம். இந்தப் புனிதப் பயணம் என்னை உலுக்கிவிட்டது. தேவையற்ற சங்கதிகள் என்னிடம் இருந்து உதிர்ந்துவிட்டன. பல புதிய பிடிமானங்கள் கிடைத்திருக்கின்றன. புதிய வெளிச்சங்களை சேகரித்து வைத்திருக்கிறேன். அசலான இஸ்லாம் அன்புமயமானது. அதை நான் அனுபவபூர்வமாக உணர்ந்தேன்.’

‘ஆ, மால்கம் எக்ஸ் அறவழியில் திரும்பிவிட்டாரா? எத்தனைப் பெரிய செய்தி இது? இனி நீங்கள் மார்ட்டின் லூதரைப்போல் அகிம்சைப் போராட்டத்தை மட்டுமே மேற்கொள்வீர்களா?’

‘கிடையாது. என் துடிதுடிப்பும் வேகமும் சிறிதும் குறைந்துவிடவில்லை. நான் குறிப்பிடும் மாற்றம் அடித்தளத்தில் நிகழ்ந்திருக்கிறது. கோட்பாடு ரீதியிலான மாற்றம் அது. அமைதியை அல்ல ஆர்ப்பாட்டத்தைத்தான் நான் முன்மொழிவேன். பாகுபாடு இல்லாமல் அனைத்து வெள்ளையர்கள் மீதும் வெறுப்பு உமிழ்வதை இனி நான் தொடரமாட்டேன். அடிப்படையில் நல்லவர்களாக விளங்கும் சில வெள்ளையர்களை நான் சந்தித்தேன். அவர்கள் என் அறியாமையை போக்கியிருக்கிறார்கள். அவ்வளவுதான்.’

தீர்க்கமான குரலில் முடித்துக்கொண்டார் மால்கம்.

‘நிறவெறி கொண்ட வெள்ளையர்களை நான் என்றென்றைக்கும் ஆவேசமாக எதிர்த்துக்கொண்டிருப்பேன். நிறவெறி பாராட்டும் அமெரிக்க தேசத்தை என்னால் அரவணைத்துச் செல்ல முடியாது. மதப் போராட்டத்தோடு நிறுத்திக்கொள்ளாமல் அரசியல் போராட்டத்தையும் முன்னெடுத்துச்செல்லப்போகிறேன்.’

மறுநாள் மாலை சிக்னல் அருகே அவர் கார் நின்றபோது பக்கத்து காரில் இருந்து ஒரு கரம் நீண்டது. ஆர்வத்துடன் தலையை நீட்டினார் ஒரு பெண்.

‘மால்கம் எக்ஸ், உங்கள் பேட்டி படித்தேன். அப்பப்பா, உங்களை இப்போது பார்க்கும்போது பெருமிதமாக இருக்கிறது. இனி நீங்கள் வெள்ளையர்களோடு கைகுலுக்கிக்கொள்வீர்கள் அல்லவா?’

சிக்னல் கிடைப்பதற்குச் சில விநாடிகளே இருந்தன. சங்கடமாக இருந்தது மால்கமுக்கு. கைகுலுக்கிக்கொண்டார்.

# 12. முடிந்தது

நித்தம் ஒன்றாக மால்கமுக்கு எதிரான அறிக்கைகள் தொடர்ந்து எலிஜா முகமதுவிடம் இருந்து உற்பத்தி ஆகிக்கொண்டே இருந்தன. இன்னமும் ஆர்வம் குறையாத பத்திரிகையாளர்கள் எலிஜாவிடம் இருந்து அவற்றைக் கேட்டு வாங்கி பிரசுரித்துக்கொண்டிருந்தனர். மால்கமிடம் இருந்து பதில் தாக்குதல் வரும், எலிஜா முகமதுவைப் போட்டு அவர் பதிலுக்குக் கிழிப்பார் என்று எதிர்பார்த்து அவரிடம் சென்றவர்கள் ஏமாந்து போனார்கள்.

எலிஜா பற்றிய வதந்திகள் அனைத்தும் உண்மைதான் என்பது தெரிந்துவிட்டது மால்கம். எலிஜாவின் காரியதரிசிகளாக இருந்த இரு பெண்கள் சாட்சியம் அளித்திருக்கிறார்கள். எங்கள் குழந்தைகளுக்கு எலிஜாதான் தந்தை என்று அவர்கள் தைரியமாக அறிவித்துவிட்டார்கள். என்ன செய்வது என்று தெரியாமல் திருதிருவென்று விழித்துக்கொண்டு இருக்கிறார் எலிஜா. இதை நீங்கள் முன்னரே எதிர்பார்த்தீர்களா மால்கம்?

தன் புருவத்தை மட்டுமே உயர்த்தினார் மால்கம். வாய் திறக்கவில்லை. இன்னும் சில விஷயங்கள் சொல்லி சீண்டிப் பார்த்தார்கள். ஒற்றை வார்த்தைகூட அவரிடம் இருந்து வரவில்லை. சரி வருகிறோம் என்று கிளம்பிச் சென்றுவிட்டார்கள்.

மால்கமிடம் இருந்த நிதானமும் நேர்மையும் எலிஜாவிடம் இல்லை. வெறுப்பு அவரை அரித்துத் தின்றுகொண்டிருந்தது. மால்கம் உயர்ந்து கொண்டே போகிறான். ஆப்பிரிக்கா போகிறான். தலைவர்களைச் சந்திக்கிறான். பாராளுமன்றங்களில் இருந்தும்

பல்கலைக்கழகங்களில் இருந்தும் அழைப்பு வருகிறது. தனி மத அமைப்பு. தனி அரசியல் அமைப்பு. அடுத்தடுத்தக் கட்டங்களுக்கு நகர்ந்துகொண்டிருக்கிறான். நான்? அடி மேல் அடி. தொடர் வீழ்ச்சி. தொடர் அவமானம். தன் இரு மகன்களும் மால்கமிடம் அடைக்கலம் புகுந்துவிட்டார்கள் என்பதை அறிந்தபோது அளவுகடந்த ஆத்திரத்துடன் சீறினார். இனி அவர்கள் என் மகன்கள் அல்ல. அவர்களை நான் விலக்கி வைக்கிறேன்?

மகன்களை விலக்கலாம். மால்கமை விலக்கலாம். நினைவுகளை? ரணங்களை? அதைவிட முக்கியமாக, பயங்களை? அப்போதுதான் முடிவு செய்தார் எலிஜா முகமது.

மால்கமின் ஆள்கள் தேடிப்பிடித்து தாக்கப்பட்டார்கள். பொதுக்கூட்டங்களில் அவ்வப்போது அமளிகள் ஏற்பட்டன. மால்கமின் நெருங்கிய நண்பர்கள் மீது சம்பந்தமேயில்லாமல் சீறிப் பாய்ந்தது காவல்துறை. மொட்டைக் கடுதாசிகளில் மால்கமுக்குக் கொலை மிரட்டல்கள் வர ஆரம்பித்தன. நான் கொடுத்த வீட்டையும் காரையும் திருப்பித்தா என்று வழக்குப் பதிவு செய்தார் எலிஜா.

மால்கம் இவற்றை எதிர்பார்த்திருந்தார். அடிபட்ட நாகம் சும்மா இருக்காது. ஆள் பலம், ஆயுத பலம் இரண்டையும் வைத்துக்கொண்டு அவரால் நகம் கடித்துக்கொண்டிருக்க முடியாது. போய் கொன்று போட்டு வா என்று எலிஜா உத்தரவிட்டால் செய்து முடிக்க சித்தமாகயிருந்தது காவல்துறை.

ஆகவே, பதிலடி கொடுக்க ஆரம்பித்தார் மால்கம். எலிஜாவின் நிஜ முகத்தை அம்பலப்படுத்திப் பேச

ஆரம்பித்தார். கத்தி வீச்சு போல் இருந்தது மால்கமின் தாக்குதல். எலிஜாவின் கோட்பாடுகள் தவறானவை. அவர் போதிப்பது இஸ்லாத்தை அல்ல. அவர் பார்வை கோணலானது. ஒழுக்கத்தைப் பிறருக்கு மட்டுமே போதிக்கும் கோழை எலிஜா. சவாலை எதிர்கொண்டு சமாளிக்காமல் முதுகுக்குப் பின்னால் நின்று தாக்குதல் தொடுக்கும் அவர் வீரத்தை என்னவென்று சொல்வது? மொத்தத்தில் அவர் ஒரு மோசடிப் பேர்வழி.

எங்கள் தலைவரைப் பற்றி தவறாக ஒரு வார்த்தைப் பேசினாலும் இதுதான் கதி. பிப்ரவரி 13, 1965 அன்று மால்கமின் வீட்டில் பெட்ரோல் குண்டுகள் வீசப்பட்டன. அச்சுறுத்தல்கள் பெருகிக்கொண்டிருந்தன. அடியாள்களை ஏவி மால்கமைக் கொல்ல உத்தரவிட்டார் எலிஜா. முற்றிலுமாக நிதானத்தை இழந்திருந்தார் எலிஜா. மால்கம் நீக்கப்பட்டே ஆகவேண்டும். அவன் என் முன்னால் நடமாடிக்கொண்டிருக்கும் வரை எனக்கு நிம்மதி இல்லை.

எலிஜாவின் தாக்குதல்களை மட்டும் அல்ல காவல்துறை மற்றும் அரசாங்க அதிகாரிகளின் தாக்குதல்களையும் மால்கம் எதிர்கொள்ளவேண்டியிருந்தது. அவரது வெளிநாட்டுப் பயண விண்ணப்பங்கள் தயவுதாட்சண்யம் இல்லாமல் நிராகரிக்கப்பட்டன. கூடுதலாக, FBI அதிகாரிகள் மால்கமை நிழலாக மாறி வேவு பார்த்துக்கொண்டிருந்தனர். மால்கமின் ஒவ்வொரு சிறு அசைவும் பதிவு செய்யப்பட்டது.

ஜூன் மாதம் பத்தாம் தேதி எலிஜா முகமது ஒரு கேசட்டை வெளியிட்டார். மால்கம் ஒரு கபடதாரி. நயவஞ்சகன். அவனைப் போன்ற தீய உடல்கள் பூமியில் நடமாடுவது ஒருவருக்கும் நல்லதல்ல. அல்லா அவனைக் கண்காணித்துக்கொண்டு இருக்கிறார். நிச்சயம் அவன்

அல்லாவால் அழித்தொழிக்கப்படுவான். இன்னும் சில தினங்கள்தாம். பொறுத்திருங்கள். நீதி கிடைக்கும்.

மால்கமிடம் மரண பயம் இல்லை. அதே சமயம், மரணத்தைப் பற்றியும் அவர் சிந்திக்க ஆரம்பித்திருந்தார். எல்லோரையும் போல் முதுமை மூலமாகத் தனக்கு மரணம் சம்பவிக்கும் என்று நம்ப அவர் தயாராக இல்லை. எப்படியும் எங்கும் யார் மூலமாகவும் வரலாம் மரணம். நான் தயாராகவே இருக்கிறேன்.

அழைப்பு வந்தது. பிப்ரவரி 21, 1965. ஆதுபோன் நடன அரங்கத்தில் உரையாற்றவேண்டும், வருகிறீர்களா? நிச்சயமாக வருகிறேன் என்றார் மால்கம் எக்ஸ்.

வந்தார். பிறகு, அந்தப் பதினாறு தோட்டாக்கள்.

# 13. முடியவில்லை!

பிப்ரவரி 23 முதல் பிப்ரவரி 26, 1965 வரை மால்கம் எக்ஸின் உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக ஹார்லெமில் வைக்கப்பட்டிருந்தது. கிட்டத்தட்ட முப்பதாயிரம் பார்வையாளர்கள் மால்கமின் உடலைத் தரிசித்துச் சென்றதாகச் சொல்கிறார்கள். ஓர் இஸ்லாமியரின் உடலை இப்படி மூன்று தினங்கள் வைத்திருக்கக் கூடாது என்று சர்ச்சைகள் கிளம்பின. இஸ்லாமிய முறைப்படி அல்லாமல் கிறிஸ்தவ முறைப்படியே அவர் இறுதிச் சடங்குகள் நடத்தப்பட்டன. நியூ யார்க்கில் உள்ள ஹார்ட்ஸ்டேல் பகுதியில் ஃபெர்ன்கிளிஃப் இடுகாட்டில் (Ferncliff Cemetery) மால்கமின் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

மால்கமின் படுகொலைக்குத் தனது அதிர்ச்சியையும் அனுதாபத்தையும் தெரிவித்தார் மார்ட்டின் லூதர் கிங். மால்கமின் பண்புகளை வியந்து பாராட்டினார். மால்கம் எக்ஸ் என்றென்றும் என் நேசத்துக்கு உரியவர். நம் இனம் எதிர்கொண்டுள்ள பிரச்னையின் மூல வேரை மிகச் சரியாக அடையாளம் கண்டவர் மால்கம். அற்புதமான பேச்சாளர். கறுப்பின மக்களின் நல்வாழ்வுக்காக அக்கறையுடன் சிந்தித்த மாமனிதர் அவர்.

நான் எதுவும் கருத்துச் சொல்ல மாட்டேன்; எனக்கும் மால்கமின் கொலைக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. இப்படிச் சொல்லி ஒதுங்கிக்கொண்டார் எலிஜா முகமது. வற்புறுத்திக் கேட்டபோது அவர் உதிர்த்த ஒற்றை வரி கருத்து இது. மால்கம் எதை உபதேசித்தாரோ அதனாலேயே கொல்லப்பட்டார். அமெரிக்கக் காவல்துறையின் அரவணைப்பு எலிஜாவுக்குக் கிடைத்தது. மால்கமின்

ஆதரவாளர்களால் தாக்கப்படலாம் என்று அஞ்சி நேஷன் ஆஃப் இஸ்லாமின் மசூதிகள் காவல்துறையின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன.

நார்மன் பட்லர், தாமஸ் ஜான்சன். மால்கம் எக்ஸ் கொலை தொடர்பாக முதலில் கைது செய்யப்பட்டவர்கள் இவர்கள். இருவருமே நேஷன் ஆஃப் இஸ்லாம் அமைப்பைச் சார்ந்தவர்கள். மூன்றாவதாக, தல்மாட்ஜ் ஹேயர் (Talmadge Hayer) என்பவரையும் கைது செய்தார்கள். இவரும் ஒரு கறுப்பு முஸ்லிம்தான். ஆம் நான்தான் மால்கமைச் சுட்டுக்கொன்றேன் என்று ஒப்புக்கொண்டார் ஹேயர். மற்றொன்றும் சொன்னார். நீங்கள் ஏற்கெனவே கைது செய்திருக்கும் இருவரும் நிரபராதிகள். அவர்கள் மால்கமைக் கொல்லவில்லை.

மால்கமின் கொலைக்கும் எங்களுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று இருவரும் நீதிமன்றத்தில் முறையிட்டார்கள். நார்மன் பட்லர் 1985-ம் ஆண்டு பரோலில் விடுவிக்கப்பட்டார். முகமது அப்துல் ஆஸிஸ் என்று இவர் அழைக்கப்படுகிறார். நேஷன் ஆஃப் இஸ்லாம் ஹார்லெம் மசூதியின் தலைவராக இவர் நியமிக்கப்பட்டார். தாமஸ் ஜான்சனின் இப்போதைய பெயர் கலீல் இஸ்லாம். 1987-ல் இவர் விடுதலை செய்யப்பட்டார்.

மால்கமைக் கொன்ற கொலையாளி யார் என்ற சர்ச்சை அவர் இறந்த ஒரு சில தினங்களிலேயே தொடங்கிவிட்டது. கறுப்பு முஸ்லிம்களால் அல்ல போதை மருந்து வியாபாரிகளால்தான் மால்கம் கொல்லப்பட்டார் என்பது ஒரு சர்ச்சை. சிலர் காவல்துறையைக் கைகாட்டினார்கள். சிலர் சி.பி.ஐ. மீதும் எஃப்.பி.ஐ. மீதும் குற்றம் சுமத்தினார்கள். இல்லை இல்லை எலிஜாவின் ஆள்கள்தான் கொன்றார்கள் என்றார்கள் வேறு சிலர். திரையரங்குக்குள்

துப்பாக்கிகளுடன் கொலையாளிகள் எப்படி நுழைந்தார்கள் என்பது கண்டுபிடிக்கப்படவில்லை.

ஜான் அலி என்பவரது பெயர் அதிகம் விவாதிக்கப்பட்டது. நேஷன் ஆ்ப் இஸ்லாமின் தேசிய உதவியாளரான இவர், உண்மையில் எ்ப்.பி.ஐ.யின் ஏஜெண்ட் என்பது பின்னர் கண்டுபிடிக்கப்பட்டது. எலிஜா முகமதுவுக்கும் மால்கமுக்கும் இடையே உருவான மோதல்களுக்கு காரணகர்த்தா இவரே என்று சொல்கிறார்கள். ஜான் அலியின் மீது சந்தேகம் குவிந்ததற்கு மற்றொரு காரணம், கைது செய்யபட்ட தல்மாட்ஜ் ஹேயரை கொலை நடந்ததற்கு முந்தைய தினம் அலி சந்தித்திருக்கிறார்.

மால்கம் எக்ஸ் சொல்லச் சொல்ல அலெக்ஸ் ஹெய்லி அவர் சுயசரிதையை எழுதினார். 1964-ம் ஆண்டுக்கும் 1965-ம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் ஹெய்லி இதை எழுதி முடித்தார். 1965-ம் ஆண்டு இந்நூல் வெளிவந்தது. இருபதாம் நூற்றாண்டின் தலைச் சிறந்த பத்துப் புத்தகங்களுள் இதுவும் ஒன்று என்றது டைம் பத்திரிகை.

1999-ம் ஆண்டு ஜனவரி 20 ம் தேதி ஹார்லெமில் உள்ள அப்பல்லோ திரையரங்கில் மால்கம் எக்ஸ் உருவம் பதித்த தபால் தலை வெளியிடப்பட்டது.

மால்கம் ஆரம்பித்து வைத்த Muslim League Inc. அவர் மரணத்துக்குப் பிறகு கலைக்கப்பட்டது. சில இஸ்லாமிய மதப் புத்தகங்களை இந்த நிறுவனம் முன்னதாக வெளியிட்டிருந்தது.

மால்கம் தொடங்கி வைத்த மற்றொரு அமைப்பான OAAU (Organisation for Afro-American Unity) அவர் மறைவுக்குப் பிறகு எல்லாவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. தவிர்க்க முடியாத

நிர்வாகவியல் பிரச்னைகளால் எல்லாவால் இந்த நிறுவனத்தைத் தொடர்ந்து நடத்த முடியவில்லை. இதனால் அமைப்பின் வளர்ச்சி பாதிப்படைந்தது.

எல்லா கறுப்பர்களுக்காகத் தொடர்ந்து தம்மால் ஆன உதவிகளைச் செய்துகொண்டிருந்தார். தனக்குக் கிடைத்த நேரத்தையும் பணத்தையும் அவர்களுக்காகச் செலவழித்தார். ஆகஸ்ட் 3, 1996-ல் எல்லா மரணமடைந்தார். அவருக்குப் பிறகு, அவர் மகன் ரோட்நெல் காலின்ஸ் OAAU வின் நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார்.

எலிஜா முகமது 1975-ம் ஆண்டு இறந்துபோனார். அவர் மறைவுக்குப் பிறகு, நேஷன் ஆ∴ப் இஸ்லாமின் நிறம் மாற ஆரம்பித்தது. கறுப்பு முஸ்லிம்களை மட்டுமே கொண்ட அமைப்பாக விளங்கிய நேஷன் ஆ∴ப் இஸ்லாம் வெள்ளையர்களையும் வரவேற்று இணைத்துக்கொண்டது. எலிஜாவின் மகன் வாரித் டீன் முகமது பொறுப்பேற்றுக்கொண்டார். எலிஜா முகமதுவின் கோட்பாடுகள் புறந்தள்ளப்பட்டன. சன்னி முஸ்லிம் இயக்கமாக அது உருமாறியது. இந்தப் புதிய வடிவத்தை ஏற்றுக்கொள்ள இயலாதவர்கள் தாமாகவே வெளியேற ஆரம்பித்தனர். அமைப்பு பிளவுபட்டது. நேஷன் ஆ∴ப் இஸ்லாம் என்னும் பெயர் மாற்றப்பட்டது. புதிய பெயர், Muslim American Society.

லூயிஸ் ∴பாராகான் என்பவர் எலிஜா முகமதுவின் கோட்பாடுகளின் அடிப்படையில் நேஷன் ஆ∴ப் இஸ்லாமை 1978-ம் ஆண்டு மீண்டும் புதுப்பித்தார். புதிய அமைப்பின் தலைவராக இவரே நீடிக்கிறார். தன் கணவரின் கொலைக்கும் லூயிஸ் ∴பாராகானுக்கும் தொடர்பு உண்டு என்று குற்றம் சுமத்தினார் பெட்டி எக்ஸ்.

மால்கமின் மரணத்துக்குப் பிறகு, தன்னை ஒரு சன்னி முஸ்லிமாக அறிவித்துக்கொண்டார் பெட்டி எக்ஸ். 1995-ம் ஆண்டு ஃபராகானுடம் ஓர் உடன்பாடு செய்துகொண்டார். மால்கம் சுட்டுக்கொல்லப்பட்டபோது, பெட்டி எக்ஸ் கர்ப்பமாக இருந்தார். இரட்டைப் பெண் குழந்தைகள் பிறந்தன. செவிலியர் படிப்பை விடாமல் தொடர்ந்தார். 1975-ம் ஆண்டு, மசாசூஸெட்ஸ் பல்கலைக்கழகத்தில் இருந்து சுகாதாரம் தொடர்பான துறையில் முனைவர் பட்டம் பெற்றார். ஆறு பெண் குழந்தைகளையும் வளர்த்து, படிக்க வைக்கும் பொறுப்பும் அவருடையதாக இருந்தது. பெண்கள் அனைவருக்கும் இஸ்லாத்தின் மீது இயல்பான ஈடுபாடும் ஆர்வமும் இருந்தது.

ஜூன் 1, 1997-ல் பெட்டியின் பேரன் மால்கம், தன் பாட்டியுடன் கோபித்துக்கொண்டு அவர் வீட்டுக்குத் தீ வைத்துவிட்டான். நெருப்பில் இருந்து பெட்டியை மீட்டெடுத்துச் சென்று மருத்துவமனையில் சேர்த்தார்கள். ஜூன் 23-ம் தேதி பெட்டி மரணமடைந்தார்.

மால்கம் எக்ஸின் உருவம் பதித்த டீ--ஷர்ட்களும் கைக்கடிகாரங்களும் தொப்பிகளும் மணி பர்ஸ்களும் அதிக அளவில் அமெரிக்காவில் வலம் வருகின்றன. வணிகத் தேவைகளுக்காகவே இந்த அடையாளம் இன்று அதிகம் பயன்படுத்தப்பட்டு வருகிறது. என்றாலும் மால்கம் எக்ஸின் மீது மக்களுக்கு அதிகரித்து வரும் ஆர்வத்தையும் இது எடுத்துக்காட்டுகிறது.

மால்கம் எக்ஸ் மறைந்து நாற்பது ஆண்டுகள் கழிந்த பின்பும், ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் நிலைமை அப்படியேதான் நீடிக்கிறது. இனத்தையும் நிறத்தையும் காட்டி அவர்களைத் தனியே பிரித்து வைக்கும் வழக்கம்

தொடர்கிறது. கறுப்பர்களை இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருதும் போக்கு இன்னமும் மாறிவிடவில்லை. மால்கம் எக்ஸின் தேவை முன்னெப்போதையும்விட இப்போது அதிகரித்திருக்கிறது. ஆவேசமும் துடிதுடிப்பும் மிக்க ஒரு கலகக்காரராக மால்கம் எக்ஸ் இன்று பார்க்கப்படுகிறார். கொண்டாடப்படுகிறார்.

மால்கம் எக்ஸின் சகாப்தம் முடிந்துவிடவில்லை.

# பின்னிணைப்பு 1

**காலவரிசை**

மே 1919 - ஏர்ல் லிட்டில் லூயிசா திருமணம் மாண்ட்ரியலில் நடைபெறுகிறது.

மே 1925 - மே 19-ம் தேதி, ஒமாஹா, நெப்ராஸ்காவில் உள்ள மருத்துவமனையில் மால்கம் லிட்டில் பிறக்கிறார்.

ஜனவரி 1928 - லான்சிங்கில் (மிச்சிகன்) ஒரு சிறிய வீடு வாங்கி குடியேறுகிறார் ஏர்ல் லிட்டில்.

நவம்பர் 1929 - ஏர்ல் லிட்டிலின் வீடு தீ வைத்துக்கொளுத்தப்படுகிறது.

ஜனவரி 1931 - Pleasant Grove ஆரம்பநிலைப் பள்ளியில் மால்கம் சேர்க்கப்படுகிறார்.

செப்டெம்பர் 1931 - ஏர்ல் லிட்டில் மரணம். விபத்து அல்ல கொலை என்னும் சந்தேகம் பலமாக எழுகிறது.

அக்டோபர் 1938 - வெஸ்ட் இளநிலைப் பள்ளியில் ஏழாவது கிரேட் முடிக்கிறார் மால்கம்.

ஜனவரி 1939 - லூயிசா லிட்டில் மனநலக் காப்பகத்தில் சேர்க்கப்படுகிறார்.

பிப்ரவரி 1941 - சகோதரி எல்லாவுடன் வசிப்பதற்காக மால்கம் பாஸ்டன் பயணம்.

மார்ச் 1943 - நியூ யார்க் பயணம். New Haven Railroad நிறுவனத்தில் பணி கிடைக்கிறது.

ஜனவரி 1946 - திருடிய கைக்கடிகாரத்தைச் சரிசெய்வதற்காக வந்தபோது, காவல்துறை-யினரிடம் சிக்கிக்கொள்கிறார் மால்கம். கைது செய்யப்படுகிறார்.

பிப்ரவரி 1946 - சார்ல்ஸ்டவுன் சிறைச்சாலையில் அடைக்கப்படுகிறார் மால்கம்.

ஜனவரி 1947 - கான்கர்ட் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிறார்.

மார்ச் 1948 - நார்ஃபோல்க் சிறைச்சாலைக்கு மாற்றம். சிறை வளாகத்தில் உள்ள நூலகங்களை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள ஆரம்பிக்கிறார். எலிஜா முகமது பற்றியும் நேஷன் ஆஃப் இஸ்லாம் குறித்தும் தெரிந்து-கொள்கிறார்.

ஆகஸ்ட் 1952 - பரோலில் வெளிவருகிறார் மால்கம். சகோதரன் வில்ஃப்ரெடின் வீட்டில் தங்கியிருந்தபடியே வேலை தேடிக்கொள்கிறார்.

பிப்ரவரி 1953 - நேஷன் ஆஃப் இஸ்லாம் மீது அபிமானம் பிறக்கிறது. எலிஜாவின் மீது மதிப்பும் மரியாதையும் அதிகரிக்கிறது. அமைப்பு நடத்தும் அத்தனை பொதுக்கூட்டங்களிலும் ஆர்வத்துடன் கலந்துகொள்கிறார்.

செப்டெம்பர் 1953 - பதினோறாம் எண் மசூதியில் இணைந்துகொள்கிறார்.

நவம்பர் 1955 - பிலடெல்ஃபியாவில் உள்ள பன்னிரண்டாம் எண் மசூதியின் மதகுருவாக நியமிக்கப்படுகிறார்.

ஏப்ரல் 1957 - நேஷன் ஆஃப் இஸ்லாம் அமைப்பைச் சேர்ந்த ஹிண்டன் ஜான்சன் நியூ யார்க் காவல்துறையினரால் தாக்கப்படுகிறார். மால்கம் எக்ஸ் அவரை மீட்டெடுக்கிறார்.

ஜனவரி 1958 - பெட்டி எக்ஸைத் திருமணம் செய்து கொள்கிறார் மால்கம்.

மார்ச்/ஏப்ரல் 1959 - ஐக்கிய அரேபிய எமிரேட்ஸ், சூடான், நைஜீரியா ஆகிய நாடுகளுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார் மால்கம்.

செப்டெம்பர் 1960 - ஹார்லெமில் உள்ள ஹோட்டல் தெரசாவில் ஃபிடல் காஸ்ட்ரோவுடன் சந்திப்பு.

நவம்பர் 1963 - அமெரிக்க அதிபர் ஜான் கென்னடி நவம்பர் 22-ம் தேதி சுட்டுக்கொல்லப்படுகிறார். கென்னடியின் மரணம் குறித்த மால்கமின் சர்ச்சைக்குரிய கருத்துகளை விரும்பாத எலிஜா, மால்கமிடம் கோபித்துக்கொள்கிறார்.

ஜனவரி 1964 - எழுத்தாளர் அலெக்ஸ் ஹெய்லியைச் சந்திக்கிறார் மால்கம்.

மார்ச் 1964 - எலிஜா முகமதுவிடம் இருந்து விலகிக்கொள்வதாக அறிவிக்கிறார் மால்கம்.

மார்ச் 1964 - மார்ட்டின் லூதர் கிங்கை முதன் முறையாக வாஷிங்டனில் சந்திக்கிறார் மால்கம்.

மே 1964 - ஆப்பிரிக்கப் பயணம். கானா, லைபீரியா, செனகல், மொராக்கோ, அல்ஜீர்ஸ் ஆகியப் பகுதிகளுக்குச் சென்று உரையாற்றுகிறார்.

ஜூன் 1964 - Organisation of Afro-American Unity (OAAU) என்னும் அமைப்பை ஆரம்பிக்கிறார்.

பிப்ரவரி 1965 - 20-ம் தேதி ஆபர்ன் திரையங்கில் OAAU அமைப்பினருக்கான கூட்டத்தில் உரையாற்ற வரும்போது சுட்டுக்கொல்லப்படுகிறார்.

# பின்னிணைப்பு 2

## உதவிய நூல்கள்


· The Autobiography of Malcolm X, (As Told to Alex Haley), Ballantine Books

· The Autobiography of Martin Luther King, Martin Luther King Jr., Grand Central Publishing

· A Short History of the United States, Allan Nevins and Henry Steele Commager, Scientific Book Agency

· The Epic of America, James Truslow Adams, Pocket Books Inc.

· The Greatest Mohammad Ali, Walter Dean Myers, Scholastic Inc.

· The Story of Africa, Basil Davidson, Mitchell Beazley

· Long Walk to Freedom, Nelson Mandela, Back Bay Books

· Abraham Lincoln, Lord Charnwood, Pocket Books Inc

· Kwama Nkrumah, Yuri Smerti, Progress Publishers

· The Crucial Decade and After, America 1945-1960, Eric F Goldman, Vintage Books

· Southern Africa : Apartheid, Colonialism, Aggression, Mikhail Vyshinsky, Progress Publishers

· என் வாழ்க்கை, மால்கம் எக்ஸ், தமிழில் வெ. கோவிந்தசாமி, விடியல்

· மால்கம் எக்ஸ், ரவிக்குமார், காலச்சுவடு

· கறுப்பு வெள்ளை, பாலு சத்யா, கிழக்கு பதிப்பகம்

· டாலர் தேசம், பா. ராகவன், கிழக்கு பதிப்பகம்

## உதவிய இணையத்தளங்கள்

http://www.malcolm -x.org/docs/

http://www.themilitant.com/1995/5941/5941_20.html

http://www.stanford.edu/group/King/publications/autobiography/chp_25.h

http://www.politicalassassinations.com/

http://www.thesmokinggun.com/malcolmx/malcolmx.html

http://en.wikisource.org/wiki/Letter_from_Malcolm_X

http://www.pbs.org/wgbh/amex/mlk/sfeature/sf_video_pop_03_trqry.html

http://www.malcolmxreloaded.podomatic.com/

http://www.columbia.edu/cu/ccbh/mxp/

http://www.columbia.edu/cu/ccbh/mxp/

http://www.monthlyreview.org/564mx.htm

http://www.guardian.co.uk/world/2005/may/19/gayrights.usa

http://www.islam101.com/history/muslim_us_hist.html

http://news.bbc.co.uk/2/hi/americas/749116.stm

http://africanhistory.about.com/library/weekly/aa080601a.htm

http://www.liu.edu/cwis/cwp/library/aaslavry.htm

http://library.stanford.edu/depts/ssrg/africa/history/hislavery.html

http://web.cocc.edu/cagatucci/classes/hum211/timelines/htimeline3.htm

http://www.trinity.edu/~mKearl/race.html

http://www.infoplease.com/ipa/A0762156.html

http://www.spartacus.schoolnet.co.uk/USAslavery.htm

http://www.usnationalslaverymuseum.org/home.asp

http://www.msnbc.msn.com/id/7009975/

http://www.bbc.co.uk/worldservice/specials/1357_slavery_today/index.shtr

http://www.stanford.edu/group/King/liberation_curriculum/malcolmx/

http://www.youtube.com/watch?v=MwKIUMbi9Jk

http://www.bignerds.com/essays/Martin -Luther-King-Jr-Malcolm-X/755.html